
# திராவிடச் சிற்ப ரகஸ்யம்



## MYSTERIES OF THE DRAVIDIAN SCULPTURAL ART.

DEPICTING THE HINDU VERSION OF THE

SUPREME,

H
T
W
O
R

THE BIRTH - G - AND - D - OF

E
A
T

THE SUN
STARS
HUMAN

AND THE STANDARD OF LIVING.

H.E. Ananthasayanam Ayyangar

F 3041 56

With compliments from the author

(Errors in printing regretted)

# திராவிடச் சிற்ப ரகஸ்யம்.

# MYSTERIES OF THE
# DRAVIDIAN SCULPTURAL ART.

**DEPICTING THE HINDU VERSION OF THE SUPREME, THE BIRTH, GROWTH, AND DEATH OF THE SUN, THE STARS, THE HUMAN AND THE STANDARD OF LIVING.**


by

**P. S. SUBRAMANYAM,** A. I. I. A.

Palace Architect, Mysore (Retired)

**Sri Bagh, South Main Street, Thanjavur.**

**(Madras State, Indian Union.)**


★


ALL RIGHTS RESERVED.


(Un reserved for True Translations)



1963.

Dedicated to the ancient "Silpis"
Sculptors of India.

## சூர்யமண்டலத்தின் பிறப்புச் சித்திரம்.



ஆதியில் சூர்யன் சுற்றிக் கொண்டு வெளிவர, அதன் கலப்பு உலோகங்களிலிருந்து சுத்த உலோகங்கள் பிரிந்தமையால் அதற்கு வால்கள் உண்டாயின.

பின்பு வால்களின் அடிப் பாகத்திலுள்ள கலப்பு உலோகங்கள் சுருங்கியதால், பூலோகம், புவர் லோகம், ஸுவர் லோகம் இம் மூன்றும் உருவெடுத்தன.

அன்னியில் வால்களின் நுனி பாகத்திலுள்ள சுத்த உலோகங்கள் சுருங்கியதால், செவ்வாய், குரு, சனி இவைகள் உருவாகி, சூர்ய மண்டலம் சுயுரூபம் கொண்டது.

MYSTERIES OF THE

# DRAVIDIAN SCULPTURAL ART.

## INTRODUCTION.

I have been a keen student of Art, from my boyhood. During this period I spent considerable time in studying the wonderful Sculptures in our Temples, especially the Divinity Images, and used to take sketches of them. But as I was always research-minded I wanted to know on what basic principles these Sculptures were evolved.

The craving for proper understanding of the subject persisted even when I was employed as an Architect, and all my efforts to get an answer were in vain. It was only when I retired, I was able to study the subject in peaceful atmosphere. The key to the solution was obtained from the text given in our Scriptures, that Devas on one side, and Asuras on the other churned the Milky Ocean and got Nector from it. Who were Devas and who were Asuras? What was the Poison they got first, and Nector next, were the points that required solution. After finding out the key for this solution, the whole problem became easier.

I have ventured to present in this volume the results of my studies. To what extent, I have made a success of my job, the kind reader has to judge.

Our Mythological Sculpture is roofed in deep scientific thought and mastery of sublime Cosmic Truths. Cosmology, Cosmogony, Biology, the Stellar Universe, all about Earth and the Heavens, interrelation between man and Planets, and Stars, the place of man in the Devine scheme of things, his duties and aims in his voyage through existence, these and other kindred topics form the subject of our Mythological Sculpture, Our achievements in Sculpture, constitute a tremendous, and eloquent record in stone, unique in the history of Worlds Sculptural Art.

I thought it my duty to collect in this volume the results of my labours in the course of many years, so that it may attract the notice of Scientists, thinkers and others interested in the subject. Though I am not a scholar in Tamil, still I preferred to write this work in Tamil, as this language is uniquely equipped with necessary technical expressions to enable one to express oneself with accuracy, on intricate details of this obscure subject.

If any one is interested in translating this work into any other language, he will be very welcome.

My thanks are due to Sri P. Arul Namasivayam, B. A., B. L. advocate, Thanjavur, for proof corrections,

—P. S. S.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை ... ... ... ... | 1 |
| 2. | தெய்வ சாந்நித்யம் ... ... | 6 |
| 3. | நமது ஆலயங்கள் ... ... | 15 |
| 4. | ஆலயங்களும் அவைகளின் பராமரிப்பும் ... | 20 |
| 5. | உலக உற்பத்தி ... ... ... | 25 |
| 6. | பாற்கடலும் அமிர்தமும் ... ... | 31 |
| 7. | அமிர்தமும் விஷமும் ... ... | 37 |
| 8. | மனிதவர்க்கமும், அவை இப்பூமியில் ஜீவிக்க வேண்டியதின் அவசியமும் ... ... | 45 |
| 9. | ஜீவப்பிராணிகளின் உற்பத்தியும், மனிதவர்க்க வளர்ச்சியும் ... ... ... | 52 |
| 10. | நெல் பயிரும், மனிதவர்க்கமும் ... ... | 64 |
| 11. | சூர்யமண்டலத்தின் அமைப்பும், மனிதவர்க்கத்தின் பாந்தவ்யமும் ... ... ... | 68 |
| 12. | சூர்யன், பூமி இவைகளின் அமைப்பும், சக்திகளும் | 82 |
| 13. | சூர்யமண்டலமும், மனிதவர்க்கமும் ... | 90 |
| 14. | நமது கடவுள் ... ... ... | 99 |
| 15. | ஆகாசம் என்று சொல்லப்பட்ட மகா சக்தியின் விபரம் | 108 |
| 16. | சக்தி என்பது கடவுளினுடையதே ... | 119 |

பக்கம்


| | | |
|---|---|---|
| 17. | சக்திகளும், குணமும் ... ... | 125 |
| 18. | சக்தியும், சூர்ய வெளிச்சமும் ... ... | 131 |
| 19. | காற்றே மாய சுரூபி ... ... | 138 |
| 20. | நாதமும், விந்துவும் ... ... | 145 |
| 21. | ஜீவராசிகளின் வளர்ச்சியும், மறுபிறப்பும் ... | 151 |
| 22. | விடுதலை ... ... ... | 158 |
| 23. | புத்தியும், சித்தியும் ... ... | 161 |
| 24. | தாமரைப்பூவின் மூடுபடலமும், மனிதவர்க்கத்தின் முன்னேற்றமும் ... ... ... | 167 |
| 25. | ஆலயங்களில் உள்ள சிற்பங்களும், அவைகளின் உபயோகமும் ... ... ... | 172 |
| 26. | சிவலிங்க உற்பத்தி ... ... | 177 |
| 26. | விக்கிரஹங்களும், கேளிக்கைகளும் ... | 184 |
| 27. | மனிதவர்க்கத்தின் பருவகால நிர்ணயம் ... | 187 |
| 28. | பிள்ளையார்—விக்னேசுவரர் ... ... | 191 |
| 29. | குழந்தைப் பருவம் ... ... ... | 194 |
| 30. | குமரக்கடவுள்—சுப்பிரமணியம் ... ... | 197 |
| 31. | ஹனுமார்—ஆஞ்சநேயர் ... ... | 205 |
| 32. | பிரும்மா ... ... ... | 207 |
| 33. | ஸரஸ்வதி ... ... ... | 209 |
| 34. | விஷ்ணு அம்சம், கிரஹஸ்தாச்ரமம் ... | 213 |
| 35. | கிரஹஸ்தாச்ரமத்தில், லக்ஷ்மி ... ... | 224 |

பக்கம்


36. கிரஹஸ்தாச்ரமத்தில் ஈசுவரத் தன்மையின் முன்னேற்றம் ... ... ... 230
37. உடல் சுத்தம் ... ... ... 236
38. மனச் சுத்தம் ... ... ... 249
39. மனச்சுத்தமும், நல்லகுணமும் ... ... 254
40. குணமும், ஸங்கீதமும் ... ... 258
41. விஷ்ணு, லக்ஷ்மியின் அங்க நிர்ணயம் ... 271
42. வானப்ரஸ்த ஆச்ரமத்தில் நடராஜர், காளி ... 276
43. வானப்ரஸ்தமும், சிற்றின்பமும் ... 280
44. காளியும், புருடனும் ... ... 286
45. திருமணமும், வாழ்க்கையும் ... ... 289
46. நரகாசுரனும், தீபாவளியும் ... ... 294
47. சக்தியும், மஹிஷாசூரவதமும் ... ... 296
48. நாட்டியமும், சிற்பமும் ... ... 300
49. திராவிடச் சிற்பாலங்கார நிர்ணயம் ... 302
50. சந்யாச ஆச்ரமத்தில் சிவன், பார்வதி ... 310
51. மாயையும், மனிதனும் ... ... 314
52. ஜீவாத்மாவும், மறுபிறப்பும் ... ... 320
53. கடவுளும், சக்கரமும் ... ... ... 326
54. தெய்வமும், மனிதனும் ... ... 334
55. குறிக்கோளும், பகுத்தறிவும் ... ... 339
56. மனதிடமும், வீர ஸ்வர்க்கமும் ... ... 341
57. கடவுளும்-நவ நாகரீகமும் ... ... 344
58. சிவசக்தியும்-யுகங்களும் ... ... 348
59. பிரும்மோபதேசமும், சபதங்களும் ... 354
60. அவதார புருஷர்களும், ஆச்ரமங்களும் ... 358
61. பொருள் சக்தியும் — அருள் சக்தியும் ... 360
62. முடிவுரை ... ... ... 366

# சித்திர அடக்கம்.

முகச்சித்திரம், சூர்யமண்டலத்தின் பிறப்புச்சித்திரம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சில சிற்பாலங்கார முத்திரைகள் ... ... | 13 |
| 2. | சூர்யமண்டலத்தின் வளர்ச்சிச் சித்திரம் ... | 25 |
| 3. | சந்திரனின் பிறப்புச் சித்திரம் ... ... | 33 |
| 4. | ராகு கேதுக்களின் பிறப்புச் சித்திரம் ... | 42 |
| 5. | சூர்யனுள் அடங்கியிருக்கும் சக்திகள் ... | 72 |
| 6. | சூர்ய அமைப்புச் சித்திரம் ... ... | 76 |
| 7. | உத்திராயணமும், தட்சிணயணமும் ... ... | 86 |
| 8. | சூர்ய கிரணங்களால் உண்டாகும், பிரதிபலிப்பும் த்ருவச் சந்திரனும் ... ... ... | 89 |
| 9. | மனிதவர்க்கத்தின் அமைப்புச் சித்திரம் ... | 92 |
| 10. | விடுதலை ... ... ... ... | 115 |
| 11. | கிரஹங்களும், நட்சத்திரங்களும் சுற்றும் விதம்... | 129 |
| 12. | ஆலயங்களிலுள்ள முக்கிய ஸ்தம்பங்களின் விபரம் | 175 |
| 13. | சிவலிங்கத்தின் உற்பத்தி ... ... ... | 178 |
| 14. | பிள்ளையார், விக்னேசுவரர் ... ... | 191 |
| 15. | குழந்தைப் பருவம் ... ... ... | 195 |
| 16. | குமரக் கடவுள் ... ... ... | 198 |
| 17. | ஸரஸ்வதி ... ... ... ... | 210 |
| 18. | போகாசன விஷ்ணு மூர்த்தி, லக்ஷ்மி ... | 214 |
| 19. | யோகாசன விஷ்ணு மூர்த்தி ... ... | 218 |
| 20. | லக்ஷ்மி ... ... ... ... | 226 |
| 21. | விஷ்ணு, லக்ஷ்மி, அங்க நிர்ணயம் ... ... | 272 |
| 22. | சாந்த காளி, சிவகாமி ... ... ... | 281 |
| 23. | நடராஜர் ... ... ... ... | 287 |
| 24. | மஹிஷாசுர ஜயவர்தனி ... ... ... | 297 |
| 25. | சிவன், பார்வதி ... ... ... | 311 |
| 26. | உமாமகேச்வர சக்கரம் ... ... ... | 326 |
| 27. | பொருள் சக்தியும் அருள்சக்தியும் ... ... | 360 |
| 28. | கடவுளின் வாழ்க்கைச் சின்னம் ... ... | 373 |

## 1.

# முகவுரை

(“ உண்மை ” அதை அறிதலும் அறிவித்தலும் )

ரகஸ்யம் என்ற பதத்திற்கு உண்மை என்ற தாத்பர்யமும் உண்டு. உண்மை என்பது சொல்லத்தகாதது. சொன்னாலும் நம்ப முடியாதது. நம்பினாலும், எளிதில் அதை உணர இயலாதது. அறிவினால் தெரிந்தும் செய்கைகளால் நடத்தியும் காண்பிப்பதே உண்மையாகும். இம்மகத்தான உண்மையை அறிந்தவர்கள் நம் முன்னோர்களே. அதனாலேயே நம் முன்னோர் உண்மை என்பதை ஒரு ரகஸ்யமாகவே எண்ணினர். சிதம்பர ரகஸ்யம் என்பதில் சிறிதளவு உண்மையை வெளிப்படுத்தி இருந்தபோதிலும், பலருக்கு அது மூடு மந்திரமாகவே தற்காலத்திலும் இருந்து வருகிறது. மனித வர்க்கம் தம் அறிவினாலும், நன்னடத்தையாலும் உண்மையினுள் உள்ள ரகஸ்யத்தை உணரல் வேண்டும். ஒருவரே தன் அறிவாலும், நன்னடத்தையாலும் உண்மையை ஒருவாறு அறியலாம். ஆனால் அதே உண்மையைப் பிறருக்கு எடுத்துக்காட்டுவது, மிகவும் கடினமான விஷயம். அப்படிக் காட்டுவதானால், அது நூதன யந்திரசாதனங்களாலேயே நடைபெறவேண்டும்.

ஒருவன் தன் அறிவினாலும், நன்னடத்தையாலும், உண்மையை அறிய அவன் ஆயுள் முழுவதும் செல

விடும்பொழுது, பிறருக்கு அதே உண்மைகளை நூதன யந்திர சாதனங்கள் மூலம் எடுத்துக் காட்டுவதற்கு போதுமான சௌகரியங்களோ, ஆயுளோ கிடைப்பது அரிது.

இந்த காரணங்களைக்கொண்டே நம் முன்னோர் உண்மை என்பதை ஒரு ரகஸ்யமாகவே கருதி, அவரவர்கள் தம் தம் அறிவிற்கும், வசதிக்கும், உகந்தவாறு உணர சந்தர்ப்பம் அளித்து இருக்கிறார்கள் என்றே கருதவேண்டியிருக்கிறது.

**பிள்ளையார் பிடிக்க.........**

நம் முன்னோர்களின் மனப்பான்மை, போற்றத் தக்கதாயினும், "பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது" என்ற பழமொழிபோல், அவர்கள் நினைத்தபடி அல்லாமல், தற்காலம், நம் முன்னோர் சித்திரங்களாலும், சிற்பங்களாலும், காவியங்களாலும், விட்டுவிட்டுப்போன பொக்கிஷங்களை பலர் அசாஸ்திரீயம் (unscientific) என்றே கருதுகின்றனர். மற்றும் பலர் தொன்றுதொட்டு பரம்பரையாக தம் முன்னோர் செய்துவந்த கிரியைகளை விடாது, அதன் உட்கருத்தை அறியாது நடத்தி வருகின்றனர். பெரும்பாலோர் தாங்கள் கடைப்பிடித்த வழியே மேலானது என்று வாதாடி வாய்ச் சண்டையோடு நிற்காமல் மதச் சண்டைகளிலும் ஈடுபடுகின்றனர்.

**நம் நாட்டில் சிற்பமே தத்துவ பொக்கிடம்.**

மேல் நாட்டு நாகரீகத்தில் ஈடுபட்ட நம் சிறுவர், சிறுமிகளுக்கும் இதர மதத்தர்களுக்கும், நம் முன்னோர்

விட்டுவிட்டுப்போன, காவியங்களும், சிற்பங்களும், சித்திரங்களும், தற்காலம் வியப்பையே தருகின்றன.

கணபதி என்ருல் என்ன? ஏன் அந்த சிலைக்கு யானை முகமும், தும்பிக்கையும் வரவேண்டும்? சுப்பிர மணியம் என்ருல் என்ன? அந்தச் சிலைக்கு ஆறுமுகம் என்று பெயர் வருவானேன்? விஷ்ணு என்ருல் என்ன? சிவன் என்ருல் என்ன? சிற்பித்து இருக் கிறபடி அந்த அந்த தெய்வங்கள் உண்மையில் இருக் கின்றனவா அல்லது எல்லாம் கட்டுக் கதையா? பாற் கடல் என்ருல் என்ன? பூலோகம் என்ருல் என்ன? புவர் லோகம் என்ருல் என்ன? ஸுவர் லோகம் என் ருல் என்ன? இவ்விதமான கேள்விகள் வெகு சகஜ மாக பலர் வாயில் புகுந்து வெளி வருகின்றன. இந்தக் கேள்விகளுக்கு நேரடியான விடை கொடுப்பவர் ஒரு வரும் தென்பட வில்லை என்றே சொல்லலாம். சாத் திரக்ஞர்களையும், பண்டிதர்களையும், கேட்டுக் கேட்டு சலித்துப்போனவர்கள் பலர் உண்டு. அவர்களில் இதை எழுதுபவரும் அறியாத ஒருவரே, ஆயினும், அவர் சிற்பக் கலையில் ஆயுள் முழுவதும் ஈடுபட்டு, இருந்தபடியால், இவ்விஷயங்களை ஆராயாமல் இருக்க முடியவில்லை.

ஒரு காலம் மேல்நாடுகளுக்குக் கப்பல் மூலம் பிர யாணம் செய்தபொழுது எங்காவது பாற்கடல் என்று வெளுத்த கடலாவது இருக்கிறதாவென்று தேடித் திரிந்ததுண்டு. அது அந்தக் காலம், கிருஹஸ்தாச்ரமத்

தில் ஈடுபட்டு சாண் வயிற்றை அலம்புவதற்காக ஓய்வு இன்றி உழைத்த காலம். பின்பு பத்தினி தவறிப்போய், கிருஹஸ்தாச்ரமத்தைவிட்டு, வானப்ரஸ்த ஆச்ரம சூழ்நிலையில் இருந்தபொழுதே இவ்விஷயங்களைப்பற்றி முழு மனதோடு ஆராய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதே போல் ஓய்வு, கிருஹஸ்தாச்ரமத்தில் இருந்தபொழுது, ஏற்பட்டிருந்தாலும், இவ்விஷயங்களை சரிவர ஆராய முடியுமா என்பது சந்தேகமே. ஏனெனில் ஓரளவு கிரஹஸ்தாச்ரமத்தில் உள்ள பற்றுதலை, விலக்கினுலொழிய விபரம் விளங்காது என்பது முற்றிலும் ஆராய்ச்சியின் மூலம் அறிந்த உண்மை. அதனுல், கிரஹஸ்தாச்ரமத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்களுக்கும், சிறுவர், சிறுமிகளுக்கும் இதில் எழுதியுள்ள சில விஷயங்கள் சாந்தி அளிக்காமல் இருக்கலாம். அவர்களே, கிரஹஸ்தாச்ரமத்தை ஒட்டிய பற்றுதலை ஒருவாறு விலக்கிய பிறகு, நோக்குங்கால் சாந்தி அளிக்கக்கூடும்.

**ஆராய்ச்சியின் அவசியம்.**

நம்நாட்டு பூராணங்களில் "பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தார்களென்றும், அப்பொழுது வாஸுகியால் கக்கப்பட்ட விஷத்தை சிவன் உண்டார் என்பதும்", மிக மிக உண்மையான வாக்கியங்கள். இதனுள் இந்து மதத்தைச் சார்ந்த சாஸ்திரீக வேதாந்தம் முழுவதும் அடங்கிவிட்டது எனலாம். இந்த வாக்கியங்களைக்கொண்டு பாற்கடல் என்பது எது? மத்து எது? கயிருகக் கருதப்பட்ட வாஸுகி யார்? இருபக்கங்களில்

இருந்து இழுக்கும் தேவர்கள் யார்? அசுரர்கள் யார்? அமிர்தம் என்பது எது? விஷம் என்ருல் என்ன? என்பவைகளை ஒருவன் சரிவர அறிந்து கொண்டாஞ கில் அவனே ஞாஞேதயம் படைத்தவன் ஆவான் என்று சொல்லத் தேவையில்லை. இந்த வாக்கியங் களுக்குள்ளேயே "அமிர்தம்" என்பது அடங்கிவிட்டது எனலாம். ஏனெனில் அறிவே—அமிர்தம். இதற்கு மேலான அமிர்தம் இல்லவும் இல்லை. கிடைக்கவும் கிடைக்காது. இந்த வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு நோக்குங்கால் பல உண்மைகள் வெளிப்படு கின்றன. அவைகளை ஆதாரமாகக்கொண்டு நம் நாட்டு வான சாஸ்திரக்ஞர்களும், விக்யான சாஸ்திரக்ஞர்களும், சோதிடத்தில் ஈடுபட்டவர்களும் பலவகைகளில் ஆராய்ச்சி செய்து நம் உலகத்திற்கே ஞானத்தை ஊட் டும்படியான சந்தர்ப்பம் ஒரு காலம் ஏற்படலாம் என்ற நம்பிக்கையின் பேரிலே இவை எழுதப் பட்டுள்ளன.

**அறிவே சாந்தி அளிக்கும்.**

பல சாஸ்திரங்களில் சிறிதளவு ஞானமும், சிற்ப சாத்திரத்தில் தீவிரமான தேர்ச்சியும், மேலும் உண் மையை உணரவேண்டும் என்ற அவாவும் கொண்ட இந்த எழுத்தாளருக்கு பல வருடங்கள் செய்த ஆராய்ச்சிகளின் பலஞக, முற்றிலும் சாந்தி ஏற்பட்டது. இதே சாந்தி எல்லோருக்கும் ஏற்படவேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கப்படுகிறது.

இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டபொழுது நம் நாட்டு பல கிரந்தங்களைத் தவிர முக்கியமாக இரண்டு புத்தகங்கள் உபயோகிக்கப்பட்டன. அதில் ஒன்று "Gopinatha Rao's Iconography" "பிரதிமை விமர்சனம்" இரண்டாவது "அபிதான சிந்தாமணி". இந்தப் புத்தகத்தை முதன் முதலில் தஞ்சை சரஸ்வதி மஹால் புத்தகாலயத்தில் பார்த்தபொழுது, அவ்வளவு சிரமப்பட்டு எழுதிய புத்தகம் யாருக்கு பிரயோசனப் படப் போகிறது என்று எண்ணியதுண்டு. ஆயினும், அதுவே பல விதங்களிலும் முற்றிலும் உபயோகப் பட்டது. **இந்த இரண்டு புத்தகங்களையும் எழுதியவர் களுக்கு, நாம் எந்நாளும் கடமைப்பட்டு இருக்கிறோம்.**

—o—

## 2. தெய்வ சாந்நித்யம்

நாயனக்காரர் மெய்மறந்து ஊதுகிறார். அவரைச் சுற்றி அபரிமிதமான கூட்டம். பிரார்த்தனைக்காகப் பலர் காவடி தூக்கி வந்தனர். அன்று ஒரு கார்த்திகை தினம். திராவிட தேசத்தில் ஒரு சுப்ரமண்யத் தலம். ஆலயம் மிகவும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. ஜனங்களின் சௌகரியத்திற்காகவே உத்ஸவ விக்ரஹங்களை வெளி மண்டபத்தில் ஒரு உயரமான மேடையில் அமர்த்தி இருந்தனர். விக்ரஹங்களைச் சுற்றி சில ஆடவர்களும்,

பூஜை செய்பவர்களும், மற்றும் சில கைங்கர்யம் செய்கிறவர்களைத் தவிர, ஒரு பெரியாரும், அவ்வாலயத்தின் தர்மகர்த்தாவும் பிரஸன்னமாக இருந்தனர்.

அபிஷேக சாமான்களும், பழம், புஷ்பம், சந்தனம், பால், முதலியவைகளும் அபரிமிதமாக சேகரிக்கப்பட்டுள்ளன. அம்மேடையைச் சுற்றிக் கைப்பிடி போட்டு ஜனங்கள் உள்ளே வராதபடி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேடைக்கு வெளியே எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி அவ்வளவு கூட்டம். அபிஷேகம் ஆரம்பிக்கும் சமயம். முருகா ! முருகா ! என்ற ஆரவாரம். சந்தனக் காப்பு சாத்தப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் தலைமேல் கைகூப்பி வணங்குகிருர்கள். ஒவ்வொருவர் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகுகிறது. அவ்வளவு ஜனங்களும் கண்ணீர்விட, மேடைமேல் இருந்த பெரியார் ஒருவரே புன்சிரிப்புடனும், ஜனங்களின்பால் பரிதாபத்துடனும், காணப்பட்டார். இவ்வளவு ஜனங்கள் கண்ணீர் விடுவதைக்கண்ட நானும் கண்ணீர் வடித்தேன். அதுசமயம் என் உள்ளத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. அவ்விதம் கண்ணீர் வடித்த பெரும்பாலோர் முருகனையும், அவர் சக்தியையும் அறிந்தவர்களா அல்லது அறியாமலே கண்ணீர் வடிக்கிருர்களா என்பதை அறிய நான் விரும்பினேன்.

ஆயினும், ஒன்று புலனுயிற்று. யார் அறிந்தவர்களானலும் சரி, அறியாதவர்களாயினும் சரி, அந்த

இடத்திற்கு விசேஷம் இருக்கிறது என்பதை அறிந்தேன். இல்லையேல் அவ்வளவு ஆயிரக்கணக்கான மக்கள் கூடி ஒரே சமயத்தில் கண்ணீர் வடிக்க ஏற்பட்ட சம்பவம் சாதாரணமாக எவ்விடத்திலேயும் காண முடியாது. ஏதோ விசேஷம் அவ்விடத்திற்கு இருந்தே இருக்கவேண்டும். அது விஷயம் பெரியாரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அவாவோடு அவரை அணுகி நமஸ்கரித்து, விஷயங்களைத் தெரிவிக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொண்டேன். அவர் கொடுத்த மறுமொழி " நீ இந்தத் தலத்திற்குப் புதிதாகையால் உனக்கு இவ்விஷயம் புதிதாகவே இருக்கிறது." இவ்விடங்களில் இது சகஜமே. நீ கேட்ட கேள்வி மிகவும் பெரியது. இவ்விதமான கேள்விகளை சாதாரணமாக கேட்பதும் இல்லை, கேட்கத் துணிவதும் இல்லை. ஆலயம் என்பது அறிந்தவர்களுக்கும், தெய்வீகமாக வசிப்பவர்களுக்கும், பிரும்ம ஞானிகளுக்கும் வேண்டாதவை. ஆலயங்கள் என்பது கடவுளை அறிய ஒரு வழியேயாகும். இந்த ஆலயங்களுக்கு ஒரு வித மகத்துவம், இல்லாவிடில் பாமர ஜனங்களுக்கு அதில் பக்தியும், சிரத்தையும் ஏற்படாது. இங்கே வா என்று சொல்லி அப்பெரியார் விக்ரஹங்களுக்கு அருகில் என்னை அழைத்துச் சென்ருர். இந்த விக்ரஹங்களைப் பார், எவ்வளவு அழகாகவும், சிற்பக்கலையில் தேர்ந்தவை என்பதையும் அறிவாய். இந்த விக்ரஹங்களை செய்து முடித்தவர் ஒரு பெரிய ஞானியாக இருந்திருக்கவேண்டுமல்லவா ? அவர் ஊர், பெயர், எவரும்

அறியார். இந்த விக்ரஹங்கள் ஒரு மனிதரால் செய்யப்பட்டவையேயொழிய வேறில்லை. அந்த மகானுடைய ஈச்வரத்தன்மையையே இவ்விக்ரஹங்கள் பிரதிபலிக்கின்றன.

" சாந்நித்யம் முதலில் ஏற்படும் இடம் சிற்பியின் மனதே "

சிற்பி உயிருடன் இருந்த நாளில், உண்பதற்கே இல்லாமல் கஷ்டம் அனுபவித்துக்கூட இருந்திருப்பார். இப்பொழுது அவருடைய மகிமை, இவ்வளவு ஜனங்களையும் கண்ணீர் சொரியச்செய்கிறது. திராவிடச் சிற்பத்தின் வைபவம் இதுவே. இதன் விவரங்களை சாவகாசமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லி முடித்தார். அந்த விக்ரஹங்களை நன்ருகச் சோதித்துப் பார்த்தேன். அவைகள் ஓர் அப்பழுக்கில்லாத பதுமைகளேயாகும். சிற்ப சாஸ்திரத்தைக் கரைகண்ட ஒருவரால் செய்யப்பட்டன என்பதற்கு ஐயமில்லை. அந்த விக்ரஹங்களின் ஒவ்வொரு அவயவமும், நிற்கும் பாணியும், எனக்கு ஒரு அளவிலா ஆச்சர்ய மனப்பான்மையையும், அவைகளைச் செய்துமுடித்த சிற்பியினிடத்தில் ஒரு அலாதி பக்தியையும் ஏற்படுத்தியது. நான் அந்தச் சிற்பியை மனதில் தியானித்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய அந்த விக்ரஹங்களுக்கு நமஸ்கரித்து பிரசாதம் பெற்றுக்கொண்டு என் இல்லம் திரும்பினேன். நான் பின்பு மறுமுறை பெரியாரை சந்தித்தபொழுது திராவிடச்சிற்பத்தின் வைபவத்தையும், அதன் பிறப்பு வளர்ப்பையும், அதை ஒட்டிய வேதாந்தத்தையும், அதனுல்

உண்டான பழக்க வழக்கங்களையும், தற்காலம் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும் ஒன்றையும் விடாமல் எனக்கு எடுத்துரைத்தார். அவைகளைக் கீழ்க்கண்டவாறு எழுதத் துணிந்தேன்.

"திராவிடச் சிற்பம் என்பது ஒரு தெய்வீக நாகரீகம்"

'திராவிடச் சிற்பம்' என்பது ஒரு சிற்பக்கலை மட்டுமே என்று நினைக்கக்கூடாது. அது விக்யானத்தையும், வேதாந்தத்தையும், அனேக கலைகளின் விவரத்தையும், பழக்க வழக்கங்களையும், கையாண்ட ஒரு புராதன நாகரீகம். அந்த நாகரீகம் இந்தியாவில் உதித்து, பல நாடுகளையும் எட்டி, அமெரிக்கா வரையில்கூட ஒரு காலம் பரவி இருந்ததாகத் தெரியவருகிறது.

திராவிடச் சிற்பம் பரவிய இடங்கள்


அதற்கு அவ்வவ்விடங்களில் சிற்சில பழைய ஆலயங்களும், கண்டெடுத்த சிற்பங்களுமே ஆதாரம் ஆகும். அமெரிக்காவில் வசித்துவந்த புராதன நாகரீகத்தைச் சார்ந்த சிவப்பு இந்தியர்கள்கூட இந்தியாவிலிருந்து குடியேறினவர்களாகக் கருதப்படுகிறது. நமது இந்தியா தேசமோ வெகுதூரம் வியாபித்திருந்தது. பின்பு சில பாகம் சமுத்திரத்தில் மூழ்கி அதனுடன் பண்டைய சிற்ப சாத்திரமும் மறைந்ததாக கருதப்படுகிறது. இது ஆசியாக் கண்டத்தில், மேற்குப் பக்கம் ஈஜிப்டு வரைக்கும், கிழக்குப் பக்கம் சைனா. ஜப்பான்,

சையாம், போர்னியோ, ஜாவா, அலாஸ்காவைச் சூழ்ந்த தீவுகள் எல்லா இடங்களிலும் பரவி, ஒரு காலம் மிக உன்னத நிலையில் இருந்து, இந்தியாவிற்குப் புகழையும், பெருமையையும் அடையச் செய்தது. இந்தச் சிற்பத்தைப் பற்றிப் பல பக்த சிரோன்மணிகள் பாடலாகவும் பாடியிருக்கிறார்கள். மற்றும் சிலர் சிற்ப சாத்திர மூலமாகவும், புராணங்கள் மூலமாகவும் அதை ஒட்டிய வேதாந்தத்தைப் பற்றி எடுத்துரைத்து இருக்கிறார்கள். **ஆனால், ஒருவருமே ஒரு கோர்வையாகப் பாமர ஜனங்களுக்கு அதாவது எழுதப்படிக்கமட்டும் தெரிந்தவர்களுக்கு அதன் உட்கருத்தைப் புரிந்துகொள்ளும் முறையில் எழுதியிருப்ப தாகத் தெரியவில்லை.**

**எழுதப்படாத சில தத்துவங்கள்.**

ஒவ்வொரு இடத்திலும் முக்கியத்தைவிட்டு அதனால் உண்டான பல அம்சங்களையே விவரித்து எழுதியுள்ளார்கள். உதாரணமாக தேவி என்ற சிலைக்குப் பல மாதிரியான பெயர்கள் உண்டு. அந்த அந்த பெயருக்குத் தகுதியாகவும் அதன் அதன் குணத்திற்குத் தகுதியாகவும் நிர்மாணிக்கப்பட்ட சிலைகள் பலஉள்ளன. அதே தேவியின் சிலை, ஐந்து வயது குழந்தைபோல் நிர்மாணிக்கப் பட்டால் அதற்கு " சந்தியா "என்றும், ஆறுவயதுடைய தானால் " சரஸ்வதி " என்றும், ஏழு வயதானால் " சண்டிகா " என்றும், எட்டு வயதானால் " சாம்பவி " என்றும், ஒன்பது வயதானால் " துர்க்கா " என்றும், அல்லது "பாவா" என்றும், பத்துவயதானால் "கௌரி" என்றும், பதின்மூன்று வயதானால் " மகாலட்சுமி "

## சில சிற்பாலங்கார முத்ரைகள்



சிற்பத்தின்படி அவரவர்களின் குணாதிசயத்தையும், ஈச்வரத் தன்மையையும் ஆதாரமாகக்கொண்டு சிற்பிப்ப தால், ஈச்வரத் தன்மை வாய்ந்த ஆண்பிள்ளையாகவோ, அல்லது ஸ்திரீயாகவோ, சிற்பிக்கவும், வரையவும் படுகிறது. இதன்படி ஒவ்வொரு குணாதிசயத்தையும், எடுத்துக்காட்ட சில முத்திரைகள் ஏற்படுத்தியுள்ளார்கள். அதன் விவரங்கள் பல சிற்ப சாத்திரங்களில் விளக்கப்பட் டுள்ளன. அவைகளிற் சில சித்திரங்கள் மட்டுமே இவ்விடம் கொடுக்கப்பட்டுள்ளன.

இதனால் திராவிடச் சிற்பத்தின் கல்பனா சக்தியும், சிலை நிர்மாணம் செய்யும் முறையும் மிகப் பெரியது என்பது நிச்சயமாகிறது. இவைகளுக்கெல்லாம் உன் னதமாகவும், இப் பூலோகத்திற்கே சிற்பக் கலைக்கு பெருமையைக் கொடுக்கக்கூடியதுமான " நடராசர் " நடனம் என்ற சிவபெருமானின் நடனத்தை ஆவா கனம் செய்து சிற்பித்த மஹான் நம் நாட்டில் உதித் திருக்க, தற்காலம் நல்லது, கெட்டது அறியாது நம் மக்கள் ஜப்பானிலிருந்தும், ஜர்மெனியிலிருந்தும் வரும் ஆபாசமான படங்களையும், பல நம் நாட்டு புகைப் படங்களையும், மாடங் களில் வைத்து பூஜை செய்வதை அறிய நம் நாடு எவ்வளவு அறியாமையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

புதிய பக்தி மார்க்கமும், மூட பக்தியும்

அறியாமைக்குக் காரணம் பொதுவாக ஐந்தாறு நூற்றாண்டுகளாக மகமதியர்களோடும், மற்ற அன்னியர்

களோடும் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளாலும், அதை ஒட்டிய நொந்த மனப்பான்மையாலும், உண்டான புதிய பக்திமார்க்கம் என்பதேயாகும். புதிய பக்தி மார்க்கம் சில காலம் நன்மையை விளைவித்த போதிலும் மூளைக்கு அன்னமளிக்கக்கூடிய ஐம்புலன்களை மூடிவிட்டதென்றே சொல்லலாம். **தற்காலம் பக்தி மார்க்கத்தினால் அறிவு குறைந்து, மூடபக்தி ஏற்பட்டு, சிலர் ஆபாசமான படங்களை வைத்து நாள் முழுவதும் தொழுதும், சிலர் மதம் மாறியும், மற்றும் சிலர் தெய்வமே இல்லை என்று வாதாடி நாஸ்தீகர்களாக மாறியும் வரும் இந்நாளில், இந்த திராவிடச் சிற்பத்தில் உள்ள உண்மைகளை வெளியிட வேண்டியது அலச்யம் ஆகிறது.**

—x—

# 3. நமது ஆலயங்கள்

**வழிபடுவோர் உயர் குணங்களே சக்தி — ஆலயமே சிவம்**

திராவிடச் சிற்பத்திற்கு சிகரமாக நின்றது நமது ஆலயங்களேயாகும். அவைகளை ஊர்ந்து பார்க்குங் கால், பாரத நாட்டின் தென்பாகத்திலிருந்தே இது உற்பத்தியாகி, வளர்ந்து, நாலா திசைகளிலும் சென்றிருக்கின்றன என்பதும், அவைகள் வளர்ந்தபொழுது அவ்வவ்விடங்களுக்கு உகந்தவாறு கொஞ்சம், கொஞ்சம் மாறுதல்களே அவைகளுக்கு ஏற்பட்டுள்ளன என்பதும்,

இதுவே நமது கீழ் நாடுகளுக்கெல்லாம் தாயான சிற்ப மாகும் என்பதும் வெளியாகும். ஆலயங்கள் முதலில் சிறியதாகவும், சக்தி — சிவம் ஒன்றையே கூடியதாயும் இருந்தன. பின்பு ஆகம சாஸ்திரங்களும், சடங்குகள் நிறைந்த பூஜா விதிகளும் ஏற்பட்ட பிறகே வெவ்வேறு விதமான விக்கிரஹங்களை வழிபட ஆரம்பித்தார்கள் என்று தெரிகிறது.

ஒவ்வொரு ஊரிலும் அந்த க்ஷேத்திரத்தின் மகிமையைக்கொண்டு அல்லது அந்த க்ஷேத்திரத்திலுள்ள மனிதவர்க்கத்தின் நற்செயல்களைக் கொண்டும், கும்பகோணத்தில் கும்பேசுவரர் என்றும், மாயவரத்தில் மயூரநாதர் என்றும், மதுரையில் மீனுக்ஷி என்றும், இவ்வாருக ஒவ்வொரு இடத்திலுள்ள பல ஆலயங்களுக்கும் வெவ்வேறு மகிமையைக் கொடுத்தும் பாமர ஜனங்களுக்கு அறிவு கற்பிக்குமாறு சிற்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல க்ஷேத்திரங்களில் உள்ள ஒவ்வொரு ஆலயமும், அந்த க்ஷேத்திரத்திலுள்ள மானிடவர்க்கமாகிய சக்திக்கு அந்த ஆலயம் சிவமாகவே அமைந்தது எனலாம்.

**ஆலயமே — கலா நிலையம்**

ஆலயத்திலுள்ள ஒவ்வொரு நுட்பமான சிற்பத்தையும் கவனித்து நோக்கின் அறிய விரும்புபவர்களுக்கு அதனுல் உள்ள உண்மையான வேதாந்தம் செவ்வனே புலப்படும். அதனுலேயே அறிந்தவர்களுக்கு ஆலயமே கிடையாது என்பது உண்மையாகிறது. அறியாதவர்களுக்கு ஆலயங்கள் அறிவூட்டும் ஒரு கலா க்ஷேத்திர

மாகவும், கல்விப் பொக்கிஷமாகவும் உள்ளன. எல்லா கலைகளும், சிற்பம், வானசாஸ்திரம், விஞ்ஞானசாஸ்திரம் சங்கீதம், நாட்டியம், மேலும் அனேகக் கைத்தொழில் களும், அதனுள்ளேயே அடங்கி இருக்கின்றன.

முன் காலத்தில் பற்பல சாத்திரக்காரர்களும், கலா நிபுணர்களும், அவரவர்கள் கண்டுபிடித்திருக்கும் பல விஷயங்களை அந்தந்த ஆலயங்களிலேயே அரங் கேற்றுவது வழக்கம். சாஸ்திர — கலா நிபுணர்கள் ஆலயங்களிலுள்ள விக்ரஹங்களை மூலமாகக்கொண்டு அந்நாட்டின் சிறப்பையும், மனிதவர்க்கம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும், நாடகரூபமாக நடித்துப் பாமர ஜனங்களுக்கு அறிவூட்டியும் வந்தனர். இவ்விதமாக ஒரு க்ஷேத்திரத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் நானுவிதமான சாஸ்திரங்களிலேயும், கைத்தொழில்களான சப்பரங்கள் கட்டுவது, தேர்கள் கட்டுவது, பலவிதமான உலோகங்களினுல் ரதங்கள் கட்டுவது, விக்ரஹங்களுக்கு ஆபரணங்கள் செய்வது, கிரீடங்கள் செய்வது, வாகனங்கள் செய்வது, ஆலயங்களைச்சேர்ந்த நிலபுலன்களை விவசாயம் செய்வது, மற்றும் பலவிதமான கைத்தொழில்களில் ஈடுபட்டு ஒரே முகமாக ஆலயத்தையே ஒரு சிவமாகப் பாவித்து வாழ்ந்து வந்தனர்.

**ஆலயமே வாழ்க்கையின் லட்சியம்.**

அதிகாலையில் நித்திரையை விட்டெழுந்தது முதல் இரவு படுக்கும்வரை க்ஷேத்திரங்களில் உள்ள ஜனங்கள் வேலையின்றி இருந்தவரல்ல. அந்த அந்த ஜாதியினர்

அந்தந்தக் கலையில் தேர்ந்தவர்கள் அவரவர்கள் தொழிலைச்செய்து களித்தனர். அந்தந்த க்ஷேத்திரத்திலுள்ள ஒவ்வொருவரும் ஈசுவரமயமாகவே வறுமையின்றியும், அறிவுடையவர்களாகவும், மனத்திருப்தியுடனும் கடவுளுக்குக் கைங்கர்யம் செய்கிறோம் என்ற மனப்பான்மையுடன் வாழ்ந்து வந்தனர்.

### தற்கால நிலை

தற்காலம் கலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே விலகிவிட்டன எனலாம். சினிமாக்களும், மற்றும் சங்கீத சபைகளும் ஏற்பட்டு, ஆலயங்களின் சிறப்பைக் குறைத்து விட்டன. ஆலயங்களில் சாதாரணமாக பக்தியின்றி, அறிவின்றித்தொழுவதும், நாஸ்தீகர்களான சிலர் ஆலயங்களே தேவையில்லை என்று வாதாடவும் ஆரம்பித்துவிட்டனர். இந்தசந்தர்ப்பத்தில் ஆலயங்களை புனருத்தாரணம் செய்யவேண்டியது அவசியம். ஆகையால் உண்மையான தெய்வம் இன்னதென்றும், அதை உணரும் முறை என்னவென்றும், நம் நாட்டு ஜனங்களுக்கு அறிவிப்பதோடுகூட இந்த உலகத்திற்கே இதன் உண்மையை தெரிவிக்கவேண்டியது அவசியம் ஆகிறது.

### சிலைகளும் — மதமும்

இவ்வுலகிலேயே இந்துசமயம் ஒன்றே விக்ரஹங்களைத் தொழும் மதம் என்பதாகவும், அதைச் சிலர் தாழ்மையாகக் கருதியும், பேசியும், ஏசியும் இருக்கின்றனர். இந்துக்களும் இதை அறியாதவர் அல்லர். மேல் நாட்டிலுள்ள விஞ்ஞானிகளும், நம் நாட்டிலுள்ள

தத்துவ ஞானிகளும், யுகம் யுகமாகக் கடவுள் உண்டென்றும், இல்லை என்றும் பலவாருக வாதாடிக் கொண்டிருக்க நம் நாட்டில் ரகஸ்யம் என்று இம் மகத்தான உண்மையை நமது ஆலயங்களில் வெகு பந்தோபஸ்துடன் வைத்திருக்கின்றனர். இப் பூலோகத்தில் அனேக மதங்கள் உள. அதனுள் பெரும்பாலோர் காணமுடியாததே தெய்வமென்றும் மனிதர்களாய்ப் பிறந்த தூதர்களின் வழியே கடவுளின் அருள்பெற வேண்டுமென்றும், சிலர் மனிதவர்க்கமே பாபிகளாய்ப் பிறந்தவர்களென்றும், மற்றும் சிலர் மானிடராய்ப் பிறந்து கடவுளைத் தொழுவதால் இறந்த பிறகு சொர்க்கத்திற்குச் சென்று அவ்விடம் எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்கலாம் என்ற மனப்பான்மையையும் கொண்டு இருக்கின்றனர். ஆனல் இந்தப் புராதனமான இந்து சமயம் ஒன்றிலேயே காண்பதே தெய்வமென்றும், காண்பதெல்லாம் தெய்வமயமென்றும், தெய்வத்திற்கும், மனிதவர்க்கத்திற்கும், யாதொரு வித்யாசமும் இல்லை என்றும், தன்னைத் தான் தெய்வம் என்று அறிந்து உணருவதே மனித வாழ்க்கையின் லட்சியம் என்றும், மனிதன் இறந்த பிறகு அவனவன் செய்த நற்செயலின்படியோ, துற்செயலின்படியோ, மாறுதல் ஒன்றே ஏற்படுவதென்றும் போதிக்கப்படுகிறது.

# 4. ஆலயங்களும் அவைகளின் பராமரிப்பும்

இப் பூலோகத்திலேயே அதிகமான சிலைகளையும், விக்ரஹங்களையும், போற்றி வளர்த்து வந்தது நமது ஆலயங்களே. சிலைகளையும் விக்ரகங்களையும் அலங் கரித்து பாமர ஜனங்களுக்கு ஞான உணர்ச்சியைக் கொடுக்குமாறு செய்வது, அவ்வாலயங்களுள் உள்ள பூஜகர்களின் முக்கிய அலுவல்களில் ஒன்ருகும். இவ் விதம் அலங்கரிப்பதற்குப் பலவிதமான சாமான்களும், மேலும் விலை உயர்ந்த ஆபரணங்களும் உபயோகப் படுகின்றன. இந்த கைங்கர்யத்தில் ஈடுபட்டுள்ள பூஜகர்கள் தொன்றுதொட்டு பல நூற்ருண்டுகளாகவே ஒரே முறையில் பயின்றுவந்து இருக்கின்றனர்.

விக்ரகங்களுக்கு ஆபரணங்களைப் பூட்டி அலங் கரிப்பது நம் பாரத நாட்டின் ஒரு அலாதி வழக்கமாக இருந்துவருகிறது. இந்த வழக்கத்திற்குக் காரணம் நமது சிற்பக்கலையே ஆகும். நமது சிற்பக்கலையில் இவ் விதமாக சிற்பாலங்காரங்களை ஆபரணமாக நிர்மாணித்து சித்திரிப்பது ஒரு அலாதியான கொள்கை. உதாரண மாக, சிலைகளுக்கு போற்றக்கூடிய ஆடைகளை, ஒருவித ஆபரணமாகவே சிறப்பிப்பது வழக்கம். இதேபோல் கேசத்தையும் மற்ற ஆஸனங்களையும், தண்டங்களையும் கூட ஒரு ஆபரணமாக சிற்பிப்பது வழக்கம். இப்படிச்

சிற்பிப்பது பாரத நாட்டுக்கு மாத்திரம் வழக்கமானது என்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில், மேல்நாட்டு "காதிக்" சிலைகளிலும் இவ்விதம் சிற்பிப்பதுண்டு. பாரத நாட்டில் இந்த வழக்கம் சிலைகளுக்கு ஏற்பட்ட போதிலும், இவை நாட்டியக்கலைக்குப் பரவி பாமர ஜனங்களிடையே வேரூன்றி விட்டதெனலாம். விக்ரகங்களுக்கு ஆபரணங்கள் பூட்டி அலங்கரிப்பது ஒரு தனி கலையே. இந்தக் கலையில் மேன்மையாகத் தேர்ந்தவர்கள் பூஜகர்களே ஆவர்.

விக்ரஹங்களும் — ஆபரணமும்

இவ்வாலயங்களில் உள்ள சிலைகளிலும் சிற்பங்களிலும் புதைந்து கிடக்கும் உண்மைகளை உணராதவர்களும், உணரமுடியாதவர்களும், உணர மனமில்லாதவர்களுமான இதர பல மதத்தவருக்கு இவ்விக்ரகங்களும் அவைகளை அலங்கரிக்கக்கூடிய பற்பல சிறந்த ஆபரணங்களும், ஒருவிதத் தப்பான மனப்பான்மையையே கொடுத்துவந்து இருக்கிறது எனலாம். இதன் காரணமாகவே பல நூற்றுண்டுகளாக அனேக ஆலயங்கள் சூறையிடப்பட்டும் பல விலையுயர்ந்த ஆபரணங்களும், மேலும் மற்ற பொருள்களும் அபகரிக்கப்பட்டும், பல ஆலயங்கள் பாழாயின. இவைகளில் முதன்மையானது வடநாட்டிலுள்ள சோமநாதர் ஆலயமே. இவ்வாலயம் ஆறு தடவைகளில் இடிபட்டு தற்காலம் புதுப்பிக்கப் பட்டுள்ளது. ஆலயங்களைச் சூறையிடுவதும், விக்ரகங்களை உடைப்பதும், ஆபரணங்களை அபகரிப்பதும்,

பண்டைய காலத்தில் அறியாமையால் ஏற்பட்ட சம்பவம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆயினும் இந்நாளிலும், அவ்விதமான கெட்ட செயல்கள் புத்துயிர் பெற்று தலை விரித்தாடுவதை நாம் கண்டுள்ளோம். நமக்கு சுதந்திரம் கிட்டிய பிறகுகூட இந்நாள்வரை கேரள நாட்டில் அவ்விதமான சம்பவம் வெகுவாக தலைவிரித்தாடியது என்பதைக் கேட்க மனம் நிம்மதி அற்று இருக்கிறது. **சுதந்திரம் பெற்று நான்கு வருடங்களுக்குள்ளாக சுமார் பத்து ஆலயங்களுக்குமேல் நம் நாட்டில் பல பாகங்களில் சூறையிடப்பட்டும், விக்ரகங்கள் உடைபட்டும், பல அட்டூழியங்களுக்கு இலக்காகியும் இருக்கிறது.**

படை எடுப்பும் — கடல் தாண்டலும்

அட்டூழியங்கள் மிகவும் கடுமையாக முன்னொரு காலம் ஏற்பட்டதின் காரணமாகவே, இந்துக்களுக்கும் அவர்கள் தொழும் முறைக்கும் பங்கம் ஏற்பட்டு அவர்களுக்கு ஒரு தங்குமிடமே இல்லாமற் போய்விடுமோ என்ற யோசனையினாலேயே, வெளிநாடுகளுக்குக் குடி ஏறின இந்துக்களைத் தடுத்து கடல் தாண்டினால் பாவம் என்று உத்தரவு பிறப்பித்தனர்.

இம் முக்கியத்வத்தை தற்சமயம் நம் நாட்டிலுள்ள அரிய பெரிய அரசியல் நிபுணர்களும்கூட அறியமுடியாததை உணர எவ்வளவு ஊகம் இன்றி தற்காலம் நாம் வசிக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அக்காலம் இருள்சூழ்ந்த காலம் என்றே சொல்லலாம். நம் நாட்டு

ஜனங்கள் ஒரு பக்கம் வெளிநாடுகளுக்கு குடியேறிச் செல்ல, நம் நாட்டின் வடபாகத்திலிருந்து படை எடுப்பினால் அபாயம் நேரிட்டதைக் கண்ட நம் முன்னோர், மிகவும் புத்தி கூர்மையுடனும், தூரதிருஷ்டியுடனும், ஒருவரும் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்பதை ஒரு தனி முறையில் கையாண்டு அக்கைங்கர்யத்தைச் செய்தனர். அவ்விதம் அப்பொழுது செய்திராவிடில் நம் நாடு முழுவதும் சூறையிடப்பட்டு இந்துக்களுக்கு இருப்பிடமே இல்லாமல் இந்திய நாகரீகமே மறைந்தும் போயிருக்கும். இச்சிக்கலிலிருந்து நம்மையும், நம் நாகரீகத்தையும் காப்பாற்றிய நம் முன்னோர்களுக்கு நமது வணக்கத்தைச் செலுத்துவோமாக.

ஆலயங்களின் மதிப்பும், அமைப்பும்

தற்சமயம் இருள் நீங்கிய காலமாக இருந்த போதிலும், இது சாந்தியே அற்றகாலம். தனக்குள்ள சக்தியை எவ்விதமும் உபயோகித்துத் தன் காரியத்தை சாதித்துக்கொள்ளலாம் என்ற மனப்பான்மை கொண்ட காலம். இவை மேல் நாட்டார் நாகரீகத்தின் காரணமாக நம்மிடையே ஏற்பட்ட கெட்ட மனப்பான்மையே. இவ்விதமான மனப்பான்மைக்கு ஒரு காலம் முற்றுப் புள்ளி ஏற்படவே ஏற்படும் என்றபோதிலும், அக்காலம் வருமளவும் அட்டூழியங்கள் நடந்தே தீரும். ஆகையால் சாந்தக்கொள்கையை அடிப்படையாகக்கொண்ட இந்து மதத்தவர்கள் முன் ஜாக்கிரதையாகவும், தங்களுள் ஏற்பட்டிருக்கும் பிரிவினைகளை ஒருவாறு விலக்கி காந்தி

மகான் போதித்ததுபோல், உண்மையையும், மதப்பற்று தலேயும், அறிவையும், தீர்க்கதரிசனத்தையும் கைவிடாது மற்ற மதத்தவர்களேச் சாந்த மூர்த்திகளாக செய்தல் வேண்டும். அறிவாளிகள் இந்து சமயத்தின் உட் கருத்தையும், உண்மைகளேயும் போதித்து சிலேகளுக்கும், ஆலயங்களுக்கும், உரிய மரியாதையை செலுத்தும்படி செய்தல் வேண்டும். கண்டபடி ஆலயங்களேக் கட்ட லாகாது. கட்டும் ஆலயங்களுக்கு உகந்தவாறு பரி பாலனம் செய்யவும், பாதுகாக்கும் பொருட்டு தகுந்த திரவிய வசதிகள் செய்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஆலயமும் இடைவிடாது 24 மணி நேரமும் பாதுகாப்ப தற்கு உகந்தவாறு வசதிகள் செய்து இருக்கவேண்டும். இவைகளே எல்லாம் நம் மதப்பற்றற்ற இந்திய சர்க்கார் பழைய ஆலயங்களே செப்பனிடுவது போலவே எல்லா ஆலயங்களேயும், சூறையிடப்படாமல் காக்கவும், அவை களே புனர் உத்தாரணம் செய்யவும் வசதிகள் ஏற்படுத் துவது நலம். புதிதாக கட்டப்படும் ஆலயங்களும், மசூதி களும், மாதா கோவில்களும், எவ்விதம் எந்த இடங்களில் கட்டப்படவேண்டும் என்பதை ஒரு சட்ட ரூபமாக நிர்ணயிக் கப்படுவதும் நலமாகும்.

---


# 5. உலக உற்பத்தி

### உலகங்களும், அவற்றின் சக்திகளின் உதயமும்.

**ப**ல கோடி வருடங்களுக்கு முன், சூர்ய மண்டலமும் மற்ற நட்சத்திரங்களும், உற்பத்தியானதற்கு முன்பு, ஆகாயம் ஒளியின்றி சாம்பல் நிறமாக இருந்ததென கருதப்படுகிறது. அந்த ஆகாசமானது ஒரு சிறு எல்லைக் குட்படாமலும், சக்தி மயமாகவும் இருந்ததென கருதுகின்றனர். அது சக்தி மயமாக இருந்தபோதிலும், தன் சக்தியை வெளிப்படுத்திக் காட்டமுடியாமல் இருந்தது. காற்று இருக்கிறது. அதை நாம் அறிகிறோம். அது தன்சக்தியைக் காண்பிக்கத்தானே யோக்யதையற்றதாக இருக்கிறது. அது ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளோ,

சித்திரம் 2.

சூர்ய மண்டலத்தின் வளர்ச்சிச் சித்திரம்



சாம்பல் நிறமுள்ள, சக்தி வாய்ந்த, சிறு எல்லை இல்லாத **பிரும்ம-சக்தி**

சாந்தி இல்லாமலும், கட்டுப்பாடில்லாமலும், சிறிய எல்லைகளுக்குட்பட்ட **விஷ்ணு-சக்தி**

சாந்தி அடைந்த கட்டுப்பாட்டுக்குட்பட்ட, ஒளியோடும், ஓங்கார சப்தத்தோடும் கூடிய **சிவ-சக்தி**

அல்லது ஒரு எல்லைக்குள்ளோ, அடைப்பட்டால்தான் அதன் சக்தி நன்கு விளங்குகிறது. அதாவது நாம் விசிறியை வீசும்பொழுது, அந்த விசிறியின் வடிவத்தில் காற்று மோதுகிறதினுல் காற்றின் சக்தியை நாம் அறிகிரோம். அல்லது, அந்தக் காற்று நம் தேகத்தில் ஒரு எல்லைக்குள் வீசுகிறதினுல் நாம் அதை உணருகிரோம். இன்னும் விவரித்துச் சொல்லுங்கால் அந்த காற்றை ஒரு மோட்டார் டயருக்குள் அடக்கிவிட்டால் அது எவ்வளவோ டன்கள் கனமுள்ள சாமான்களைக் கூடத் தூக்குவதை நாம் காண்கிரோம். இதிலிருந்து ஒன்று தெரிகிறதல்லவா? **அதாவது, எதனுடைய சக்தியையும் அறிய வேண்டுமானுல், அதை ஒரு கூட்டில் அடைத்தோ அல்லது ஒரு எல்லைக்குள் ஓடவிட்டோ, அல்லது ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தாலோ அதன் சக்தி நன்கு விளங்கும்.**

ஆகாசம் சக்திவாய்ந்ததாய் இருந்தபோதிலும், அது ஒரு சிறு எல்லைக்குட்படாமலும், ஒரு சிறு ரூபத்திற் குட்படாமலும் இருந்தது என்பார்கள். இதையே **பரப்பிரும்ம சொரூபம்** எனப்படுகிறது. பரப்பிரும்ம சொரூபியான ஆகாசத்திற்குள் இரண்டுவிதமான அம்சங்கள் இருந்தனவாம். அவைகள் நாளடைவில் வேறு வேருகப் பிரிந்து, ஒரு அம்சம் தன் ஹிருதய கமலத்தில் ஒரு சிறு எல்லையை ஏற்படுத்திக்கொள்ள, இரண்டாவது அம்சம், சக்ரவாணம் போலும், பட்டுப்பூச்சி போலும் அதனைச்சுற்றி முட்டைபோன்ற வடிவம் எடுத்தது.

இவ்வாறு, இவை மேகமும் மழையும்போல ஒருவிதமான எல்லையை ஏற்படுத்திக்கொண்டன. ஆகவே எல்லை இல்லாத ஆகாசத்தில் ஒரு எல்லைக்குட்பட்ட உலகங்கள் அநேக கோடி உண்டாயின. இன்னும், பல உலகங்கள் உண்டாகிக்கொண்டேதான் இருக்கின்றன. அவைகளுள் சில பெரியதாகவும், மற்றும் சில மிகப் பெரியதாகவும், மேலும் சில சிறியதாகவும் இருந்தனவாம்.

கூட்டில் அடைப்பட்ட உலகங்களுக்கு தனித் தனியே சக்தி ஏற்பட்டமையால், ஒன்று மற்றொன்றை இழுக்க, பல பல சிறிய உலகங்களெல்லாம் பெரிய தோடு சேர்க்கப்பட்டனவாம். சில உலகங்கள் கூட்ட மாகவும் அமைக்கப்பட்டன. அப்பொழுதும் பல உலகங் களுக்குள்ளே ஒன்றுக்கொன்று இழுப்பு ஏற்பட்டு ஒரு கட்டுப்பாட்டுக்குள் வராமலும், சாந்தி ஏற்படாமலும், இருந்தனவாம். இதையே நம் முன்னோர் விஷ்ணு சக்தி என்பார்கள்.

**சூர்ய மண்டலமும் — அதன் சக்தி விசேஷங்களும்.**

விஷ்ணு சக்தியானது பல கோடி ஆண்டுகள் நிம்மதி இன்றியும், உலகங்களுள் ஒரு கட்டுப்பாடின்றி யும் கழிந்த பின்னரே சில உலகங்கள் உதயமாகி தமக் குள்ளேயே ஒரு எல்லையை ஏற்படுத்திக்கொண்டு, அதனுள் சஞ்சரிக்க ஆரம்பித்தன. இப்படி சஞ்சரிக்க ஆரம்பித்த உலகங்களின் கூட்டத்தில் ஒன்றுதான் நாம் வசிக்கும் சூர்ய மண்டலம். இதற்கே நம் முன்னோர்

சிவராத்திரி எனப் பெயரிட்டு இருக்கிறார்கள். இதிலேதான் மனித வர்க்கத்திற்கு ஒரு முக்கிய ஸ்தானமும் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதனுள்ளேதான் புத்தி சக்தியும் பகுத்தறிவு சக்தி (Power of discrimination) என்பதும் உதயமாகிறது என்பார்கள்.

புத்தி — சக்தி உதயமானதின் காரணமாகத்தான் பிரகாசம் அல்லது ஒளி என்பது காணப்பட்டதாகக் கருதுகிறார்கள். உலக உற்பத்தியை விவரிக்குங்கால், சக்திமயமான சாம்பல் நிறத்தோடு கூடிய ஆகாசத்தில், ஓம் என்ற சப்தத்தோடு ஒரு ஒளி உண்டாயிற்று எனப் படுகிறது. அதோடு அதனுள்ளே, பூலோகமும், புவர் லோகமும். ஸுவர்லோகமும் உண்டாக்கப்பட்டன வாம். பின்பே மூன்று இதர உலகங்கள், அதாவது அங் காரகன், குரு, சனி இவைகள் வளர்ந்தன. மேலும், நாளாக நாளாக சூர்ய மண்டலத்தில் வளர்ச்சி ஏற்பட்டு, இப் பொழுது இருக்கும் நிலைமையை அடைந்திருக்கிறது. இதை விவரிக்குங்கால், சக்தி உள்ள சாம்பல் நிறமான சிறு எல்லை இல்லாத ஆகாசமான ஒன்றில், இரண்டு ஏற்பட்டன. அந்த இரண்டுமே, பின்பு மூன்றாயின. இதனுள் ஒன்று என்பதை பிரும்மம் என்றும் அல்லது சக்தி என்றும், இரண்டு என்பதை விஷ்ணு என்றும், மூன்று என் பதை சிவன் என்றும் சிலர் கருதுவர்.

சூர்யமண்டலத்தின் ஆட்சி அல்லது சிவ — சக்தியின் வளர்ச்சி.

ஒரு பெண்மணிக்குக் கர்ப்பம் ஏற்படுங்கால் நாம் முதலில் காண்பது முகத்தில் ஒரு பிரகாசமே. இந்தப்

பிரகாசம் ஒரு கருவின் உற்பத்திக்கு அடையாளமாக இருக்கிறது. அப்பொழுது அக்கரு அம்மையின் வயிற்றில் ஒரு பிண்டமாக இருந்தபோதிலும், அதனுள் மூளையைத் தவிர மூன்று அவயவங்கள் மட்டுமே சிறு புள்ளிகள்போல் காணப்படுகின்றன. அவைகளே வயிறும், காற்றுப் பையும், ஹிருதயமும் ஆகும். மற்ற அவயவங்களான கைகள், ஆண்குறி அல்லது பெண் குறி, கால்கள், இவைகள் பின்பே வளருகின்றன. இதே போல், சக்தி வாய்ந்த, லோக மாதா என்று சொல்லப் பட்ட, சிறு எல்லையில்லாத ஆகாசத்தின்கண் ஓம் என்ற சப்தத்துடன் ஒரு ஒளி ஏற்பட்டது. இதையே ஒரு குழந்தை தன் தாயின் வயிற்றில் உருவானதற்கு ஒப் பிடலாம். ஒளி ஏற்பட்டதின் காரணமாக சூர்யனைத் தவிர, பூலோகம், அதாவது நாம் வசிக்கும் உலகமும், புவர்லோகம், அதாவது புதக்ரஹமும், ஸுவர்லோகம், அதாவது சுக்கிர க்ரஹமும் முதலில் தெரிந்தனவாம். இதில் நாம் வசிக்கும் பூலோகமே, வயிற்றுக்கு சமானமென்றும், புதனே காற்றுப் பைக்குச் சமானமென்றும், சுக்கிரனே ஹிருத யத்திற்கு சமானமென்றும், சூர்யனே சூர்யமண்டலத்தின் மூளை என்றும் கருதப்படுகிறது. மற்ற நான்கு க்ரஹங்களுள், அங்காரகனே கை என்றும், சந்திரன் வயிற்றைச் சார்ந்த கல் லீரலுக்குச் சமானமானதென்றும், குருவே ஆண்குறி - பெண் குறிகளுக்கு சமானமானதென்றும், சனியே சூர்யமண்டலத் தின் கால்களுக்குச் சமானமானதென்றும் வகுத்திருக்கிறார்கள்.

இவ்விதம் ஏற்பட்ட சூர்யமண்டலம் ஓர் எல்லையான 27 நட்சத்திரக் கூட்டங்களினால் ஏற்படுத்தப்பட்ட

கோட்டைக்குள் சஞ்சரிக்கின்றது. இப்படி சஞ்சரிப்பதனால் பலவிதமான சக்திகள் உண்டாவதோடுகூட புத்தி சக்தியும், பகுத்தறிவு சக்தி (Discriminative Energy) என்பதும் சூர்யனுள் கிரஹிக்கப்படுகிறது.

அச்சக்தி, தற்காலத்தில் மோட்டார் காரிலுள்ள டைனமோ (Dynamo) எப்படி சக்தியை வளர்க்கிறதோ, அதேபோல் சூர்யமண்டலத்திலும் நடைபெறுகிறது எனலாம். நாம் சூர்யனை ஒரு டைனமோவின் அச்சாகவும், மற்ற கிரஹங்கள் அதாவது பூமி, சந்திரன், புதன், சுக்கிரன், அங்காரகன், குரு, சனி இவைகளை அச்சின்மேல் சுற்றியுள்ள கம்பிகளாகவும் ஏற்றுக்கொண்டு, 27 நட்சத்திரக் கூட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாக்னெட் (Magnet) ஆக வேலை செய்யும் பொழுது, மூளையாகவும், அதாவது டைனமோவின் அச்சாக இருக்கப்பட்ட சூர்யனைச்சுற்றி பல சக்திகளும் மேலும் புத்தி - சக்தியும் வளருகிறது, இவ்வளர்ச்சிக்கு நாம் வசிக்கும் பூமியே, ஒரு மனிதனுக்கு வயிறு எவ்வளவு முக்கியமோ அப்படிப்பட்ட முக்கிய ஸ்தானத்தை அடைந்திருக்கிறது. அதனுள் உதயமாகி இருக்கிற மனித வர்க்கமே சூர்யனுள் சேர்க்கப்படும் பகுத்தறிவு சக்திக்கு பாலூட்டி வளர்க்கும் கருவியாக காணப்படுகிறது.

---

# 6. பாற்கடலும் அமிர்தமும் :


சூர்ய மண்டலத்தில் உள்ள எல்லா கிரஹங்களுடைய அமைப்பையும் உணருவதற்கு அடியில்கண்ட உதாரணம் தகுதியானது. நாம் வசிக்கும் பூமியைத் தவிர மற்ற எல்லா கிரஹங்களும் பரங்கிக்காய்போல் உள்ளே வயிற்றுப் பக்கம் ஆகாசம் நிறைந்தும், சதைப் பக்கம் பல உலோகங்கள் (Metals) உண்டானவை என்றும் கருதப்படுகிறது. அவைகளுள் அங்காரகனுக்கு செம்பு உலோகம் அதிகம் என்றும், அதனுலேயே அது சிவப்பாக காணப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அதனுல் அதனுள் வாயுக்களால் ஏற்பட்ட களிம்பே சில இடங்களில் பச்சையாக காணப்படுகிறது என்று நினைக்க இடம் இருக்கிறது. குருவில் வெள்ளி அதிகம் என்றும், அதனுல் அது கருத்த மஞ்சள் நிறம் அதாவது பொன்நிறமாய்க் காண்கிறதென்றும், சனியில் இரும்பு அதிகம் என்றும், அதனுலே அது நீல வர்ணமாகக் காணப்படுகிறதென்றும், மேலும் அதைச் சுற்றி காந்த சக்தி ஒன்று வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது என்றும், சூர்யனுக்குச் செம்பும், இரும்பும் சமமாக இருக்கிறது என்றும், அதனுல் அது நீலம் கலந்த சிகப்பு நிறம் கொடுக்கிறதென்றும், அதாவது மாதுளம் பூவின் நிறம் உடையதாக இருக்கிறது என்றும், புதனில் செம்பும், வெள்ளியும் சமமாக இருப்பதால் அது சிவந்த மஞ்சள் நிறம் கொடுக்கிறதென்றும், சுக்ரனில் இரும்பு அதிக

மாகவும், செம்பு குறைவாகவும் இருப்பதினால், அது சிவப்புக் கலந்த நீலமாகத் தோன்றுகிறதென்றும், சந்திரனுக்கு இரும்பும், வெள்ளியும், சமமாக உண்டென்றும், அதனால் அதற்குப் பச்சைநிறம் ஏற்பட்டிருக்கிறதென்றும் கருதப்படுகிறது. நாம் வசிக்கும் பூமியோ, பரங்கிக்காய் போல் அல்லாமல் தேங்காயைப் போல் உள்ளுக்குள் வயிற்றில் ஆகாசத்தை அடக்கிக்கொண்டு, பல உலோகங்களும், மற்றவைகளும், காலாகினியால் உள்ளே கொதிக்க, மேல்புறம் தேங்காயின் ஓடுபோல் ஒரு கெட்டியான வடிவம் ஏற்பட்டு, அதற்குமேல் மட்டையைப்போல் பல பாகங்கள் உயர்ந்தும், தாழ்ந்தும், சக்தி வாய்ந்ததுமான உலோகங்களையும் கற்களையும், மண்ணையும், நெருப்பையும், நீரையும், காற்றையும், அபரிமிதமாகவும், ஆச்சர்யப்படத்தக்க விதத்தில் ஏராளமாகவும் வைத்துக்கொண்டு, மனித வர்க்கம் செவ்வனே முன்னேறுவதற்கு உகந்தபடி அமைக்கப்பட்டிருக்கிறது. இதையே நம் முன்னோர் பாற்கடல் எனக் கருதினர்.

பாற்கடலும் — சந்திரனும்.

விஞ்ஞானிகளின் தங்கள் ஆராய்ச்சியின் மூலமாக சந்திரன் நம் பூமியின் ஒரு பாகமாக ஒரு காலம் இருந்து, பின்பு பிரிந்து போயிற்று என்பர். ஆயினும் இது முற்றிலும் நம்பத்தக்கதல்ல என்றும் சிலர் கருதுவர். நம் திராவிடச் சிற்பத்தின் மூலம் கிட்டிய விவரங்களை நோக்குங்கால், **நம் பூமியும், சந்திரனும், மனிதனின் வயிறும்,**

சித்திரம் 3.




கல்லிரலும், எப்படி ஒன்றோடொன்று பிணைந்தாற்போல் அமைந்துள்ளதோ, அதேபோல் அமைந்துள்ளதாகக் கருதப்பட்டிருக்கிறது.

சிற்பிகளின் கற்பனைகளும், புராணக் கதைகளும்.

சந்திரன் விஷ்ணுவின் திருமார்பில் பிறந்தான் எனப்படுகிறது. அச்சந்திரனே திருப்பாற்கடல் கடையப் பட்டபொழுது, பிறந்தான் என்றும் சொல்லப்படுகிறது. பாற்கடல் கடையப்பட்டபொழுது தேவர்கள் ஒரு பக்கமும், அசுரர்கள் மற்றொரு பக்கமும் நின்று, பூமி தாழியாகவும், மந்திர பர்வதம் மத்தாகவும், சந்திரன் மந்திரத்தைத் தாங்கிய தரியாகவும், வாசுகி எனப்பட்ட ஆதிசேஷன் நாணாகவும், கடற்புனல் கயிறாகவும், ஆயிரம் வருடங்கள் கடைந்தனர் என்றும், அப்பொழுது

வாசுகி மந்திர கிரியைப் பெயர்த்து, தேவர்களுக்கு உதவினன் என்றும், பின்பே அமிர்தம் கிட்டியதாகவும் சொல்லப்படுகிறது.

மந்திர பர்வதம் என்பது ஒரு பர்வதமும் அல்ல ஜபிக்கும் மந்திரமும் அல்ல. அது சந்திரனையும், பூமியையும் பிணைத்த ஒரு காந்த சக்தியே ஆகும். திராவிடச் சிற்பத்தின்படி யானை தும்பிக்கைக்கு எவ்வளவு உயர்வு சிற்ப அலங்காரத்திற்காக கொடுத்திருக்கிறார்களோ, அதேபோல் நாகப்பாம்பிற்கும் அவ்வுயர்வு உண்டு. ஆதிசேஷன் எனப்பட்ட ஐந்து தலை நாகத்தையே கிரஹங்களின் ஆக்கிரம சக்தியைக் குறிக்க சிற்பிக்கப்படுகிறது. அதேபோல் பர்வதத்திற்கும் ஒரு உயர்வு உண்டு. இவைகளெல்லாம் சிற்பாலங்காரத்தை ஒட்டிய ரூபங்களேயாகும்.

இப்பூலோகம் உற்பத்தியானபொழுது பூமியும், சந்திரனும், நெருங்கினற்போல நம் வயிறும், கல்லீரலும் போல் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டிருந்தன என்றும், அப்போது பூமி ஒரே சமுத்திர ரூபமாக இருந்ததென்றும் கருதப்படுகிறது. அதாவது பூமி உஷ்ணத்தினல் கொதித்துக்கொண்டிருந்து பின்பு அதன் மேல் பாகம் குளிர்ந்தபொழுது, பூமியைச்சுற்றி காற்று இருந்தமையால், அக்குளிர்ந்த இடங்களில் வேர்வைபோல் நீர் உதிக்க அது சமுத்திரம் ஆயிற்று. இதையே பாற்கடல் என்றனர். அச்சமயம் பூமிக்கு வெளியே இருக்கப்

பட்ட அங்காரகன், குரு, சனி முதலிய கிரஹங்கள் ஒரு பக்கமும், உள்ளேயிருக்கும் சூர்யன், புதன், சுக்கிரன் இம் மூன்று கிரஹங்களும் மற்றொரு பக்கம் இழுக்க, மந்திர பர்வதம் பெயர்க்கப்பட்டு சந்திரனுக்கு சுற்று ஏற்பட்டது. அதன் மூலமாகவே சந்திரன் தன் சுய ரூபம் எடுத்து, தன் காரியங்களைச் செய்ய முதலில் விஷம் உண்டாயிற்று. சந்திரன் பூமியோடு சேர்ந்து இருந்த பொழுது, நிழலுக்கு இடமில்லை. ஆனால் சந்திரன் பூமியைச் சுற்ற ஆரம்பித்தபொழுது, அதன் நிழல் பூமியில்விழ ஆரம்பித்தது. அதுவே ராகு, கேதுக்கள் ஆவர். பின்பு சமுத்திர ஜலம் சந்திரனின் சக்தியால் இழுக்கப்பட பூமி உதயமாயிற்று. இதுவே அக்காலம் விஷ்ணு கூர்மாவதாரம் எடுத்தார் எனப்படுகிறது. பின்பு மேலும் கடைய, இப் புவியில் மரம், செடிகளும் ஜீவப்பிராணிகளும், மனித வர்க்கமும் உண்டாகி, அதில் அமிர்தம் கிட்டியது.

**சந்திரனும் — யந்திரமும்.**

இதையே ஒரு யந்திர சாதனத்திற்கு ஒப்பிடலாம். நாம் ஒரு கடிகாரத்தைச் செய்கிறோம். அதில் எல்லா யந்திரங்களும் அதனதன் இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கு சாவியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்த யந்திரம் ஓடுவதற்கு யாராவது ஒருவர் அதன் பெண்டுலத்தை ஆட்டிவிடவேண்டுமல்லவா ? அதேபோல் சந்திரனை வேலை செய்யும் பொருட்டு சுற்றி விட்டது பூமியின் இருபக்கங்களிலுமுள்ள கிரஹங்

"பாற்கடலும் அமிர்தமும்"

களேயாகும். இச்சம்பவமே, சூர்யமண்டலத்தின்கண் ஓம் என்ற சப்தத்தோடுகூடிய ஒரு ஒளி உண்டானதற்கும், திருப்பாற்கடலில் மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்கும் ஆதாரமாகிறது. இவ்வளர்ச்சியையே விஷ்ணுவின் தசாவதாரங்கள் என சிற்பிக்கப்படுகிறது.

இதன் தாத்பர்யத்தைச் சரியாக அறிந்தவரே தத்துவ ஞானி எனலாம். ஏனெனில் இதற்குள் மனித வர்க்கத்திற்கு வேண்டிய எல்லா வேதாந்தமும் அடங்கி விட்டது. அதன் தாத்பர்யத்தை சரிவர விளக்குங்கால், நாம் வசிக்கும் பூமியானது, சூர்ய மண்டலத்தின் பகுத்தறிவு - சக்தியை உண்டாக்குவதில் முக்கிய ஸ்தானம் வகுத்திருக்கிறதென்று முன்பே கூறப்பட்டுள்ளது. மனித வர்க்கத்திற்கு வயிறு அல்லது இரைப்பை எவ்வளவு அவசியமோ, அதனுல் சக்தி உற்பத்தியாகி, எல்லா அவயவங்களுக்கும் இரத்த ரூபமாகச் சென்று மூளையை விருத்தி செய்வதற்கென சக்தியைக் கொடுக்கிறதோ, அதேபோல். நாம் வசிக்கும் பூமி சூர்ய மண்டலத்தின் வயிறுபோல் மனித வர்க்கத்தைச் செவ்வனே வளர்த்து, ஆதனுல் உண்டாகும் அமிர்தம் என்று சொல்லப்பட்ட பகுத்தறிவு - சக்தியை சூர்யனுக்குக் கொடுக்கிறது. இதுவே பூமியின் கைங்கர்யம் ஆகும்.

✲

# 7. அமிர்தமும் - விஷமும்

**பூ**மியில், மனித வர்க்கத்தைச் சரிவர வளர்க்கும் கடமை பூமிக்கு மாத்திரம் அல்லாமல் எல்லா கிரஹங்களுக்கும் ஏற்பட்டிருந்தபோதிலும், எல்லாவற்றிற்கும் மேலாக சந்திரனுக்கே அந்தக் கடமை அதிகரித்திருக்கிறது. ஏனெனில் சந்திரன் பூமியை எப்பொழுதும் சுற்றிக்கொண்டு ஒரு காவல்காரனைப்போல் தன் வேலையைச் செய்கிருன். சந்திரன் இல்லாவிட்டால் மற்ற கிரஹங்கள் எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தபோதிலும் ஒன்றும் செய்ய முடியாது. சந்திரனை பூமியாகிய சூரியமண்டலத்தின் வயிற்றுக்குக் கல்லீரல் என்றே சொல்லலாம். மனிதனின் வயிற்றுக்கு அவன் கல்லீரல் எவ்வளவு உபயோகமோ, அதே விதத்தில் சந்திரன் பூமிக்கு உபயோகப்படுகிருன். சூர்யன் நேராக பூமியை ஆள முடியாது. ஏனெனில் பூமிக்கும், சூர்யனுக்கும் மத்தியிலுள்ள தூரம் வெகு அதிகம். பூமி சூர்யனுக்கு அருகே போனல் எல்லாம் எரிந்துபோகும். அல்லது தூரம் போனல் ரொம்பவும் குளிர்ந்துவிடும். ஆகையால் சந்திரனே அக்கைங்கர்யத்தைச் செய்து வருகிருன்.

பூமியானது, ஒரு கெடிகாரத்துக்கு பென்டுலம் எப்படியோ, ஒரு என்ஜினுக்கு கவர்னர் எப்படியோ, அப்படியே, பூமி அதிக உஷ்ணப்பட்டால் சூர்யனிடமிருந்து பின்னல் விலகியும், குளிர்ந்துபோனல் முன்னுக்கும்

நகருகிறது. மேலும், அதன் சுற்றும் விதத்தை மாற்றிக் கொண்டு நாளடைவில் துருவங்களும் மாறி, நாடுகளின் சீத உஷ்ணஸ்திதியையும் மாறச்செய்கிறது. இப்படி பூமியானது சமயத்திற்குத் தகுந்தவாறு முன்னேயும், பின்னேயும் நகர்ந்துகொண்டிருக்க சந்திரன் அதேபோல் அதோடுகூட சுற்றிக்கொண்டு தன் கடமையை நடத்தி வருகிறான்.

சூர்யன் பூமிக்கு கொடுக்கக்கூடியதெல்லாம் தன்னால் அடையப்பட்ட பலவிதமான சக்திகளும், அதனுள் கலந்திருக்கும் சிறிது புத்தி - சக்தியுமே. இது ஒரு மிராசுதார் தன் நிலங்களுக்கு விரை, தசுகூலி கொடுப்பது போல், தரப்படுகிறது. சந்திரனே பூமியைச் சார்ந்த பூதங்களைக்கொண்டு பயிரிட்டு, ஜலம் விட்டு, வளர்த்து மானிட வர்க்கத்தை செழிக்கச் செய்து, ஒவ்வொரு விதத்தினாலும் வளர்ந்த பயிர்க்கூட்டத்தின் கதிர்களை மறுபடியும் சூர்யனுக்குக் கொடுக்கிறான். இவ்விஷயத்தை மேலும் தெளிவுபடச் சொல்லுங்கால், மனிதன் சூர்யனிடமிருந்து ஒரு சிறு துளியான பரந்த சக்தியை அடைந்தவனாய் அதை எவ்வளவோ ஆயிரம் மடங்காகத் தன் வாழ் நாட்களில் வளரச் செய்து, பின்பு வயோதிக காலத்தில் அவன் சேகரித்த பகுத்தறிவு - சக்தியை சூர்ய பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, பூமியைச் சார்ந்த பொருளாகிய தன் உடலை பூமியிலேயே விட்டு விடுகிறான். இப்படி மனித வர்க்கத்தால் சேகரிக்கப்பட்ட பகுத்தறிவு - சக்தியைத்தான் நம் முன்னோர் "அமிர்தம்" என்றனர்.

**சந்திரனும் – மத்தும்.**

சந்திரன் தன்னைச் சுற்றிக்கொண்டே பூமியையும் சுற்றி, பூமியில் அமிர்தத்தைக் கடைந்தெடுப்பதால், அதை மத்துக்கு சமானமாகக் கருதி இருக்கிறார்கள். அந்தச் சந்திரன் மற்ற கிரஹங்களின் ஆக்ஞையின் பேரில் தன் கடமையைச் செய்வதால், தேவர்களும், அசுரர்களும் அந்த மத்தைக் கடைவதாகக் கூறி இருக்கிறார்கள். விஷத்தை சிவன் உண்டார் என்பதின் தாத்பர்யம், மனித வர்க்கத்திலுள்ள பகுத்தறிவு - சக்தியை புறக்கணித்து, மூட சக்தியை வளர்த்தவர்களை, சூர்யன் தன் உஷ்ணக் கிரணங்களால் பொசுக்கிவிடுகிறான் என்பதே. சமீபத்தில் ஹிட்லருக்கு உண்டான அழிவும், ஜப்பானுக்கு உண்டான வீழ்ச்சியும், ஐரோப்பாவில் ஜனங்கள் பல நூற்றாண்டுகளாக, நியாயத்தை நிலைநாட்டுவதாகச் சொல்லிக்கொண்டு, பலவிதமான அட்டகாசங்களைச் செய்துகொண்டும், அநேக கோடி ஜனங்களைத் துன்புறுத்தியும், அடிமைகளாக்கி ஆண்டதினால் உண்டான விஷத்தையும், சூர்ய பகவான் பஸ்மீகரம் செய்வதென்றால், வேறு என்ன அத்தாட்சி வேண்டும்.

**இவ்வித மனித வர்க்கத்தினுடைய குறுகிய மனப்பான்மையே விஷம் என்பதாகக் கருதப்படுகிறது.**

மனித வர்க்கத்தினிடையே ஏற்படும் குறுகிய மனப்பான்மையும், கெட்டச் செயல்களும், மேலும் இப்

பூலோகத்தில் மிருக ஜாதியினிடையே கொடூரமான மனப்பான்மையும், பாம்பு, தேள், சிங்கம், புலி இவைகளோடொத்த கொடூரமான ஜீவராசிகளிடையேயும், அமிர்தத்தைபோலொத்த மனப்பான்மையுள்ள ஜீவராசிகளின் நடுநடுவேயும் இந்த விஷயத்தைக் காண்கிறோம்.

இவ்விதம் காணப்படும் விஷத்தை சிவன் உண்டார் எனப்படுகிறது. விஷத்தை உண்டவர், அதை வயிற்றுக்குள் செலுத்தினரா? இல்லை. ஏனெனில் அப்படிச் செய்தால், அந்த விஷம் இரத்தத்தில் ஊறி பல தலைமுறைகளுக்கு மானிட வர்க்கத்தின் நல்வாழ்க்கையைக் கெடுக்கும். அல்லது அந்த விஷத்தை வெளியே விட்டால், பாமரஜனங்கள் அது விஷம் என்று அறியாது அதே இலக்குக்கு உள்ளாவார்கள். ஆகையால் அந்த விஷத்தை என்ன செய்வது என்று யோசித்தார். பின்பு ஒரு முடிவுக்கு வந்தவராய், அந்த விஷத்தை உள்ளேயும் போகவிடாமல், வெளியேயும் வரவிடாமல் தன் கண்டத்துக்குள்ளேயே அதற்கு ஒரு சமாதி கட்டினர். இதனலேயே அவருக்கு திருநீலகண்டர் என்ற திருநாமம் வந்தது.

அமிர்தமும், விஷமும் ஓரளவு கலந்தே இப்பூமியில் காணப்படுகின்றன. மாறி மாறியும் வருகின்றன. அவைகளுள் எது விஷம் எது அமிர்தம் என்பதை நிர்ணயிப்பது மிகவும் கடினம். ஒருவருக்கு அமிர்தமாகக் காணப்பட்டது மற்றவருக்கு விஷமாகலாம். ஆகையால் நல்ல

பகுத்தறிவுகொண்டு நன்கு ஆராய்ந்து அப்படி விஷம் என்று தோன்றினுல், அந்த விஷத்தை மனதிலும் வைக்காமல் வெளியேயும் சொல்லாமல், மறைத்து வைப்பதே நல் வாழ்க்கைக்கு உகந்தது என்பதை இந்தத் திருநீலகண்டர் சிலை அறிவிக்கிறது.

இந்த மகத்தான உண்மையை, விஸ்தரித்து புத்தக ரூபமாக வெளியிட்டிருந்தால், அதற்கு அழிவு எப்பொழுதோ ஏற்பட்டு இருக்கும். இந்தத் திருநீலகண்டர் சிலையினுள் அடங்கிய வேதாந்தத்தை நாம் சரிவர உபயோகிப்போமானுல், நமது அரசியல் துறையிலும் சரி, வாழ்க்கையிலும் சரி, வேறு எந்த செயல்களிலும் சரி, அது நமக்கு ஒரு அலாதி இன்பத்தையும், மன நிம்மதியையும், கொடுத்து, நம் புண்ணிய பூமியாகிய பாரத தேசம் உயர்ந்த ஸ்திதியில் எப்பொழுதும் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

**ஒளியோடு — இருளும் பிறந்தது.**
**(நன்மையுடன் — தீமை)**


எல்லா கிரஹங்களும் சூர்யனைச் சுற்றிவந்து அதனதன் குணத்திற்கு உகந்தவாறு பல சக்திகளை சூர்யனுக்கு ஒளி ரூபமாகக் கொடுத்தபோதிலும், அவ்வொளியால் உண்டாக்கப்பட்ட நிழலே அந்த சக்திக்கு எதிரிடையான ஒரு சக்தியையும் கொடுக்கிறது. அதாவது, பரந்த சக்தியானது பரப்பிரும்ம சொரூபியாய் வெளிச்சம் அல்லது இருட்டு இரண்டும் இல்லாமல் சாம்பல் நிறத்தோடு இருந்தபொழுது, அச்சக்தியானது, சக்திமயமாகவே இருந்தது. பின்பு அந்த நிலையை விட்டுப் பிரிந்து, வளர்ந்து சிவ - சக்தியாக மாறி ஒளி என்கிற சக்தியோடு கூடினபொழுது, இருள் என்ற சக்தியும் தலைகாட்ட ஆரம்பித்தது சகஜமே. ஒளி இல்லையேல்

இருள் இல்லை. இவ்விதமாக சூர்யமண்டலத்தில் ஒளி யோடுகூடிய சக்தி ஏற்பட்டபொழுது கிரஹங்கள் ஓட்டத்தினால் உண்டாக்கப்பட்ட நிழலே ஒரு எதிரிடை யான சக்தியாக அச்சூர்ய சக்தியிலேயே கலந்து நிற் கிறது. இந்நிழலையே நம் முன்னோர் ராகு, கேது என்பார்கள்.


நமது ஜோதிட சாஸ்திரத்தில் கூட இந்நிழலுக்கு ஒரு முக்கிய ஸ்தானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சித்திரம் 4.

ராகு-கேதுக்களின் பிறப்புச் சித்திரம்.




திருப்பாற்கடல் கடையுமுன்.




திருப்பாற்கடல் கடையப்பட்ட பின்.

" அமிர்தமும் விஷமும் "

நல்ல சுத்தமான சக்தியோடு இருளினுல் உண்டாக்கப் பட்ட சக்தியும், சூர்ய ஒளியோடு கலந்து நம் பூமிக்கு வருவதால் நம் பூமியைக் கடையும்பொழுது நல்ல குண முள்ளவர்களுக்கிடையே, கெட்ட குணமுள்ளவர்களும் பிறக்கின்றனர். அதேபோல் நல்ல சாந்தமான மற்ற ஜீவராசிகளுக்கிடையேயும், கொடூரமான மிருகங்களும், ஜீவ ஜந்துக்களும் பிறக்கின்றன. **ஆகவே, கெட்ட மனப் பான்மை உள்ளவர்களையும், கொடூரமான ஜீவராசிகளையும் விலக்கி, எல்லாவற்றையும் அமிர்தமயமாக ஆக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்.**

எவ்விதம் அப்படிச் செய்வதென்பது ஒரு பெரிய பிரச்சனை. ஒருக்கால் கடவுளுக்கு சக்தி இருந்து சூர்ய மண்டலத்தில் சிவ - சக்தியால் ஒளி உண்டானபொழுது அதனுல் நிழல் விழாமல் தடுக்கக் கூடுமானுல், இப் பூலோகத்தில் கெட்ட மனப்பான்மைக்கும், கொடூர மிரு கங்களுக்கும், கெட்ட மனித வர்க்கத்திற்கும் இடமே இருந்து இராது. அப்படிச் செய்வதற்கு கடவுளுக்குக் கூட சக்தி கிடையாது என்பது திண்ணம். அதனுலேயே சிவன் ஆதி சேஷனுல் கக்கப்பட்ட விஷத்தை உண்டார் எனப்படுகிறது. **அதாவது, அந்த நிழலினுல் உண்டாக்கப் பட்ட கெட்ட மனப்பான்மையையும், கொடூர ஜீவ ஜந்துக் களின் பிறப்பையும் அவ்வப்பொழுது அடக்குகிருர் எனப் படுகிறது.**

சூர்ய மண்டலத்தின்கண் உண்டாகும் நிழலின் சக்தியே இருள் எனப்படுகிறது. இவ்விருளானது ஒளி என்று சொல்லப்பட்ட நற்குணத்திற்கு எதிரிடை

யாகவே எங்கும் காணப்படுகிறது. இதனால் கெட்ட செயல்களும், கெட்ட மனப்பான்மை உள்ளவர்களும், மூளை கெட்டவர்களும், கொடூர மனப்பான்மையை உடைய ஜீவ ராசிகளும், இருளையே தனக்கு உகந்த சக்தியாகக் கருதுகின்றனர். அதன்படி திருடன் இரவிலே திருடுகிறுன். எந்த கெட்ட செயல்களை செய்பவனும் இருளையே கோருகிறுன். மூளை உபாதியுற்றவனும், கொடூர ஜந்துக்களால் தாக்கப்பட்டவனும், மற்றும் பல உபாதிகளும் இரவையே கையாளுகின்றன. இதேபோல் சூர்ய வெளிச்சம் அகன்ற அமாவாசையிலும், பௌர்ணமியிலும், இந்த இருளால் உண்டான சக்தி மிதமிஞ்சி காணப்படுகிறது. மேலும், அந் நிழலினுல் உண்டாக்கப்பட்ட சூர்ய கிரஹணத்தின் போதும், சந்திர கிரஹணத்தின் போதும், மனித வர்க்கத்திற்கு பீடை ஏற்படுகிறது என்பதின் தாத்பர்யம் இதுவே.

விஷமும் — ஜபமும்.

நிழலினுல் உண்டாகும் சக்தியைக் கையாண்டு அதனுல், கொடூர ஜந்துக்களால் உண்டாகும் உபாதிகளை ஜப மூலமாய் சிலர் சொஸ்தப்படுத்துகின்றனர். இவ்விதமான ஜபம் சாதாரணமாக இரவிலே செய்யப்படுகிறது. முக்கியமாக அமாவாசையிலும், பௌர்ணமியிலும், எல்லாவற்றிற்கும் மேலாக சூர்ய கிரஹணத்தின்போதும், சந்திர கிரஹணத்தின் போதும், உருவேற்றுகிறுர்கள். ஜபத்தினுல் மனித வர்க்கத்திற்கு சௌகர்யம் சொல்பம் ஏற்பட்ட போதிலும், பூர்த்தியான சௌகர்யம் ஏற்படுவதற்கு, கெட்ட மனப்பான்மையுடையவர்களையும், கொடுமையான ஜந்துக்களின் வளர்ச்சியையும், தடுப்பதே சுலபமான வழியாகும்.

இதையே, ஒரு கெடிகாரத்திற்கு ஒப்பிட்டால், அக் கெடிகாரமானது, ஓடிக்கொண்டிருக்கும் பொழுது, அதற்குள்ளேயே சிற்சில அழுக்குகள் ஏற்படுவதினால் அக் கெடிகாரம் ஓடுவதற்குத் தடை ஏற்படுகிறது. அதை சொற்ப காலத்திற்கு ஒரு முறை சுத்தி செய்து அழுக்குகளை எடுத்துவிடுவதினால், கெடிகாரம் தடையின்றி ஓடுகிறது. அதேபோல், மனித வர்க்கத்தினிடையேயும், ஜீவ ராசிகளுக்கிடையேயும் அப்போதைக்கப்போது ஏற்படக் கூடிய விஷத்தை அகற்றியே மனித வர்க்கம் ஜீவிக்க வேண்டும். சிவன் விஷம் உண்டதின் தாத்பர்யம் இதுவே.

o—o

# 8. மனித வர்க்கமும் அவை இப்பூமியில் ஜீவித்திருக்க வேண்டியதின் அவசியமும்

மேல் நாட்டு விஞ்ஞானிகள் மனித வர்க்கத்தைப் பற்றி பேசுங்கால், மனித வர்க்கம் சூர்ய மண்டலத்தின்கண் ஒரு (By — product) வேண்டாத வஸ்து என்றும், மனிதன் இல்லாமலேயே அவை தம் தம் அலுவலை நடத்தக் கூடுமென்றும் கருதுகிறார்கள். இந்த மேல் நாட்டு விஞ்ஞானிகளின் தத்துவப்படி இப்பூமியில் மனிதன் வளரவேண்டிய அவசியமே இல்லை என்றால், மற்ற எந்தப் பிராணிகளும், புல் பூண்டுகளும், என்

இப்பூமியுமே இருக்கவேண்டிய அவசியமும் இல்லை எனலாம். ஆனால், இதில் சிறிதளவு உண்மை இருந்தே இருக்கிறது. அதாவது கடவுள் விரும்புவதெல்லாம் பூமியினிடமிருந்து பகுத்தறிவு சக்தியே. இந்த சக்தியை புல் பூண்டுகளும், ஜீவப் பிராணிகளும், மனித வர்க்கமும் இப்பூமியில் வளராமல் கிடைக்கக்கூடுமானல் "**பழம் நழுவி பாலில் விழுந்தது**" என்ற பழமொழிபோல் நிம்மதியாக எல்லா கிரஹங்களும் வாழ முடியும். ஆனல் இந்தப் பகுத்தறிவு சக்தியை வளர்ப்பதற்கு மனித வர்க்கம் இல்லையேல் நடைபெருது என்பதை உணர்ந்தே தன் சுய ரூபத்திலேயே மனித வர்க்கத்தை உண்டுபண்ணி இருக்கிருர் கடவுள்.

ஹிந்துக்களின் ஆராய்ச்சிப்படி நாம் வசிக்கும் இந்த பூமியானது மனித வர்க்கம் நன்ருக ஓங்கி வளருவதற்கே ஏற்பட்ட ஒரு கிரஹம் என்றும், சூர்ய மண்டலத்திற்கு இதன் நன்கொடை, மற்ற கிரஹங்களைப் போலல்லாமல் தெய்வீகமான புத்தி-சக்தியை ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருக்கி அதையே பகுத்தறிவாக மாற்றிக் கொடுப்பதே என்றும் விவரித்து இருக்கிருர்கள். இப்பூமியே சூர்ய மண்டலத்தின் உடல் அல்லது இரைப்பை என்றும் கருதப்படுகிறது.

சூர்ய மண்டலத்தை ஒரு அபாரமான ரேடியோ டிரான்ஸ்மிட்டராகக் கருதிஞேமானல், மற்ற கிரஹங்களெல்லாம் பல வால்வுகள்போல் நல்லதும், கெட்டதுமான சக்திகளை ஒன்றுகூட்டி நம் பூமிக்குக் கொடுக்க,

**"மனித வர்க்கமும் — ஜீவித்திருக்கவேண்டியதின் அவசியமும்"**

நம் பூமி ஜீவராசிகளேயும், மனித வர்க்கத்தையும் கொண்டு, ஒரு பில்டராகவும், பெரிதாக்கும் ரேடியோ வால்வுபோலும், வேலை செய்து, மிருகத்தன்மையாகவும், கொடுமையாகவும் உள்ள சக்தியைப் பிரித்து, **தெய்வீக மான சக்தியை மாத்திரம் விருத்திபண்ணி சூர்யனுக்குக் கொடுக்கிறது.**

**ஜீவராசிகளின் உற்பத்திக்கான இரு சக்திகள்.**

சூர்ய மண்டலம் உதயமானபொழுது நம் பூமியில் மனித வர்க்கமோ, அல்லது மிருகங்களோ, அல்லது புல் பூண்டுகளோ இருந்திராது என்று தெளிவாகத் தெரிகிறது. ஆகாயத்தின்கண் முதன் முதலில் சூர்ய மண்டலத்தின் ஒளி வீசிய உடனேயே நம் பூமியில் ஜீவப் பிராணிகளின் உற்பத்திக்கு அஸ்திவாரம் போட்டாகிவிட்டது எனலாம். இப்பூமியில் ஜீவப் பிராணிகள் உண்டாக அதனிடமுள்ள வஸ்துக்களைத் தவிர, இரண்டு சக்திகள் தேவை. அதாவது ஒன்று எல்லா கிரஹங்களும் சேர்ந்து கொடுக்கும் சூர்ய - சக்தி, மற்றொன்று அதனுல் மாறுதல் ஏற்பட்ட பூமியின்கண் உள்ள வஸ்துக்களை பூமியிலிருந்து வெளியே இழுக்கும் சக்தி. **இந்த வெளியே இழுக்கும் சக்தியைக் கொடுப்பதுதான் சந்திரன்.**

**சக்திகள் பரிபக்குவமாகும் விதம்.**

சந்திரனை ஒருவன் உடலைச் சார்ந்த கல்லீரலுக்கு ஒப்பிட்டோம். சந்திர கிரஹம், பூமிக்கு வெகு சமீபத்

திலேயே இருந்துகொண்டும், பூமியை எப்பொழுதும் சுற்றிப் பார்த்துக்கொண்டும், அவ்வப்பொழுது உண்டாகும் மாறுதல்களை கவனித்துக்கொண்டும், பக்குவமானதை வெளியே இழுத்துக்கொண்டும், கண் கொட்டாமல் வேலை செய்து வருகிறது. சூர்ய சக்தியினால் உண்டாகும் கிரணங்களும், பூமியும், சந்திரனும் இம்மூன்றுமாகச் செய்துவரும் காரியத்தை விவரித்துச் சொல்லுங்கால், சூர்ய கிரணங்கள் சக்தியையும், பரிபக்குவம் ஆகும் குணங்களையும் கொடுக்க, பூமியோ பஞ்சைப்போல் மாறக்கூடிய பொருளாகக் காணப்படுகிறது. சந்திரனோ ஒரு தக்களியைப்போல் அந்தப் பஞ்சை நூலாக நூற்கவும், அப்படி நூற்ற நூலை மேலே இழுக்கவும் சக்தி வாய்ந்த கருவி எனலாம். இதையே நம் முன்னோர் அமிர்தம் கடையும் மத்து என்று விவரித்து இருக்கின்றனர்.

**பூமியிலுள்ள மூன்று பூதங்கள்.**

சூர்யக் கிரணம் பூமியின் பேரில் பட்டவுடனே பல மாறுதல்கள் உண்டாகின்றன. இம்மாறுதலை உண்டாக்கும் கருவிகள், நம் பூமியில் அமைக்கப்பெற்றிருக்கும் பூதங்களான அக்னி, ஜலம், காற்று இம்மூன்றுமே யாகும். இவைகளுள், காற்றே மிகவும் முக்கியமானது எனலாம். அதுவே ஒரு குடும்பத்தின்கண் குழந்தை போல் தாண்டவமாடுகிறது. அக்னியும், ஜலமும் புருஷன் பெண்ஜாதிக்கு ஒப்பிடலாம். இம்மூன்று

"மனித வர்க்கமும்-ஜீவித்திருக்க வேண்டியதின் அவசியமும்"

பூதங்களால் மாறுதல் அடைந்தவைகளை சந்திரன் இழுப்பதால் மேகமும், மழையும், குன்றுகளும்; புல்லும், பூண்டுகளும், செடிகளும், விருக்ஷங்களும், பின்பு புழுக்களும், பூச்சிகளும், சமுத்திரத்தினுள்ளும், காற்றிலேயும் வசிக்கக் கூடிய ஜந்துக்களும், பக்ஷிகளும், பின்பு மிருகங்களும், மனிதனும் உருவெடுத்தார்கள் எனப்படுகிறது. ஆகையால் ஜீவராசிகளின் உற்பத்தி மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு முகவுரையே எனப் படுகிறது. ஜீவராசிகள் இல்லையேல் மனித வர்க்கமும் இல்லை. **கூர்ந்து பார்க்குங்கால் ஜீவராசிகள் மனித வர்க்கத் திற்கு முன்னோர் ஆவர்.**

மனிதனே பரிபக்குவம் அடையும் பிராணி.

இப்பூமியில் அநேக கோடி ஜீவப் பிராணிகளும், உதித்திருக்க மனித வர்க்கம் ஏன் ஏற்படவேண்டும். மனிதனைத் தவிர மற்ற ஜீவப் பிராணிகளுள், ஈச்வரத் தன்மை இல்லையா, மனிதன் ஒன்றே அதற்கு பாத்திரனு என்று வினவுங்கால், எல்லாப் பிராணிகளுக்கும் ஈச்வரத் தன்மை கொஞ்சம் கொஞ்சமே இருந்து வருகிறது. அவை களுள் அதிக ஈச்வரத் தன்மை வாய்ந்தது யானை என்று கூறப்படுகிறது. ஆயினும் அவைகள் துன்புறுத்தப் படாமலும், தம்மைத்தாமே ஆண்டு ஆயுள் முழுவதும் ஜீவித்திருக்க முடியுமானுல், அவைகளாலும் ஈச்வரத் தன்மையை வளர்த்து, அதை நன்கொடையாகக் கொடுக்கமுடியும். **அப்படி ஒரு காலத்தில் இப்பூமியை**

ஆட்சி செலுத்திய மிருகங்களால் கொடுக்கப்பட்ட ஈச்வரத் தன்மையின் மூலமாகவே, மனித வர்க்கத்தின் உற்பத்தி ஏற்பட்டிருக்கவேண்டும். ஆயினும், அவைகள் பல மிருகத் தன்மையை விட்டு விலக மனமின்றி மறுஜன்மம் எடுக்கின்றனர். இதனாலேயே, இப்பூலோகத்தில் ஜீவராசிகள் ஒரு பக்கம் முன்னேறிக்கொண்டே போக, அவைகளுள் பல முன்னேற்றமின்றி மறுபடியும், மறுபடியும் பிறந்துகொண்டே இருக்கின்றன.

இவ்விதம் முன்னேற்றமற்ற குறுகிய மனப்பான்மை மனிதனிடம் அதிகம் இல்லை என்று சொல்லவும் முடியாது. இப்பூலோகத்தினுள் வசிக்கும் பெரும்பான்மையான ஜனங்கள் "பரிபக்குவம்" ஏற்படாமல் மிருகத் தன்மையான வாழ்க்கையிலேயே ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக சண்டை சச்சரவுகளும், மேல் நோக்கி தம் வாழ் நாட்களை கெடுத்துக்கொண்டும், மறுபடியும், வெவ்வேறு ஜன்மங்களை எடுத்துக்கொண்டே இருக்கின்றனர்.

பரிபக்குவம் என்றால் தாம் யார், தாம் இப்பூமியில் உதிக்கவேண்டியதன் காரணம் என்ன, தாம் செய்ய வேண்டிய கர்மங்கள் எவை என்ற விஷயங்களை நன்கு அறிந்து, அதன்படி நடப்பவனே பரிபக்குவம் ஆனவன் எனலாம். இவ்விஷயங்களை தீர விசாரிக்கவும், தம் தம் அனுபவத்தினாலும், அறிவினாலும், தெரிந்து கொள்ளவும், அதனால் தன் ஈச்வரத் தன்மையைப் பல மடங்கு அதிகப்படுத்திக் கொள்ளவும் வேண்டிய சக்தி மனிதனுக்கே அதிகம் இருக்கிறது. ஆகையால்,

"மனித வர்க்கமும்-ஜீவித்திருக்க வேண்டியதின் அவசியமும்"

மனிதனே எல்லா ஜீவப் பிராணிகளுக்கும் மேலானவன். அவனே புத்தி-சக்தியை வளர்த்தும், பகுத்தறிவாக மாற்றியும் நன்கொடையாக சூர்ய மண்டலத்திற்குக் கொடுக்கக்கூடியவன் ஆவான். அதனாலேயே மனித வர்க்கம் இப்பூமியில் ஜீவிக்க வேண்டியது அவசியமும் ஆகும்.

பாரத தேசமே — புண்ணிய பூமி.

பரிபக்குவம் ஆனவர்கள் எந்த ஜீவராசியையும் கொல்லாமலும், ஹிம்ஸிக்காமலும், தம் வாழ் நாட்களை நடத்துவர். ஏனெனில், சிற்சில மிருகங்களும், சாதுவான ஜீவராசிகளும், ஈச்வரத் தன்மை உடையனவாக இருக்கின்றன. அப்படி இருக்கையில் அவைகளைக் கொல்லுவதாலும், துன்புறுத்துவதாலும், தாம் அந்த ஜீவராசி கொடுக்கக்கூடும் ஈச்வரத் தன்மையான நன்கொடையைத் தடுத்ததாகும். அதனாலேயே ஹிந்து மதத்தவர்கள் அதிகமாக ஒரு ஜீவராசியையும் அனாவசியமாகக் கொல்லுவதில்லை. அந்த ஜீவராசி மனிதனுக்கு ஏதாவது தீங்கு விளைவித்தாலும், அல்லது மனிதனே மிருகத் தன்மைகொண்டு தாக்கினாலும், அதையும் அவனையும் கொல்ல முன் வருகிறார்கள். இதுவே சிவன் உண்ட விஷத்தின் பலன்.

மொத்தமாக, எல்லா ஜீவராசிகளும், எல்லா மனிதனும், ஈச்வரத் தன்மை ஒரு சிறிதளவோ, பெரிதளவோ, வாய்ந்தவர் என்பதை உணர்ந்தவர்கள் ஹிந்துக்களே, இத்தகைய மனப்பான்மைகொண்ட மனிதர்கள் அடங்கியபாரத தேசம் புண்ணியபூமி என்பதாகக் கருதப்படுகிறது.

...oOo...

# 9. ஜீவப் பிராணிகளின் உற்பத்தியும் மனித வர்க்கத்தின் வளர்ச்சியும்

நம் பூமியிலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும், உயிரையும், வளர்ச்சியையும் கொடுப்பது, சூர்யனிடமிருந்து வரும் சக்தியே என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அச்சக்தி சூர்யனிடமிருந்து நமக்குக் கிடைத்த போதிலும், அது பிரத்தியேகமாக சூர்யனுடையது மாத்திரம்அல்ல. எல்லா கிரஹங்களுடனும், நட்சத்திரக் கூட்டங்களுடனும் உண்டான சக்தியை ஒன்ருகத் திரட்டி, அச்சக்தியை சாந்தப்படுத்தி மாற்றியதே சூர்ய வெளிச்சம் ஆகும். ஆகவே நாம் வசிக்கும் பூமி உள்பட எல்லா கிரஹங்களுடைய சக்தியும், சூர்ய வெளிச்சத்திலுள்ள ஒவ்வொரு கிரணத்திலேயும் காணப்படுகிறது எனலாம். நம் பூமிக்குக் கிடைக்கும் சூர்ய கிரணங்கள் பூமியிலுள்ள எல்லா வஸ்துக்களேயும், எவ்வாறு பக்குவமாக்கி வளரச் செய்கிறது என்பதை ஆராயப்போனல் மிகவும் ஆச்சரியமாகவேதான் இருக்கிறது. நாம் ஒரு காரியம் செய்வதற்கு நாள் முழுவதும், மூளேயினலும், அவயவங்களாலும் கஷ்டப்படுகிருேம். அப்படிக் கஷ்டப்பட்டும் நாம் செய்யும் காரியம் சரிவரக் கைகூடுவதில்லே. ஆனல் சாதாரணமான சூர்ய வெளிச்சத்தின் ஒரு கிரணம் செய்யும் வேலேயோ அறிவதற்கே முடியாததாய் அவ்வளவு விசேஷமாக இருக்கிறது.

கிரஹங்களும் — மனித உற்பத்தியும்.

சூர்ய வெளிச்சம் நம் பூமியின் ஒரு பாகத்தில் பட்டவுடனே நாம் அதைக் கண்ணுல் காண்கிறோம். அந்த வெளிச்சத்தை கண் இல்லாமல் போனல் நாம் காண முடியாது. அல்லது வெளிச்சம் காணப்படுவதற்கு நம் பூமியைப்போல் ஒரு தடை ஏற்படாமல் போனுலும் காண முடியாது. நம் பூமியைப்போல் உள்ள பல்வேறு கிரஹங்களினுலும் தடை ஏற்பட்டு சூர்ய சக்தி அக் கிரஹங்களில் காணப்பட்டபோதிலும், அச் சக்திபட்ட மற்ற கிரஹங்களில் பல்வேறு விதமான மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், நம் பூமியில் உண்டாகும் மாறுதல்கள் உண்டாகிறதில்லை. ஏனெனில் அப்படிப்பட்ட மாறுதல்கள் உண்டாவதற்கு சூர்ய சக்தி மாத்திரம் போதாது. முதலாவதாக அக் கிரஹங்களில் உள்ள வஸ்துக்கள் சுளுவாக மாறக்கூடியவையாக இருக்க வேண்டும். இரண்டாவதாக அம் மாறுதல்கள் உண்டாவதற்கு உகந்தவாறு சீதோஷ்ண ஸ்திதி அக் கிரஹங்களில் ஏற்பட்டிருக்க வேண்டும். அதிகக் குளிராய் இருந்தால் பிராணிகள் உற்பத்தி ஆகா. அதிக உஷ்ணப்பட்டால் உற்பத்தியான பிராணிகள் அழிந்துபோகும். குளிர் அதிகரிப்பதும், உஷ்ணம் அதிகரிப்பதும், ஒன்று சூர்யனிடமிருந்து ஒவ்வொரு கிரஹத்துக்கும் உள்ள தூரம், இரண்டாவதாக கிரஹங்களிலுள்ள வஸ்துக்களின் மாறக்கூடிய சக்தி, இவ் விரண்டையும் பொருத்திருக்கும். இவ் விரண்டும் போதுமான அளவுக்கு

ஏற்பட்டிருப்பது நம் பூமியிலேயே எனப்படுகிறது. மற்ற கிரஹங்களெல்லாம் தூரம் குறைந்தும், அதிகப்பட்டும் அவற்றிலுள்ள வஸ்துக்கள் எளிதில் மாறக்கூடியதில்லாமலும் இருப்பதால், பூமியைத்தவிர மற்ற எந்த கிரஹத்திலும் பூமியில் ஏற்படும் மாறுதல்கள் ஏற்படுவதில்லை என்றும், அந்த கிரஹங்களுள் மனித வர்க்கத்தின் உற்பத்திக்கோ, வளர்ச்சிக்கோ இடமே கிடையாது என்றும் கூறப்படுகிறது.

இதை ஊகிப்பதற்கு ஆதாரமாக உள்ளது நம் பூமியிலுள்ள வித்யாசங்களேயாகும். நம் பூமியோ மற்ற சில கிரஹங்களைப் பார்க்கிலும் சிறியதென்றே சொல்லலாம். அப்படியிருக்க நம் பூமியிலேயே ஒரு பாகத்திற்கும், மற்றொரு பாகத்திற்கும் ஏற்பட்டிருக்கிற வித்யாசங்களை நோக்குங்கால் இதன் உண்மை புலப்படுகிறது. நம் பூமியிலேயே உஷ்ண பாகங்களான கீழ் நாடுகளில் பிராணிகளின் உற்பத்தியும் அதிகம். அப்பிராணிகளின் அழிவும் சீக்கிரம் ஏற்படுகிறது. ஆனால் மித உஷ்ணமுள்ள மேல் நாடுகளில் பிராணிகளின் உற்பத்தி குறைவுபடுகிறது. அவைகளின் வாழ்நாட்களும் அதிகரிக்கிறது. மிகவும் தென் கோடியிலுள்ள பாகங்களிலும், வட கோடியிலுள்ள பாகங்களிலும், பிராணிகளின் உற்பத்தியே கிடையாது எனலாம். நம் பூமிக்குள்ளேயே சீதோஷ்ண ஸ்திதியின் சிறிய மாறுதலால் இவ்வளவு வித்தியாசங்கள் இருக்க, நம் பூமியைப்போல் எவ்வளவோ மடங்கு கிட்டேயும் தூரத்திலுமுள்ள கிரஹங்களில் மனித வாழ்க்கை உண்டு என்பது ஆதாரமற்றதேயாகும்.

மனித வர்க்கமும் — கைலாஸமும்.

மேல்நாட்டு விஞ்ஞானிகளும், யந்திர நிபுணர்களும், ராக்கட் மூலம் சந்திரனையும், அங்காரகனையும் அடையலாம் என்று கருதுகிறார்கள். இம் மனப்பான்மை நம் நாட்டுக்கு புதிதல்ல. சென்ற யுகத்தில் திருசங்கு என்பவர் பரலோகம் செல்ல முயற்சித்தார் என்றும், அது முடியாமல் கைவிடப்பட்டது என்றும் சொல்லப் படுகிறது.

இதன் காரணம் பூமியானது இறந்த வஸ்துக்களை இழுக்கிறது. சந்திரன் உயிருள்ள வஸ்துக்களை இழுக் கிறான். சூரியன் இந்த பூமியிலுள்ள ஜீவராசிகளினால் வளர்க்கப்பட்ட பகுத்தறிவு சக்தியை அடைகிறான். இப்படிச் சந்திரன் உயிருள்ளவைகளை இழுப்பதால் சக்தி வாய்ந்த மனிதனுக்கே சந்திரனையும், அங்காரகனை யும் அடையலாம் என்ற உணர்ச்சியுள்ள மனம்பான்மை ஏற்படுகிறது. இது யந்திர சக்தியால் ஒருக்கால் நடை பெறலாம். ஆனாலும் நம் ஹிந்து சமயத்தின்படி "மனிதன் கூண்டோடு கைலாசம் போவது இயலாது என்றும், மனிதன் தன்கூட்டை இப்பூமியில் விட்டே சக்தி ரூபமாகத் தான்வளர்த்த பகுத்தறிவு சக்தியைக்கொண்டு, சூர்யனிலும், மற்ற கிரஹங்களிலும் சஞ்சரிக்கிறான் என்றும், இதுவே மனித னுடைய வாழ்க்கையின் உயர்ந்த லட்சியங்களில் ஒன்று என்றும் கூறப்படுகிறது."

"பாற்கடலும், தோட்டமும்"

நம் பூமியிலுள்ள வஸ்துக்களைக் கொஞ்சம் கொஞ்ச மாக மாற்றி சக்தி ரூபமாக கிரஹித்துக்கொள்ளும்

பணியை நோக்குங்கால், இது நம் மனதினாலும் நினைக்க முடியாத ஒரு பெரிய பாக்டரியாகக் காணப்படுகிறது. ஒரு சிறிய பாக்டரியை நடத்தவேண்டுமானால் முதலாவதாக ஒரு பரந்த சக்தி வேண்டும். இரண்டாவதாக அந்த சக்தியைப் பெற்றுக்கொண்டு சாமான்களை மாற்றக்கூடிய முறைக்கு உகந்தவாறு கணிக்கப்பட்ட யந்திரங்கள் தேவை. மூன்ருவதாக அப்படி மாற்றப்பட்ட வஸ்துக்களை நல்லது, கெட்டதாகப் பொறுக்கி, கெட்டவைகளை விலக்கி, நல்ல சாமான்களை பாக்டரியை விட்டு அகற்றி, பாக்டரி சொந்தக்காரருக்கு லாபம் கிடைக்குமாறு செய்யவேண்டும். அப்படியல்லாமல், யந்திரங்கள் சரிவர வேலை செய்யாமல் போனாலும், அல்லது, அதனதன் வேலையை தவறுதலாகச் செய்து, அதனால் மாறுதல் ஆகக்கூடிய சாமான்கள் கெட்டுப் போனாலும், பாக்டரி சரிவர நடைபெறுவதற்குக் குந்தகம் ஏற்படுமல்லவா? இதே சந்தர்ப்பத்தில்தான் மனித வர்க்கமாகிய நாமும், சூர்ய மண்டலமும் இருக்கிறோம் எனலாம். இவ்விதம் கவனித்தால் நாம் வசிக்கும் பூமி ஒரு மிகப் பெரிய தோட்டம். அதாவது கணக்கிட முடியாத விதத்தில் சாமான்களை சக்தியாக மாற்றச் செய்யும் பாக்டரி. இதையே நம் முன்னோர் பாற்கடல் என்பர்.

"தோட்டமும், பணியும்."

இப்பூமியாகிய பெரிய பாக்டரிக்கு சொந்தக்காரர் சூர்ய மண்டலம். அந்த பாக்டரிக்கு சக்தியாகக் கொடுக்கப்

பட்டது சூர்யனிடமிருந்து வரும் கிரணங்கள். இவை மனிதனின் மூளையிலிருந்து, நரம்புகள் வழியாக இரைப்பைக்கு கொடுக்கப்படும் சக்திக்கு ஒப்பானது. இந்த சூர்ய கிரணங்களுள் பலவிதமான சக்திகள் அடைபட்டிருக்கின்றன என்று முன்பே கூறப்பட்டுள்ளது. இச் சக்தி வாய்ந்த சூர்ய கிரணங்கள் பூமியில் தடைபட்டவுடனே பூமியிலுள்ள பலவிதமான வஸ்துக்கள், அதனதன் சக்திக்கும், அமைப்பிற்கும் உகந்தவாறு அச் சக்தியை கிரகித்துக் கொள்ளுகிறது. கிரகித்துக்கொண்ட பூமியிலுள்ள வஸ்துக்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு விதமான யந்திரம் போல் வேலைசெய்து, சூர்யனிடமிருந்து கொடையாகப்பெற்ற சக்தியைப் பலவாருகப் பெருக்கி, ஒரு மோட்டார் பாட்டரி (Battery) போலும், ரேடியோ டெக்கார்டர் போலும், தனக்குள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு, பின்பு சூர்ய வெளிச்சம் கிடைக்காத சமயங்களில் அச் சக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே விடுகிறது. **ஆகவே நம் பூமியிலுள்ள வஸ்துக்கள் ஒவ்வொன்றும் தாம் செய்யும் பணியால் அல்லது கர்மத்தால், தான் வளருவதுமன்றி மற்ற வஸ்துக்களுக்கும் அனேக விதத்தில் சக்தியைக் கொடுக்கிறது.**

**பொருள்களும் — சக்தியும்.**

உதாரணமாக, மணல் சூர்ய கிரணங்களால் உண்டாக்கப்பட்ட சக்தியான உஷ்ணம் என்ற பொருளை கிரஹித்துத் தன்னிடம் அடக்கி வைத்துக்கொண்டு சூர்ய வெளிச்சம் குறைந்தவுடனே வெகு சீக்கிரமாகவே

வெளியே விட்டு விடுகிறது. அப்படி விடுவதால் அதனைச்சுற்றியுள்ள வஸ்துக்கள் அந்த சக்தியை கிர ஹிக்கின்றன. அதைப்போலவே ஒரு பாராங் கல்லா னது, சூர்ய கிரணங்களால் உண்டான உஷ்ண சக்தியை கொஞ்சம் தாமதமாகவே அடைந்து மணலைப்போலல் லாமல் கொஞ்சம் மெதுவாகவே தன் சுற்றத்தாருக்குக் கொடுக்கிறது. இவ்விதமாகப் பல பொருள்கள் சூர்ய வெளிச்சம் இல்லாத இராக்கால முழுவதும் உஷ்ணத் தைப் பலவிதமான முறையில் கொடுத்துக்கொண்டே யிருக்கின்றன. இம்மாதிரியே செம்பு சூர்ய கிரணங்களை கிரஹித்து மின்சார சக்தியாகக் கொடுக்கிறது. இரும்பு அதையே காந்த சக்தியாக மாற்றிக் கொடுக்கிறது.

மற்ற பல உலோகங்களான ரேடியம், தோரியம், யுரேனியம், என்பவைகளெல்லாம் சூர்ய கிரணங்களை பல விதமான மகா சக்திகளாக மாற்றி கொஞ்சம் கொஞ்ச மாக நம் பூமியிலுள்ள பல வஸ்துக்களுடைய முன் னேற்றத்திற்கு ஒத்தாசை அளிக்கிறது. இதைப்போலவே, மரங்களும் செடிகளும், பூச்சிகளும், மிருகங்களும், எல்லா வற்றிற்கும் மேலாக மனித வர்க்கமும், சூர்யனுல் கொடுக்கப் பட்ட சக்தியை அவரவர்களுக்கு உகந்தவாறு உபயோகித்து, தம் தம் கர்மத்தைச் செய்வதுமல்லாமல் பல சக்திகளாக மாற்றி ஒன்றுக்கொன்று ஒத்தாசையாகப் பல விதங்களில் பணி செய்கின்றன.

### ஜீவ ராசிகளும் — ஈச்வரத் தன்மையும்.

இப்படிப் பணி செய்யும் ஒவ்வொரு வர்க்கத்திலும் பல மாறுபாடான சக்திகள் தோன்றியபோதிலும், ஒவ்

வொன்றிலும் பிரத்யேகமான சிவ சக்தியோ அல்லது பரந்த சக்தியோ காணப்படுகிறது என்பர்.

" அரசும் வேம்பும் "

உதாரணமாக மரங்களை நோக்குங்கால் அரச மரத்தையே சிவரூபி என்பதாகக் கருதுகிறார்கள். வேப்ப மரத்தை சக்தியாகவும், பெண் ரூபமென்றும் கருதுகிறார்கள். இதற்குக் காரணம், சூர்யனால் கொடுக்கப்படுகிற சக்தியை வெகு மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளுவது வேம்பு ஒன்றே என்று கருதப்படுகிறது. அரச மரத்தின் இலையினுடைய வடிவத்தைக்கொண்டுதான் பெண்மணிகள் வகிடு பிளந்துகொள்வது என்பது உருவாயிற்று எனப்படுகிறது. அதேபோல் திராவிடச் சிற்பத்தின் வடிவங்கள் (Arches) எல்லாம் அரச இலையைப் போலவே அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கோபுரங்களிலுள்ள சிகரங்களுக்கும் அரச இலையின் வடிவமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

வேப்ப மரத்தை நோக்குங்கால் அது சூர்யனுடைய பிரத்யேகமான குணத்தை கிரஹித்துக்கொண்டு இப் பூமியிலுள்ள எல்லா ஜீவ ராசிகளுக்கும், முக்கியமாக மனித வர்க்கத்திற்கும், தாய் தன் மக்களுக்கு செய்யும் பணிபோல், தொண்டு செய்கிறது எனலாம். சூர்யனுடைய முக்கியமான அம்சங்களில் ஏற்பட்டது உணர்ச்சிக்கு உஷ்ணம்போல், ருசிக்கு கசப்பாகும். இந்த குணங்களை அடைந்துள்ள வேம்பில், உஷ்

ணத்தை சாந்தி செய்யும்படியான குணமும் அடங்கியுள்ளது எனப்படுகிறது.

அதனுலேயே அதை சக்தி என்றும், பெண் ரூபமென்றும் நம் முன்னேர் வகுத்திருக்கின்றனர். அதனுல் பலர் சிற்சில இடங்களில் வேப்ப மரத்தை அரச மரத்தோடு சேர்த்து வளர்ப்பதும் உண்டு. மற்றும் சிலர், மக்களைப் பெருதவர் அரசுக்கும், வேம்புக்கும் மணம் செய்விப்பதும் உண்டு. இதனுலேயே இவ்விரண்டு மரங்களையும் சிவமும், சக்தியுமாக பாவித்து, அரசப்பிரதட்சணம் செய்வதும் வழக்கமாகிறது.

வேப்ப மரத்தை விவரிக்குங்கால் இது மனிதவர்க்கத்திற்கு மிக ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடியது எனப்படுகிறது. இதன் முக்கியமான குணம் சூர்ய வெளிச்சத்தினுல் அபாரமான உஷ்ணம் ஏற்பட்டிருந்த இடங்களில் மற்ற மரங்களெல்லாம் இலைகளை உதிர்த்து உஷ்ணம் தாங்காமல் கஷ்டப்பட, வேம்பு மாத்திரம் அவ் உஷ்ணத்தினுல் உண்டாகும், கசப்பு ருசியைப் பெற்றுக்கொண்டு மிக சந்தோஷத்தோடு துளிர்கள் விட்டு சிரித்து விளையாடிக்கொண்டிருக்கும். இதுவே பிராணிகள் உஷ்ணம் தாங்காமல் மயக்கம் போடும் தருவாயில் அவைகளுக்குப் புத்துயிர் அளிக்கும். அதன் நிழலில் உட்கார்ந்து அதன் காற்றுப்பட்டாலே உஷ்ணம் தீரும். அதன் வாசனையை முகர்ந்தாலே உஷ்ண சாந்தி ஏற்படும். தொத்து உபாதிகளைத் தடுக்கும். இதன் காரணமாகவே வீடுகளில் வேப்

பிலேயை வைப்பது வழக்கம். மேலும் உஷ்ணத்தினுல் உண்டாகும் எல்லாவித உபாதிகளுக்கும், உள்ளுக்கு சாப்பிட்டாலும், இலேகளை வேறுபல விதங்களில் உபயோகித்தாலும் உபாதி நீங்கி உஷ்ண சாந்தி ஏற்படுத்தி குணத்தைக் கொடுக்கும். உஷ்ண தேசங்களில் சாலேகளில் வேம்பை பயிரிடுவது மனித வர்க்கத்தின் ஆரோக்கியத்திற்குகந்ததாகும்.

மகரமும்—யானேயும்

நீரில் வாழும் ஜீவப் பிராணிகளுள் மகரம் என்ற பெரிய மீனே சிற்பத்தில் மிகவும் சிலாக்கியமானதாக எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். சாதாரணமாக தோரணங்கள் கட்டும்போதும், அவைகளே சிற்பிக்கும் போதும், சித்தரிக்கும்போதும், மகர தோரணமே மிகவும் சிலாக்கியமென கருதப்பட்டிருக்கிறது. மிருகங்களில் யானேயே மிருக ராஜா எனக் கருதப்படுகிறது. இதன் காரணம் மிருகங்களுள் மிகவும் புத்தி கூர்மையுள்ளதும், ஞாபக சக்தியுள்ளதும், மிகப் பலம் வாய்ந்ததும், நல்லார்க்கு நல்லதும், பொல்லார்க்குக் கெடுதி செய்யக் கூடியதும், தயாள குணம் உடையதும், மிருகங்களுள் ஈசுவரத் தன்மை மிகவும் அதிகமாகக் கொண்டதும், இந்த யானேயே. இதையே, நம் பாரத தேசத்திற்குப் பிள்ளே என்றும், இந்திரப் பதவியை அடைந்த மனித வர்க்கத்திற்கு வாகனம் என்றும் கருதப்படுகிறது. யானேயின் துதிக்கையை, ஈசுவரத் தன்மையை சிற்பிக்

கும்போதெல்லாம் ஒரு அலங்காரமாக உபயோகிக்கிருர்கள்.

உதாரணமாக குழந்தைப் பருவத்தின் "ஆதிமூலம்" என்ற இடத்தில் பிள்ளையார் அல்லது விக்னேசுவரர் சிலைக்கு தும்பிக்கையை உபயோகித்திருக்கிருர்கள். ஈசுவரத்தன்மை வாய்ந்த சிங்கம் என்பதை யாளி என்று பெயரிட்டு அச்சிலைக்கும் தும்பிக்கையையே உபயோகித்து இருக்கிருர்கள். மேலும் நிரில் வாழும் மகரத்திற்கு ஈசுவரத் தன்மையைக் குறிக்க அதற்கும் தும்பிக்கையையே உபயோகித்திருக்கிருர்கள். இவ்விதமாக ஈசுவரத் தன்மை வாய்ந்த கருடனுக்கும் தும்பிக்கை உண்டு.

"நாகப் பாம்பும்—ஆதிசேஷனும்"

பூமியில் வசிக்கும், பிராணிகளுள் நாகப் பாம்பிற்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாகமானது சத்தியத்திற்கு கட்டுப்பட்டதென்று கருதப்படுகிறது. அக்காரணத்தால் நாகத்தையே உண்மையான சக்தி என்பதை சித்தரித்துக்காட்ட உபயோகப்படுத்தப்படுகிறது. இதனுல் சிவன் சரீரத்தில் நாகங்கள் வரையப்படுகின்றன. அது சிவபிரானுடைய உண்மையான சக்தியையே சுட்டிக் காட்டுகிறது. சிவன் மாலையாகப் போட்டுக்கொள்ளும் நரத்தலை ஓடுகளும் பாசம் இல்லாத குணத்தைக் குறிக்கிறது. ஆதிசேஷன் என்ற ஐந்துதலைப் பாம்பு உயிரோடுள்ள பிராணியின் சிற்பம் அல்ல. அது ஒரு சிற்ப அலங்காரத்தை ஒட்டி ஏற்படுத்தப்பட்ட உருவமே ஆகும். இதுவே கர்மத்தால்

ஏற்படும் ஆக்கிரம சக்தியை சுட்டிக் காட்டுகிறது. இதையே நல்லோர்க்குக் குடையாகவும், பக்தர்களுக்கு ஆசனமாகவும், விஷ்ணுவுக்கு படுக்கையாகவும், சிற்பித்திருக்கிறார்கள்.

ஆகாசத்தில் பறக்கும் பட்சிகளுள் கருடன் மிகவும் அழகான பிராணி என்றும், மிகவும் சக்தி வாய்ந்ததென்றும், நல்ல குணமுடையதென்றும், பறப்பதில் மிகவும் சிலாக்கியமானதென்றும் கருதப்படுகிறது. இதையே, வெகு சீக்கிரமாகக் காக்ஷி அளிக்கக்கூடிய இடங்களில் எல்லாம் சிற்பிக்கப்படுகிறது. ஆபத்பாந்தவரான கிருஷ்ண பகவான் காக்ஷி அளிப்பதற்கு இதுவே வாகனம் ஆகிறது. மயிலே அழகான பிராணி என்றும் குமரக் கடவுளுக்கு வாகனம் என்றும் கருதப்படுகிறது.

இப்பூலோகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் சிலாக்கியமானது மனித வர்க்கமே. அம்மனித வர்க்கத்தில் மிகவும் சக்தி வாய்ந்து, ஈசுவரத் தன்மையை அடைந்து, மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்குத் தொண்டு செய்தவர்களையே அவதாரம் எடுத்தவர்கள் எனப்படுகிறது. இவர்களுள், மிகப் பெரியவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவான், புத்தர், ஸ்ரீ சங்கராச்சார்யார், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ விவேகானந்தர், ஏசுநாதர், ஸ்ரீ ராமர், மகமது என்பவர்கள் ஆவர். இவர்களோடு தற்காலம் அவதரித்த மகாத்மா காந்தியும் சேர்க்கப்படலாம்.

நம் பூமியிலுள்ள சக்தி வாய்ந்த ஒவ்வொரு வஸ்துவும் ஒரு பிரத்தியேகமான யந்திரம்போல் அதற்கு வேண்டிய சக்தியை சூர்யனிடமிருந்து கிரஹித்துக் கொண்டு தத் தம் பணியைச் செய்து தன் சுற்றத்தார்க்கு அச்சக்தியை கொடுக்கிறது. ஜீவப் பிராணிகளும், அவைகளுக்கு மேலான மனித வர்க்கமும், அச்சக்திகளால் ஏற்படும் குணங்களைப் பெற்றுக்கொண்டு தன் கர்மத்தைச் செய்தும், தன் சுற்றத்தார்க்குத் தான் சேகரித்த நல்ல குணத்தைப் போதித்தும் தான் கஷ்டப்பட்டு சேகரித்த பகுத்தறிவுச் சக்தியை நன்கொடையாகச் சூர்யனுக்குக் கொடுத்தும், மேலும் பலர் சக்தி ரூபமாக அதனுடன் ஐக்யமும் ஆகின்றனர்.

---

## 10. "நெல் பயிரும், மனித வர்க்கமும்"

மனித வர்க்கத்தின் வளர்ச்சியை நெல் பயிருக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். அவ்வித வளர்ச்சியில் ஐந்து பருவங்கள் ஏற்படுத்தி, அதன்படி அப்பருவங்களைச் செவ்வனே கவனித்து, அப்பருவங்களுக்குத் தகுந்தவாறு சத் கருமங்களைச் செய்து, தன் வாழ்நாட்களை நடத்தி முடிப்பவனே நல்ல நெல் பயிருக்குச் சமானமாவான். நெல் பயிர் செவ்வனே வளர்ந்து முதலாளிக்கு நெல்லைக் கொடுக்கவேண்டுமானால் முதலாவதாக

நாற்றுவிடப்படவேண்டும். இதுவே குழந்தைப் பருவம் ஆகிறது. இரண்டாவதாக அந்த நாற்றைக் கணு ஏறுமுன் பிடுங்கி நடவேண்டும். இதுவே இளமைப் பருவம் ஆகிறது. மூன்ருவதாக அப்பயிரானது தூறுவிட்டுப் பல பயிர்களாகி கதிர்விட வேண்டும். இதுவே கிருகத்தாச்ரமம் ஆகிறது. நான்காவதாக, அப்படி விடப்பட்ட கதிர் செவ்வனே வளர்ந்து, முற்ற வேண்டும். இதுவே வானப்ரஸ்தம் ஆகும். ஐந்தாவதாக முற்றின கதிரில் உள்ள நெல் தன் உடலை விட்டு அதாவது வைக்கோலைவிட்டு சுளுவாகப் பிரிந்து விடவேண்டும். இதையே சன்யாசம் என்பர்.

விளையும் நெற்பயிர் மிகவும் நல்ல உதாரணமாகக் கருதப்பட்டிருக்கிறது. வளரும் நெற்பயிர், அந்த அந்த பருவத்தில் எப்படி எப்படி இருக்கவேண்டும் என்றும், எப்படி இருந்தால் அது முடிவில் நல்ல பயிர் ஆகும் என்பதையும், நிர்ணயித்து இருக்கிருர்கள்.

முதலாவதாக, பயிர் நாற்ருக இருக்கும் பொழுது நோய் நொடி இல்லாமல், வெளுத்து சக்தியின்றிக் குன்ருமலும் இருக்கவேண்டும். இதைப்போலவே மனித வர்க்கத்திற்கு பிறக்கும் குழந்தைகள் நோய்நொடி இல்லாமலும், சக்தியற்றதாயிராமலும் இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, நாற்றைப் பிடுங்கி, நட வேண்டும். அப்பொழுது அந்த நாற்ருனது அதிகமாக, முற்றிப் போகாமலும் கணு ஏருமலும் இருத்தல் வேண்டும். இந்த நாற்று நடுவதையே மனித வர்க்கத்

தின் கண் உபநயனம் எனப்படுகிறது. இந்த உப நயனம் சிறுவயதிலேயே அதாவது, தான்யென்கிற அகம் பாவம் உண்டாகாமல், ஒரு குருவினிடம் சிஷ்யனுக அடங்கி கற்கக்கூடிய வயதிலேயே நடைபெறவேண்டும் எனப்படு கிறது.

இந்த உபநயன காலத்திலேயே ஒரு சிறுவன் பிரும்மக்ஞானம் அதாவது நான் யார்? நான் எதற்காக இப்பூமியில் பிறந்தேன்? நான் நடத்த வேண்டிய கர்மங்கள் எவை? என்ற விஷயங்கள் போதிக்கப்பட்ட வனுய் கடைசியாக காயத்திரி ஜபத்தில் சொல்லியிருக் கிறபடி சூர்ய பகவானை தனக்கு சக்தி அளிக்கும்படி கேட்டுக்கொள்ளுவதேயாகும். இவ்வுபநயனம் ஆராய்ச்சி சக்தி, கல்பனுசக்தி, சிருஷ்டி சக்தி, இம் மூன்றுக்கும் ஆதாரமான பகுத்தறிவு சக்தி என்பதை வளர்க்கக்கூடியவர்களுக்கே நடத்தப்படுகிறது. ஆயினும், முன்னேற்றமடைந்த இந்நாளில், எல்லோரும் பகுத்தறிவு, சக்தியை வளர்க்கக்கூடியவர்கள் ஆகையால், உபநயனம், எல்லோருக்கும் அவசியம் ஆகிறது.

மூன்ருவதாக, அப்படி நடப்பட்ட பயிர் ஒன்றுக்குப் பத்தாக தூறுவிட்டுக் கதிர்விடவேண்டும். இதையே கிரஹஸ்தாச்ரமம் எனப்படுகிறது. இந்த கிரஹஸ்தாச்ர மத்தில் மனிதன் மணம் செய்துகொண்டு பிள்ளை குட்டி களுடன் சுகவாழ்வு நடத்திக், கர்மத்தின் உச்சநிலையை அடைகிருன். இப்பருவம் ஒரு பயிருக்கு எவ்வளவு முக்கியமோ அதைப்போலவே மனித வர்க்கத்திற்கும்

முக்கியமாகும். இல்லறக் கர்மத்தைச் சரியாக நடத்துபவன் மற்றயாவருக்கும் ஆதாரமானவன் என்பது வள்ளுவர் வாக்கு. இப்பருவத்தில், ஒருவன் செய்யும் கருமங்களே அவன் பிற்காலத்தையும், அவனுக்கு உண்டாகப்போகும் வேறு ஜன்மத்தையும் நிர்ணயிக்கிறது ஆகும்.

நான்காவதாக, நெற் பயிரின் கதிர்கள், செவ்வனே முற்றவேண்டும். அதாவது நெற்பயிரானது கதிர் விட்ட பிறகு தூறுவிட்டுக் கிளைகள் வெடிக்கக்கூடாது. மேலும் வேறு எந்தவிதமாகவும் பயிர் செழிக்கவும் கூடாது. ஆனல், விட்ட கதிர்களையே செவ்வனே முற்ற வைக்கத் தன் சக்தியை உபயோகிக்கவேண்டும். இதையே, வானப்ரஸ்த ஆச்ரமம் என்பர். இதன்படி மனித வர்க்கம் இந்த வானப்ரஸ்த ஆச்ரமத்தில் குழந்தை குட்டிகள் பெறுவதை நிறுத்திக்கொள்ளவேண்டும். கிரஹஸ்தாச்ரமத்தில் ஏற்படக்கூடிய விவகாரங்களில் ஒரு விரக்தி ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஆயினும் சதி-பதிகள் பரோபகாரங்களிலேயும், சத் கர்மங்களிலேயும் ஈடுபட்டு, தான் கிரஹஸ்தாச்ரமத்தில் வளர்த்த ஆராய்ச்சி சக்தி, கல்பன சக்தி, சிருஷ்டி சக்தி, இம் மூன்றையும், செவ்வனே முற்ற வைக்கவேண்டும். இம்மூன்று சக்திகளே மனிதன் நன்கொடையாக சூர்யனுக்குக் கொடுக்கப்பட்ட பகுத்தறிவின் ஆதாரம் ஆகும்.

ஐந்தாவதாக நெல் வைக்கோலிலிருந்து சுலபமாக பிரிந்துவிடவேண்டும். இதையே சந்யாசம் என்பர். இந்த சந்யாச ஆச்ரமத்தில் கர்மம் என்பது நின்று

விடுகிறது எனலாம். அதோடு இப்பூமியில் உள்ள வைகளின் பேரில் ஆசையெல்லாம் நின்று விட வேண்டும். மேலும் தான் கஷ்டப்பட்டு சம்பாதித்து வளர்த்த பகுத்தறிவுச் சக்தியை சூர்யனுக்கு நன்கொடையாகக் கொடுத்து, வைக்கோலுக்குச் சமானமான தன் உடலின் பேரில் பற்றுதல் வைக்காமல் தன் மனதை ஒரு முகமாகத் திருப்பி, சக்தி ரூபமாக சூர்யனுடன் ஐக்கியம் ஆகவேண்டும். இதுவே மனிதன் வளர்க்கும் நெற்பயிரின் வளர்ச்சியும், சூர்யன் வளர்க்கும் மனித வர்க்கத்தின் வளர்ச்சியும் ஆகும். இதையே ஒரு பரிசுத்தமாகவும், நோய் நொடி இல்லாமலும், அறிவோடு வளரப்பட்ட மனித வர்க்கத்தின் வளர்ச்சிச் சித்திரம் எனக் கருதப்படுகிறது.

---

# 11. சூர்யமண்டலத்தின் அமைப்பும் மனித வர்க்கத்தின் பாந்தவ்யமும்.

முன்பு உலக உற்பத்தி என்ற தலைப்பில், சூர்ய மண்டலத்தின் உற்பத்தியைப் பற்றிச் சிறிதளவு சொல்லப்பட்டிருக்கிறது. சூர்ய மண்டலத்தின் அமைப்பையும், அதனுள் மனித வர்க்கத்தின் அமைப்பையும், விவரிக்குங்கால், ஆகாசமானது நாம் வசிக்கும் பூமியைப் போலவே சக்தி வாய்ந்த ஒரு திடலாகவே இருந்த

தெனச் சொல்லலாம். அதனுள், பூமியில் எவ்விதம் செடிகொடிகளும், மனித வர்க்கமும், உற்பத்தி ஆகிறதோ அதேபோல், ஆகாசம் என்ற திடலில் மாறுதல் உண்டானபொழுது அதனுள் இருக்கும் ஒரு அம்சமானது பூமியின் உள்ளிருந்து வெளிவரும் உயிருள்ளவைகளைப்போல், ஆகாசத்திலும் தோன்றின. பூமியில் ஒரு விதையானது அதற்கு உயிர் ஏற்பட்ட பொழுது அதன் மேலிருக்கும் மண்ணைப் பிளந்து கொண்டு வெளி வருகிறது. அதைப்போலவே ஆகாசத்தினுள்ளிருந்து பிரியும் ஒரு அம்சமானது அதற்குத் தனி உயிர் உண்டானதாகையால் அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு வெளி வருகிறது. அந்த அம்சத்திற்கு உயிர் உண்டானல் சுற்று ஏற்படு கிறது. அதன் சக்தி குறைந்ததாகில் மற்ற கிரஹங் களால் இழுக்கப்படுகிறது. அவைகளுள் சேர்க்கவும் படுகிறது.

அந்த அம்சமானது வெளிக் கிளம்பும்பொழுது, அதைச் சுற்றியுள்ள சக்தி வாய்ந்த கிரஹங்கள் அதை நாலா பக்கத்திலும் இழுக்க, அது சக்ர வாணம்போல் சுழன்று பின்பு பல துண்டுகளாய், சில சிறியதும், சில மிகப் பெரியதுமாகப் பிரிந்து, இறுதியில் பல உலகங் களாகவும், நக்ஷத்திரங்களாகவும் காணப்படுகின்றன. இதனுள் மிகச் சிறியவையாக இருக்கப்பட்டவை, நாளடைவில் அதன் சக்தி குறைவால் மற்ற கிரஹங்க

ளோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளுள் நம் பூமியில் சேர்க்கப்பட்டவைகளை "மீட்யோரைட்" என்கிறோம். இப்படியாக உலகங்கள் பல கோடி வருஷங்களாக உண்டாக்கப்பட்டும், அதனுள் சிறிய தான பல, மற்ற கிரஹங்களோடுசேர்ந்தும், ஆகாசத்தில் உண்டான கிரஹங்கள் கணக்கு வழக்கில்லை. இன்றைக்கும், நாளைக்கும், புதிதாக உண்டாகிக் கொண்டேதான் இருக்கின்றன. பல தற்காலத்து வான சாஸ்திரிகள் தாங்கள் புதிதாகக் கண்டுபிடித்தோம் என்பவை பழயவை இல்லாமல், புதிதாய் உற்பத்தி ஆனதாகவே இருக்கவும் கூடும். நாம் ஒரு ஆற்றங் கரையிலுள்ள மணலை எண்ணினாலும் எண்ணலாம். ஆனால் இந்த உலகங்களை எண்ண முடியாது. மேல் நாட்டார் இவைகளைப் பல சூர்ய மண்டலங்களின் உற் பத்தி என்றும், சிற்சிலர் சூர்ய மண்டலம் ஒன்றே என்றும், வாதாடிக்கொண்டிருக்க, நம் திராவிடச் சிற்பத்தை ஒட்டிய இந்து சமயத்தின் வேதாந்த விசாரத்தின் படி நம் பூமியைச் சார்ந்த மட்டில் சூர்ய மண்டலம் ஒன்றே எனக் கருதப்படுகிறது.

சிலர் சூரியன் ஒரு எறியும் கண்டமென்றும், அதற்குச் சீக்கிரம் அழிவு உண்டென்றும், மற்றும் சிலர் அதன் சக்தி பல கோடி வருஷங்களுக்குக் குறையாமல் இருக்கக்கூடுமென்றும், சந்திரன் ஒரு காலம் நம் பூமியைப்போல் மனித வர்க்கத்தை உடைத்தாயிருந்து பின்பு குளிர்ந்து போனதால், மனித வர்க்கத்தின்

வளர்ச்சி அதில் நின்றுவிட்டதென்றும், பல அபிப்பிராயங்கள் ஏற்பட்டு, இறுதியில் ஒன்றும் நம்பத் தக்கதல்ல என்பதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நமது திராவிடச் சிற்பத்தின்படி சூர்ய மண்டலம் ஒன்றே என்று கருதப்படுகிறது. ஏனெனில், இச் சூர்ய மண்டலத்தின்கண் வசிக்கும் நாம் வேறு சூர்ய மண்டலங்கள் இருப்பதையோ அவைகளின் வளர்ச்சி யையோ அறிவது துர்லபம். மேலும் நாம், நாம், வசிக்கும் சூர்ய மண்டலத்திற்கும், நமக்கும் உள்ள பாந்தவ்யத்தை நன்கு உணர்ந்தாலே போதுமானது.

நாம் வசிக்கும் சூர்ய மண்டலமே ஆகாசத்தில் இருக்கும் பல கோடி நக்ஷத்திரங்களுக்கும் ராஜா எனக் கருதப்படுகிறது இதுவே நம் பூமியிலுள்ள பலகோடி ஜனங்களுக்கு ஒரு சர்க்கார் ஏற்பட்டிருப்பது போல் ஆகாசத்தில் ஏற்பட்டுள்ள பல கிரஹங்களுக்குச் சூர்யன் ராஜாவாகவோ அல்லது சர்க்காராகவோ விளங்குகிறது. எனினும், சூர்ய மண்டல மும், மற்ற அநேக கோடி கிரஹங்களும், அதனதன் ஓட்டத்திலுல் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளா மலும், ஒரு சட்டத்திற்குட்பட்டே அவைகளின் ஓட்டம் நிர்ணயிக்கப்பட வேண்டியதாகையால் சூரிய மண்டல மானது கோட்டைபோல் ஒரு இடத்தை நிர்ணயித்துக் கொண்டு அதனுள் சஞ்சரிக்கிறது. இந்த கோட்டையைச் சுற்றி 27 நட்சத்திரக் கூட்டங்களும், நம் நாட்டிலுள்ள ஜனங் களின் சர்க்காரைச் சார்ந்த பிரதிநிதிகளைப்போல் விளங்கு கின்றன. இந்த 27 நட்சத்திரக் கூட்டங்கள் கூடிய கோட்


சூர்யமண்டலத்தின் அமைப்பும் மனித வர்க்க பாந்தவ்யமும்.

டைக்கு 12 வாயில் ஸ்தலங்கள் உண்டு. ஒவ்வொரு வாயிலிலும் ஒவ்வொரு மாதம் சூர்யன் சஞ்சரிக்கிறன்.

சூரியனுள் அடங்கி இருக்கும் சக்திகள்.

சூர்யனுள் இருக்கும் சக்தி எரியும் நெருப்பு அல்ல. அது ஒருவிதமான உயர்ந்தரக மின்சார சக்தியே ஆகும். இதனுள் கோடிக்கணக்கான நக்ஷத்திரங்களுடையவும், கிரஹங்களுடைய சக்தியும், சூர்யனுடைய சொந்த சக்தியும், நம்பூமியில் உண்டாகும் பகுத்தறிவு சக்தியும் அடங்கி இருக்கின்றன. இந்த சக்திகள் எல்லா கிரஹங்களி

சித்திரம் 5
சூர்யனுள் அடங்கி இருக்கும் சக்திகள்



லிருந்தும் இழுக்கப்படுகிறது. அதேபோல் சூர்யனிட மிருந்து இவ்விதமான கலந்த சக்தியை ஒவ்வொரு கிரஹமும் பெற்றுக்கொள்ளுகின்றன. சூர்யன் எல்லா வற்றிற்கும் பெரியதால் சூர்யன் பெரும் சக்தி, மற்ற கிரஹங்கள் சூர்யனிடமிருந்து இழுக்கும் சக்தியைப் பார்க்கிலும் பல மடங்கு அதிகமானது. சூர்யன் தான் சேகரித்த சக்தியை சூர்ய கிரணங்களாகப் பல கிரஹங் களுக்கு கொடுப்பதனல் அதன் சக்தி குறைந்துவிடு கிறது என்பதற்கு ஆதாரமேயில்லை. சூர்யன், எவ் வளவு கோடி வருஷங்கள் ஆனாலும் தன் சக்தியை இழப் பதற்கு இடமே கிடையாது எனலாம். ஏனெனில் சூர்யன் கொடுக்கும் சக்தியானது மற்ற கிரஹங்களால் கொடுக்கப்படும் சக்தியே ஒழிய அதன் சொந்த சக்தி அல்ல. நம் நாட்டு ஜனங்கள் பலர் பிறக்கவும், பலர் இறக்கவும், நமது சர்க்காரானது அழியாமல் எப்படி நடந்து வருகிறதோ, அதைப் போலவே பல கிரஹங்கள் மாறலாம். சக்தியை இழக்கலாம். மற்ற கிரஹங்களோடு சேரலாம். மேலும் பிறக்கலாம். ஆனால் சூர்ய மண்டலம் எப்போதுமே ராஜாதான். அவருக்கு அழிவே கிடையாது எனலாம்.

சூர்ய வெளிச்சம் என்பதே சூர்யன் எரிவதனல் உண்டாகும் வெளிச்சமல்ல என்று உணரலாம். அது ஒரு மாய சக்தியே. அந்த சக்தியை நம் பூமி கிரஹிக்கும் பொழுது அதனுள் உள்ள பண்டங்களின் பேரில் அந்த சக்தி படவே, அது வெளிச்சமாக நமக்கு காணப்படு கிறது. நம் பூமியே சூர்யனுக்கு அருகே சென்ருல்,

எல்லாம் எரிந்துபோய்விடுமென்றும், வெளியே சென்ருல் எல்லாம் குளிர்ந்துபோகுமென்றும், முன் சொன்னதன் தாத்பர்யம் நம் பூமியிலுள்ள வஸ்துக்களின் அமைப்பையே பொருத்து இருக்கிறது. நம் பூமியானது சூர்யனுக்கருகே சென்ருல், அதிகமாக சூர்யனிடமிருந்து சக்தியை கிரஹிக்க ஏதுவாகிறது. அப்பொழுது நம் பூமியில் உள்ள வஸ்துக்களின் யோக்யதாம்சம் அதைத் தாங்கமுடியாமல் இருக்கும் பட்சத்தில் அவைகள் எரிந்தேபோகும். ஏனெனில் நெருப்பு நம் பூமியினுடைய ஒரு பெரும் பூதமே ஆகும். சூர்யனுடையது அல்ல. அவை எரிந்து போவதற்கு காரணம் பூமியிலுள்ள வஸ்துக்களுக்கு அச்சக்தியை அடக்கிக்கொள்ள வேண்டிய பலம் குறைவாகவே இருக்கிறது. இதைப் போலவே நம் பூமி சூர்யனை விட்டு அதிகமாக விலகிப் போகுமாகில் சூர்யனிடமிருந்து இழுக்கப்படும் சக்தி குறைகிறது. அதனுல் மாறுதலுக்கு இடமில்லாமல் குளிர்ந்துபோகிறது.

சந்திரனுனது நம் பூமியைச் சுற்றி வரும்பொழுது சூர்யனுக்கு ஒரு சமயம் கிட்டேயும், மற்றொரு சமயம் வெளியேயும் போவதால் அதில் மனிதவர்க்கம் இருக்கும் பட்சத்தில் ஒரு காலம் எல்லாம் எரிந்து போயும் மற்றொரு காலம் எல்லாம் உறைந்து போயுமே காணப்படும். **இந்த சந்தர்ப்பத்தில் சந்திரனுள் மனித வர்க்கம் இருந்திருக்கவோ, இருக்கவோ, அல்லது உற்பத்தியாகவோ இடமே கிடையாது.**

கிரஹங்களும் — உலோகங்களும்.


ஆகாசத்திலுள்ள எல்லா நட்சத்திரங்களும், கிரஹங்களும், வெவ்வேறு அமைப்புடன் ஏற்பட்டிருந்த போதிலும், சூர்யனேயும், நாம் வசிக்கும் பூமியையும் தவிர மற்றவை எல்லாம் பல விதங்களாக செய்யப்பட்டவை. இதனுள் நம் பூமிக்கு வெளியே இருக்கப்பட்ட அங்காரகன், குரு, சனி இம்மூன்று கிரஹங்களே பிரத்தியேகமான கலப்பில்லாத உலோகங்களே உடையன என்று கருதப்படுகிறது.

மற்ற எல்லா கிரஹங்களும், நக்ஷத்திரங்களும் இம்மூன்று உலோகங்களின் கலப்புப் பகுதியால் உண்டாக்கப்பட்டவை எனத் தெரிகிறது. இவ்விதமான அமைப்பிலேயே பல வேறுபாடுகள் ஏற்படுவதால் ஒவ்வொரு கிரஹத்திற்கும், நட்சத்திரத்திற்கும், ஒரு பிரத்தியேகமான குணமே ஏற்பட்டிருக்கிறது. சூர்யனேடு சேர்ந்திருக்கும் சக்தியானது அவ்வெல்லா குணங்களேயும், ஒன்று சேர்க்கப்பட்ட பல கிரணங்களாகவே காணப்படுகிறது. இதனலேயே நம் பூமியிலுள்ள ஜீவராசிகளும், மனித வர்க்கமும், கோடிக்கணக்கான விதவிதமான குணங்களோடு, ஆகாசத்திலுள்ள பல கோடி கிரஹங்களிலும், நக்ஷத்திரங்களிலும் உள்ள குணங்களேயே பிரதி பலித்துக் காட்டுகின்றன.

எல்லா கிரஹங்களும், நக்ஷத்திரங்களும் சில உலோகங்களே உடையதாய் இருக்க, நம் பூமியில் அநேக கோடி விதமான உலோகங்களும் வஸ்துக்களும்

உற்பத்தியாகின்றன. இவ்விதம் பூமியானது மற்ற எல்லா கிரஹங்களைக் காட்டிலும் வெகு சீக்கிரமாகவே மாறக்கூடிய வஸ்துக்களை உடையதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

சித்திரம் 6.




சூர்ய அமைப்பு சித்திரம்.

**சூர்யனும் — மாதுளையும்.**

இதற்கு நேர்மாருக சூர்யனே எல்லா கிரஹங்களையும், நக்ஷத்திரங்களையும் காட்டிலும் மிகவும் மாற முடியாத வஸ்துக்களையுடைய கிரஹமாகிறது. மற்ற கிரஹங்களைப் பார்க்கிலும், சூர்யனுக்கே ஒரு மகத்தான

பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற கிரஹங்கள் சூர்யனிடமிருந்து சிறிய சக்தியை அடைய, எல்லா கிரஹங்களிலிருந்தும் இழுக்கப்படும் அபாரமானதும், பலவிதமான சக்திகளை கிரஹித்து தனக்குள்ளே அடக்கிக்கொள்ளுமாறு சூர்யன் அமைக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக, சூர்யனுள் செம்பும், அதனுடன் இரும்பும் சேர்ந்து அமைக்கப்பட்டதாகக் கருதுகின்றனர். ஆயினும் இவ்வமைப்பானது சூர்யனுக்குள்ளே ஒருவிதமான சக்தியோடு தன் உடலை வளர்த்து வர, அதற்குமேல் கவசம்போல் ஒரு கூடு ஏற்படுத்தப்பட்டு அந்த கவசத்திற்கு மேலேயே சூர்யனுல் இழுக்கப்படும் சக்தியானது ஒரு மேகம்போல் அடைபட்டிருக்கிறது. இவ்விதமாகக் கணக்கிடமுடியாத பெரியதோர் சக்தியை தனக்குள்ளேயே அடக்கிவைப்பதற்கு ஒரு பிரத்யேகமான உலோகங்களாலான கரடு முரடான அமைப்பை அதன் வெளி பாகத்தில் உடைத்தாயிருக்கிறது.

ஒரு சக்தியை தனக்குள் அடக்கிக்கொள்ள வேண்டுமானுல் முதலாவதாக அது வழவழப்பான உடலை அடைந்திருக்கக்கூடாது. அது முக்கியமாகக் கரடு முரடாகவே இருக்கவேண்டும். இரண்டாவதாக அச்சக்தி வசிப்பதற்கு உகந்தவாறு சிறு சிறு உலோகங்களில் அமைப்பின் நடு நடுவே ஆகாசமோ அல்லது வேறு மாறமுடியாத வஸ்துவோ அமைந்திருக்கவேண்டும். உதாரணமாக, இரண்டு சிறு கம்பிகளை ஒரு பலகையின் மேல் வைத்து, அது இரண்டுக்கும் மத்தியில் ஒரு சிறு கம்பி

அளவு இடம் விட்டு இருந்தால் அந்த இரண்டு கம்பிகளும் ஒன்று சக்தியாகவும், மற்றொன்று சிவமாகவும் அதாவது ஒன்று பெண்ணாகவும், மற்றொன்று ஆணாகவும் தனக்குள்ளேயே நிர்ணயித்துக்கொண்டு, சூர்யனிடமிருந்து பூமிக்குக் கிடைக்கும் சக்தியை அதனுள் அடக்கிக்கொள்ளுகிறது. இதே காரணத்தால் மோட்டார் பாட்டரிகள் மின் சார சக்தியை அடக்கி வைத்துக் கொள்ளுகின்றன. ரேடியோவிலுள்ள கண்டென்ஸர்களும் இவ்விதமே அடக்கிக்கொள்ளுகின்றன. இதே போல் சூர்யனால் இழுக்கப்பட்ட அந்த மகத்தான சக்தியை தனக்குள்ளேயே அடக்கி வைத்துக்கொள்ள உகந்தவாறு, சூர்யனுடைய மேல் பாகத்தில் அநேக கோடி சிறிய உலோகங்கள் பதிக்கப்பட்டு அவைகளெல்லாம் ஒன்றோடொன்று சேராதபடி இடம்விட்டு, அந்த இடங்களை ஒருவித வஸ்துவினால் வைரத் தோடுகள் கட்டுவது போல் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டானது சூர்யனுள் ஏற்பட்டிருக்கும் ஒருவித காந்த சக்தியினாலே எனக் கருதப்படுகிறது. இதையே நம் முன்னோர், 'மாதுளம் பழத்திற்கு ஒப்பிட்டு இருக்கிறார்கள். சூர்யனின் வர்ணத்தை மாதுளம் பூவிற்கும், சூர்யனுடைய மேல் பாகத்தை மாதுளம் பழத்தில் அதில் முத்துக்கள் அமைந்திருப்பதுபோல் அமைந்திருப்பதாகவும் கருதியிருக்கிறார்கள்.

குரு கிரஹமும் — சூர்ய புள்ளிகளும்.

சூர்யனுள் கோடிக்கணக்கான சக்திகள் இழுக்கப் படுகின்றன. அவைகள் எல்லாவற்றையும் சூர்யன்

அடக்கிக்கொண்டிருந்தபோதிலும் சூர்யன் பிரத்தியேக மான தன் சக்தியைத்தானே கொடுப்பதற்கு சக்தி இராத தால், சூர்ய மண்டலத்தினுள் சூர்யனைத் தவிர மற்ற எல்லா கிரஹங்களுக்கும் பெரியதான குரு கிரஹமே, அந்த சூர்யனுடைய சொந்த சக்தியை உள்ளிருந்து வெளியே இழுத்துவிடுகிறது. இக்குரு கிரஹத்தையே ஸத்திய லோகம் என்றும் கூறுவர். இந்த இழுப்பானது குரு மகரத்திலிருக்கும்பொழுது குறைவாகவும், அதுவே உச்சமேறி கடகத்திற்குப் போகும்போது மிக அதிகமாகவும் ஏற்படுகிறது. **இதுவே சுமார் 12 வருஷத் திற்கு ஒரு தடவை குறைந்தும் அதிகப்பட்டும் இழுக்கப்படு கிறது.**

வெளியே இழுத்துவிடப்பட்ட சூர்யனுடைய சொந்த சக்தியானது, சூர்யனுடைய மேல் பாகத்தி லுள்ள மாதுளம் முத்துப் போன்ற உலோகங்களை விலக்கிக்கொண்டு வெளி வருகிறது. அப்படி வெளியே இழுக்கப்படும் சக்தியினால் சூர்யனுடைய மேல் பாகத் தில் உண்டாகும் துவாரங்களையே ("Sun Spots") சூர்யப் புள்ளிகள் என்கிறோம். இந்த சக்தியானது மிகவும் உக்ரமான சக்தியாகையால் அது வெளிவரும் போது இப்பூலோகத்தில் ஏற்பட்டிருக்கும் ரேடியோ சக்திகள் எல்லாவற்றையும் ஒருகாலம் அடக்கிவிடுகிறது. இதனாலேயே ("Sun Spots") சூர்யப் புள்ளிகள் உண்டாகும்பொழுது ரேடியோக்கள் வேலை செய்வ தில்லை எனப்படுகிறது. **ஆனால் அந்த உக்ரமான சக்தி**

யானது சூர்யனுக்கு வெளியே மேகம்போல் பரவியிருக்கும் மற்ற சக்திகளோடு கலந்த பிறகு சாந்தி அடைகிறது.

வெளிவரும் சூர்யனுடைய சொந்த சக்தியானது நம் பூமியில் பிறக்கும் எல்லா ஜீவராசிகளுக்கும், மனித வர்க்கத்திற்கும் உயிரைக்கொடுப்பது ஆகும். ஒரு பிரஜை உற்பத்தி ஆவதற்கு ஒரு ஆண் மகனின் விந்துவே காரணமாக இருக்கிறது. ஆயினும் விந்துவால் தாய் வயிற்றில் வளரும் பிரஜா பிண்டத்திற்கு உயிர் கொடுக்கும் சக்தி கிடையாது. அந்த சக்தி கொடுபட வேண்டுமானால் அதை சூர்யனிடமிருந்தே அடையவேண்டும். தாய் வயிற்றில் இருக்கும் பிண்டமானது ஒரு யந்திரம் போல் அமைக்கப்பட்டுள்ளது. அந்த யந்திரத்தை ஓட்டுவதற்கு ஆரம்பத்தில் ஒரு சக்தி வேண்டும் ஆகையால், அந்த சக்தியைக் கொடுப்பது சூர்யனிடமிருந்து வெளிவரும் சொந்த சக்தியே ஆகும். உலகத்திற்கே தகப்பனை சூர்யனின் சொந்த சக்தியானது, ஒரு தகப்பனின் விந்து எவ்விதம் பிரஜா உற்பத்திற்கு காரணமாக இருக்கிறதோ, அதேபோல் அதன் வளர்ச்சிக்கு ஆரம்ப மூல சக்தியை ஸ்டோறேஜ் பாட்டரி போல் கொடுக்கிறது. இதையே "ஜீவாத்ம சக்தி" என்கிறோம். இவ்விதம் வெளிவரும் சக்தியால் சூர்யனுக்கு ஒரு கெடுதலும் இல்லை. அவ்விதம் வெளிவராத வரையில் நம் பூமியில் பிறக்கும் பிரஜைகளுக்கு உயிரோ, வளர்ச்சியோ இராது. சூர்யனின் மேல் பாகத்தில் ஏற்படும் "முத்துக்கள் விலகிய புள்ளிகள்" காலா காலத்தில் மூடிக்கொண்டுவிடும்.

**ஜீவாத்மாவும் — ஜீவாத்ம சக்தியும்.**

ஜீவாத்மா என்பது பூமியில் பரவி நிற்கும் மனம், குணம், பகுத்தறிவு இவைகளை வெவ்வேறு அளவில் கொண்ட ஒரு அம்சம் ஆகிறது. ஜீவாத்ம — சக்தியோ சூர்யனுடைய சொந்த சக்தி ஆகிறது. ஜீவாத்மா தூல சரீரத்தை உடையதாகவும், அடையக்கூடியதுமான நீரின் ஆதிக்கத்திலும், காற்றின் ஆதிக்கத்திலும் வளரும் ஒரு அம்சம் ஆகிறது. இந்த தூல சரீரத்தை உடையதான "ஜீவாத்மா" வளரவும், முன்னேற்ற மடையவும், அதனுல் உண்டாகும் பகுத்தறிவுச் சக்தியை சூர்யனுக்குக் கொடுக்கவும், இறுதியில் பரமாத்மாவாக மாறவும் வேண்டிய சக்தியைக் கொடுப்பது "ஜீவாத்ம சக்தியே" ஆகும். ஜீவாத்மா நீரிலும், காற்றிலும் வளரும் தாவர வஸ்துக்களில் கந்த ரூபமாகவும், ருசி, வர்ண, ஸ்பர்ச மூலமாகவும், ஜீவப்பிராணிகளிடமும், மனிதவர்க்கத்தினிடமும், நாத ரூபமாகவும் காணப் படுகிறது. இந்த ரூபங்களைக் கொண்டே தூல சரீரத்தில் மாறுதல்களை உண்டாக்கவும், பல ஜன்மங்களை எடுக்கவும், முன்னேற்றமடையவும் கூடிய ஒரு இல்க்குவை உடைத் தானதாக இருக்கிறது. இம்மாறுதல்களின் பயனுக அறிவு மிகுந்து, தன் தூல உடலைத்துறந்து இறுதியில் பரமாத்மாவாக மாறி சூர்யனை அடைகிறது. ஜீவாத்மாவுக்கு பசுபதி என்ற திருநாமமும் உண்டு.

---

# 12. சூர்யன், பூமி இவைகளின் அமைப்பும் சக்திகளும்

சூர்யனும், பூமியும் நேர்மாருக அமைக்கப்பட்டவை என்பதை அறிந்தோம். அதாவது சூர்யன் சுளுவில் மாறமுடியாத வஸ்துக்களால் அமைக்கப்பட்டது என்றும், பூமியோ அதற்கு மாருக சுளுவில் மாறக்கூடிய வஸ்துக்களால் அமைக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது. தற்காலத்து விக்ஞானிகள் சூர்யனின் மேல் பாகத்தில் சுமார் 6000 டிகிரி உஷ்ணம் இருக்கக்கூடுமென்றும், அதனுல் அதின் மத்ய பாகத்தில் இரண்டு கோடி டிகிரி இருக்கக்கூடுமென்றும், ஆகையால் அது ஒரு வாயுப்பிண்டமாகவே இருக்கக்கூடுமென்றும் நினைக்கிருர்கள். மேலும் சூர்யன் ஒவ்வொரு நாளும் பூமிக்குக் கொடுக்கும் சக்தி எங்கிருந்து வருகிறது, அது ஒரு எரியும் பொருளா, அல்லது வேறு வகை சக்தி வாய்ந்த வஸ்துவா, அதன் சக்தியை இப்படியே கொடுத்துக் கொண்டு போனுல் எவ்வளவு காலம் சூர்யன் உயிரோடு வாழ முடியும், என்றெல்லாம் சர்ச்சைகள் நடத்தி, ஒரு முடிவுக்கும் வராமல் இருக்கிருர்கள். ஆனுல் இந்த விஷயத்தை நம் முன்னோர் வெகு தெளிவாக பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே கணக்கிட்டு சிற்ப ரூபமாக எல்லாவற்றையும் தெரியப்படுத்தி இருக்கிருர்கள்.

## சூர்யன், பூமி இவைகளின் அமைப்பும் சக்திகளும்.

விக்ஞானிகளின் இவ்வளவு சர்ச்சைகளுக்கும் சந்தேகங்களுக்கும் காரணம் சூர்யனும், மற்ற கிரஹங்களும், வேறு வேறு என்று நினைப்பதே ஆகும். எந்த நிமிடம் சூர்யனும், அதைச் சுற்றிவரும் மற்ற கிரஹங்களும் ஒன்றே என்ற மனப்பான்மை உண்டாகிறதோ அந்த நிமிடமே இந்தச் சர்ச்சைகளெல்லாம் தீர்ந்து போகும். அப்படி எல்லா கிரஹங்களும் வேறு வேருக இருக்கும்பட்சத்தில் அவைகள் சூர்யனைச்சுற்றி வர வேண்டிய அவசியம் இல்லை. அவைகள் தன்னைத்தானே சுற்றிக்கொண்டும் ஒரு குறித்த சுற்றளவில் ஓடிக் கொண்டும் இருக்கலாம். **அவ்விதம் செய்யாமல் சூர்யனைச் சுற்றிக்கொண்டே மற்ற கிரஹங்கள் ஓடுவதால் அவைகளுக்குள்ள பாந்தவ்யத்தை நன்கு விளக்குகிறது.**

**சூர்யனும் — அவயவங்களும்.**

நம் திராவிடச் சிற்பத்தின்படி சூர்யன் சிரசு என்றும், மற்ற கிரஹங்கள் அதன் அங்கங்கள் என்றும், கணக்கிடப்பட்டு இருக்கிறது. அதன்படி மனிதவர்க்கத்தின் சிரசுக்கு எப்படி அங்கங்கள் வேலை செய்து அதற்கு சக்தியைக் கொடுக்கிறதோ, அதே போல் கிரஹங்கள் சூர்யனைச் சுற்றி வருவதால் சூர்யனுள் சக்தி வளருகிறது. ஒவ்வொரு கிரஹமும் அப்படிச் சுற்றி வருவதால் ஒரு வித புத்தி-சக்தி ஒவ்வொரு கிரஹத்திலும் உண்டாகிறது. அதையே சூர்யன் இழுத்துக் கொண்டு அதன் மேல் பாகத்தில் ஒரு ஸ்டோரேஜ் பாட்டரி (Storage Battery) போல் வேலை செய்து

அதன்மேல் அடக்கி வைத்துக் கொண்டு அந்தக் கலந்த சக்தியையே திருப்பி அவயவங்களான கிரஹங்களுக்குக் கொடுக்கிறது.

சூர்யன் ஒரு எரியும் பொருளும் அல்ல, தானே அவ்வளவு சக்தியையும் கொடுக்கக்கூடிய வஸ்துவும் அல்ல. தனக்குக் கிடைக்கும் சக்தியை திருப்பிக் கொடுக்கிறது. இதுவே ஒரு தனி மனிதன் சம்பாதிக்கும் திரவ்யத்திற்கும் செலவிடும் திரவ்யத்திற்கும் ஒப்பாகிறது. மேலும் இப்படிக்கிடைக்கும் சக்தியானது மூல சக்தியே ஆகையால் சக்தியில் மாறுதல்கள் ஏற்படுமேயொழிய குறையாது. இவ்விதம் அடைபடும் சக்தியானது நம் பூமியில் மின்சார சக்தி எப்படி செப்புக்கம்பிகளால் தாங்கி நிற்கிறதோ, அதேபோல் சூர்யனின் மேல் பாகத்தில் உள்ள வஸ்துக்களால் தாங்கப்படுகிறது. இதில் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. மின்சார சக்தி கம்பிகள் வழியாக ஓடுகிறது. ஆனல் சூர்யனில் அடைபட்ட சக்தி கிரஹத்துக்கு கிரஹம் தாவுகிறது.

நம் திராவிடச் சிற்பத்தின் கணக்குப்படி சூர்யன் ஒரு விதமான சுளுவில் மாற முடியாத இரும்பும் செம்பும் கொண்ட உலோகங்களால் ஆக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் மேல் பாகத்தில் ஒரு ஓடுபோல் அமைக்கப்பட்டு அதனுள் முத்துக்கள் பதிப்பது போல் சிறிது இடம் விட்டு அமைக்கப்பட்டுள்ளன. இப்படி பதிக்கப்பட்ட முத்துக்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாதது. அவைகள் ஒவ்வொன்றுக்கும் சுற்றளவு மூன்று மைல் இருக்கக்கூடும். பதிக்கப்பட்ட முத்துக்

களின் இடைவெளி சுமார் 40 அல்லது 50 அடியாவது இருக்கலாம். பதிக்கப்பட்ட முத்துக்களும்,—இடைவெளி களும் ஒருவித மாற முடியாத அதிக சக்திகளைத் தாங்கக் கூடிய வஸ்துக்களால் ஆக்கப்பட்டவை. இவைகளே எல்லா கிரஹங்களிலிருந்தும் இழுக்கப்படும் சக்திகளை அடக்கிக்கொண்டு நமக்கு ஒளியாகக் கொடுக்கிறது. பதிக்கப்பட்ட முத்துக்களை நல்ல புகைப்படங்களில் காணலாம். விக்ஞானிகள் அந்த முத்துக்கள் எப்படிப் பட்டவை அந்த முத்துக்களை பிரித்துவைக்கும் சக்தி எவை என்பதை ஆராய்ச்சி செய்தால் சூர்யனுடைய பல விவரங் களும் வெளிப்படும்.


உத்திராயணமும்—தட்சிணாயணமும்.

சூர்யனிடமிருந்து வரும் சக்தியில் உஷ்ணமும் ஒளியும் மனிதவர்க்கத்திற்கு காணப்படுவது நம் பூமியில் பூதங்களால் ஏற்படும் பல வஸ்துக்களின் பிரதிபலிப் பினாலும், மாறுதலினாலுமே ஆகும். சூர்ய கிரணங்கள் நேராக பூமியில் படும்பொழுது பூமியின் பிரதிபலிப்பு அதிகமாகி வெளிச்சமும் உஷ்ணமும் அதிகமாகக் காணப் படுகிறது. இதே கிரணங்கள் பூமி உருண்டை வடிவ மாக இருப்பதால் பக்கவாட்டில் சாய்வாக விழுந்து பூமியை விட்டு அகலுவதால் அதன் உஷ்ணமும் ஒளியும் வட நாடுகளிலும், தென் நாடுகளிலும், அதிகம் உணர முடியாமல் இருக்கிறது.

சூர்ய கிரணங்கள் துருவங்களில் படாமலே இருப்பதால் அவ்விடங்களில் பிரதிபலிப்புக்கே இடம்

**சூர்யன், பூமி இவைகளின் அமைப்பும் சக்திகளும்.**

சித்திரம் 7




பூமி சாய்வாகச் சுற்றுவதால் உண்டாகும்
உத்திராயணமும் - தட்சிணாயணமும்.

இல்லாமல் வெளிச்சமும், உஷ்ணமும், காணப்படாமலே இருக்கின்றன. ஆயினும் பூமி தன்னைத்தானே நேராக சுற்றிக்கொள்ளாமல் ஒரு பக்கம் சாய்வாக சுற்றிக் கொள்ளுகிறபடியால் சூர்ய கிரணங்கள் வடதுருவத்தில் ஒரு காலமும் தென் துருவத்தில் ஒருகாலமும் சிறிது பட, அவ்விடங்களில் உஷ்ணபிரதேசங்களில் ஏற்படுவது போல் அல்லாமல் வருஷத்தில் சில மாதங்கள் பகலாகவும், சில மாதங்கள் இரவாகவுமே காணப்படுகிறது. இந்த மாறுதலையே உத்திராயணமென்றும், தட்சிணாயணம் என்றும் கூறுகிறோம்.

இந்த மாறுதல் சுமார் ஒரு வாரத்துக்குள்ளேயே ஏற்படுகிறது. இதை நம் பஞ்சாங்கங்களில் சரியாக கணித்து அந்த நாளை குறிப்பிட்டும் வருகிறார்கள். பூமி சூரியனை சரியாக ஒரே நிலையில் சுற்றும் பட்சத்தில் இந்த மாறுதலை உணருவதும், கணக்கிடுவதும் துர்லபம். அப்படிச் சுற்றுமாகில் ஒரே ஒரு தினம் மட்டுமே வட துருவத்திலும் தென்துருவத்திலும் பகல் ஏற்படலாம். மற்ற தினங்களில் எல்லாம் இருள் சூழ்ந்ததாகவேதான் காணப்படும். இதைத் தவிர்த்து, பல மாதங்கள் பகலும், பல மாதங்கள் இரவும் உண்டாக்குவதற்கு பூமி சூர்யனை நேராகச் சுற்றாமல், கொஞ்சம் சாய்ந்தே சுற்றி வருகிறது.

சூர்ய கிரணங்களும் — துருவங்களும்.

இந்த துருவங்களில் சூர்ய கிரணங்கள் மிகவும் சாய்ந்தே விழுவதால் அவ்விடங்களில் பிரதிபலிப்பே கிடையாது. அதனால் உஷ்ணமும் ஏற்படுவதில்லை. அவ்விடங்கள் நீரைக் கொண்ட மேகங்களுக்கு ஒரு இருப்பிடமாகவே இருக்கின்றன. அவ்விடங்களில் மேகங்களும் பூமியும் கலந்தே காணப்படும். சிற்சில இடங்களில் அவை ஒரு பனிச்சுவர்போல் ஆகாசமும் பூமியும் பிரிக்க முடியாதபடி காணப்படும். ஆயினும் துருவத்திற்கு மத்திய பாகத்தில் அதிகமாக பனிச்சுவர் கள் காணப்பட ஏது இல்லை. ஏனெனில் பூமி, ஒரு பம்பரத்தைப் போல் சுற்றி மத்திய பாகத்தில் உள்ள பனித்துணுக்குகள் பக்கவாட்டில் வீசப்படுவதால் மத்திய பாகம் ஒரு குளம்போல் சிறிதளவு உள்ள பனிப்


பாளமாக காணப்படலாம். வேறு சில சமயங்களில் சூர்யன் பூமிக்கு கீழேயே சுற்றுவதாக காணப்படுவதால் அங்கேயுள்ள சில வஸ்துக்களுடையவும், பிராணிகளினுடையவும், சூர்ய கிரணங்களால் ஏற்பட்ட நிழல்கள் பல மைல் உயரத்திற்கு பனிச்சுவர்கள் மேல் ஏற்பட்டு ஒரு பயங்கரமான காட்சியையும் கொடுக்கிறது. இந்த மேகங்கள் அந்தத் துருவங்களில் பூமியை ஓட்டினாற் போல் பனிக்கட்டி போலும், மேலே போகப் போக அதன் கனம் குறைந்து 7 அல்லது 8 மைல் உயரத்தில் மெதுவாக நகரக்கூடிய கனத்த பனியால் அமைக்கப்பட்ட மேகங்களாக இருக்கின்றன.

பூமி தன்னைத்தானே ஒரு பம்பரம்போல் சுற்றிக் கொள்வதால் சுழல்காற்று ஏற்பட்டு அந்த கனத்த மேகங்கள் ஒரு தக்ளியில் நூல் சுத்திக்கொள்வதுபோல் சுருண்டு காணப்படுகின்றன. இப்படிச் சுருண்ட மேகங்களில் சூர்ய கிரணம் பட்டவுடன் அவை ஒரு சுருண்ட சந்திரன்போல் காணப்படுகின்றன. இதையே ஆங்கிலத்தில் ஆரோரு (Aurora) என்பார்கள். ஆயினும் விக்ஞானிகளுள் இந்தவெளிச்சம் இரண்டு துருவங்களிலும் ஒரே சமயத்தில் ஏற்படுகிறதா, எப்பொழுது—எப்பொழுது ஏற்படுகிறது என்பது இன்னும் புரியாமலேயே இருக்கிறது. திராவிடச் சிற்பத்தின்படி நோக்குங்கால் இந்த வெளிச்சம் வட துருவத்திலும், தென் துருவத்திலும் ஒரே சமயத்தில் ஏற்படக்கூடும். ஆனல் அது அந்த அந்த துருவங்களில் வசிக்கும் மேகங்களைப்

சூரியன், பூமி இவைகளின் அமைப்பும் சக்திகளும்.

சித்திரம் 8.

சூர்ய கிரணங்கள்




சூர்ய கிரணங்களால் உண்டாகும் ப்ரதிபலிப்பும் த்ருவச் சந்திரனும்.

பொருத்திருக்கும். ஆயினும் பகல் ஏற்பட்ட துருவத்தில் சுருண்ட மேகங்கள் போலும், இருள் சூழ்ந்த துருவத்தில் நல்ல பிரகாசத்தோடும் காணப்படும். மேலும் சூர்ய சக்தி வெளிப்படும்பொழுது (அதாவது sun-spot உண்டாகும்பொழுது) அதனால் ஏற்பட்ட சிறு துணுக்குகள் பூமியை அடைவதால் அவைகள் இந்த

மேகங்களோடு பெருவாரியாகச் சுழன்று பல நிறங்கள் கொண்டதாகவும் பிரமிக்கக்கூடியதுமான ஒரு ஒளியைக் கொடுக்கிறது.

இவ்விதம் பூமி தன் கடமையைச் செய்வதை நோக்குங்கால், ஒரு தாய் எப்படி தன் குழந்தைகளுக்கு பாலூட்டி, தாலாட்டி, நோவு நொடி ஏற்படாமல் எல்லா சவுகர்யங்களையும் தன் சிரமத்தைப் பாராது செய்து முடிக்கிருளோ, அதே போல் பல கோடி விதங்களில் மனிதவர்க்கத்தின் வளர்ச்சிக்குத் தொண்டு செய்து வருகிறது எனலாம். இப்படி இருக்க சிலர் பூமி ஒரு புத்தி அற்ற ஜடப்பிண்டம் என்று நினைத்து அதைப் பல விதங்களிலும் துன்புறுத்துவதல்லாமல் அதை அதன் மத்திம பாகம் வரை குடைந்து அதில் என்ன இருக்கிறது என்று ஆராயவும் விரும்புகின்றனர். அதனுல் பல விளைவுகள் ஏற்படக்கூடும் ஆகையால் அந்த விதமான மனப் பான்மையை மனிதவர்க்கத்தின் நலத்தை உத்தேசித்து கை விடுவார்கள் என்று நம்பப்படுகிறது.

---

# 13. சூர்ய மண்டலமும் மனித வர்க்கமும்.

சூரியன் மேல் அடைபட்ட அபாரமான சக்தியை நம் பூமி கிரஹித்துப் பலவகையில் உபயோகித்து


## சூர்ய மண்டலமும் மனிதவர்க்கமும்.

மனிதவர்க்கத்தின் மூலமாய் ஈசுவரத்தன்மையான பகுத்தறிவு சக்தியை வளர்த்து முற்ற வைத்து, சூர்யன் இழக்கும் பொழுது இச்சக்தியையே விடுகிறது. இதனால் சூர்யனிடமுள்ள எல்லா சக்திகளும் பலவகைக் குணங் களை உடையதாக இருந்த போதிலும், பகுத்தறிவுச் சக்தியைக் கொடுப்பது மனிதவர்க்கமே. இம்மனித வர்க்கம் சூர்ய மண்டலத்திற்குச் செய்யும் பணி மிகவும் போற்றத்தக்க தாயினும் அப்பணி தற்காலம் சரிவர நடைபெறுவதில்லை. அதற்குக் காரணம் தற்காலம் வசிக்கும் மனிதவர்க்கத்தின் அறியாமையும் சுய நல மனப்பான்மையுமே ஆகும். சூர்ய மண்டலத்தின் அமைப்பும் மனிதவர்க்கத்தின் அமைப்பும் ஒன்றே.

மனிதன் சூர்ய மண்டலத்தையே பிரதிபலிக்கிறன். சூர்ய மண்டலத்தின் அமைப்பையும் மனிதனுடைய அமைப்பையும் நோக்குங்கால் இரண்டும் வேறுபட்ட தல்ல. சூர்ய மண்டலத்திற்கு மனிதனைப்போல் அங்கங்கள் உண்டு. அவைகள் ரேடியோ சக்தியால் பிணைக்கப்பட்டவை. மனிதனுடைய அவயவங்களோ அழியக்கூடிய எலும்பாலும், சதையாலும், பிணைக்கப் பட்டன. சூர்ய மண்டலமோ தன் சிரசான சூர்ய னுக்குள் சக்தியை அடக்கிக்கொண்டு இருக்கிறது. அதைப்போலவே மனிதன் அவன் சிரசில் அவன் அடைந்த எல்லா சக்திகளையும் அடக்கிக் கொள்ளு கிறன். சூர்ய மண்டலத்தினுள் புதக்கிரஹமும்

## சூர்ய மண்டலமும் மனிதவர்க்கமும்.

### சித்திரம் 9.




மனிதவர்க்கத்தின் அமைப்புச் சித்திரம்.

சுக்கிரனும், நாம் வசிக்கும் பூமியும், சந்திரனும், அங்காரகனும், ஆஸ்டிரிலாய்டுஸ் என்று சொல்லப்பட்ட

## சூரிய மண்டலமும் மனிதவர்க்கமும்.

பல சிறு நட்சத்திரங்கள் கூடிய ஒரு எல்லைக்குள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதைப்போலவே மனிதனுடைய புதனுக்குச் சமானமான நுரைஈரலும், சுக்கிரனுக்குச் சமானமான ஹ்ருதயமும், நம் பூமிக்குச் சமானமான வயிறும், சந்திரனுக்குச் சமானமான கல்லீரலும், அங்காரகனுக்கு சமானமான கைகளும், நமது உடலிலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வுடலுக்கு வெளியே இருக்கப்பட்டவைகளில் குருவே ஆண்குறி-பெண்குறி ஆகிறது, சனியே கால்களாவன. இப்படி சூர்ய மண்டலமே ஒரு மனிதனைப் போல் பல அங்கங்களை உடையதாகவும் அவைகள் ரேடியோ போன்ற ஒருவித மாய சக்தியால் பிணைக்கப் பட்டதாகவும் ஆகும். இதையே திருப்பிப் பார்ப்போமாகில் **சூர்ய மண்டலத்தின் பிரதி பிம்பமே மனிதன் ஆகிறான்.**

## மனிதனும் ராஜ பதவியும்.

சூர்ய மண்டலமே பல கோடி கிரஹங்களுக்கும் ராஜாவாக இருக்க, அச்சூர்ய மண்டலத்தின் பிரதிபிம்பமான மனிதவர்க்கமே எல்லா கிரஹங்களுக்கும் ஒரு வகையில் சிறந்ததெனச் சொல்லலாம். இப்படிச் சொல்லுகையில் பெரியவர் கண்களில் நீர் ததும்பிற்று. விசன முகத்தோடு சொல்லுகிறார் :— மனிதவர்க்கமே நீ ராஜாவின் வயிற்றில் பிறந்தவன் என்பதை அறியாயோ! இது காலம் சில்லரை ஆசைகளைக் கண்டு மயங்கித் தான் பிறந்தது ராஜாவின் வயிற்றில்

என்பதைக்கூட அறியாமல் இருக்கிருய். உனக்கு ராஜ பதவி எப்பொழுதும் உண்டு. ஆனல் ஒரு நிபந்தனே. உனக்கு வைக்கப்படும் பரீக்ஷையில் நீ தேறவேண்டும். அப்பரீக்ஷை ஜன்மத்தில் ஒரு தடவை நடைபெறுகிறது. அப்பரீக்ஷையில் தேர்ச்சி அடைந்தால் உனக்கு ராஜ பதவி கிடைக்கும். இல்லையேல் மறு ஜன்மம் எடுத்து அல்லது வேறு பல ஜன்மங்களுமெடுத்து, பின்பே நீ ராஜ பதவி அடைய வேண்டும். இப்பரீக்ஷைக்கு இரண்டே இரண்டு புத்தகங்கள். அவைகளில் ஒன்று புத்தி மற்ருென்று சித்தி. நீ உன் வாழ் நாட்களில் சத்கர்மங்கள் செய்து புத்தியைப் பெருக்கிக் கொண்டு, சித்தன் ஆவாயாகில் ராஜ பதவி உனக்கு எப்பொழுதும் காத்திருக்கும்.

**மனித வளர்ச்சியும் இந்திரப்பதவியும்.**

ராஜ பதவி அடையக் கூடியவரையே இப் பூலோகத்தில் இந்திரன் என்கிருேம். இந்திரன் என்ற சிற்பத்திற்கு இப்பூலோகமாகிய பாற்கடலில் சக்தி வாய்ந்த புத்தி மிகுந்த எல்லோராலும் போற்றப்பட்ட விஷ்ணு அம்சத்தைச் சேர்ந்த அதாவது கிரஹஸ்தன் எடுத்துக்கொள்ளப்படுகிருன். பாண்டவர்கள் போல் உள்ளவர்கள் இந்திரப்பதவியை அடைந்தவர்களென்றும், திரோபதியைப்போலொத்த பெண்மணிகள் இந்திராணிப்பதவியை அடைந்தவர்களென்றும் சொல்லப்படுகிறது. இந்திராசனம் என்ருல் அப்

பதவிக்கேற்ற ஆசனத்தையே குறிக்கிறது. ராஜ பதவியை அடையக்கூடியவன் இப்பூலோகத்தில் ஒரு இந்திரனாகவே காணப்படுவான். குறுகிய மனப்பான்மை உடையவரும் நல்ல குணமும் பிரும்மக்ஞானமும் இல்லாதவரும் இப்பதவியை அடையப் பல ஜன்மங்கள் எடுத்தே தீரவேண்டும். அதைப்போலவே, தான் செய்ய வேண்டிய கர்மத்தை விட்டு, மனதில் சாந்தி இல்லாமல் பாமர ஜனங்களை ஏமாற்றுகிறவருக்கும், துறவி என்று சொல்லிக்கொண்டு நாட்டை விட்டவருக்கும், இப்பதவி கிட்டாது. இந்த ராஜ பதவியை அடைகிறவர்கள் புத்திமான்களாகவும், கர்மத்தை விடாதவர்களாகவும், பூலோகத்தில் ஒரு சித்தனாகப் புகழடைந்து காந்திஜியைப் போலவும், மற்றும் பல ஞானிகளைப் போலவும் சாந்த ரூபமாக வாழ்நாட்களை நடத்துவரே ஆவர். இப்பூலோகத்திலுள்ள பலகோடி ஜனங்களுள் வெகு சிலரே இப்படிப் பரிபக்குவம் ஆனவர்களாகத் தற்காலம் இருக்கின்றனர். ஈசுவரத்தன்மை அடைய வேண்டுமானால் தானாகவே கொடுக்கும் மனப்பான்மை ஏற்பட வேண்டும். இதுவே மூட சக்திக்கும், பகுத்தறிவுச் சக்திக்கும் வித்யாசம் ஆகும். மூட சக்தியை அடைந்த கிரஹங்களும், மிருகங்களும், மற்றவைகளும், ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன, அடித்துக் கொள்ளுகின்றன. பகுத்தறிவு சக்தியை உடையவன் ஞானத்தாலும், நன்கொடையினாலும் தன் காரியத்தை சாதிப்பான். அவனே பாற்கடலில் இந்திரனும் ஆவான்.

பரி—பக்குவமும் மனிதவர்க்கத்தின் வளர்ச்சியும்.

இப்பூலோகத்தில் கீழ் நாடுகளில் ஜனங்கள் பலவாருக இளம் வயதிலேயே நோய்வாய்ப்பட்டு மடியவும், மேல் நாடுகளில் சண்டைக்காகவே மனித வர்க்கத்தைப் பிறப்பித்தது போல் அவர்கள் பக்குவம் ஆவதற்குள் போர்முனையில் மடியவும், இவ்விதமாக மனிதவர்க்கம் இப்பூமியில் ஒரு பாரமாகத் தோன்று கிருர்களேயொழிய அவர்களால் இகத்திற்கும் அதாவது பூமிக்கும் பரத்திற்கும் அதாவது சூர்யனுக்கும், ஒரு விதமான சவுகர்யமும் ஏற்படுகிறதில்லை அதாவது மனிதவர்க்கம் குழந்தைப் பருவத்திலும், யௌவனப் பருவத்திலும் தன் முன் ஜன்மப்பழக்கத்திஞல் உண்டான கர்மங்களையே நடத்துகிருன். ஆஞல் கிரஹஸ்தாச்ரமத்திலோ வகையறியாது தன் உடலைக் கழுவும் பொருட்டு செய்யக்கூடாத கர்மங்களையும் செய்து உடல் கொழுப்பேறி, மனம் பக்குவம் ஆகாமல், பல வினைகளையும் செய்து அற்பாயுளில் மடிகிருன். இப்படிக் கீழ்நாட்டிலும் சரி, மேல் நாட்டிலும் சரி, மனிதவர்க்கம் தற்காலம் பக்குவமாகுமுன் தன் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் பிரும்ம ஞானத் திற்கும், சாந்தியோடுள்ள மனப்பான்மைக்கும், ஈசுவரத் தன்மைக்கும் இடமே கிடையாது. ஈசுவரத்தன்மை மனிதவர்க்கத்திற்கு முற்ற வேண்டுமாஞல் அது கிரஹஸ்தாச்ரமத்துக்குப் பிறகு வானப்பிரஸ்த ஆச்ரமத்

திலும், சன்யாச ஆச்ரமத்திலுமே நடைபெறுகிறது. இப்படி கிரஹஸ்தாச்ரமத்திலேயே மனிதவர்க்கம் தற்காலம் மறிப்பதால் சூர்யனுக்குக் கொடுக்கவேண்டிய பகுத்தறிவுச் சக்தி கொடுபடுவதேயில்லை. அப்படிப் பகுத்தறிவுச் சக்தி கொடுபடாத காரணத்தால் மனித வர்க்கம் முன்னேறுவதற்கு ஆஸ்பதம் இல்லாமல் தற்காலம் இருந்து வருகிறது. இதனாலேயே பலர் மனித வர்க்கத்திலுள்ள பகுத்தறிவுச் சக்தியைக்குறைத்து, மிருகங்கள் பல லட்ச ஆண்டுகளுக்கு முன் நம் பூமியை ஆண்டது போல் ஏன் இப்பொழுதும் ஆளக்கூடாது என்று வாதாடுகிறார்கள். இந்நிலையில் மனிதவர்க்கம் தன் முன்னேற்றத்தைச் சீர்படுத்திக்கொள்ளாவிடில் நாம் தற்கொலைசெய்து கொள்வதற்குச் சமானமாகும்.

சாந்தியே பகுத்தறிவை வளர்க்கக்கூடிய குணம்.

மனிதவர்க்கத்தால் சூர்யன், பகுத்தறிவுச் சக்தி பெறுகிறது என்று சொன்னால் நம்மவர் பெரும்பாலோருக்கு அது ஒரு விந்தையாகவே இருக்கும். அதாவது சூர்யன் எவ்வளவு பெரியது, எவ்வளவு சக்தி வாய்ந்தது, அதற்கு ஒரு விதமான சக்தியை நம் பூமியிலுள்ள மனிதவர்க்கம் வளர்த்து நன்கொடையாகக் கொடுக்கிற தென்றால் அதை நம்பவும் முடியாமல் இருக்கலாம். ஆனால் நம் பூமியிலுள்ள ஜீவராசிகளும், மனிதவர்க்கமும், எவ்வளவோ அளவில்லாமல் இருக்க அதற்கு உயிர் கொடுத்து வளர்க்கும் சக்தி மிகச்சிறிதான நெல்லிலும், கோதுமையிலும், மற்ற புல் பூண்டுகளிலும்

தான் இருக்கிற தென்பதை மறக்க முடியாது. ஒரு மனிதன் எவ்வளவு பெரியவன்! ஒரு அரிசியோ அல்லது கோதுமையோ எவ்வளவு சிறியது! அப்படி இருந்தும் அச்சிறு அரிசியும், கோதுமையும் எவ்வளவு பலத்தைக் கொடுக்கிறது. அதைப்போலவே ஒவ்வொரு ஜீவராசியும் தம்மால் இயன்றமட்டும் பலவிதமான சக்திகளுக்கிடையே பகுத்தறிவில் ஒரு பாகத்தைக் கொடுத்தே தீருகிறது. அப்படித்தானே கொடுக்கத் தவறினால் எவ்வளவோ விதங்களில் துன்புறுத்திச் சூர்யன் பெற்றுக் கொள்ளுகிறான். அவ்விதம் துன்புறுத்தலுக்கு இடம்கொடாமல் ஒவ்வொருவரும் தம் கடமையைச் செய்து தான் செலுத்த வேண்டிய சக்தியைக் கேட்பதற்கு முந்தியே கொடுப்பாரானால் அவரே பிரும்ம ஞானி ஆவார். பகுத்தறிவு சக்தி வளருகிறது. அதை கடவுளுக்குக் கொடுப்பது எப்படி என்பதை வினவுங்கால், தான் செய்யும் காரியத்தை தன்னுடையது என்று உணராமல் எல்லாம் கடவுளினுடையதே என்ற மனப்பான்மை கொள்வதே ஆகும். அதையே பிரும்ம ஞானம் எனப்படுகிறது. பிரும்ம ஞானம் என்பதின் வாசனையே அறியாது தற்காலம் ஜீவிக்கும் மனிதவர்க்கம் எப்படி சாந்தியோடு இருக்கமுடியும்? மேலும் சூர்யனிடம் குறைவு ஏற்படாமல் தான் எப்படி இருக்க முடியும்? நம்பூமியிலுள்ள மனிதவர்க்கம் தற்காலம் தாம் சூர்யனுக்குச் செய்யவேண்டிய தம் கடமையை அறியாமல், இப்பூலோகத்திலுள்ளவை எல்லாம் மனித

வர்க்கத்தின் தம் தம் சுகவாழ்க்கைக்கே என்ற தப்பான அபிப்பிராயம் கொண்டு, பலவகைகளில் சுற்றத்தாரையும், ஜீவராசிகளேயும், துன்புறுத்தித் தன்னைத் தானே அழித்துக்கொள்ளுகிறது. இதனுலேயே நம் பூலோகத்தில் மனித வர்க்கத்தினிடையே சாந்தி நிலைக்கவில்லை எனலாம். **இந்த அபாயகரமான நிலையிலிருந்து மனிதவர்க்கத்தைத் தப்புவித்து, சத்கர்மம் நடத்துமாறு செய்வதே திராவிடச்சிற்பத்தைச் சார்ந்த ஹிந்து சமயத்தின் பொறுப்பாகும்.**

நம் முன்னேர் இதற்காகவே சாந்தி வேண்டுமென்று பல தடவை பல இடங்களிலும் சுட்டிக்காட்டி இருக்கிருர்கள். சாந்தி என்ருல் ஒவ்வொருவரும், புல் பூண்டும், ஜீவப்பிராணிகளும், மனிதவர்க்கமும் தாம் பிறந்து, சரிவர வளர்ந்து, தீர்க்காயுளுடன் ஜீவித்திருந்து, சத்கர்மங்களைச் செய்து, பின்பு தாம் அரும்பாடுபட்டுச் சேகரித்த சக்தியை சூர்யனுக்கு அர்ப்பணம் செய்வதே ஆகும். **இவ்விதம் அர்ப்பணம் செய்யும் விதமே அக்கினி-ஹோத்ரம் எனப்படுகிறது. இவை முக்கியமாக க்ரஹஸ்தாச்ரமத்திலும், வானப்பிரஸ்தாச்ரமத்திலும் நடைபெறுகிறது.**

---

# 14. 'நமது கடவுள்'

ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் இவ்விஷயத்தைப்பற்றி வெகு அழகாக விஸ்தரித்து

இருக்கிறார். அதன் உட்கருத்தை அறியாதவர்களுக்கு அவை ஒன்றுக்கு ஒன்று முரணாக இருப்பதாகவே தோன்றும்.

அதன்படி :— எல்லை இல்லாதவரும் — எல்லை உள்ளவரும், பார்க்கமுடியாதவரும், பார்க்கப்படுபவரும் ரூபம் இல்லாதவரும், ரூபம் உடையவரும், ஒளி இல்லாதவரும், ஒளி உள்ளவரும், ஆன அவரே கடவுள். அதாவது இல்லையென்பதிலும் ஒரு அம்சம் உண்டல்லவா. அதையே பரந்த சக்தி என்பார்கள். எல்லை இல்லாத ஆகாசமே அச் சக்தி எனலாம். இந்த சக்தியின் விசேஷ குணங்களை ஆராயப் புகுந்தால் அதுவே, நிர்மலமானது, நிர்க்குணமானது, அதுவே அழிவு இல்லாததும் ஆகும். அது சத்தியத்தை சத்தியமாகக் காட்டக்கூடியது. இதையே பரப்பிரும்மம் என்பார்கள்.

மற்றொன்று, உண்டு என்பது. அதுவே ஒரு கட்டுப் பாட்டுக்குட்பட்டது. ரூபமுள்ளது, ஒளி உள்ளது. பரப்பிரும்மமான ஆகாசத்தை ஒரு கூட்டில் அடைத்து, ஒரு சிறு எல்லை ஏற்படுத்திக்கொண்டது. இதுவே சூர்ய மண்டலமாம். இதையே சிவம் என்பார். இவ்விரண்டும், சக்தியும், சிவமும் சேர்ந்தே தெய்வம் எனப்படுகிறது. அதாவது, ஒன்று கட்டுப்பாட்டிற்குட் படாதது, மற்றொன்று கட்டுப்பாட்டிற்குட்பட்டது.

இப்படிப் பார்க்கப்போனல் எல்லை தெரியாத காற்றுக்கு ஜீவப் பிராணிகளே சிவமாகிறது. மனித வர்க்கத்தினுள் பெண்மணிகளுக்கு புருஷன் சிவம் ஆகிருன். சமுத்திரத்திற்கு பூமி சிவம் ஆகிறது.

பூமிக்கு பர்வதங்கள் சிவமாகின்றன. இதை ஆதாரமாகக்கொண்டே, ஹிமயபர்வதத்தை, சிவரூப மாக ஆவாகனம் செய்ததின் பயனுக, சிவலிங்கம் உற்பத்தியாயிற்று. இன்னும் முன்னேக்கிப் பார்க்கப் போனல், ஒரு கூட்டத்திலுள்ள ஜனங்களுக்கு அவர் களுடைய பிரதிநிதியே சிவம் ஆகிருன். ஏனெனில் கூட்டம் கணக்கிடமுடியாதது. அதாவது, எல்லை இல்லாதது எனலாம். ஆனல் அவர்களுடைய பிரதி நிதிகளோ ஒரு கணக்கிற்கும், எல்லைக்கும் உட்பட்ட வர்கள் ஆவர். அவர்களே, கூட்டத்தில் உள்ளோ ருடைய நல்லது பொல்லாததை எடுத்துக் கூற வல்லவர் ஆவர். ஆகையால் சிவம் என்ருல் அது சக்தி யினுடைய பலத்தை அல்லது குணத்தை எடுத்துக் காட்டும் ஒரு கருவி எனலாம். சக்தி, சிவம் இரண்டையுமே ஒன்றென்று பாவித்து, பாவங்களாலும், இரண்டு அளவுள்ள சித்திரங் களாலும், மூன்று அளவுள்ள சிற்பங்களாலும், பாமர ஜனங்களுக்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

**கடவுளும் — சிற்பங்களும்.**

பாவங்களை நோக்குங்கால், ஒரு தாம்பாளத்தில் மஞ்சள் நீரைக் கரைத்து, மத்தியில் ஒரு தீபத்தை

வைத்து, ஆரத்தி எடுப்பதும், ஒரு தீபத்தை மத்தியில் வைத்து அதைச்சுற்றி சக்தி ரூபமான பெண்மணிகள் கும்மி அடிப்பதும், ஒரு வீட்டின் வாசலில் ஒரு சிறு தீபம் இருளடையும் சமயம் வைப்பதும் வீடுகளின் வாசலில் விடியற்காலம் கோலம் போடுவதும், பெண் மணிகள் நெற்றியில் குங்கும திலகம் இடுவதும், மேலும் ஆலயங்களில் பக்தர்கள் சக்தி மூலமாக பிரதக்ஷணம் வருவதும், எல்லாம் மேலே சொல்லப்பட்ட சக்தி - சிவம் என்பதின் பாவங்களேயாகும்.

இரண்டாவதாக, இரண்டு அளவுகளினுல் ஏற்பட்ட சித்திரங்களினுல் சக்தி - சிவம் இரண்டையும் அநேகவிதங்களாக வரையப்பட்டுள்ளன. இதையே ஆலயங்களிலுள்ள சக்கரஸ்தாபனம் என்பர். இதனுள் முக்கியமானது ஏழு கிரஹங்களையும் ஒரு கோணமாக வரைந்து, மேலே இருபத்தேழு நட்சத்திரக் கூட்டங் களையும் அடக்கியதேயாகும். ஆலயங்களில் எல்லா பூஜா விதிகளும் இவ்விதமான சக்கர ஸ்தாபனத்திற்கே நடைபெறுகிறது.'

மூன்ருவதாக, மூன்று அளவினுல் ஏற்பட்ட சிற்பக் கலையானது வெகு ஆச்சரியப்படத்தக்கவாறு வேலை செய்து இருக்கிறது. இதன் காரணம் நம் நாட்டில் சிலைகள் செதுக்கக்கூடிய மிருதுவான கற்கள் ஏராளமாகவும், பெரியவையாகவும், அகப்பட்டதே யாகும். நம் நாட்டில் விவசாயத்தைத் தவிர அடுத்த

படியான கைத்தொழில் முன் காலத்தில் சிற்பமும், சிலைகளை கற்களில் செதுக்குவதே ஆகும். இந்த விருத்தியில் அநேக சிற்பிகள் தங்கள் வாழ்நாட்கள் முழுவதும், ஏன், தங்கள் குடும்பத்தின் வாழ்நாட்கள் முழுவதும் கூட ஒரே ஆலயம் நிர்மாணிப்பதில் கழித்து வந்து இருக்கின்றனர்.

எல்லா கற்சிலைகளும், சிற்பங்களும் பூஜை செய்வதற்காக உபயோகப்படுத்தப்பட்டவைகள் அல்ல. அவைகளெல்லாம், அலங்காரத்திற்காகவே ஏற்பட்டவை எனலாம் ஒரு ஆலயத்தில் ஒரு கற்சிலை, சக்தியும் – சிவனுமாக பாவித்து செதுக்கப்பட்டதைக் காணலாம். அதை வெகு விமரிசையாக அலங்கரித்து, ஜனங்களுக்கு ஒரு தெய்வீக மனப்பான்மையை உண்டாக்கும்படி காட்டுகின்றனர். அச்சிலைக்கு மேலாக பூஜை செய்தபோதிலும், அந்தச்சிலையின் அடிப்பாகத்தில் ஒரு ஐந்து உலோகங்களினுல் செய்யப்பட்ட சக்கரம் ஸ்தாபனம் ஆகி இருக்கும். அந்தச் சக்கரத்திலேயே சக்தி – சிவம் இரண்டையும் ஆவாகனம் செய்து பதிக்கப்பட்டிருக்கும். ஆகையால் எந்தச் சிலைக்கு பூஜை நடந்தபோதிலும், அந்த பூஜையானது சக்தி-சிவம் என்று கருதப்பட்ட ஒரே தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்யப் படுகிறது. இதில் சக்கரமே சக்தி ஆகிறது சிலையே சிவமாகிறது.

**கடவுளும–சக்கரங்களும்.**

சக்கரங்களைக் கவனித்தால், அவைகள் பெரிய மோட்டாருக்குச் சமமான விதத்தில் அமைக்கப் பட்டுள்ளன என்பது தெரியவரும். சூர்யமண்டலத்தில் உள்ள எல்லா கிரஹங்களும் ஒரு டைனமோபோல் வேலை செய்து, சூர்ய வெளிச்சத்தின் வழியாக ரேடியோ சக்தியை நமக்குக் கொடுக்கிறது. இச் சக்திக்கு மூல காரணம், முதலாவதாக பரந்த அதாவது அளவில்லாத சக்தி. இரண்டாவதாக, சூர்ய மண்டலத்திலுள்ள கிரகங்கள் அந்த சக்தியை ஒரு கூட்டில் அடைப்பது போல் தமக்குள்ளே அமைத்து, அதன் மேல் பல உலோகங்கள்கொண்ட உரையால் மூடிக்கொண்டு சூர்யனைச் சுற்றுவதால் ஓர் ஒளியும், ஓம் என்ற சப்தமும், சூர்யனைச்சுற்றி பரவி நிற்கிறது. இப்பொழுது, நாம் அதையே தலைகீழாகத் திருப்பி, அந்த ஒளியையும், ஓம் என்ற சப்தத்தையும், உபயோகித்துப் பூஜித்தால் ஏன் அந்த சக்தி பூஜைக்கு உகந்தவாறு திரும்பி நமக்கு உபயோகப்படக் கூடாது? அதுவே சக்ர சக்தியின் ஆதாரம் ஆகும்.

சக்தி வாய்ந்த ஆகாசம் என்ற முறைக்கு ஐந்து உலோகங்கள் கூடிய ஒரு தகட்டில் சக்கரம் வரையப் படுகிறது. அந்த சக்கரம் வரைவதில் ஆகாசம் என்பதை கூட்டில் அடைக்கும்பொழுது மூன்று கோடுகள் போட்ட கோணம் வேண்டுமல்லவா? ஆகையால் சக்கரத்தி லுள்ள ஒவ்வொரு கோணமும் கூட்டில் அடைபட்ட

சக்திமயமான கிரகங்களாக ஆவாகனம் செய்யப் பட்டிருக்கின்றன. இப்பொழுது சக்தியைக் கொடுக்கும் ஒரு மோட்டார் கிடைத்துவிட்டது. இதற்கு ஒளி வேண்டுமாகையால் ஒரு தீபம் 24 மணி நேரமும் அதன் அருகே எரிந்துகொண்டு இருத்தல் வேண்டும். ஆவாஹனம் செய்யப்பட்ட சக்கரத்தை ஓம் என்ற சப்தம் கொண்டவர்ணனையால் பூஜிக்கும்பொழுது அதில் ஒரு சக்தி உண்டாகிறது. இந்த சக்கரத்தின் சக்தி குறைந்துபோகாதபடி அவை வைக்கப்பட்டிருக்கும் இடம் அதிக காற்ருே, வெளிச்சமோ இல்லாமல் இருத்தல் வேண்டும். முடியுமானுல், சுத்த ஆகாசத்தில் அதாவது காற்றே இல்லாத இடத்தில் வைக்கக் கூடுமானுல் அதன் சக்தி பல மடங்கு அதிகரிக்கும். அப்படிச் செய்யாமல் போனுலும் அதில் வரைந்திருக்கும் ஒவ்வொரு கோணத்திற்கும் முன்புறத்திலோ, அல்லது பின்புறத்திலோ ஒரு பாத்திரம்போல் இடம் செய்து அந்த இடத்தில் இருக்கும் காற்றை வெளிப்படுத்தி அதற்குப் பதிலாக சுத்த ஆகாசத்தை அடைபடச் செய்வோமானுல் நிச்சயமாக அதன் சக்தி பல மடங்கு அதிகரிக்கக்கூடும். இதை ஆதாரமாகக்கொண்டே சக்கரங்களை மூன்று அளவில் செய்வதும் உண்டு. அதுவுமன்றி, சக்கரத்தை பூமியில் புதைக்காமல் ஒரு மரத்தினுல் செய்யப்பட்ட பீடத்தின் மேல் வைப்பதும் நலம்.

இவ்விதம் கிடைத்த சக்தியானது ஒருவன் அதனருகே சென்ருல் அவனுடைய மிருகத் தன்மை

யான மன்னதை மாற்றி தெய்வீக முறையில் நடப்பதற் கான மனப்பான்மையைக் கொடுக்கிறது. அச்சமயம் அவன் தூங்கி விழித்தவன்போல் தன் தவறுகளை உணர்ந்தவனுய் தன் தவருன மார்க்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ளவேண்டிய வழியை உணருகிருன். அவன் அவ்வழிப்படி நடக்க அவன் கவலைகள் தீருகின் றன. அதனைக் கண்டு மகிழ்ந்து ஆலயத்திற்கு மறுபடியும் விஜய்ம் செய்து அவ்விடமிருக்கும் சிலே தனக்கு புத்தி கற்பித்ததை நினைத்து அதன் சக்தியை மகிழ்ந்து உருகுகிருன், கதறுகிருன், ஆனந்தக் கண்ணீரும் விடுகிருன்.

விக்கிரகங்களைப் பூஜை செய்தோ, செய்யாமலோ, சூர்யன் முதலான கிரகங்களை ஆதரிப்பதால் கிரஹத் தாச்ரமிகளுக்கு நற்பலன்கள் உண்டாகின்றன. உதாரணமாக ஒருவன் தன் கெட்ட செயலால் கஷ்டப் படும்பொழுதோ, அறியாமையால் மனம் நொந்த பொழுதோ தன் இஷ்ட விக்கிரகத்தை சூர்ய சக்தி ரூபமாகப் பாவித்து அதனுள் தன் மனதை முற்றிலும் அடக்கித் தனக்கு அறிவூட்டும்படி மன்ருடுகிருன். அதன் காரணமாகத் தனக்கே நல்ல ஞானம் பிறக்கிறது. கஷ்டங்கள் நிவர்த்தி ஆகின்றன. பூசாரிகள் என்றும், பாதிரிகள் என்றும், தன்னைத்தானே கடவுள் மயம் என்று அகம்பாவம் கொண்ட வேற்று மனிதனிடம் தன் கெட்ட செயல்களைத் தெரிவித்துக்கொண்டு தன்னைத்தானே குறைத்துக்கொள்ளும் பழக்கம் வேறு மதங்களில் இருந்து வருகிறது. அவ்வழக்கத்தைத்

தவிர்த்து தன்னைத்தானே நேரடியாக கடவுளின் அனுக்ரஹம் பெற இந்த விக்கிரஹங்களை பூஜை செய்வதின் மூலம் அடையலாமல்லவா? இதுவே விக்கிரஹ ஆராதனையின் முக்கியமான அம்சம் ஆகும். இதுவே மனிதனின் சிந்தனைக்கும், பகுத்தறிவு சக்திக்கும் அன்னம் அளிக்கிறது. மற்றவை கட்டிக் கொடுத்த சோற்றுக்கு ஒப்பாகும்.

தெய்வமும்-பிரும்மஞானமும்.

பூஜைகளும், பூஜா விதிகளும், சக்கரங்களும், சிற்பங்களும், ஆலயங்களும், அறியாதவர்களுக்கும், சிறுவர்களுக்கும் தெய்வீக மனப்பான்மையை உண்டாக்க வழி காட்டும் கருவிகளே ஆகும். முதிர்ந்தவர்களுக்கும், அறிந்தவர்களுக்கும், பிரும்மத்வத்தை உணர்ந்தவர்களுக்கும் ஆலயமே கிடையாது எனலாம். ஏனெனில், ஹிந்து தத்துவ சாஸ்திரத்தின் படி மனிதனே தெய்வத்தின் ஒரு அம்சம் ஆகிறான். அவன் தானே தெய்வ அம்சம் என்பதை உணர்ந்து, அதன்படி தெய்வீகமான வழியில் நடப்பானாகில் வேறு தெய்வத்தை பூஜை செய்ய இடம் இல்லை அல்லவா? இப்படி இருக்க எவ்விதம் பாமர ஜனங்களை தெய்வீக மனப்பான்மையில் கொண்டு வருகிறது. அவர்களை எப்படி தானே தெய்வமயம் என்பதை உணரச் செய்வது. அப்படி தெய்வீக மனப்பான்மை உடையவன் எவ்விதம் இருத்தல்வேண்டும் என்பதை நமது சித்திரங்களாலும், சிற்பங்களாலும், சங்கீதம், நாட்டியம் மற்றும் பல கைத்தொழில்களாலும், காண்பிக்கப்பட்டு இருக்கிறது. இதுவே இந்தியாவிலுள்ள எல்லாக்கலைகளுக்கும் அஸ்திவாரம் ஆகிறது.

—::—

# 15. ஆகாசம் என்று சொல்லப்பட்ட மகா சக்தியின் விபரம்.

ஆகாசம் என்பது மிகவும் சக்தி வாய்ந்தது என்பதை நன்கு அறிந்தவர்களும், உணர்ந்தவர்களும் ஹிந்துக்களே ஆவர். அதையே நம் முன்னோர் நிர்மலமானதும், அழியாமலிருக்கும் சக்தியைக்கொண்ட பரப்பிரும்மம் என்கின்றனர். அதுவே நம் பூமியில் காற்று எவ்விதம் எல்லா இடங்களிலும் பரவி இருக்கிறதோ, அதேபோல் ஆகாசத்தில் பரவி இருக்கும் ஒரு சக்தி ஆகிறது. அதில் இருவகை அம்சங்கள் இருந்தது எனப்படுகிறது. அவையே நம் பூமியில் நிலக்கரியும், பல உலோகங்களும், கூட்டம் கூட்டமாக வெவ்வேறு இடங்களில் எவ்விதம் காணப்படுகிறதோ, அதேபோல் பலவிதமான உலோகங்கள் வாயு ரூபமாக சக்தியோடு கலந்து கூட்டம் கூட்டமாக சிற்சில பாகங்களில் காணப்பட்டன. இக்கூட்டங்களுள் சிற்சில இடங்களில் உலோகங்கள் நெருக்கமாகவும் காணப்பட்டன. சில இடங்களில் விலகியும், வேறு சில இடங்களில் உலோகங்களே இருமல், அக்கூட்டத்திற்குள்ளேயே, ஆகாசம் சில தீவுகள்போல் காணப்பட்டன. இவ்வுலோகங்களுக்கு பிரிவு மனப்பான்மை ஏற்பட்டபொழுது அவைகளுக்கு ஓட்டம் ஏற்பட்டது. அந்த அந்த இடங்களில் கூடிய உலோகங்கள் அதன தன் சக்திக்குகந்தவாறும், அளவிற்குகந்தவாரும், கலப்பு உலோகங்களுக்குகந்தவாறும்,

வேறு வேறு நட்சத்திரங்களாகவும், கிரஹங்களாகவும் உருவெடுத்தன. இம்மாறுதலின் காரணமாக பலரக நட்சத்திரங்கள் சில இடங்களில் கூட்டமாகவும், வேறு சில நெருக்கடி குறைந்த இடங்களில் ஆகாசமும், நட்சத்திரமும் கலந்து, வெளியேயுள்ள நட்சத்திரங்களின் இழுப்பினுல் சுழன்று, ஒரு சக்கர வாணம்போல் காணப்பட்டும், வேறு உலோகமே இராத இடங்களில் மேகம் போலும், சில நட்சத்திரங்களே நடுநடுவே கொண்டும் பலவிதமாகக் காணப்படுகிறது. இவ்விதம் ஏற்பட்ட பெரிய நட்சத்திரக் கூட்டத்தின் ஒரு பாகத்தில்தான் நமது சூர்ய மண்டலம் வசிக்கிறது. இந்த நட்சத்திரக் கூட்டத்தை ஒரு நாட்டின் பிரஜைகளாக ஏற்ருல் அதற்கு ராஜா ஆகிறது சூர்ய மண்டலம்.

**சூர்ய மண்டலமும் — கடவுளின் வழிபாடும்.**

இந்த நட்சத்திரக் கூட்டத்தையே விஷ்ணு சக்தி என்கிறேம். அதற்கே பாற்கடல் என்றும் பராசக்தி என்றும் பல நாமங்கள் உண்டு. இதையே மேல் நாட்டார் (Galaxy - Milkyway) என்பதாக பெயரிட்டிருக்கிருர்கள். பாற்கடல் என்ருல் தெய்வம் வசிக்கும், சக்தி வாய்ந்த ஸ்தூய சரீரத்தைக்கொண்ட, அகண்ட பாத்திரம் என்றே தாத்பர்யம். இதில் இருவகை உண்டு. ஒன்று மனித வர்க்கத்தைச் சேர்ந்தது; மற்றென்று சூர்ய மண்டலத்தைச் சேர்ந்தது. மனித வர்க்கத்திற்கு பூமியே பாற்கடலாகிறது. சூர்ய மண்டலத்திற்கு பலகோடி நட்சத்திரங்களைக்கொண்ட

## ஆகாசம் என்று சொல்லப்பட்ட மகா சக்தியின் விபரம்.

விஷ்ணு சக்தி இருக்கும் இடமே பாற்கடல் ஆகிறது. பாற்கடலில் பள்ளிகொண்டார் பெருமாள் அவர் வயற்றில் உதித்தார் பிரும்மா எனப்படுகிறது. அதன் தாத்பர்யம், பலகோடி நட்சத்திரங்களைக் கொண்ட விஷ்ணு சக்தியான பாற்கடலில், பெருமாளான சூர்ய மண்டலம் வசிக்கிறது, அதன் வயருன நாம் வசிக்கும் பூமியில் நான்கு வேதத்திற்கும், பிரஜா உற்பத்திற்கும் காரணமான பிரும்மா உதித்தார் எனப்படுகிறது. சூர்ய மண்டலமே பராசக்தியின் வயற்றில் விளையாடும் தெய்வக் குழந்தை ஆகையால் அதையே நடராஜர் சிலையாக சிறப்பித்தும் இருக்கிருர்கள். இவ்விதம் உலக உற்பத்தியை ஆழ்ந்து நோக்குங்கால் இவ்வுலகத்திலுள்ள எல்லா சக்தி களும் சூர்ய மண்டலம் வாழ்வதற்கே ஏற்பட்ட கருவிகள் என்பதாக கணக்கிட இடம் இருக்கிறது. அதற்கு இரண்டா வதாக உள்ளது நம் பூமியில் வசிக்கும் மானிட வர்க்கமே ஆகும். அதுவும் சூர்ய மண்டலத்திற்கு பணிசெய்து பகுத்தறிவு சக்தியை வளர்த்து சூர்யனுக்குக் கொடுக்கிறது. இவ்விதம் சூர்ய மண்டலம் உலகத்திற்கே ஒரு ராஜாவாக விளங்குகிறது. இந்த ராஜா வசிக்கும் சூர்ய மண்டலத்தை ஒரு தேராக பாவனை செய்து கொள்வோமாகில், அத்தேரை இழுக்கும் சக்திகள் பலகோடி நட்சத்திரங்களும் அநேக கோடி மனிதவர்க்கமும் ஆவர். இந்த மனப்பான்மையை ஆதாரமாகக் கொண்டே தேருகளும், சப்பரங்களும் கடவுள் வழிபடுவதற்கு ஆதாரமானது.

இவைகளெல்லாம் நித்தியமானவை. அவைகளுக்கு இறப்பே கிடையாது எனப்படுகிறது. நமது பூமியில்

வசிக்கும் மனிதவர்க்கத்தை எடுத்துக் கொண்டாலும் கூட அதற்கு இறப்பு கிடையாது என்றும் அதுவே பலவித சக்திகளாக மாறுகிறது என்பதே திராவிடச் சிற்பத்தின் சித்தாந்தம் ஆகும். விஷ்னு சக்தியால் ஏற்பட்ட நட்சத்திரங்கள் சூர்யமண்டலம் உதய மானதற்கு முந்தியே உருவானவை. அவைகளில் பல சக்தியாக மாறியும் மேலும் பல இந்நாளிலும் உற்பத்தி யாகிக்கொண்டுமே இருக்கின்றன. புதிதாக உண்டாகும் நட்சத்திரங்களுக்கு இடம் கொடுக்க பழைய நட்சத்திரங்கள் விலகிக் கொள்ளுகின்றன. இது நாம் ரஸ்தாவில் நடக்கும்பொழுது முன்னல் வரும் மோட்டாருக்கோ, மனிதனுக்கோ இடம்விட்டு விலகுவது போல் ஆகாசத்திலும் நடைபெறுகிறது. ஆகாசமே எல்லை இல்லாமல் இருந்தபோதிலும் ஆகாசத்தில் எந்த எந்த இடங்களில், எந்த எந்த உலோகங்கள் கூட்டமாக உள்ளதோ அந்த இடங்களைத் தவிர வேறுஇடங்களில் இதே நட்சத்திரங்கள் உதிக்க காரணம் இல்லை. அந்த நட்சத் திரங்கள் சுருங்கும்பொழுதும், விலகும் பொழுதும் அவைகளைப் பிரித்த இடங்கள் அதிகப்படுவதால் ஆகாசமே அகண்டு போவதாக ஒரு பிரமை உண்டாகலாம்.

**விஷ்ணு சக்தியும்—வாழ்க்கையும்.**

விஞ்ஞானிகள் கிரஹங்களுள் அடங்கி இருக்கும் ஹைட்ரஜன் (Hydrogen) அளவைப் பொறுத்தும், அதை உபயோகிக்கும் விதத்தைக்கொண்டும், அவை களின் ஆயுள் காலம் நிர்ணயிக்கப்படும் என்று நினைக்

கிறார்கள். இதில் உண்மை இருக்கக்கூடுமாயினும் கிரஹங்களுடைய வாழ்க்கைச் சித்திரம் எத்தகையது என்பதை ஆராய்ந்து உணரும்பொழுது சில தத்துவங்கள் உருவாகின்றன. திராவிடச் சிற்பத்தின்படி சக்தி இரண்டு விதமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையே சூக்ஷ்ம சக்தியும், ஸ்தூய சரீரமும் ஆகும். சூக்ஷ்ம சக்தியே பறந்த சக்தி ஆகிறது. அதற்கு அழிவு இல்லை. ஸ்தூய சரீரத்தின் பொறுப்பு பரந்த சக்தியை வெவ்வேறு விதமான குணங்களைக் கொண்ட பலரக சக்திகளாக மாற்றுவதே ஆகும். ஆகையால் ஒவ்வொரு ஸ்தூய சரீரத்தைக் கொண்ட விஷ்ணு அம்சத்தைச் சார்ந்த நட்சத்திரமும், தம் தம் வாழ்க்கையில் பலவித மான குணங்களை உடைய சக்திகளாக மாறியே தன் ஸ்தூய சரீரத்தை மாற்றிக்கொள்ளுகிறது. இந்த மாறுதலில் பலவித ரூபங்கள் எடுக்கின்றன. பல இரண்டாகப் பிரிகின்றன. சில ஆகாசத்தோடு கலந்து பெரிதாகின்றன. சில சிறியதாகியும், அதனைச்சுத்திக்காந்த சக்தியோடும் காணப்படுகின்றன. இந்த வேறுபட்ட ரூபங்களுக்குக் காரணம், அந்த அந்த நட்சத்திரத்தின் உலோக அமைப்பே ஆகும். இவ்விதம் மாறி மாறியே சக்திகளை உண்டுபண்ணி அவைகளின் ராஜாவான சூர்ய மண்டலத்திற்கு ஒரு நாட்டுப் பிரஜைகள் வரிகள் செலுத்துவதுபோல் மனம், குணம் இவ்விரண்டு சக்திகளையும் வளர்த்துக் கொடுக்க, கிரஹங்கள், புத்தி-சக்தியை வளர்த்துக் கொடுக்கின்றன. அதேபோல்

**ஆகாசம் என்று சொல்லப்பட்ட மகா சக்தியின் விபரம்.**

மனித வர்க்கம் பகுத்தறிவு சக்தியை வளர்த்துக் கொடுக்கிறது. சித்திரங்கள் 5, 27 மேலும் 28, கடவுளின் வாழ்க்கை விபரம் பார்க்க. இவ்விதம் மனித வர்க்கம் பகுத்தறிவு சக்தியைக் கொடுக்கும் விதத்தையே அவர்களின் வாழ்க்கைச் சித்திரம் என்கிறோம். இல்வாழ்க்கையில் பல மாறுதல்கள் உண்டாகின்றன. சூர்ய மண்டலத்திற்கு பூமி இரைப்பையே ஆகையால் இம்மாறுதல்கள் இரண்டையுமே பாதிக்கின்றன.

தாமரையும், சூரியமண்டலமும்.

இவ்விதம் மாறிக்கொள்ளும் விதத்தையே நம் முன்னோர் ஒரு தாமரைப் புஷ்பம் சூர்ய வெளிச்சத்தைக் கண்டவுடன் மலர்ந்துகொள்வதற்கும், இருள் சூழ்ந்தால் மூடிக்கொள்வதற்கும் உவமித்து இருக்கிறார்கள். மூடிக்கொள்ளும் பொழுது இரண்டும் ஒன்றுகிறது. அப்பொழுதே நாடகம் முடிந்ததெனலாம். தாமரைப் பூவானது சூர்ய வெளிச்சம் கண்டால் மலருவதையும், இருள் ஏற்பட்டால் மூடிக்கொள்வதையும் ஒரு சிறந்த உதாரணமாகக் கருதி, அந்தத் தாமரைப் புஷ்பத்தின் குணத்தை சிற்ப மூலமாக சக்தியை சிலையாக்கும் இடமெல்லாம் அத்தாமரைப் புஷ்பத்தையே அச்சிலைகளின் பாதமாகக் கையாண்டு இருக்கிறார்கள்.

லக்ஷ்மி என்று சொல்லப்பட்ட எல்லா சிலைகளுக்கும் தாமரைப் பூவே பாதமாகிறது. லக்ஷ்மியே தாமரைப் பூவின் மேல் நிற்பதாக ஐதீகம். அதாவது தாமரைப் பூ மலர்ந்தவுடனே நம் உலகத்திற்கே சுக

போகங்கள் உண்டாகின்றன. சுக போகங்களுக்குக் காரண பூதமாக இருக்கும் குணமே சிலையாக்கப்பட்ட லக்ஷ்மி. ஆகையால், லெக்ஷ்மி என்ற சிலைக்கு தாமரைப் பூவின்பாதம் உண்டு. மேலும் தாமரைப் புஷ்பம் மலரு வதையும், மூடிக்கொள்வதையும், பின்பு சில நாட்களில் மலர்கள் உதிர்ந்து முற்றிப் போவதையும் மனித வாழ்க்கையின் சிறந்த உதாரணமாகக் கருதி இருக்கி ருர்கள். அதாவது மனிதன் தாமரைப் புஷ்பம் மலர்ந்து பல தடவை மூடிக்கொள்வதுபோல் அநேக ஜன்மங் களில் மலர்ந்து பின்பு மூடிக்கொண்டும், கடைசியாக தாமரைப் புஷ்பம் மலர்களை உதிர்ப்பதுபோல் இப்பூலோக வாஞ்சைகளை ஒழித்து சக்தியாக மாறி ரூபமில்லாமல் சிவ-சக்தியுடன் ஐக்கியமாகிருன்.


நம்மைப் படைத்த மகா சக்தியானது மலர்ந்து எவ்வளவோ பல பல வருஷங்களுக்குப் பிறகு மூடிக்கொள்கிறது. அக்குணமே இப்பூலோகத்திலுள்ள எல்லா வஸ்துக்களிலும் பிரதிபலிக்கிறது. ஆகையால் தாமரைப் புஷ்பம் நாளைக்கு ஒருமுறை மலருகிறது. மரங்களும், செடிகளும் மலர்ந்து சில வருஷங்களில் மூடிக்கொள்ளுகின்றன. மனித வர்க்கமோ மலர்ந்து 150 வருஷங்களுக்கு ஒருமுறை மூடிக்கொள்கிறது. இதையே மனித வர்க்கத்தின் வாழ்க்கை என்கிருேம்.

**தாமரை மலர்களும், மனித வாழ்க்கையும்.**

மனிதன் தன் வாழ்க்கையில் பல ஜன்மங்களில் மாறி தாமரைப் பூவின் மலர்கள் உதிர்வதுபோல்

ஆகாசம் என்று சொல்லப்பட்ட மகா சக்தியின் விபரம்.

சித்திரம் 10.




கொஞ்சம் கொஞ்சமாக, பூலோக வாஞ்சைகளை ஒழித்து, அறிவு மிகுந்து ஞானியாகிக் கடவுள் தன்மையை அடைகிறன். இப்படி மாறிவரும் வாழ்க்கை சிலருக்கு 10 முறை வரலாம். சிலருக்கு 4 தடவையும் வரலாம். சிலருக்கு இரண்டே ஜன்மங்களோடு நின்றுவிடலாம். இந்த மாறுதல்கள் அவரவர்கள் செய்யும் கர்ம பலனைப் பொருத்தே இருக்கும். மனித வாழ்க்கை மாறிமாறி வருவதின் மூல காரணம் என்ன? ஏன் மூடிக்கொண்ட தாமரைப் பூவானது மலரவேண்டும்? மலர்ந்த பூவானது

மறுபடியும் மூடிக்கொள்ளவேண்டிய அவசியம் என்ன என்ற பிரச்சனைகளுக்குப் பூவைப் பொருத்தமட்டிலும் அதனுடைய குணுதிசயமே எனலாம். ஆனல் இந்தப் பிரச்சனை பூவைப் பொருத்தது அல்ல. எல்லாம் வல்லவனுன மிக்வும் சக்திவாய்ந்த கடவுளையே பொருத்து இருக்கிறது. ஏனெனில் தாமரைப் புஷ்பத்தின் குணமும், மனித வர்க்கத்தின் குணமும் எல்லாம் அந்தப் பரப்பிரும்ம ஸ்வரூபியான கடவுளினுடைய கோடானகோடி குணங்களில் சில அம்சங்களே ஆனபடியால் **அந்த மகா சக்தியின் குணங்களை கொடியும், செடியும், மரங்களும், மிருகஜாதிகளும், மேலும் முக்கியமாக மனித வர்க்கமும் பிரதிபலிக்கிறது.**

**தாமரைப் பூவும் - சக்தியும்.**

உதாரணமாக ஒரு ஜமீன் இருக்கிறது. அந்த ஜமீனுக்கு ஒரு சொந்தக்காரர் உண்டு. அந்த ஜமீனுனது சாதாரணமாக அநேக வருடங்களுக்கு ஒருமுறை வேறுவேறு சொந்தக்காரரிடம் மாறுகிறது. ஆனுல் அந்தப் பண்ணையில் வேலைசெய்யும் வேலை ஆட்கள் சில மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது ஒரு சில வருடங்களுக்கு ஒரு முறையோ மாறிவிடுகிருர்கள் அல்லவா? இதனுல் ஒன்று புலனுகிறது. **அதாவது சக்தி அதிகமாக அதிகமாக மாறுதல் குறைகிறது. சக்தி குறையக் குறைய மாறுதல்கள் அதிகமாகின்றன.**

சக்தி என்ற பதத்திற்கே மூல காரணமாக இருக்கப்பட்டதும், மனிதனுல் கணக்கிட முடியாததும்,

மனதிற்கு எட்டாததுமான சக்தியைக்கொண்ட கடவுளுக்கு எப்பொழுது மாறுதல் ஏற்படும் என்று சொல்வதற்கு மனிதனுடைய சக்தியும், மூளையும் போதவே போதாது எனலாம். ஆயினும் அப்படி ஒரு தினம் வருமாயின், அப்பொழுது மனித வர்க்கமோ, ஜீவராசிகளோ, மரம், செடி, புல் பூண்டுகளோ ஒன்றும் இராது. ஆனல் ஒன்று உண்டு. அதுதான் சிவசக்தியான தெய்வம். எல்லா சக்திகளையும் தனக்குள் அடக்கிக்கொண்டு ஒரே யோகநிஷ்டையில் காணப்படுவர். அப்பொழுதே தாமரை மலர் மூடிக்கொண்டது எனலாம். அதுவே கடவுள் உறங்குவதற்கொப்பாகும்.

தாமரைப் பூவும்-மோகினியும்.

மூடிக்கொண்ட பூவானது மறுபடியும் மலருமா? மலருவானேன்? இப்பொழுது மலர்ந்து இருப்பதன் காரணம் என்ன? என்பதெல்லாம் பெரிய பிரச்சனைகளே ஆகும். இதிலேயே முழு வேதாந்தமும் அடங்கியிருக்கிறது. ஒரு ஊரில் ஒரு தம்பதிகள் வசித்து வந்தனர். அவர்களுக்குச் சொந்தமான நில-பலன்கள் கணக்கிடமுடியாதெனலாம். தம்பதிகள் ஒரே முகமாகவும், ஒரே மனதுடனும் வாழ்ந்து வந்தனர். பதியோ ஒரு பெரிய தபசி. பத்தினியோ ஒப்பற்றவள். பதியின் வாக்குக்கு மறுவார்த்தை சொல்லாதவள். பதி தினந்தோறும் மூன்று காலமும் ஸ்நானம் செய்து, மடி வஸ்திரம் உடுத்தி, நிஷ்டையில் இருப்பார். பத்தினியோ பதிக்கு வேண்டிய சிஷ்ருடைகளை எல்லாம் தவறன்னி

யில் செய்துவந்தனர். இவ்விதம் பல காலம் சென்றன. இதுவே தாமரைப் பூ மூடிக்கொண்ட சமயம். பலகாலம் இவ்விதமாகக் கழிய வேலை மாறுதல் இன்றி இருந்த பத்தினிக்கு தன் வாழ்க்கையில் ஒருவிதக் கசப்பு ஏற்பட்டது.

தமக்கு கணக்கிட முடியாத நில-பலன்களும் மற்றவையும் இருக்கிறதென பதி சொல்லி இருக்கிருர். ஆனால் இதுவரையில் ஒன்றையும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. பர்த்தாவோ எப்பொழுதும் நிஷ்டையிலேயே இருக்கிருர். என்னதான் நமக்கு இருக்கிறது என்பது அவருக்கே தெரியுமோ தெரியாதோ. இந்த சந்தர்ப்பத்தில் நல்ல சமயம் பார்த்து, ஏன் பதியிடம் விஷயத்தைச் சொல்லி அதை அறிந்துகொள்ளக் கூடாது, என்ற மனப்பான்மை உதித்தது. தகுந்த சமயத்தில் பதியிடம் மெதுவாக, தாங்கள் எப்பொழுதும் நிஷ்டையிலேயே இருக்கிறீர்கள். நானும் என்னல் கூடிய வரையில் தங்கள் மனம் கோணுதபடி சிஷ்ருடை செய்து வருகிறேன். ஆயினும் இவ்விதம் எவ்வளவு காலம் கழிக்கிறது. நமக்கு எவ்வளவு நில-பலன்கள் உண்டென்பதுகூட அறியாமலா காலத்தை நடத்துகிறது. ஏன் அதை அறிந்துகொள்ளக்கூடாது, என்பதாக அறிவித்தாள்.

அவ்வளவுதான். ஜமீன்தார் நில-பலன்களைக் காண வண்டிகளையும், மாடுகளையும் வாங்கினுர். அதிக தூரம் போக மோட்டார்களையும் வாங்கினுர். மேலும் பல

வழிகளில் ஈடுபட ஆரம்பித்துவிட்டார். அப்பொழுதே தாமரைப் பூ மலர ஆரம்பித்து விட்டது என்பர். அதாவது யோக நிஷ்டையிலிருந்த பரப்பிரும்ம ஸ்வரூபியான தெய்வத்திற்கு ஒரு மனப்பான்மை உதித்தது. அதாவது நமது சக்திதான் என்ன என்பதை அறிய வேண்டுமென்ற ஆவல் உதயமாயிற்று. இச்சமயம் நம் திராவிடச் சிற்பத்தின்படி சிவன் யோக நிஷ்டையில் பராசக்தியான பார்வதியோடு தாமரைப் பூ மூடிக்கொண்ட காலம் இருக்கிறுர் என்றும், அப்பொழுது அவருக்கு பூவை மலரும்படிச் செய்ய மனப்பான்மையை அதாவது ஆசையை உண்டாக்கிய மனதின் குணத்தையே "மோகினி" எனப்படுகிறது என்றும், அதுவே பார்வதியின்பால் ஒரு விஷ்ணு அம்சம் ஆகுமென்றும் கூறப்படுகிறது. அவ்விதமே சிற்பிக்கவும் படுகிறது. இதுவே கடவுள் உறங்கி விழிப்பதற்கொப்பாகும். அக்காலம் மோகினி உருக்கொண்ட பார்வதியே நம் பூமியில் பத்தினியாகப் பிறக்கிருள். பின்பு மாயையை விட்டு விலகி தெய்வத் தாயார் ஆகிருள் எனப்படுகிறது.

---

## 16. சக்தி என்பது கடவுளினுடையதே.

தாமரைப் புஷ்பம் மலருவதும், பின்பு மூடிக்கொள்வதும் எனப்பட்ட மாறுதலானது மனித வர்க்கத்திற்கு மாத்திரம் அல்ல. இந்த சூர்ய மண்டலத்தில் உள்ள எல்லாவற்றிற்கும், நமது பூமிக்கும், அதில் ஏற்பட்ட பல நாடுகளுக்கும் கூட உண்டு. உதாரணமாக, நம்

பாரத தேசம் இவ்வளவு காலம் மூடிக்கொண்டிருந்து, இப்பொழுதுதான் மலர ஆரம்பித்திருக்கிறது. இதற்குக் காரணம், நம் சக்தி எவை என்பதை அறியவேண்டும் என்ற மனப்பான்மை ஒரு சிறு நெருப்புப் பொரிபோல் கொஞ்ச காலத்திற்கு முன்பு நமக்குள் உதயமாயிற்று. இதன் மூலமே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மாறுதல் களுக்குக் காரணம் ஆகும். அதேபோல் பாரத தேசம் இரண்டாகப் பிரிவினை ஆனதற்குக் காரணமும் ஒன்றே. அதாவது வேறு சிலருள் ஒரு விதமான மனப்பான்மை ஏற்பட்டது. அதன்படி முகம்மதியர் ஒரு காலம் இந்தியாவை ஆண்டவர்கள் என்றும், இப்பொழுதும் அச்சக்தி அவர்களுக்குக் குறையவில்லை என்றும், அச்சக்தி எத் தகையது என்பதை அறியவேண்டுமென்றும் ஒரு ஆசை அவர்களுக்குள் உதயமாயிற்று. இதன் காரண மாகவே இதுகாலம் மூடியிருந்த சக்தியானது மலர ஆரம்பித்தது எனலாம். இதனால் ஒரு தவறும் இல்லை. அது நியாயமானதே ஆயினும், அவர்களுக்குண்டான சக்தியை பிரிவினை செய்யாமலே அவர்கள் அறியக் கூடும். அதற்கு மாறாக, இந்தப் பிரிவினை செய்ததின் காரணம் ஒரு விதமான குரோதம் அந்த மனப்பான்மையில் அடங்கி இருப்பதே. இவ்விதமான மனப்பான்மையை ஓட விடாமல் இருப்பார்களானால் உலகத்திற்கே நலம் உண்டு.

**சக்தியும், விஷமும்**

ஒவ்வொருவரும் தன் சக்தியை அறிய விரும்புவது சகஜம். கடவுளே தன் சக்தியை அறிய விரும்பும்

பொழுது, கடவுளுக்குக் கையாட்களான மனித வர்க்கம் தம் சக்தியை அறிய விரும்புவது மிகவும் பொருத்த மானதே. ஆனால் அப்படித் தன் சக்தியை அறிந்து கொள்ளும் விதத்தில், கெட்ட மனப்பான்மையோடும், சுய நலத்தைப் பாராட்டியும் செய்யும் கர்மங்கள், தகாத கார்யங்களேயாகும். உதாரணமாக ஒருவன் தன் புத்தி கூர்மையாலும், மிகுந்த தியாகத்தாலும், உழைப்பாலும் வெகு சீக்கிரமே பணக்காரன் ஆகிறான். இதைக் கண்டு வேறொருவன் பொறாமைப்பட்டு, அவன் சேகரித்த பணத்தைச் சூறையிட யத்தனிக்கிறான். இந்த இரண்டில் புத்தியோடும், நல்ல உழைப்போடும் பணம் சேகரிப்பது ஒரு கலையே. அந்தப் பணத்தை பணக் காரனிடமிருந்து சூறை ஆடுவதும் ஒரு கலையே. **ஆயினும், இவ்விரண்டில், முதலாவது கடவுள் தன்மை யானது. இரண்டாவது மிருகத்தன்மையானது. இவையே அமிருதமும்-விஷமும் எனப்படுகிறது.**

**சக்தியும், நடராஜர் சிலையும்.**

மனிதனால் காணப்படுகிறதும், ஆளப்படுகிறதும் கடவுளினுடையதே. மனிதன் கடவுளின் ஏஜண் டாக இருந்து, அந்த அந்தப் பொருளினுடைய சக்தியை கணக்கிட்டு, விவரித்துக் காட்டுவதே மனித னுடைய கர்மமாகிறது. இதில் கடவுளின் சக்தியானது சூர்ய கிரணங்கள் மூலமாக மனிதனுக்குக் கிடைக்கிறது. அந்தச் சக்தியை கிரகித்த ஒவ்வொரு மனிதனும் அந்த

சக்தி என்பது கடவுளினுடையதே.

சக்தியின் வரலாற்றை விவரித்துக் காட்டுவதே அவனவன் வாழ்க்கைத் தன்மை ஆகிறது. சூர்ய கிரணங்களைக்கொண்ட கடவுளின் சக்தியானது, பாரபட்சமன்னியில் மனித வர்க்கத்தின்கண் உள்ள ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது. ஆயினும் மனிதன் அந்த சக்தியை பிரித்துக் காட்டும் கருவி ஆனபடியால், ஒவ்வொரு மனிதனும் தனக்கு கர்மபலனுல் உண்டான மூளைவிருத்தியினுலும், புத்திக் கூர்மையினுலுமே சிலர் அதிகமான கடவுளின் சக்தியைப் பெற, மற்றும் பலர் மூளைவிருத்திக் குறைவாலும், வளர்ச்சிக் குறைவாலும் கடவுளின் சக்தியை குறைவாகவே கிரகிக்கின்றனர். இதனுலேயே மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகள் உண்டாகின்றன. அவ்வேறுபாடுகளுக்கொத்தவாறு பல விதங்களில் கடவுளின் சக்தியை மனித வர்க்கம் பிரித்துக் காட்டுகிறது.

இவ்விதம் மனித வர்க்கமும், மற்ற எல்லா ஜீவப் பிராணிகளும், இதர வஸ்துக்களும் தன் தன் சக்திக்கு உகந்தவாறு விஸ்தரித்துக் காட்டும்பொழுது கடவுளுக்கே தன் சக்தி என்ன என்பது சினிமாப் படம் போல் எடுத்துக் காட்டப்படுகிறது. அதைக் கண்டே கடவுள் ஆனந்திக்கிருர். இதையே சிவபெருமானின் ஆனந்த நடனம் எனப்படுகிறது. இவ்விதம் கடவுளினுடைய அபார சக்தியை எடுத்துக் காட்டும் பணியில் தற்காலம் ருஷ்யாவும் அமெரிக்காவும் போட்டி போடுகின்றன. இதைக் கண்டே ருஷ்யா தேசத்தை ஒரு மதப்பற்றுள்ள (Religious minded) நாடு என்று சொன்னதின் தாத்பர்யம் ஆகும். ஆயினும்

சக்தி என்பது கடவுளினுடையதே.

ஹிட்லருக்கு ஏற்பட்ட மனப்பான்மை கொள்ளாமல், தான் அடைந்த சக்திகள் எல்லாம் அம்மகாசக்தியான தெய்வத்தின் ஒரு அம்சமே என்று அறிந்திருந்தால் நலம்.

சக்தியும், - புத்தியும் - சித்தியும்.

நடராஜர் சிலை அறியாதவர்களுக்குண்டான காமக் ரோதாதிகளான கெட்ட கர்மங்களை ஒரு அசுரனை பாவித்து, அந்த அசுரனை வீழ்த்தி, அவன் மேல் நின்று நடனம் ஆடுவதாக ஐதீகம். இந்தச் சிலையின் மற்ற விபரங்களைப் பற்றி பின்னால் சொல்லப்படும். சக்தி என்பது எவ்விதம் தோன்றிய போதிலும் ஒன்றே. அச்சக்தியானது சூர்ய கிரணங்கள் மூலமாக ஒவ்வொரு கிரணமும் ஒரு சினிமா நடத்திக் காட்டும் புகைப் படம் போல் நமக்குக் கிடைக்கிறது. மனித வர்க்கமும், மற்ற எல்லா ஜீவப்பிராணிகளும், கல்லும், மண்ணும், மரமும், செடியும் ஒவ்வொரு சினிமாப் படம் காட்டும் கருவியாக அமைக்கப்பட்டுள்ளன. அந்த சினிமாக் காட்டும் கருவி களை ஓட்டுபவன் அவனவன் தன் கர்ம பலனால் சேகரிக்கப் பட்ட மூளைவிருத்தியும், புத்திக் கூர்மையும், அவைகளை யொத்த மனப்பான்மையும் உடைய மனிதனே ஆவான்.

மனித வர்க்கம் தன் வாழ்நாட்களில் சேகரிக்க வேண்டியது இரண்டே ஒழிய வேறில்லை. அவைகள் நல்ல மூளைவிருத்தியும், நல்ல குணமும் ஆகும். இவை இரண்டையும் தவிர, அவனவனால் சேகரிக்கப் பட்ட பொருள்கள் எல்லாம் அநித்யமானவை. அத னால் அவனவன் தன் வாழ்நாட்களில் உழைப்பினாலும்,

புத்திக் கூர்மையினுலும் சேகரிக்க வேண்டியது மேற் சொன்ன இரண்டுமே ஆகும். இவைகளையே புத்தி-சித்தி எனப்படுகிறது.

**புத்தி - சித்தி, - ஆதி மூலமும்.**

புத்தி-சித்தி இவை இரண்டும் ஆதிமூலக் கடவு ளுக்கு இரண்டு பத்தினிகள் எனப்படுகிறது. அதாவது ஆதிமூலம் அல்லது பிள்ளையார் என்பது, மறுபிறப்பு என்ற பதத்தில் உண்டான குணத்தைச் சிற்பித்த தாகும். மறுபிறப்பு என்பது ஆண் பெண் என்ற இரு வகையாரையும் குறிக்குமாகையால் பிள்ளையாருக்குப் பெண்சாதி கிடையாது. ஆயினும் அந்தச் சிற்பத்தை புருடனுகவே சிங்காரம் செய்வது வழக்கம். ஏனெனில் புருடனே அந்திய காலத்தில் சிவமயமாவதற்கு அருகன் ஆகிருன். பிள்ளையார் எனப்பட்ட மனிதப் பிறவிக்குத் தான், சிவமயமாவதற்கு வேண்டிய குணங்கள் மேல் சொன்ன இரண்டே ஆகும். அதாவது அவனவன் தன் வாழ்நாட்களில் சேகரிக்கக் கூடிய மூளைவிருத்தியும், மேலும் அவனவனுல் சேகரிக்கப்பட்ட புத்தியினுலும், குணத்தினுலும் ஏற்பட்ட சித்தியும். புத்தி - சித்தி எனப்பட்ட மனிதனுல் போற்றவேண்டிய இரண்டு அம்சங்களே பிள்ளையாரின் மனைவிகள் எனப்படுகிறது. சூர்ய வெளிச்சமாக நமக்குப் புலப்படும் சக்தியும், சினிமாப் படம் பிடிக்கும் கருவிகளாகக் கருதப்பட்ட இப்பூலோகத்தி லுள்ள எல்லாப் பிராணிகளும், அக்கருவிகளை ஓட்டும் மனித வர்க்கமும், அதனுல் தம்தம் வாழ்நாட்களில் சேகரிக்கப்பட்ட

**புத்தி-சித்தி என்ற இரண்டு சக்திகளும், நம் கடவுளின் சக்தி களே ஆகிறபடியால், மனித வர்க்கமோ, வேறு எதுவுமோ தான் என்றும், தன்னுடையது என்றும் சொல்லிக்கொள்வது பெரும் அறியாமையே ஆகும். சக்தி என்பது எங்கிருந்தாலும் அது கடவுளினுடையதேயொழிய மனிதனுடையது அல்ல.**

---

# 17. சக்திகளும் - குணமும்

சக்தி என்பது கடவுளினுடையதே என்பதை நாம் அறிந்தோம். இந்தச் சக்தியை மூன்று விதமாகப் பிரிக் கலாம். ஒன்று "மூட-சக்தி"; இரண்டு "புத்தி-சக்தி"; மூன்று "பகுத்தறிவு-சக்தி. சக்தி என்பது எல்லா இடத்திலும் பரவி நிற்கிறது. ஆயினும் அந்த சக்தி யின் வித்யாசங்கள் அப்பொருள்களின் அமைப்பைக் கொண்டே கணக்கிட வேண்டியிருக்கிறது. உதாரண மாக ஒரு கல் இருக்கிறது. அந்தக் கல்லின் மேல் கையால் அடித்தால், கையில் வலி உண்டாகிறது. அப்படி வலி உண்டாவதின் காரணம், அந்தக் கல்லின் மேல் அடி விழுந்தவுடன் அந்தக் கல்லினுள் இருக்கும் சிறு துணுக்குகளுக்கு ஓட்டம் ஏற்பட்டு கையைத் தாக்கு கிறது. அந்தத் தாக்குதலை அடித்தவனின் மூளை உணருவதால் வலி ஏற்படுகிறது. திருப்பித் தாக்கும் சக்தியையே மூட-சக்தி எனலாம். மூளை உணரு வதையே புத்தி - சக்தி எனலாம். கல்லின் மேல் அடித்தோமே. நம் கைதானே நோவுகிறது என்பதை

**சக்திகளும் - குணமும்.**

உணர்ந்து அப்படிச் செய்யாமல் இருப்பதே பகுத்தறிவு-சக்தியாகும்.

மூட-சக்தி எங்கேயும், எல்லா ரூபத்திலும், பொருளிலும், மனித வர்க்கத்தினிடமும், மிருகங்களிடமும், புல், பூண்டு முதற்கொண்டு எல்லா வஸ்த்துக்களிலேயும் இருக்கிறது. நாம் ஒரு புலியைச் சுட்டோமாகில் அது உடனே சுட்ட இடத்தையே தாக்குகிறது. ஒரு அடிப்பட்ட மனிதனும் கூட, அதிகப்பட்ட மூட சக்தியினுல் யோசிக்காமல் உடனே தாக்குகிருன். இந்த மூடசக்திக்கு அழிவே கிடையாது. அப்படி அழிவு ஏற்பட வேண்டுமானுல் புத்தி-சக்தியோ, பகுத்தறிவு-சக்தியோ வளரவேண்டும். ஆகையால் புத்தி-சக்தியும் பகுத்தறிவு-சக்தியுமே வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கிறது. வளர்க்க வேண்டிய சக்திகளாகவும் ஆகின்றன, வளர்க்கவும் படுகின்றன. இவைகள் வளர்வதற்கு யந்திர சாதனங்களே முறையானது. கிரகங்கள் சூர்யனைச் சுற்றுவதும், மனிதன் ஆலயங்களைச் சுற்றுவதும், புத்தி-சக்தியை வளர்ப்பதற்கு ஆதாரமாகிறது. சந்திரன் பூமியைச் சுற்றுவதால் பகுத்தறிவு சக்தி வளருகிறது. பூமி, செவ்வாய், குரு, சனி, சுக்கிரன், புதன் போலொத்த கிரகங்கள் சூரியனைச் சுற்றுவதனுல் புத்தி-சக்தி அவைகளில் உண்டாகி, அச்சக்திகளையே சூர்யன் இழுத்துக் கொள்கிருன். எல்லா கிரகங்களும் சூர்யன் உள்பட ஒரு மத்துப்போல் 27 நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே சுற்றுவதால் புத்தி-சக்தியானது பல மடங்காகப் பெருகி நட்சத்திரங்களினுடைய குணங்களையும் சேர்த்து சூர்யனின் மேல் பாகத்தில் அடக்கிக்கொண்டு பின்பு எல்லா

கிரகங்களுக்கும் பகிர்ந்து சூர்ய வெளிச்சமாகக் கொடுக்கிறது. சூர்யனுள் அடைபடும் சக்திகளின் சித்திரம் 5 பார்க்க.

புத்தி-சக்தியும், திருப்பாற்கடலும்.

சிலர் நினைக்கிறபடி எல்லாக் கிரகங்களும் மூடச் சக்தியையே உடையவை என்பதற்கு ஆதாரமே கிடையாது. நம் பூமியையே எடுத்துக்கொண்டால் அது ஒரு ஜடவஸ்து அல்ல. மனித வர்க்கமும், மற்ற எல்லா பிராணிகளும், மரம் செடிகளும் செய்யும் ஒவ்வொரு அலுவலும் பூமி அறியாததல்ல. அதனுலே பூமாதேவி என்பதாக நாம், நாம் வசிக்கும் திருப்பாற்கடலுக்கு ஒரு தெய்வீக சாந்தித்யம் கொடுத்திருக்கிரேம். பூமி தன் புத்தி-சக்தியைக்கொண்டு, மனித வர்க்கமும், மற்றவைகளும், அவரவர்கள் செய்யும் பாவ புண்ணியங்களை கணக்கிட்டு, கெடுதலோ, நன்மையோ செய்துவருகிறது. உதாரணமாக, சில வருடங்களுக்கு முன் காந்தி மகான் வாழ்ந்த காலத்தில் வட நாட்டில் ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டு பலர் மாண்டனர். அப்பொழுது இறந்தவர்கள் எல்லோரும் பாப கர்மா செய்தவர்கள் என்று அவர் விளக்கினர். ஜனங்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. விக்ஞானிகள் சில பெரிய பாறைகள் பிறழ்ந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி என்றனர். பாறை பிறழ்வானேன், அந்தப் பாறைகள் அப்பொழுது தான் பிறழவேண்டுமா? யார் அந்தப்பாறைகளைப் பிறழச்செய்தது. அந்த பூகம்பத்தின் போது 1000 ஜனங்கள்

மாண்டதில் 4 குழந்தைகளும், 10 முதிர்ந்தவர்களும்மாத்திரம் உயிர் தப்புவானேன்? என்ற விஷயங்களை நன்கு ஆராய்ந்தால் மகாத்மா காந்தி சொன்ன வாக்கின் உண்மை புலப்படும்.


**புத்தி-சக்தியும், பிரதட்சணமும்.**

எல்லா கிரஹங்களுக்கும் புத்தி-சக்தி உண்டு. அவை ஜடவஸ்துக்கள் அல்ல. இதை அறிந்த இந்துக்கள் ஒவ்வொரு கிரகத்திற்கும் பூஜை செய்வதுண்டு. அப்படிச் செய்யும் பொழுது தனக்கு புத்தி-சக்தி கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறுர்கள். இந்த புத்தி-சக்தி வளருவதற்கு யந்திர சாதனங்கள் தேவை என்பதாகக் கூறப்பட்டது. சக்தி நிறைந்த ஆகாசத்தின்கண் வாயு ரூபமாக தோன்றிய உலோகங்களே பிரிந்து நட்சத்திரங்களும், கிரஹங்களும் ஆயின. அவைகளுள் பல ஸ்தூல ரூபமாகவும்; வாயு ரூபமாகவும்; சில வாயு ரூபமாகவும் ஸ்தூல சரீரியாகவும், ஸ்தூல ரூபமாகவும் வாயு சரீரியாகவும், அதனதன் சக்திக்குகந்தவாறும், அளவிற்குகந்தவாறும் உருவாயின. இவைகளுக்கு சுற்று ஏற்பட்டதால், பல நட்சத்திர-கிரஹங்களுக்கு வாயு ரூபம் கொண்ட உலோகங்களே அவைகளின் பிரிவால் வால்கள் ஆயின. இந்த வால்களில் பல ரகங்கள் உண்டு. அவைகளெல்லாம் அதன் மத்திய பாகத்தைச் சுற்றி வருகின்றன. அதேபோல், நமது சூர்யமண்டலத்தைச் சார்ந்த எல்லா கிரஹங்களும் சூர்யனைச் சுற்றி வருகிறது. இவ்விதம் சுற்றுவதனுலேயே அதனுள் புத்தி-சக்தி வளருகிறது.

## சக்திகளும் - குணமும்.

இந்த உண்மையை அறிந்தவர்கள் ஹிந்துக்களே ஆவர். அதனுலே ஆலயங்களில் பிராகாரங்கள் ஏற்படுத்தப்பட்டு கடவுளைச் சுற்றி வரும்படியாக அவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதையே பிரதட்சணம் என்பார்கள். பிரதட்சணம சுற்றுவதில் மூன்று விதம் உண்டு. ஒன்று, சாதாரணமாக தெய்வத்தைச் சுற்றி வருவது, இரண்டு, தானே சுற்றிக்கொண்டு சுற்றுவது; மூன்று அங்கப் பிரதட்சணம், அதாவது அங்கங்கள் எல்லாம் பூமியில் படும்படி படுத்துச் சுற்றுவது.

சித்திரம் 11.




கிரஹங்களும் நட்சத்திரங்களும் சுற்றும் விதம்.

## சக்திகளும் - குணமும்.

பகுத்தறிவு சக்தி என்பது ஒருவரோடு ஒருவர் பேசிப் பழகியும், நல்ல படிப்போடும், ஆராய்ச்சி சக்தியும், கல்பனு சக்தியும், சிருஷ்டி சக்தியும் அடைவதே ஆகும். பகுத்தறிவு சக்தி வளருவதற்கு புத்தி-சக்தி தேவை புத்தி-சக்தி குறைவு பட்டால் பகுத்தறிவு சக்தி வளராது. இந்த விவரங்களை நன்கு உணர்ந்து, புத்தி-சக்தியைப் பெருக்கவேண்டும் என்ற ஒரே ஆவலுடன் நமது ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### பிரதட்சணமும் — கிரஹங்களின் ஓட்டமும்.

ஆலயங்களிலுள்ள சிவ சக்தியை பிரதட்சண மாகச் சுற்றி வருவதால் நம் புத்தி-சக்தி வளருகிறது என்பதை அறிந்தோம். இப்பிரதட்சணமானது தென் இந்தியாவில் இடது பக்கமிருந்து வலது பக்கமாக நடைபெறுகிறது. ஆனல் எல்லா கிரஹங்களும், நட்சத்திரங்களும், சூர்யனும் கூட, புத்தி - சக்தியைப் பெருக்குவதற்கு வலது பக்கமிருந்து இடது பக்கமாக சுற்றுகிறது. இதேபோல் வட இந்தியாவில் சில இடங்களில் வலது பக்கமிருந்து இடது பக்கமாக பிர தட்சணம் நடைபெறுகிறது. இந்த வித்தியாசத்தினல் புத்தி-சக்தி பெருகுவதில் தடை ஏற்படுமோ என்பதற்கு ஆதாரம் இல்லை. ஏனெனில், நாம் பூமியிலிருந்து பார்க்கும்பொழுது கிரஹங்கள் வலது புறமிருந்து இடது புறமாக சுற்றுவதைக் காண்கிறோம். ஆனல், நம் பூமியை விட்டு சூர்யனுக்கு அப்பால் போய் பார்க்கும் பட்சத்தில், எல்லா கிரஹங்களும், நட்சத்திரங்களும், சூர்யனும், நம் பூமியும் கூட இடதுபுறமிருந்து வலது பக்கம் சுற்றுவ

தாகக் காணப்படும், ஆகையால் எவ்விதம் சுற்றினாலும் அதற்குப்பலன் உண்டு. ஆனால் மாறி மாறி சுற்றலாகாது.

பிரதட்சணமும்-நகர நிர்மாணமும்.

ஆலயங்களில் பிரதட்சணம் செய்வதற்காக பிராகாரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறிய ஆலயங்களில் ஒரே ஒரு பிராகாரம் உண்டு. கொஞ்சம் வசதியுள்ள பெரிய ஆலயங்களில் மூன்று பிராகாரங்கள் உண்டு. எல்லா பிராகாரங்களும் சக்தி-சிவம் என்ற தெய்வங்களைச் சுற்றிவர, தஞ்சாவூர் பிரஹதீச்வரர் ஆலயத்தில் மாத்திரம் தனித்தனியே ஒவ்வொரு விக்ரஹத்தையும் சுற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இதேபோல் வேறு பல பெரிய ஆலயங்களும் உண்டு. சில ஆலயங்களைச் சுற்றி தெருக்கள் ஏற்படுத்தி வேறு பல பிராகாரங்களாக இரு பக்கங்களில் வீடுகளைக் கட்டியும், பிரதட்சணம் செய்வதற்கு சவுகர்யங்கள் செய்வதுமுண்டு. இதுவே, பாரத பூமியின் நகர நிர்மாணத்திற்கு ஆதாரமாகவும் இருந்து இருக்கிறது.

## 18. சக்தியும்-சூர்ய வெளிச்சமும்.

சக்தி என்பது ஆகாசத்தில் நிறைந்து நின்றதும், அச்சக்தியை வெளிப்படுத்திக் காட்டும் கருவியே சூர்ய மண்டலமென்றும் நாம் அறிந்தோம். மேலும் சூர்ய வெளிச்சம் என்று நமக்குப் புலப்படும் சக்தியானது

## சக்தியும் - சூர்ய வெளிச்சமும்.

எவ்வகைப்பட்டது. அது பாரபட்சமின்றி எல்லோருக்கும் கொடுக்கப்பட்டால் ஏன் அதிலேயே வித்யாசங்கள் தோன்ற வேண்டும், என்ற கேள்விகள் பல முளைக்கின்றன. சூர்ய வெளிச்சம் பல வேளைகளில் பலவிதமாகக் காணப்படுகிறது. இப்பூமியிலுள்ள பல இடங்களில் பல விதமாகவும் காணப்படுகின்றன இதற்கெல்லாம் **மூல காரணம் நாம் வசிக்கும் பூமியும், அதனுள் பரவி நிற்கும் பலவிதமான வஸ்துக்களுமே ஆகும்.**

## சூர்ய வெளிச்சமும் - மனித வர்க்கமும்

முதலாவதாக நம் பூமிக்கு வருவது சூர்ய வெளிச்சம் அல்ல. அது ஒருவிதமான சக்தியே. அச்சக்தியானது நம் பூமியில் பட்டவுடனேயே, அதற்கு மாறுதல் ஏற்படுகிறது. அவ்விதம் மாறுதல் ஏற்படுவதும் வெளிச்சமல்ல. அதாவது சூர்யனுடைய சக்தி பூமியிலுள்ள ஒரு கற்பாறையின்மேல் படும்பொழுது அது சூர்ய வெளிச்சமாக மாறுவதில்லை. அந்த கற்பாறைக்குள்ள சக்தியைப் பொறுத்தே அந்த மாறுதல் ஏற்படுகிறது. அந்த கற்பாறைக்கு சுயமாக உள்ள சக்தியை நோக்குங்கால் சூர்யனிடமிருந்து வரும் சக்தியை உஷ்ண ரூபமாக கிரஹிப்பதே அதன் குணமாகிறது. ஆகையால், அந்தப் பாறைக்கு தன்மேல் சூர்ய வெளிச்சம் இருக்கிறது என்பதை உணர சக்தி கிடையாது. இதேபோல் **இப்பூலோகத்திலுள்ள பற் பல வஸ்துக்களுக்கும், ஜீவராசிகளுக்கும், அதனதன் அமைப்பிற்குகந்தவாறு, சூர்யனிடமிருந்து வரும் சக்தியை அடையவும், உணரவும், அதனை**

உபயோகப்படுத்தவும் கூடிய ஒரு யந்திரம்போல் அமைக்கப் பட்டுள்ளன.

இவைகளுக்கெல்லாம் மேன்மையானது மனித வர்க்கமே. இவருக்கேதான் தானே சூர்யனிடமிருந்து வரும் சக்தியை உணரவும், அடையவும் அதை நல் வழியில் உபயோகப்படுத்தவும், மேலும், பிறருக்குக் கிடைக்கும் சக்தியைப் பார்க்கவும், அறியவும், கணக்கிட வும் அதனே உபயோகப்படுத்தவும் கூடிய சக்தி இருக் கிறது. ஆயினும் மனித வர்க்கத்துக்குள்ளேயே அச் சக்தி சிலருக்குக் குறைந்தும், சிலருக்கு அதிகப்பட்டும் இருப்பதின் காரணம் அவனவன் கர்ம பலனும், தான் பூர்வ ஜன்மங்களில் உழைத்துப் பெற்ற அறிவின் வேற்றுமையே ஆகும். இவ்விதம் மனித வர்க்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் அமைப்பு ஏற்படாவிடில் அப்பாறை யின் பேரில் வீசப்பட்ட சூர்ய சக்தியானது புலப்படாது. அப்பாறையின் பேரில் சூர்ய வெளிச்சத்தைக் காண வேண்டுமானல் மனிதனுக்கொத்த அமைப்பும், யந்திர சாதனமும் வேண்டும் அதனலே குருடனுக்கு சூர்ய வெளிச்சம் தென்படாது எனப்படுகிறது. மானிட வர்க்கமே இப்பூமியில் இல்லாமற் போனலும் சூர்ய வெளிச்சம் தென்படாது. ஆனல் அது பலவித சக்தி களாகவே மாறுபடும். ஆகையால் மனித வர்க்கமும், ஜீவப் பிராணிகளும், இப்பூமியில் உதிக்குமுன், சூர்ய வெளிச் சம் என்பதை உணரவோ, பார்க்கவோ இடமில்லாமலே இருந்தது.

## சக்தியும் - சூர்ய வெளிச்சமும்.

சூர்ய வெளிச்சம் காணப்படுவதற்கு முதலாவதாக சூர்யனிடமிருந்து கிடைக்கும் சக்தி வேண்டும் இரண்டாவதாக அச்சக்தியை கிரஹிக்கக்கூடிய வஸ்துக்கள் வேண்டும். மூன்ருவதாக அச்சக்தியைப் பார்க்கவும், அறியவும், உணரவும், தகுதியான ஜீவப் பிராணிகளேயும், மனித வர்க்கத்தையும் போலொத்த யந்திரங்கள் வேண்டும். மேலே சொன்ன மூன்று வகையும் இல்லேயேல், சூர்ய வெளிச்சம் என்பது புலப்படாது. இந்த மூன்றில் சூர்யனிடமிருந்து வரும் சக்தியைத் தவிர மற்றவை எல்லாம் இப்பூமியைச் சார்ந்ததே. ஆயினும் இவ்வெளிச்சமானது சூர்யன் தென்படும்போதும்,அதன் மூலமாகவும் அடையப்பட்ட மூல சக்தி ஆகையால், சூர்ய வெளிச்சம் என கூறப்படுகிறது. சூர்ய வெளிச்சம் பல வேளேகளில் பல விதமாகவும், பல இடங்களில் வெவ்வேறு வகைகளாகவும், காணப்படுவதின் காரணமும் ஒன்றே. **அவைகள் இப்பூமியினுடையவும், அதனுள் அடங்கிய பலவகைப்பட்ட வஸ்துக்களின் அமைப்பினுலேயே ஏற்படுகிறது.**

இவ்விதம் வித்தியாசமாகக் காணப்படுவதற்கு மூன்று அம்சங்கள் தேவை. ஒன்று, பார்க்கப்படும் வஸ்து, அதுவே சூர்யன். இரண்டாவதாக பார்த்து அதனுள் ஏற்படும் வித்யாசங்களே உணரும்படியான ஒரு யந்திரம், அதுவே மனிதன் ஆகிருன் மூன்ருவதாக பார்க்கப்படும் சூர்யனுக்கும், பார்க்கும் மனிதனுக்கும் நடுவே இருக்கப்பட்ட பொருள்களின் அமைப்பு.

இம்மூன்றில் சூர்யனும், அதன் சக்தியும் ஒருபொழுதும் மாறுவதில்லை. மனிதனின் சக்தியும் அதேபோல் வெகு சீக்கிரம் மாறுவதில்லை. ஆகையால் பார்க்கப் படும் சூர்யனுக்கும், பார்க்கும் மனிதனுக்கும் மத்தியில் ஏற் படும் பொருள்களின் வித்தியாசமே, சூர்யன் வேறு வேறு வித மாக காணப்படுவதின் காரணம் ஆகும்.

பூமியும் – பூதங்களும்.

இப்பொருள்களில் மிகவும் முக்கியமானது காற்று. பூமியின் மேல்பாகத்தில் காற்று மண்டலம் பலமைல்கள் தூரத்திற்கு தேங்கி நிற்கிறது. அதுவே வெகு சீக்கிரத் தில் மாறக்கூடியதான பொருள் ஆகிறது. இக் காற்றானது, பூமியின் மேல்பாகத்திற்கும், ஆகாசத் திற்கும், மத்தியில் பலவிதமாக கீழ்பாகத்தில் கனமுள்ள தாகவும், நீர்கலந்ததாகவும், சுளுவில் மாற்றக்கூடிய தாகவும், மேலே போகப்போக அதனுள் நீரும் கனமும் குறைந்து, ஆகாசத்தை எட்டும்பொழுது அதனுள் கனமே இல்லாமலும், மாற்றக்கூடிய சக்தியே அற்றும் இருக்கிறது. இந்தக் காற்றே நம் முன்னோர் சொல்லி யிருக்கிறபடி பஞ்ச பூதங்களில் ஒன்ருகிறது. நாம் வசிக்கும் பூமி பஞ்ச பூதங்களோடு கூடியதாய் பிறப்பித்து இருக்கிறது எனப்படுகிறது. அதில் பூமியே மாறக் கூடியது. ஆகாசமே மாருதது. மற்ற பூதங்களான அக்னி, ஜலம், காற்று, இம்மூன்றும் மாறக்கூடியவைகளாக வும், மாற்றக் கூடியவைகளாகவும், சக்தி வாய்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளன.

கிரஹங்களும் – பூதங்களும்.

மற்ற கிரஹங்களெல்லாம், பூமியைப்போல் அல்லாமல் மாறமுடியாத முழு உலோகங்களால் உண்டாக்கப்பட்ட உருண்டை உருவமும், ஆகாசமும், ஆன இரண்டே பூதங்களை உடையனவென்றும், சூர்யன் மாத்திரம், முழு உலோகங்களால் உண்டாக்கப்பட்ட உருண்டை உருவமும், ஆகாசமும், அவ்விரண்டிற்கும் மத்தியில் பல வகைகளான சக்திகளை அடக்கி வைத்துக்கொள்ளும்படியான அபார சக்தியும், ஆக மூன்று பூதங்களை உடையது என கருதப்படுகிறது.

இப்பூமியில் உள்ள மாறக்கூடியதும், மாற்றக் கூடியதுமான மூன்று பூதங்களில் அக்னியை புருட ரூபம் என்றும், ஜலத்தை பெண் ரூபமென்றும், காற்றை குழந்தை ரூபமென்றும் சிலர் கருதுவர். இம்மூன்றில் மிகவும் முக்கியமானது காற்றே. இதுவே மற்ற பூதங்களை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவும், ஒன்றோடொன்று சேர்க்கப்படவும், மாறவும்படியான இலக்குவைக் கொடுக்கிறது. நாம் அதிகாலையில் சூர்யனைப் பார்க்கும்பொழுது சூர்யனானது பூமியை ஒட்டினாற் போலவே பார்க்க நேரிடுகிறது. அப்பொழுது பூமியின்மேலே உள்ள காற்று, ஜலமும், பனிநீரும் கலந்ததாக இருப்பதால் அந்நீரானது ஒரு மைக்ராஸ்கோப் போல் சூர்யனைப் பெரிதாக்கிக் காண்பிக்கிறது. இதேபோல் மாலையிலும் கொஞ்சம் வித்தியாசத்தோடு காணப்படுகிறது. சூர்யனைப் பெரிதாக்கிக் காண்பிக்கும்பொழுது அதன் நிறம் அதிகப்படுகிறது. அப்பொழுது சுத்த வெளுப்பானது

சற்று சிவந்த நிறமாகக் காணப்படுகிறது. இந்த சூர்யனே கொஞ்சம் கொஞ்சமாக உச்சிக்கு வரும்பொழுது, நமக்கும் சூர்யனுக்கும் மத்தியில் உள்ள காற்ருனது நீர் கலப்பில்லாமலே இருப்பதால் அது ஸ்வயரூபத்தில் வெளுப்பாகவே தென்படுகிறது.

பூமியும் — சூர்ய வெளிச்சமும்.

நாம் பூமியிலுள்ள நீர்த்துளிகளை விலக்கி ஒரு உயரமான குன்றின்மேல் நின்று பார்ப்போமாளுல் சூர்யன் மிகவும் உக்ரமாகக் காணவேண்டுமே? ஆனுல் அதற்கு மாருக சாந்தியோடு காணப்படுவதின் காரணம் என்ன என்று வினவுங்கால், பூமியை விட்டு மேலே போகப் போக அக்காற்ருனது பூமியின் மேல்பாகத்தில் உள்ள மாறக்கூடிய வஸ்துக்களைவிட்டு அகலுவதால் அக்காற்றுக்கு பூமியால் ஏற்படும் பிரதிபலிப்பு குறைவாகவே உண்டாகிறது. இக்காரணத்திளுல் காற்றின் மாற்றக்கூடிய சக்தி அவ்விடங்களில் குறையவே சூர்ய கிரணங்களின் உஷ்ணமும், சூர்யனும்கூட சக்தி அற்றதாகவே காணப்படுகின்றன. இவ்விதம், பூமியைவிட்டு மேலே போய்க்கொண்டே போனுல், அவ்வவ்விடங்களில் காற்றின் மாற்றக்கூடிய சக்தி குறைவதால், சூர்யன் சந்திரனைப்போல் சாந்தமாகக் காணப்படும்.

# 19. காற்றே - மாயஸ்வரூபி.

நம் பூமியிலுள்ள எல்லா பூதங்களிலும் காற்றே மிகவும் சக்தி வாய்ந்தது. இதுவே மேல் உலகங்களில் உள்ள கிரஹங்களுக்கு ஆகாசம் எப்படி சக்திவாய்ந்த தாக எங்கும் பரவி நிற்கிறதோ, அதேபோல் நம் பூமியி லுள்ள எல்லா பொருள்களுக்கும், மரம், செடிகளுக்கும் ஜீவப்பிராணிகளுக்கும், மனிதவர்க்கத்திற்கும், சக்தி வாய்ந்த பூதமாக எங்கும் பரவி நிற்கிறது. ஆயினும் ஆகாசம் நிர்மலமானதும், மாறக்கூடாததாகவும் இருக்க, காற்று மாறக்கூடியதாகவும், மாற்றக்கூடியதுமான அம் சங்களை உடையதாக விளங்குகிறது. இச்சக்தியைக் கொண்டு சூர்யனிடமிருந்து வரும் சக்தியைப் பிரித்து சூர்ய வெளிச்சத்தோடு பார்ப்போமானால், பலவிதமான நம் பூமியி லுள்ள சக்தி வாய்ந்த பொருள்களும் மரம், செடிகளும், ஜீவப் பிராணிகளும், மனிதவர்க்கமும் அதில் அடங்கி இருக்கும் பலவித சக்திகளும் நமக்குத் தெரியவருகிறது.

இக்காற்றே நன்மைக்கும் தீமைக்கும் காரணமாக உள்ளது. காற்றுக்கு சூர்ய வெப்பத்தினால் ஓட்டம் உண்டாகிறது. அதிக சூர்ய வெப்பம்கொண்ட இடங் களில் காற்று உஷ்ணத்தை கிரகித்து மேலே கிளம்ப, பக்கங்களில் உள்ள குளிர்ந்த காற்று அதன் இடத்திற்கு இழுக்கப்படுவதால் ஓட்டம் ஏற்படுகிறது. இவ் வோட்டத்தில் பலவகை உண்டு. சில இடங்களில் இழுக்கப்பட்ட காற்று ஒரு சுழல் காற்றாக மாறுகிறது.

காற்றே - மாயஸ்வரூபி.

அதுவே மணற்பாங்கான இடங்களில் ஏறபட்டால் மணல்மேடுகள் உருவாகின்றன. இதுவே பாலைவனங்களில் ஏற்பட்டால், மணலைக் கயிராகத் திரித்து வெகு உயரம் எடுத்துச் சென்று வேறு இடத்தில் மணலைக் குவிக்கிறது. இதுவே சமுத்திரத்தின் நடுவில் ஏற்பட்டால்,, நீரைக் கயிராகத் திரித்து, அதோடு நீரில் வாழும் மீன்களையும் வெகு உயரம் எடுத்துச் சென்று வேறு இடங்களில் மீன் மழையாகவும் பெய்வதுண்டு. இவ்விதம் ஓட்டம்கொண்ட காற்று வேகம் அதிகரிப்பதால் தாவரவஸ்துக்களுக்கும், ஜீவப்பிராணிகளுக்கும், மனிதவர்க்கத்திற்கும் நாசத்தை விளைவிக்கிறது. சமுத்திர ஜலம் பெருக்கெடுத்து கப்பல்களையே தூக்கி நாட்டின் மத்தியில் வைப்பதும் உண்டு. பூமி ஒரு பம்பரம் போல் சுழலுவதால் துருவங்களில், காற்று அதோடு சுழன்று, சுருண்ட மேகங்களை உண்டாக்குகிறது. இக்காற்றே உயர்ந்த மலைச் சிகரங்களைச் சுழற்றுவதும் உண்டு. வேறு பூதமான நெருப்போடு கலந்து தீ மூட்டுவதும் உண்டு. நீரோடு கலந்து பிரளயம் ஏற்படுத்துவதும் உண்டு. இதுவே, தாவர வஸ்துக்களிடமும், ஜீவப் பிராணிகளிடமும், மனித வர்க்கத்தினிடமும் உள்ள மனப்பான்மையையும், உருவையும் மாற்றுவதுமுண்டு. இக்காற்றே நம் பூமியிலுள்ள எல்லாவற்றின் பிறப்பிற்கும், வளர்ப்பிற்கும், இறப்பிற்கும் காரணபூதமாக இருக்கிறது. காற்று இல்லாமல் போனால், நம் பூலோகத்திலுள்ள சக்தி வாய்ந்த பொருள்

களுமில்லை, மனிதவர்க்கமும் இல்லை. இவ்விதம், ஒரு ரூபமில்லாமலும், கண்ணுக்குத் தென்படாமலும் மறைமுகமாக இருந்து காற்றானது நம் பூமியிலுள்ள ஜீவராசிகளுக்கும், மனிதவர்க்கத்திற்கும் செய்யும் பணியைக் கண்டே, காற்றை மாயஸ்வரூபி எனக் கருதுகின்றனர். இவ்விடம், நண்பர் ஒருவருக்கு உண்டான ஒரு சம்பவத்தை தெரிவிக்குங்கால் மனித வாழ்க்கையில் இந்த மாயஸ்வரூபி செய்யும் பணியை நன்கு உணரலாம்.

காற்றின் – மாய விநோதங்கள்.

ஒரு தம்பதிகள். அவருள் புருடனுக்கு வயது 37, பத்தினிக்கு வயது 28. அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்து, அதில் இரண்டு சிறுவயதிலேயே மரித்துவிட்டன. தம்பதிகள் மிகவும் அன்யோன்யமாகவும், சிறந்த குணத்தோடும் வாழ்ந்துவந்தனர். அவர்களுள் குழந்தைகள் பிறந்து சில இறந்ததாலும், பிரஸவத்தின் போது ஏற்பட்ட சிற்சில அவத்தைகளாலும், குழந்தைகளை மேலும் பெறுவதால் துக்கமே அதிகரிக்கும் என்ற உணர்ச்சியாலும், இனி குழந்தைகள் பெறுவதில்லை என்பதாக பிரதிக்ஞை செய்துகொண்டனர். இந்த சபதத்தை நிறைவேற்ற இருவரும் தமயனும், தங்கையும் போல் வாழ்ந்து வந்தனர். இவ்விதம் மூன்று வருடங்கள் ஓடின. பின்பு ஒரு நாள் அவர்களின் சபதம் கலைபட்டது. அதன் காரணமாக "ரிஷி - கர்பம்" இராத் தங்காது என்ற பழமொழிபோல் காலாகாலத்தில் குழந்தையும் பிறந்தது. தம்பதிகள் இருவரும் மிகவும்

துக்கத்தில் ஆழ்ந்தனர். தங்கள் சபதம் கலைந்து விட்டதைப் பற்றி மனம் நொந்தனர். மேலும் இதே போல் சம்பவம் ஏற்படாதபடி தங்கள் வாழ்நாள் முழுவதும் திடசித்தத்தோடும், விழிப்போடும் கழித்துவந்தனர். ஆயினும் தங்கள் சபதம் எந்த சூழ்நிலையில் கலைக்கப்பட்டது என்பதை அறிய ஆவல்கொண்டனர். விச்வாமித்திரரின் தபோநிலை, மேனகையின் சூழ்ச்சியால் கலைக்கப்பட்டது எனப்படுகிறது ஆனால் அவ்விதமான சூழ்ச்சிக்கு இவ்விடம் இடமே இல்லை. தம்பதிகள் இருவருமே ஒரே மனப்பான்மையோடு தபோநிலையில் ஈடுபட்டனர். தம்பதிகள் பரிசுத்தமானவர்கள். வெற்றிலை பாக்குகூட போடுவதில்லை. நாடகம், சினிமா, முதலியவைகளுக்கு அதிகம் போவதில்லை. கண்ட ஆபாசமான காதல் புத்தகங்களைப் படிப்பதில்லை. உணவிலும் மிகவும் மிதமாகவே இருந்தனர். அவர்களின் தபோநிலை வேறே எந்தவிதமான உணர்ச்சிக்கும் பலி ஆகவில்லை.

தம்பதிகளுக்கு 'முன் மூன்று வருடங்களும் பின் பதினைந்து வருடங்களும், ஒரு பங்கமும் ஏற்படாமலிருக்க, ஏன் அந்த சமயம் மாத்திரம் பங்கம் ஏற்பட்டது. அதுவே சற்று முன்போ, அல்லது பின்போ ஏற்பட்டிருக்கக்கூடாதா என்பதை யோசிக்குங்கால் ஒன்று புலனாயிற்று. அதுவே அக்குழந்தை இப்பூலோகத்தில் பிறந்து, தன் கர்மங்களைச்செய்து, கடைத்தேறவேண்டும் என்பது கடவுளின் ஆக்ஞைபோலும். அந்த விருப்பத்தை எவ்விதத்திலும் செய்து முடித்தது எனலாம்.

ஆயினும் இந்த சந்தர்ப்பத்தை வெகுசுலுவாக தம்பதிகள் ஏமாந்து போனார்கள் என்று சொல்லிவிடலாம். அதை தம்பதிகள் ஒப்புக்கொள்ளாமல் இல்லை. ஆயினும் தம் பதிகள் இருவருமே ஒரு முகமாக குழந்தைகள் வேண் டாம் என்ற தபோ நிலையில் இருந்தபொழுது, அவர்கள் விருப்பத்திற்கு மாருக வேறு சூழ்நிலை ஏற்படுத்தியது யார்? அது எப்படி ஏற்பட்டது என்பதை ஆழ்ந்து நோக்குங் கால் இந்த மாயஸ்வரூபியான காற்றே காரணம் என்று நன்கு புலனாயிற்று.

பிறப்பும் - அதன் காரணமான அம்சங்களும்.

பிறவி என்பதற்கு நம் வேதாந்தத்தின்படி ஒரு பொருளி லிருந்து மற்றொரு பொருளுக்கு மாறுவதே என்பது தாத்பர்யம். மாறுதல் ஏற்படுவதற்கு மூன்று அம்சங்கள் தேவை. ஒன்று பரந்த சக்தி, இரண்டு அந்த சக்தியை வெளியிடக்கூடிய ஒரு கூட்டில் அடைபட்ட பொருள். மூன்று அம்மாறுதல் ஏற்படக்கூடிய இடம். உதாரண மாக தீபம் எரிகிறது என்பது ஒருவிதப் பிறவியே ஆகிறது. அது எரிவதற்கு எண்ணெயே பரந்த சக்தி ஆகிறது. அதன் திரியே அச்சக்தியை வெளியிடக் கூடிய கூட்டில் அடைபட்ட பொருளாகிறது. விளக்கே அது எரியக்கூடிய இடம் ஆகிறது. அஃதேபோல் மின் சார விளக்கை எடுத்துக் கொண்டோமானால், அதில் மின்சாரமே பரந்த சக்தியாகிறது. அச்சக்தியை எடுத் துக்காட்டும் கூட்டில் அடைபட்ட கருவியே கம்பி

ஆகிறது. அவை இருக்கும் கண்ணுடி பல்பே இடம் ஆகிறது. இதேபோல் ஒருபிரஜை பிறக்கவேண்டுமானுல் முதலாவதாக அந்தப் பிரஜையின் முந்திய கர்மத்தினுல் ஏற்பட்ட ஜீவனின் - நாதம் பரந்த சக்தி ஆகிறது. அந்த சக்தியை எடுத்துக்காட்டக்கூடிய கூண்டில் அடைபட்ட வஸ்துவே விந்து ஆகிறது. அப்பிரஜை வசிக்கும் இடமே குடும்பம் ஆகிறது.

இந்த மூன்று அம்சங்களும் சேராவிடில் பிறவிக்கு இடம் கிடையாது. இம் மூன்று அம்சங்களில் பின் அத்யாயத்தில் குறிப்பிட்ட தம்பதிக்கு தங்கள் இஷ்டத்திற்கு மாருக குழந்தை பிறந்ததின் மூல காரணம் அக்குழந்தையின் பரந்த சக்தியான ஜீவன்-நாதம் காற்றில் அச்சமயம் பரவி நின்றது என்பது சந்தேகமன்னியில் புலனுகிறது. அதே காரணத்தால் கூண்டில் அடைபட்ட விந்துவுக்கு துடிப்பு ஏற்பட்டு புருஷனைத் தூண்டி இருக்க வேண்டும். ஆனுல் அச்சமயம் குடும்பமே தகருராக இருந்தது. குழந்தையை ஏற்கத் தயாராக இல்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒருவிதமான சீத - உஷ்ண ஸ்திதியை உண்டுபண்ணி குடும்பத்தின் சுயநிலையை மாற்றி, மயக்கத்தைக் கொடுத்து, தன் காரியத்தை சாதித்துக் கொண்டவன் இந்த மாயாவியாகிய காற்றே ஆகும். ஏனெனில், அச்சமயம் தம்பதிகள் சுய நிலையை இழந்து மயக்கம் கொண்டனர். அவர்களின் தபோநிலை கலைந்தபிறகே, சுயநிலை அடைந்து வருந்தி

காற்றே - மாயஸ்வரூபி.

அவர்கள் ஆயுள் முழுவதும் உஷாராக இருந்து காலம் கழித்தனர்.

குளிர்ந்த பூமிகளைப் பார்க்கிலும் உஷ்ணப் பிரதேசங்களில் ஜீவப் பிராணிகளின் உற்பத்தி அதிகரிக்கிறது என்பதற்கு மேலே சொல்லப்பட்ட சம்பவமே தகுந்த உதாரணம் ஆகும். உஷ்ணப் பிரதேசங்களில் உள்ள சீத-உஷ்ண ஸ்திதியும், காற்றுமே இந் நிலைக்கு காரண பூதங்களாக இருக்கின்றன. அறிந்தும் விஷயம் தெரிந்தும், குழந்தையே வேண்டாம் என்ற தபோநிலையில் இருந்த தம்பதியின் கதியே இவ்விதம் இருக்க, அறியாத பாமரமக்களின் கதி என்னவாகும். அவர்கள் வருஷத்திற்கு ஒரு குழந்தையைப் பெற்றும், உடல் கெட்டும், நோய்வாய்ப்பட்டும் மரிக்கின்றனர். மக்கள் முக்கியமாக பொறுப்புள்ள பெண்மணிகள், தன்னையும் அறியாமல் மாய பூதங்களால் தாக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்து, அறிவோடும், மனதிடத்தோடும், கட்டுப்பாட்டோடும் தனது வாழ்க்கையை நடத்துவார்கள் என்ற நம்பிக்கையின் பேரில், இந்த வியாசம் இங்கு எழுதப்பட்டுள்ளது. மக்கள் ஆசா பாசத்திற்கு அடிமை ஆகாமல் மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ, மாதவிடாய்க்குப் பிந்தியும், முந்தியும், அவைகளைத்திருநாளாகப்பாவித்து, சேர்க்கை வைத்துக்கொண்டு, மற்ற நாட்களில் விலகி இருப்பதே சுக வாழ்வுக்கும், தீர்க்காயுளுக்கும், உடல்நலத்திற்கும் பொருத்தம் ஆகும்.

---

# 20. நாதமும் - விந்துவும்.

நாதத்தைப் பற்றியும், விந்துவைப் பற்றியும், பல வாருக ஆராய்ச்சிகள் செய்து அதன் உட்கருத்தை வெளியிட்டவர்கள் சித்தர்களே ஆவர். இந்த ஆராய்ச்சியில் அவர்கள் ஈடுபட்டதன் காரணம் இறப்பிற்குப் பிறகு மறுஜன்மம் எந்த சூழ்நிலையில் ஏற்படுகிறது. மறுஜன்மம் எடுக்காமல் இருப்பதற்கு எந்த விதமான தபோநிலை வேண்டும், என்பதை அறிய விரும்பியதே ஆகும். நாதம் என்பது மானிடவர்க்கத்தினின்றும், ஜீவப் பிராணிகளினின்றும் ஏற்படும் ஒருவித மூல சப்தமே. அதையே ஜீவாத்மா என்கிருேம். அந்த சப்தத்தை உணர வேண்டுமாஞல் இரண்டு செவிகளையும் விரல்களால் சரியாக மூடிக்கொண்டு மனதை ஒரே முகமாக அந்த சப்தத்தின்பால் திருப்புவோமாகில் அது புலப்படும்.

இப்படித் தென்படும் சப்தமானது அவரவர் கர்ம பலனை ஒற்றி, சில மாறுதலோடு இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த சப்தமே சிறு வயதில் காமக்ரோதாதிகளோடு கூடினவனுய் இருக்கும்பொழுது ஒரு விதமாகவும், பின்பு வயோதிக காலத்தில் ஆசைகளை ஒழித்து தபோநிலையில் இருக்கும்பொழுது அது பரிசுத்தமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்த நாதமே மறுபிறப்பிற்குக் காரணபூதமான பரந்த சக்தி எனப்படுகிறது. இந்த நாத ரூபமாகவே மனிதன் தன் உயிரை நீக்கும்பொழுது, அவன் ஜீவனை வெளிப்படுத்துகிற

தாகவும் சொல்லப்படுகிறது. ஜீவன் - நாதம் வெளி வரும்பொழுது, சுவாசத்தோடு கலந்து மூக்கு வழியாக வெளிவருகிறது. மூக்கு அடைபட்டால், வாய்வழியாக வெளிவரும். தொண்டை அடைபட்டால் கண்கள் வழியாகவும், காதுகள் வழியாகவும் வெளிவருவதாக சொல்லப்படுகிறது. இவ்விதம் வெளிவரும் நாதமானது ஒளி பரப்பி அலைகள் போல் காற்ருேடு பரந்து நிற்கிற தென்றும், அது மறு ஜன்மம் எடுக்க தருணம் வாய்க்கும் பொழுது அதன் குணத்திற்கு உகந்ததான விந்துவோடு கலந்து குடும்பத்தில் உரு எடுக்கிறதென்றும் கருதப்படுகிறது.

விந்து என்பது அவரவர் செய்த கர்மத்திற்குகந்த வாறும்; அடைந்த குணத்திற்குகந்தவாறும் உண்டாகப் பட்ட பல பூச்சிகளைக்கொண்ட தத்துவ மத்தகத்தி லிருக்கும் மாயா புவனம். இதுவே ஒரு கூட்டில் அடை பட்ட ஜீவ-சக்தி எனப்படுகிறது. இவ்வித்தானது பல பூச்சிகளை உடையதாய் இருந்த போதிலும் அவைகளுள் வெகுசில மட்டுமே கருதரிப்பதற்கு ஏதுவாகிறது. கரு தரிப்பதற்கு மூன்று அம்சங்கள் தேவை என்று முன்ன மேயே சொல்லப்பட்டது. அவைகளுள் விந்துவைத் தவிர நாதமும், குடும்பமும் ஆகும். நாதமே பரந்த சக்தி ஆகையால் அதனுடைய தூண்டுதலின்றி விந்து ஒரு நாளும் கருதரிக்க முடியாது. ஆனல் நாதமும் விந்துவும் சேரும்பட்சத்தில் தன் கர்ம பலனுக்கொத்த ஒரு குடும்பத்தில் கருதரிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ளும்.

நாதமும் – விந்துவும் சேரும்விதம்.

நாதமானது பரந்த சக்தியாக காற்ருேடு பரவி நிற்கிறது. ஆனல் விந்துவோ ஒருவர் உடலில் அடைபட்டிருக்கிறது. அப்படி இருக்க, இவை இரண்டிற்கும் எவ்விதம் சந்திப்பு ஏற்படும் என்று நோக்குங்கால், ஒரு குடும்பம் இருக்கிறது. அந்த குடும்பத்தில் நான்கு குழந்தைகள் உண்டு. அவர்களின் பெயர்கள் ராமன், கிருஷ்ணன், பலராமன், பரமசிவன். நாம் வீட்டு வாசலில் நின்று, ராமன் பெயரைச் சொல்லிக்கூப்பிட்டால், ராமனே வருகிருன். கிருஷ்ணனைக் கூப்பிட்டால் கிருஷ்ணனே வருகிருன். ஆனல் சீனிவாசன் என்று கூப்பிட்டால் ஒருவரும் வருவதில்லை. அதேபோல் எந்த நாதத்திற்கும், எந்த விந்துவுக்கும் குணத்திலும், மற்ற அம்சங்களிலும் ஒற்றுமை இருக்கிறதோ, எந்த விந்துவுக்கு மறுஜன்மம் எடுக்கவேண்டிய அவசியம் உண்டாகிறதோ, அவைகள் இரண்டுமே ஒன்ருேடொன்று சேர்க்கை உண்டாக்கிக் கொள்ளுகிறது.

ஒருவன் தன் விந்துவில் தன்னுடையதும், தன் தகப்பனுடையதும் தன் பாட்டனுடையதுமான குணங்களை உடைய மூன்று தலைமுறைக்குள் ஏற்படக்கூடிய பூச்சிகளை உடையவனுய் இருக்கிருன் எனப்படுகிறது. அதனுலேயே பாட்டன் போல் பிள்ளை என்று சொல்வதுண்டு. ஆயினும் ஆறுதலை முறைகளில் உள்ள பூச்சிகளும் கருதரித்ததைப் பார்த்திருக்கிருேம். இம்முறைப்படி நாதஸ்வருபமாயுள்ள ஜீவனுனது காற்ருேடு பரவி

**நாதமும் - விந்துவும்.**

நிற்க, அதே குணதிசயங்களை உள்ள விந்து அந்தக் காலம் சஞ்சலம் அடைந்து அதற்கு துடிப்பு ஏற்படு கிறது. அச்சமயம் மனிதன் விகாரத்திற்குள்ளாகி குடும் பத்தைத் தேடுகிருன். அதன் பலனுகவே கருதரித்து மறு ஜன்மம் எடுப்பதற்கு ஏது ஆகிறது. ஆயினும் அக்குணமுள்ள விந்துவானது வேறு குணமுள்ள குடும்பத் தில் ஜெனிப்பதால் அக்குடும்பத்தின் குணங்களைச் சேர்த்துக் கொண்டே பிறக்கிறது. ஆனதால் பாட்டன் குணத்திற்கும் பேரன் குணத்திற்கும் சில வித்தியாசங்களே உண்டாகின்றன.

**குடும்பமும் - காதலும்.**

பல காரணங்களால் உடல் கொழுப்பேறியும், புஷ்பம், சந்தனம் இவைகளை உபயோகிப்பதாலும், வெற்றிலை போடுவதாலும், சாராயம் அருந்துவதாலும், காதல் புத்தகங்களைப் படிப்பதாலும், அவ்வித படங்களைப் பார்ப்பதாலும், மற்றும் சிற்சில பழக்கவழக்கங்களாலும், புருடர்களுக்கும், பெண்மணிகளுக்கும், ஒரு விதமான விகாரம் ஏற்படுகிறது. இதை ஒரு உபாதி என்றே சொல்லவேண்டும். ஆனுல் இதையே காதல் என்று சிறுவர் சொல்வர். இந்த உபாதையால் சில சிறுவர் களுக்கு மயக்கம் போடுவதுண்டு. ஹிஸ்டிரியா ஏற்படும், சிலருக்கு சாப்பாடு வேண்டி இராமல் வாந்தியும் ஏற் படும். இதற்கு மருந்து மனதை வேறு வழியில் திருப்பு வதே ஆகும். ஒரு குடும்பத்திற்கு குழந்தைப்பேறே இல்லை என்ருல் அக்குடும்பத்தின் தந்தை பாட்டன் மார்களின் மறுஜன்மமே இல்லை என்று சொல்லலாம்.

அல்லது வேறு எந்த குடும்பத்திலாவது ஜெனித்தும் இருக்கலாம். ஆயினும் குழந்தை இல்லாமல் போனுல் சுவர்க்கம் கிட்டாது என்று சொல்வதன் காரணம் பிள்ளை பிறக்கவில்லை என்ற குறை அந்திய காலத்திலும்கூட ஊன்றி இருக்கக்கூடும். ஆகையால் இப்பூலோகத்திலுள்ள ஆசைகளை விலக்கி, விடுதலை அடைய முடியாது எனப்படுகிறது.

ஜீவன் நாதமும் — விடுதலையும்.

ஜீவன் - நாதமே அந்திய காலத்தில் விடுதலை அடைவதற்குகந்த ஒரு சிறந்த கருவியாக விளங்குகிறது. மனிதன் தன் சன்யாச ஆச்சிரமத்தில் ஆசாபாசங்களை விலக்கி எல்லா அடிமைத் தனத்தையும் கொடுக்கக் கூடிய கர்மங்களை நிறுத்திவிடுகிருன். கண்ணுல் பார்ப்பதும், மூக்கால் சுவாசம் விடுவதும், வாயால் உண்பதும், காதால் கேட்பதுமே, மிஞ்சிய கர்மங்கள் ஆகின்றன. இவைகளினின்றும் விடுதலை அடைய கண்ணை மூடிக்கொண்டுவிடுகிருன். அதனுல், பார்ப்பதனுல் ஏற்படும் கர்ம பலன்கள் நின்றுவிடுகின்றன. இரண்டாவதாக மூக்கால் சுவாசம் விடுவதை சுவாச பந்தனம் செய்து, அதாவது மூச்சை அடக்கி அதிகமான காற்று உள் இழுத்துக் கொள்ளப்படுவதை நிறுத்திக் கொள்கிருன். மூன்ருவதாக, உணவு விஷயத்தில் கர்ம பலன்களைக் கொடுக்கக் கூடிய ஆகாரங்களை விலக்கி, பாலும், பழமுமோ, அல்லது மோரோ அருந்தி தன் ஜீவனை காப்பாற்றிக் கொள்ளுகிருன். நான்காவதாக காதால் கேட்கப்படும் சப்தங்களை மிகவும் அடக்க முடி

யாதலைவை. எவ்விதம் காதைப் பொத்திக் கொண்டாலும், வெளியில் உண்டாகும் சப்தங்கள் கேட்காமல் இரா.

மனதைக்கொண்டே இந்த அடிமைத் தனத்திலிருந்து ஒருவன் விடுதலைபெற வேண்டுமாகையால் மனதை ஒரு முகமாக தனக்குள்ளே தாண்டவமாடும் ஜீவன்-நாதத்திலே அமைப்பானாகில் மற்ற எல்லா விதமான வெளியில் ஏற்படும் சப்தங்களிலிருந்தும் விடுதலை அடைய முடியும். மேலும், அப்படிச் செய்வதால் அவன் ஜீவன்-நாதமானது பரிசுத்தமாகி கர்மத்திலிருந்து விலகி நிற்கிறது. அச்சமயம் அந்த நாதம் உடலிலிருந்து பிரியும்பொழுது வண்டல் ஏற்பட்ட ஆற்று நீரை, ஒரு குடத்தில் அடக்கி அது ஓடாமல், அல்லது அசங்காமல் வைக்கப்படுமாகில், எவ்விதம் வண்டல் குடத்தின் அடிபாகத்தில் தங்கி மேலே நீர் சுத்தமாக ஆகிறதோ அதேபோல், இந்த ஜீவன்-நாதமானது பரிசுத்தமாகி நம் பூமியைச் சார்ந்த ஆசாபாசத்தால் ஏற்படும் அசடுகளைப் பூமியிலேயே விட்டுவிட்டு, காற்று மண்டலத்திற்குமேல் ஓங்கரர நாதத்தோடு கூடிய சுத்த சக்தியோடு கலந்துவிடுகிறது.

இம் முறையே, மனிதன் தன் அந்திய காலத்தில் விடுதலை அடைவதற்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தபோநிலை ஆகும். இம் முறையைக் கையாள முடியாத-பயிற்சி இல்லாதவர்கள், பக்திப் பாடல்களாலும், வேத பாராயணத்தின் மூலமாகவும், பரிசுத்தம் ஆகிறார்கள். அப்பொழுதே மனதில் சஞ்சலம் ஏற்பட்டு தெய்வீக சக்தியாக

நாதமும் - விந்துவும்.

மாற இடம் கொடுக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தான் கொண்டாடும் விக்ரஹத்தையோ, சித்திரத்தையோ, தன் முன் வைத்து அதன்பால் மனதைச் செலுத்தும் பட்சத்தில், ஐம் புலன்களால் உண்டாகும் விகாரங்களை விலக்கி விடுதலை அடைய எது ஆகிறது. இதுவே எல்லாவற்றிற்கும் மேலான தும், சுளுவான முறையும் ஆகும். நாதம் ஒரு பரந்த-சக்தி ஆனபடியால் அதை பெண் ரூபம் என்பர். அதனால் பெண் மணிகள் நாத ஸ்ரூபி எனப்படுகிறார்கள்.

---

# 21. ஜீவராசிகளின் வளர்ச்சியும் - மறு பிறப்பும்.

மேல்நாட்டு விக்ஞானிகள் மனிதன் மீனிலிருந்து உருவானனை அல்லது குரங்கிலிருந்து உருவானனை என்று இரவும், பகலும், ஆராய்ச்சிகள் செய்தும், ஒரு பலனும் ஏற்படாமலே தற்காலம் இருக்க, நம் முன்னோர் இவ்விஷயத்தை மிகவும் தெளிவாக பல ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியே கணக்கிட்டிருக்கின்றனர். இப் பூலோகத்தில் ஜீவராசிகளினுடையவும், மனிதவர்க்கத்தி னுடையவும் உற்பத்திக்கு காரணபூதமாக இருக்கப் பட்டது, சூர்ய சக்தியால் மாத்திரம் அல்ல. மற்ற எந்த ஒரு கிரகமும் கொடுக்கும் சக்தியினாலும் அல்ல. ஆனால் எல்லா கிரஹங்களும், சூர்யனும், நட்சத்திரங்

களும் கூடியே சூர்ய வெளிச்சமாகக் கொடுக்கப்பட்ட சக்தியினுலேதான் என்பதை உணர்ந்தோம். இதனுலே எந்த எந்த கிரஹம் அல்லது, நட்சத்திரம் எவ்விதத்தில் இந்த உற்பத்திக்கு உபயோகப்படுகிறது என்பதை உணரும் பட்சத்தில், மனிதன் எவ்விதம் உருவெடுத்தான் என்பது புலனுகும்.

ஜீவராசிகளும் — குணமும்

இப் பூமியில் ஜீவராசிகளும், மனிதவர்க்கமும், உற்பத்தி ஆவதற்கு முதலாவதாக ஒரு பரந்த சக்தி வேண்டும். அதுவே ஜீவாத்ம-சக்தி. அதுவே சூர்யனுடைய சொந்த சக்தி ஆகிறது. அந்த சக்தியை கிரஹிக்க வேறு ஒரு சக்தி நம் பூமியில் வேண்டும். அதுவே ஜீவாத்மா ஆகிறது. இச் சக்தி நம் பூமியில் நீரோடும், காற்ருேடும் பரவி நிற்கிறது. அதுவே தூல சரீரத்தை அடையக் கூடிய அம்சம் ஆகிறது. ஜீவாத்மா வசிக்க தூல சரீரத்தைக்கொண்ட ஒரு பாத்திரம் வேண்டும். அதையே ஜீவப் பிராணிகளும், மனித வர்க்கமும் கொடுக்கிறது. இப்பொழுது யந்திரம் ஆகிவிட்டது. இந்த யந்திரத்தையே ஒரு எரியும் விளக்குக்கு ஒப்பிடலாம். ஆயினும் அந்த விளக்கை எரியவைக்க ஒரு மனிதனின் முயற்சி தேவைப்படுவதுபோல், ஜீவராசிகளும். மனிதவர்க்கமும்போலொத்த யந்திரத்திற்கு உயிர் கொடுக்க சூர்யனிடமிருந்து வெளிவரும் ஜீவாத்ம சக்தியே உதவுகிறது. இந்த யந்திரத்தின் வளர்ச்சிக்கு

தனதான்ய சம்பத்துகள் தேவை. அவைகளை எல்லாம் ஏழு கிரஹங்களும், சூர்ய வெளிச்சத்தின் மூலமாக கொடுக்கின்றன. இவ்வளவும் இருந்தும், இந்த யந்திரம் வளருவதால் ஒரு பிரயோசனமும் இல்லை. ஏனெனில், குணம் என்பதே அந்த யந்திரங்களுக்கு ஒரு பெரும் சிகரமாக விளங்குகிறது. இப் பூமியில் எல்லாவற்றிற்கும் குணத்தைக் கொடுப்பது 27 நட்சத்திரக் கூட்டங்களே ஆகும். இந்த நட்சத்திரக் கூட்டங்கள் மனித வர்க்கத்திற்கு மாத்திரம் அல்ல, மிருக ராசிகளுக்கும், பறவைகளுக்கும், மரம் செடிகளுக்கும், நீரில் வாழும் இனங்களுக்கும், அதனதன் அமைப்புக் குகந்தவாறு குணங்களைக் கொடுத்திருக்கின்றன. இவ்விதம் குணங்களைக் கொடுக்கக் கூடிய இருபத்திஏழு நட்சத்திரக் கூட்டங்களுமே, சந்திரனின் பத்தினிகள் எனப்படுகிறது.

நம் பூமியை கற்களே ஆண்டபொழுதும், இந்த குணங்கள் தென்பட்டன. பின்பு மரம், செடிகளும் ஏற்பட்டு நம்பூமியை ஆண்டபொழுதும், இக் குணங்கள் காணப்பட்டன. பின்பு மிருகங்கள் நம் பூமியை ஆண்டபொழுதும் இக் குணங்கள் காணப்பட்டன. கடைசியாக மனிதவர்க்கம் இப் பூமியில் உதித்த பொழுதும், இந்த குணங்கள் காணப்படுகின்றன. இதைக் கொண்டே நம் முன்னோர் குணம் ஒன்றே மிகவும் சிலாக்கியமானது என்றும், அந்த குணம் வளரும், மரம், செடிகளிலேயும், பக்ஷிகளிலேயும், மிருகராசிகளிடமும், மனித வர்க்கத்தினிடமும், அதனதன் பகுத்தறிவு சக்திக்கு

உகந்தவாறு வேறு வேறு விதமாகக் காணப்படுகிற தென்றும் கணக்கிட்டு இருக்கிறார்கள். அதன்படி குணத்தை ஆதாரமாகக்கொண்டே சிற்பக்கலையையும் உண்டுபண்ணி இருக்கிறார்கள்.

குணமும் – நட்சத்திரங்களும்.

பாற்கடலில் உற்பத்தியாகும், பொருள்களெல்லாம் ஒவ்வொன்றும், படிப்படியாக செடியாய், மரமாய், மீனாய், பறவையாய், மிருகமாய், பின்பு மனித ரூபமாய் அதனதன் கர்மபலனாலும், ஓரளவு பகுத்தறிவு சக்தி அடைவதாலும் முன்னேற்றம் அடைகிறது எனப்படுகிறது. உதாரண மாக, பரணி நட்சத்திரத்தை எடுத்துக் கொள்வோமாகில், அந்த நட்சத்திரத்திற்குரிய குணாதிசயங்கள், ஆண் யானையிடம் இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த நட்சத்திரத்தில் பிறந்த, மனிதனிடமும் இருக்கிறது. பறவை இனத்தில் காக்கையிடமும் இருக்கிறது. தாவர வஸ்துக்களில் நெல்லி மரத்தினிடமும் இருக்கிறது. ஆனாலும் அந்த குணங்கள் அதனதன் அமைப்புக்குகந்த வாறும், பகுத்தறிவின் அளவுக்குகந்தவாறும், சில மாறு தல்களோடு காணப்படுகின்றனவே யொழிய மொத்தத் தில் குணம் எல்லாவற்றிற்கும் ஒன்றே. அவ்விதம் எல்லா நட்சத்திரக் கூட்டங்களுக்கும் உள்ள வெவ்வேறு குணாதிசயங்களை நிர்ணயித்து இருக்கிறார்கள். இதைப் பஞ்சாங் கங்களில் காணலாம்.

மனமும் - குணமும்.

இந்த குணங்களை நன்கு அறிந்து சதி - பதிகள் மணம் செய்துகொண்டால் ஆயுள் பூராவும் அன்யோன்யமாக வாழ முடியும்.

அல்லாமல் ஒருவர் கீரியினுடைய குணத்தைக் கொண்டும், மற்றவர் பாம்பின் குணத்தைக் கொண்டு இருந்தாலும், அல்லது ஒருவர் பூனை குணத்தைக் கொண்டும், மற்றவர் எலியின் குணத்தைக் கொண்டவராக இருந்தாலும், வாழ்க்கையில் ஒருபொழுதும் சாந்தியோ, அன்யோன்யமோ ஏற்படாது. ஆகையால் ஜாதகம் பார்க்காமல் போனாலும், ராசி, நட்சத்திரம் பொருத்தம் பார்ப்பது மிகவும் சிலாக்கியமானது. இந்த உண்மையை அறியாது மணம் செய்துகொள்ளும் மேல் நாட்டு புருடன், பெண்மணிகள், வருஷத்திற்கு ஒரு முறையும் அல்லது சில மாதங்களுக்கு ஒருமுறையும்கூட விவாக ரத்து செய்துகொள்ள விரும்புவதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. ஒருவருடைய குணத்தை அறிவது மிகவும் கடினமானது. **குணம் மணத்திற்கு முந்தி ஒரு விதமாகவும், பிந்தி வேரொரு விதமாகவும் மாறக்கூடியதாகையால், மனிதனுடைய தெய்வீகமான சொந்த குணம் என்ன என்பதை அவரவர் நட்சத்திரத்தைக் கொண்டே அறிய வேண்டுமேயொழிய வேறு எந்த விதத்திலும் அறிவது இயலாத காரியம்.**

குணமும் – மறுபிறப்பும்.

ஒரு நட்சத்திரத்திற்குரிய குணம் ஜீவராசிகளிடத்திலும், மனித வர்க்கத்தினிடத்திலும், ஒரே விதமாக காணப்படுவதால், ஒரு இனம் வேரொரு இனத்திற்கு மாறுவதற்கு இடம் கொடுக்கிறது. இதை விவரிக்குங்கால் ஒரு வாத்தியம் இருக்கிறது. அதற்கு நான்கு

தந்திகள், ஒன்று மெல்லிய எஃகு தந்தி, மற்றொன்று மொத்த எஃகு தந்தி, மூன்றாவது பித்தளைத் தந்தி, நான்காவது வெள்ளித் தந்தி. இந்த நான்கு தந்திகளும் வேறு வேறு அமைப்பைக்கொண்டு இருந்த போதிலும் ஒரே குணத்தைக்காட்ட ஒரே ஸ்வரத்தில் பொருத்தப் படுகின்றன. அப்பொழுது ஒரு தந்தியை மீட்டினோ மானால், மற்ற மூன்று தந்திகளும் பிரதிபலிப்பதைக் காணலாம். அதேபோல் பரணி நட்சத்திரத்துக்கு ஏற்பட்ட குணம் ஆண் யானையில் இருக்க, அந்த யானை யின் ஜீவன் நாதமும் அதே நட்சத்திரத்தில் பிறக்கும் மனிதனின் ஜீவன் - நாதமும் ஒன்றே ஆகிறபடியால் கர்ம பலனால் பகுத்தறிவு சக்தியை அதிகம் அடைந்த யானையானது மனிதன் உருவம் எடுக்க ஏதுவாகிறது. இதேபோல் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் பிறக்கப்பட்ட ஜீவராசிகள் படிப்படியாக மேல் நோக்கி மனித ரூபமாக மறு ஜன்மங்கள் எடுத்து அந்தியில் விடுதலை அடை கிறது. **அதாவது சக்தி ரூபமாக உடலைத்துறந்து அழி வில்லா நிலைமையை அடைகின்றன. இதையே பௌத்தர்கள் நிர்வாணம் என்பார்கள், இந்துக்கள், சித்தி என்பார்கள், மற்றவர் பரலோகம் அடைவதாகக் கூறுவர்.**

**சுகமும் – துக்கமும்.**

ஜீவப் பிராணிகளும், மனித வர்க்கமும் இப் பூமியில் உதித்ததின் விபரத்தைத் தெரிந்துகொண்டோம். ஏன் உதிக்கவேண்டும் என்ற கேள்விக்கு விளக்கம் கொடு படவில்லை. கடவுளின் திருவிளையாடல் எல்லாம் தன்

னுடைய சக்தி எத்தகையது என்பதை அறிவதே ஆகும். இந்த முயற்சியில் பல இடங்களில் பல வித மான பொருள்கள் உண்டாக்கப்படுகின்றன. இப்படி உண்டாக்கப்படும் பொருள்களின் தாரதம்யமும், அவை களின் குறைகளும், எவ்விதம் அவைகள் வேலை செய் கின்றன என்பதின் ஆராய்ச்சியும், எந்த எந்த விதத் தில் அவைகளைக் குறை இன்றி செய்யலாம் எனப் பட்ட விஷயங்களை அறிய ஒரு அலாதி ஆராய்ச்சிக் கூடம் வேண்டுமல்லவா? அதுவே அமிர்தத்தைக் கொடுக்கக்கூடிய திருப்பாற் கடலாகிறது. இப்பணியை நன்கு செய்து வரும்படி கட்டளை இடப்பட்டுள்ளவர்களே மனித வர்க்கம் ஆவர். இவர்கள் இப் பூமியில் பணி ஆற்றும் வகையில் அவர்களுக்கு எல்லா சுகங்களையும், சௌகரியங் களையும் கொடுத்து, தன் ரூபத்திலேயே அவர்களை உண்டு பண்ணியும் இருக்கிறார் கடவுள். ஆனால் மனிதன் செய்வது என்ன?

**கர்மமும் - துக்கமும்.**

இப் பூலோகத்தில் உள்ளவை எல்லாம் தன் சுய வாழ்க்கைக்கே என்ற மனப்பான்மை கொண்டு, தான் இந்த உலகில் உதித்ததன் காரணத்தை மறந்தும், சுகபோகங்களிலேயே ஈடுபட்டும், சுழன்றும், ஒரு அறி யாமையை தனக்குள்ளேயே உண்டு பண்ணிக் கொண் டும், இப் பூமியிலேயே நிரந்தரமாக ஆசாபாசங்களை விட்டுப்பிரியாத — பிரியமுடியாத ஒரு சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டும், வாழ நினைக்கிறான். இதன் பலனாக அவனுக்குக் கிடைப்பது துக்கமே. கடவுள் எல்லா

சுகத்தையும், சவுகரியங்களையும் கொடுத்து இருக்கிருர். துக்கத்தை தானே தன் கெட்ட கர்மங்களால் உண்டாக்கிக் கொள்ளுகிருன் மனிதன். ஆகையால் சுகம் சவுகரியம் எல்லாம் கடவுள் கொடுப்பதே. துக்கம் என்பது மனிதனின் கர்ம பலனுல் உண்டாகும் ஒரு அம்சமே ஆகும். துக்கம் ஒரே ஜன்மத்தில் ஏற்பட்ட கர்ம பலனுகவும் இருக்கலாம், அல்லது கடந்த ஜன்மங்களில் உண்டான கர்ம பலனுலேயும் இருக்கலாம். இதை நிவர்த்திக்க மனிதன் தான் இந்த பூலோகத்தில் பிறந்த காரணத்தை மறவாமல், ஆசாபாசங்களுக்கு பலி ஆகாமல், தாமரை எவ்விதம் குளத்தில் வளர்கிறதோ, அதே போல் மனிதன் இப் பூமியாகிய, " திருப்பாற் கடலில் " வசிப்பது உசிதம் ஆகும். **சுகமும், சவுகர்யமும் கடவுளினுடையதே. துக்கம் மனிதனுல் உண்டாக்கப்பட்டவையே, ஆகையால் அறிந்தவர்க்கு துக்கம் இல்லை எனப்படுகிறது.**

---

# 22. விடுதலை.

விடுதலை என்ற பதத்திற்கு சரியான தாத்பரியம் கொண்டவர்கள் இந்துக்கள் என்றே சொல்லவேண்டும். மேல் நாடுகளில் விடுதலை என்ற பதத்திற்கு ஒருவன் தன் அடிமைத்தனத்தை மற்றவனிடமிருந்து மீட்டுக் கொள்வதும், அல்லது ஒரு தேசமே வேறு ஆதிக்கத்திலிருந்து மீட்டுக்கொள்வதையே விடுதலை எனக் கருதுகிருர்கள். மனிதன் பிறக்கும் பொழுதே ஒரு

விடுதலை.

அழியக்கூடிய சரீரத்தை சுமந்துக் கொண்டே பிறக்கிருன். அதனுல் அவன் பல உபாதிகளுக்கு அடிமை ஆகிருன். அவ்வுபாதிகளால் ஏற்படும் அங்கஹீனத்திற்கும், மற்ற அசவுகரியங்களுக்கும் அடிமை ஆகிருன். குழந்தைப் பருவத்தைத் தாண்டி யவ்வனப் பருவத்தில் பலவிதமான உணர்ச்சிகளுக்கும், கஷ்டங்களுக்கும் அடிமை ஆகிருன். பின்பு மணம் செய்து கொண்டு பெண் சாதி-புருடனுக்கும், பிறக்கும் குழந்தைகளுக்கும் அடிமை ஆகிருன். பழக்க-வழக்கங்கள், ஏச்சுக்கள், பேச்சுக்கள் மற்றும் அனேக விதமான சர்ச்சைகளுக்கும், விகாரங்களுக்கும், அடிமை ஆகிருன். இவ்விதமாக ஒரு மனிதன் ஆயுளுள் பல விதமான அடிமைத்தனங்களை ஏற்க - விருக்க, அவனுக்கு விடுதலை என்பது எவ்விதம் கிட்டும்.

நம் நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்ட பொழுதும் கூட இந்துக்கள் விடுதலையின் தத்துவத்தை நன்கு அறிந்தவர்கள் ஆகையால் அதிக சிரமம் இன்றி தம் தம் வாழ்நாட்களைக் கடத்தினர். அந்தக் காலம் இந்துக்கள் பரலோகத்தையும், ஸ்வர்க்கத்தையும் பற்றியே முக்கியமாக கவனிக்கிருர்கள் என்றும், இப் பூலோகத்திலுள்ள தம் பாரத நாட்டைப் பற்றி அவர்களுக்கு கவலை இல்லை என்றும், மேல் நாட்டார் குறை கூறியதும் உண்டு. இந்த சொற்களைக் கேட்டு அறிந்தவர்கள், அறியாமையால் பேசும் பேச்சு என எண்ணினர்.

மனிதன் பல ஜன்மங்கள் எடுத்து அனேக கோடி விதமான கஷ்டங்களுக்கும், அடிமைத் தனத்திற்கும்

விடுதலை.

உள்ளாகி, நல்ல பகுத்தறிவு சக்தியை அடைந்த பின் புங்கூட விடுதலை என்ற பதத்திற்கு தக்க தாத்பர்யம் கொள்ளாவிடில், அவன் மனிதத் தன்மையே இல்லாமல், மிருகத்தன்மையையே கொண்டு இருக்கிருன் என்று சொல்ல வேண்டும். அவனுக்கு விடுதலை என்பதே கிடையாது எனலாம். அவன் மறுபடியும் மறுபடியும் பல ஜன்மங்கள் எடுத்து, விடுதலை இன்றி, அனேக விதமான அடிமைத்தனத்திற்கு உள்ளாகவே வேண்டும். இவ்விதம் மனிதன் விடுதலை அடையாமல் மறுபடியும், மறு படியும் பிறக்க, மேலும் கீழ் ராசிகளான பலவகை ஜந்துக் களும் தம் தம் கர்ம பலனுக்கு உகந்தவாறு காலா காலத்தில் நற்செயல்களால் மனிதனுகப் பிறக்க, பழைய மனிதனுக்கும், புது மனிதனுக்கும், சச்சரவுகள் பல விதங்களில் தோன்றி ஒரு வருக்கொருவர் அடித்துக் கொண்டும், பல துஷ்கர்மங்களைச் செய்துகொண்டும், வாழ்நாட்களைக் கடத்தி மேலும் மேலும் அடிமைகளாகின்றனர்.

ஆயினும் பரிபக்குவம் ஆகி மனிதவர்க்கம் தான் இந்த மாயா உலகில் பிறந்ததின் காரணத்தை அறிந்து ஆசாபாசங்களை நிவர்த்தி செய்து தான் மறு ஜன்மம் எடுக்காமல் சக்தி-ரூபமாகவே மூல சக்தியாகிய கடவுளின் திருவடியை அடைய வேண்டுமென்று அவாகொண்டு தன் அந்திய காலத்தைக் கடத்தி, தனக்குப் பின்னல் மனித உருவம் எடுக்கும் பிராணிகளுக்கு இடம் கொடுக்கு மாகில் இப் பூலோகத்தில் சண்டைகளுக்கும், சச்சரவு களுக்கும் இடமே கிடையாது. மேலும் கடவுள் வேண்டிய

சக்தியைச் செலுத்தி, தன் உடலை அடிமைத் தனத்திலிருந்து நிவர்த்திக்கவும் ஏதுவாகிறது. இவ்விதம் பரிபக்குவம் ஆக வேண்டுமானுல் புத்தி - சித்தி இவ்விரண்டையும் மனித வர்க்கம் பயின்று, சாந்தியோடு தன் வாழ்நாட்களை நடத்த வேண்டும்.

---

# 23. புத்தியும் - சித்தியும்.

புத்தி - சித்தி இவ்விரண்டும் அவைகளுள் ஏற்பட்ட பாந்தவ்யமும் என்ன என்பதை விவரிக்குங்கால், புத்தி என்பதே மனித வர்க்கம் தன் வாழ்நாட்களில் தனக்கு ஏற்படக்கூடிய சுக துக்கங்களை அனுபவித்து, மேலும் கைத் தொழில்களிலும் ஈடுபட்டு, அவைகளுள் காணப்படும் ஈசுவர சக்தியை அறிந்து, உணர்ந்து அச் சக்தியை பலமடங்காகப் பெருக்கி, தன் மூளையை உயர்த்துவதே ஆகும். சித்தி என்பது தன் வாழ்நாட்களில் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருள்களைத் தன்னுடையது என்று ஆசை கொள்ளாமல், எல்லாம் வல்லவனுன கடவுளினுடையதே என்றறிந்து, அவைகளைத் துறப்பதே ஆகும். மனிதன் தன் வாழ் நாட்களில் பலவிதமான அம்சங்களை சேகரித்த போதிலும் அவைகளுக்கெல்லாம் மேலானது புத்தி ஒன்றே. சித்தன் ஆவதற்கு துறக்கவேண்டியது தான் அரும்பாடு பட்டு சம்பாதித்த புத்தியை சக்தி ரூபமாக தெய்வத்

புத்தியும் - சித்தியும்.

திற்கும், உடலை பூமிக்கும் ஆகும். புத்தி அதிகரிப்பதற்கு மனிதவர்க்கம் சுக துக்கங்களில் ஈடுபட்டு அநுபவித்து அடைய்வேண்டியது அவசியம் ஆகிறது.

ஒருவர் சித்திபெற வேண்டுமானால் அவர் புத்தியைப் பெருக்கிக் கொண்டு பின்பு அதையே துறக்கவேண்டும். புத்தியைப் பெறவேண்டுமானால் சத்கர்மங்களைச் செய்தே அதை அடைய வேண்டும். சமீபத்தில் சித்தி அடைந்த பெரியார்களில் ஒருவரே நமது மகாத்மா காந்தி ஆவர். அவர் எவ்வளவு சக்திவாய்ந்தவராக இருந்த போதிலும், புத்திமானாய் இருந்த போதிலும், தான் அடைந்த சக்தி எல்லாம் கடவுளினுடையதே என்பதை உணர்ந்தவர் ஆவர். அவரே மனித வர்க்கத் தினுள் பெரியவரும் பிரும்மஞான தத்துவத்தை முற்றி லும் உணர்ந்த உண்மையான பிராமணரும் ஆவர். இவ்விதமாக மனித வர்க்கம் முன்னேறுமாயின் பூலோ கத்தில் சண்டைக்கும், கூச்சலுக்கும் இடமில்லை. அப் பொழுதே மனிதவர்க்கம் ஈசுவரத் தன்மையை அடைகிறது எனலாம்.

மனித வர்க்கமும் - சகிப்புத் தன்மையும்.

இப்பூலோகத்தின்கண் இவ்விதமான தத்துவத்தை அறிந்தோரும், சிறிதளவாவது தங்கள் வாழ் நாட்களில் உணர்ந்தோரும், பெரும்பாலும் பாரத பூமியில் வசிக்கும் இந்துக்களே ஆவர். அதனாலேயே இந்துக்கள் அகா லத்தில் மரணமடைய மறுக்கிறார்கள். அவர்கள் குடும்ப வாழ்க்கையில் பகுத்தறிவுச்சக்தியைப் பெருக்குவதே தன்

## புத்தியும் - சித்தியும்.

வாழ்க்கையின் கொள்கை என்பதை அறிந்தவர்கள் ஆகையால் சுகம், துக்கம் இரண்டையும் ஒன்றுகப் பாவித்து ஈசுவரத் தன்மையான எல்லாவற்றிற்கும் மேலான "சகிப்பு" த் தன்மையே பெரிதெனக் கருதி, தன் வாழ் நாட்களைக் கடத்துகின்றனர். இந்த வேதாந்தத்தை அறியாதவர்கள், இந்துக்கள் கோழை என்றும், இறப்பதற்கு பயப்படுகிறவர்கள் என்றும், அபிப்பிராயப்படுவதுண்டு. **இந்த அபிப்பிராயத்தை மாற்றி, சகிப்புத் தன்மையின் பொருளை விளக்கி, இந்த மகத்தான உண்மையை மற்ற நாட்டில் உள்ளவர்களுக்குத் தெரிவித்து உலகத்தில் சாந்தி ஏற்படச் செய்வது நலம்.**

இவ்விதம் அறியாமையில் ஆழ்ந்துள்ள பலர் எக்காலத்திலும் இருந்திருக்கின்றனர். இப்பொழுதும் இருக்கின்றனர். அவர்களில் மிகச் சக்தி வாய்ந்தவர்கள் பலர் உண்டு. அவர்களுள் சமீபகாலத்தில் தோன்றிய ஹிட்லரும் ஒருவரே. அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர். தானே தெய்வம் என்று கருதியவர். பிடித்த காரியத்தை நிறைவேற்ற வல்லவர். அவர் இந்து சமுதாயத்தை பின்பற்றி ஸ்வஸ்திகாவைச் சின்னமாகக் கொண்டவர். இவ்வளவு எல்லாம் இருந்தும் அவர் தோற்றுப்போய் தற்கொலை செய்து கொண்டதின் காரணம் ஒன்றே. அதே, தான் அடைந்த சக்தி எல்லாம் தன்னுடையதே என்ற அறியாமையும், அகம்பாவமும் ஆகும். சாதாரணமாக அவருக்கு இருந்த சக்திக்கு மேலும் ஆறுமாத காலம் உயிரோடு இருந்து இருப்பாராகில் உலகமே

வேறு விதமாக மாறி இருக்கும். ஜப்பானில் விழுந்த அணுகுண்டு தற்காலம் அக்கருவியில் சூதாடும் மற்ற எல்லா நாடுகளிலும் விழுந்திருக்கும். இதை அறிந்தே எல்லாம் வல்லவனுன கடவுள் நாடகத்தை வெகு சீக்கிரமே முடித்து, அவ்விஷத்தையும் உண்டார். ஆகையால், மிகவும் சக்தி வாய்ந்தவராக எவரும் இருக்கலாம். ஆனுல் எந்த நிமிடம் அவன், அந்த சக்தி தன்னுடையது, அதை எவ்விதமும் உபயோகப்படுத்தலாம், என்ற மனப்பான்மை அவனுக்கு உண்டாகிறதோ அந்த நிமிடமே அவனுடைய வீழ்ச்சிக்கு ஏற்பாடாகிறது என்ற உண்மையை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

பகுத்தறிவு சக்தியும் - அதன் இருப்பிடமும்.

இந்துமதக் கொள்கைப்படி மானிட வர்க்கத்தில் உட்பட்ட ஒவ்வொருவரும் தம் தம் கர்ம பலனுல் சம்பாதித்த மூளை விருத்தியால் சூர்ய பகவானிடமிருந்து வரப்பட்ட சக்தியை அவரவர் சக்திக்குகந்தபடி கிரஹித்து, அந்தச் சக்தியை பன்மடங்காகத் தன் வாழ்க்கையில் பெருக்கி, கடவுளினிடத்திலே ஒப்புவிப்பதாகும். மானிட வர்க்கம் சூர்யனிடமிருந்து கிரஹிக்கும் சக்தியானது எவ்வளவோ கோடிக்கணக்கான குணமுள்ள சக்திகளை ஒன்ருகச் சேர்த்து சூர்ய வெளிச்சமாகக் கிடைக்கிறது. இதில் எல்லா கிரஹங்களும், ஒரு விதமான புத்தி சக்தியையும் குணத்தையுமே கொடுக்க, நாம் வசிக்கும் பூமியானது மற்ற கிரஹங்களால் கொடுக்க முடியாத பகுத்தறிவு சக்தியை தனக்குள் வளர்த்து அதையே சூர்யனுள் அடைய வழி செய்கிறது.

புத்தியும் - சித்தியும்.

இதை விவரிக்குங்கால் சக்தி என்பது கடவுளினுடையதே என்பதை நாம் அறிந்தோம். அவை சூர்யனிடமிருந்தே நமக்குக் கிடைக்கிறது. அதேபோல் நாம் வளர்க்கும் "பகுத்தறிவு" சக்தியானது சூர்யனுக்கே போய்ச்சேருகிறது. உதாரணமாக நாம் ஒரு ஈர வஸ்திரத்தை உணர்த்துகிறோம். அதில் உள்ள நீரானது சில நிமிஷங்களில் ஆவியாக மாறி நம் கண்ணுக்குப் புலப்படாதபடி, அதன் இருப்பிடமாகிய மேக மண்டலத்தை அடைகிறது. இதேபோல் குளங்களிலும், ஏரிகளிலும், சமுத்திரத்திலும் உள்ள நீரானது, சிறிதளவோ, பெரிதளவோ ஆவியாக மாறி, தங்கள் இருப்பிடத்தையே அடைகின்றன. சிறிதும், பெரியதுமாய், ஆவியாக மாறப்பட்ட நீர்த்துளிகள் பின்பு மழையாக நமக்கு திரும்பக் கிடைக்கிறது. அதேபோல் நாம் வளர்க்கும் பகுத்தறிவு சக்திகள் எல்லாம் சிறியதாய் ஜீவப் பிராணிகளிடமிருந்து வருவதும், பெரியதாய் மனித வர்க்கத்திளிடமிருந்து வருவதும், அந்த சக்திக்கு இருப்பிடமான சூர்யனுக்கே போய்ச் சேருகிறது. அதுவே மழைபோல் மறைமுகமாக மற்ற சக்திகளோடு கலந்து நமக்கு திருப்பித்தரப் படுகிறது.

பகுத்தறிவு சக்தியும் – மனிதனின் முன்னேற்றமும்.

பகுத்தறிவு சக்தியை அரும்பாடுபட்டு வளர்த்து, கடவுளுக்குக் கொடுப்பானேன் என்பது ஒரு முக்கியமான பிரச்சனை. அப்படி நாம் கொடுக்காவிடில் நமது பூமியின் முன்னேற்றத்திற்கே முக்கியமாக மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்கு பங்கம் ஏற்படுகிறது. ஏனெனில்,

விதை போட்டால்தான் சுரைமுளைக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதேபோல் மா விதையைப்போட்டு சுரக்காயை காய்க்க வைப்பதும் நடவாத காரியம். ஆகையால் இப் பூமியில் மட்டுமே பகுத்தறிவு சக்தி வளருவதால் இப் பூமியிலிருந்தே விதைகள் சூர்யனுக்குக் கொடுக்கப்படவேண்டும். நாம் நன்கொடையாகக் கொடுக்கும் இந்த பகுத்தறிவு சக்தி பலவித சக்திகளோடு சேர்க்கப்பட்டு பாரபட்சமன்னியில் சூர்ய வெளிச்சமாக நம் சந்ததிகளுக்கு மறுபடியும் கிடைக்கிறது.

இத்தகைய சக்தி இப் பூமியிலேயே பயிராகி வளர்ந்து திறமைவாய்ந்த விஞ்ஞானிகளின் மூலமாகவும், தத்துவ ஞானிகளின் மூலமாகவும்கூட சிறிதளவு மனித வர்க்கத்திற்குக் கிட்டியபோதிலும், அவை பாரபட்சமன்னியில் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆகையால் சூர்யனிடமிருந்து வரும் விதையை நல்லதாகவும், அதிக அளவிற்கும், கொடுக்கும்படி கடவுளை வேண்டுவதற்கே பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், பூணூல் போட்டுக்கொண்டு காயத்ரீ ஜபம் ஜபிக்கிறார்கள்.

பகுத்தறிவுச் சக்தியை வித்தாகக் கிரஹித்தும் அவைகளைப் பெருக்கி அதிக சக்தி வாய்ந்த விதைகளாக மறுபடியும் நாம் கொடுப்பதால் நமக்கு திருப்பிக் கொடுக்கப்படும் சக்தியானது. நாளுக்கு நாள் உயர்ந்த தரமுள்ளதாகவே இருக்கிறது. இதனாலேயே நமக்குக் கிடைத்த சக்தியைப் பார்க்கிலும், நம்முடைய சந்ததிகளுக்கு கிடைக்கும் சக்தி உயர்தரமாகவே உள்ளது. அதனா

லேயே தகப்பனைப் பார்க்கிலும். அவன் பிள்ளை புத்திமானக இருக்கிருன். இதன் காரணமாகவே சிவபெருமானின் குமாரனுன குமரக்கடவுள் அதிபுத்திமான் எனப்படுகிறது. இவ்விதம் நல்ல விதைகளையும், சக்தி வாய்ந்த, விதைகளையும் விதைத்து அதனுல் உண்டாகும் சக்தியை வளர்த்து, அதனுள் சக்தி வாய்ந்த விதைகளைப் பொறுக்கி மறுபடியும் மறுபடியும் விதைப்பதால் படிப்படியாக மனித வர்க்கம் சக்தி வாய்ந்ததாக முன்னேற்றமடைந்து, கடவுளினுடைய அபாரமான சக்தியையும், கையாண்டு அவைகளைப் பிரித்துக்காட்டும் திறமை வாய்ந்தவர்களாக ஆகின்றனர்.

---

# 24. தாமரைப் பூவின் மூடுபடலமும்-மனித வர்க்கத்தின் முன்னேற்றமும்.

மனித வர்க்கம் இவ்விதம் முன்னேறிக்கொண்டே போனுல் அதற்கு முடிவுதான் உண்டா? அது எத்தகையது என்பது ஒரு பெரிய பிரச்சனை. தற்காலம் மனிதவர்க்கம் இருக்கும் நிலைமையை நோக்குங்கால் அவர்களிடமிருந்து ஒரு சிறிதளவுகூட மிருகத் தன்மை அகன்றதாகத் தோன்றவில்லை. அவர்கள் தற்காலம் விவரித்துக்காட்டும் சக்தியானது, கடவுளின் அபார சக்தியில் எவ்வளவோ கோடி கோடியில் ஒரு பங்குகூட

ஆகா. முதலாவதாக கடவுளின் சக்திதான் என்ன? அது எவ்வளவு என்பதைக்கூட அறிய நாம் சக்தி அற்றவர்களாக இருக்கிரும்.

உதாரணமாக ரசாயன சாஸ்திரத்தின் சக்தியைப் பற்றியும், ரேடியோ சக்தியைப் பற்றியும், நமக்கு ஒன்றுமே தெரியாதெனலாம். இவை இரண்டையுமே சரிவர கையாளும் பட்சத்தில் மனிதவர்க்கம் மிருகங்களேக் கொல்லாமலே மாமிசத்தை உண்டாக்கலாம். மேலும் பாலுக்காக மாடுகள் தேவை இல்லே. பாலே நாமே உற்பத்தி செய்யலாம். பால் மாட்டு வயிற்றில் உற்பத்தி ஆகிறது. அதாவது, வைக்கோலும், புல்லும், மற்ற உணவுகளும் அதன் உடலில் சென்று பலவித திராவகங்களால் சேர்க்கப்பட்டு, மெழுகுபோல் அரைக்கப்பட்டு. பின்பு அதற்கு பல மாறுதல்கள் ரேடியோ சக்தியால் உண்டாக்கி, பின்பே பாலாக மாறுகிறது. இதையே ஒரு யந்திரமாகச் செய்து ஒரு பக்கம் புல்லேயும், வைக்கோலேயும், வேறு உணவு பதார்த்தங்களேயும் கொடுக்க, மற்ருெரு பக்கம் பாலாக எடுக்கலாம். இது முடியாத காரியம் அல்ல.

ஆனல் இப்பொழுது நமக்கிருக்கும் குறுகிய மூளே விருத்தியில் இந்தக் காரியம் கைகூடாது. பல ஜனங்கள் இதை வாசித்து, பரிகசிக்கலாம். யந்திரத்தினல் பால் உண்டாக்கலாம் என்ற மிகச் சிறிய விஷயத்தை நம்பாதவர்களுக்கு மனிதன் மனிதனேப்போலொத்த யந்திரங்களே உண்டாக்கும் காலம் வரக்கூடும் என்ப

**தாமரைப்பூவின் மூடுபடலமும்-மனிதவர்க்க முன்னேற்றமும்.**

தாகக்கூறினல் அது எவ்வளவு ஆபாசமாகத்தோன்றும். இதற்கெல்லாம் மனிதனுடைய மூளைக் குறைவே காரணம். ஒருக்கால் பல ஆயிரம் வருடங்களே சென்ருல் இவ்வார்த்தைகளின் உண்மை புலப்படும்.

அக் காலம் வரும்பொழுதுதான் மனித வர்க்கம் கடவுளினுடைய பூரா சக்தியையும் விவரித்துக் காட்டுகிறதெனலாம். அப்பொழுதே தாமரைப்பூ மூடு படலம் ஆரம்பமாகிறது. அம்முடிவுகாலம் வர, பல லட்ச வருஷங்கள் கழியலாம். அதன் மத்தியில் மனிதன் கடவுளினுடைய எல்லாவிதமான சக்தியையும் கையாள உட்படுவான். சூர்ய வெப்பத்தினுல் உண்டாகும் எல்லா சக்திகளேயும் நேராகக் கையாண்டு விமானங்களும், பாக்டரிகளும் ஓடும்படி செய்யக்கூடும். மேலும் உயிர்நிலே எத்தகையது என்பதையும் அறிந்து அதையும் கையாள ஆரம்பிப்பான்.

**கலேகளும் - யுத்தமும்.**

இதன் மத்தியில் எல்லாக் கலேகளும் முன்னேற்றமடையும். இதில் யுத்தம் என்பது ஒருவிதக் கலேயாகையால் இவ்விதமான சண்டை மனிதன் தன் ஆத்ம சக்தியை அறிந்து, காந்திஜியைப் போல் உள்ளவர்கள் மனப்பான்மை கொள்ளும்வரை நடந்தே தீரும். இச் சண்டையானது சுமார் 25, 30 வருடங்களுக்கு ஒரு முறை நடக்கக்கூடும். அதாவது குருவும் சனியும், மகரம் - கும்பம், மீனம் ராசிகளில் சேரும்போது ஏற்படுகிறது. சனி சூர்யனே 30 வருடங்களில் சுற்றி வருகிறது. குருவோ 12 வருடங்களில் சுற்றி வருகிருன்.

இவ்விரண்டு சுற்றுதலுக்கும் சுமார் 25-30 வருடங்களுக் கிடையே மேலே சொன்ன மூன்று ராசிகளில் சங்கமம் ஏற்படுகிறது. இவ்விரண்டு கிரஹங்களும், ஒன்று காரியமாகவும், மற்றொன்று காரணமாகவும் வேலை செய்கிறது. இறப்பில்லையேல் பிறப்பில்லை. பிறப்பில்லை யேல் இறப்பில்லை. மொத்தமாக சுமார் 25 வருடங்களில் பிறப்பிக்கப்பட, 5 வருடங்கள் இறப்புக்குக் காரண மாக இருக்கிறது. இக்காலத்தில் சண்டை ஏற்படாத வரையில், வேறு எவ்விதத்திலாவது மனித வர்க்கத் திற்கு அழிவு ஏற்படலாம். இதுவே பூமியில் நடு நடுவே ஏற்படும் அசடுகளை விலக்கி, விஷத்தை அகற்றி, முப்பது வருடங்களுக்கு ஒரு முறை சுத்தப்படுத்தி, பூமியில் அமிர்தம் வளரச்செய்யும் முறை ஆகும். விஷத்தை சிவன் உண்டார் என்பதின் தாத்பர்யமும் இதுவே. இச் சண்டைகளில், தற்காப்புக்காகவும், லோக க்ஷேமத்திற்காகவும், உயிர் தியாகம் செய்பவருக்கு வீர சுவர்க்கம் உண்டென்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்ததை எல்லோருக்கும், எத்தேசத்திற்கும், எக்காலத்திலும் பொருந்தும்.

சண்டை என்பது அறிந்தவர்களுக்கு வேண்டாத வஸ்து ஆகும். அதே அறியாதவர்களுக்கு அவசியம் ஆகிறது. இரண்டாவது மகா யுத்தத்திற்கு முன்பு இருந்த பாமர மக்களின் மனப்பான்மைக்கும், அந்த யுத்தத்திற்குப்பின் அவர்களுக்கு ஏற்பட்ட மனப்பான்

மைக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. சண்டைக்கு முன்பு அணுசக்தியைப் பற்றி அறிந்த பாமர மக்கள் இல்லை என்றே சொல்லலாம். அக்காலம் ஒரு சில விஞ்ஞானிகளுக்கே சிறிதளவாவது அதன் சக்தி விபரம் தெரியலாயிற்று. சண்டைக்குப் பின் அதன் விபரம் ஒவ்வொருவருக்கும் சிறிதளவாவது புரிந்துவிட்டதல்லவா? இதனுல் சண்டை என்பது அறிவை அறியாதவர்களுக்குக் கொடுத்து சமப்படுத்தும் கருவி ஆகிறது. மேலும் ஒரு நாட்டு ஐக்கியத்திற்கும், மக்களின் மனஉறுதிக்கும், நல்ல உழைப்புக்கும்கூட உதவுகிறது. இவ்விதம் மத்தி மத்தியில் சமப்படுத்தாத வரையில் மானிடவர்க்கத்திற்கு முன்னேற்றமே கிடையாது.

மனிதன் எந்த தேசத்தில் பிறந்தாலும், எங்கு வளர்ந்தாலும் அவன் ஒரே குலத்தைச் சேர்ந்தவன் ஆவான். ஒரே குலத்தைச் சேர்ந்தவர் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வது தகாத காரியம் ஆகும். சண்டைபோட வேண்டுமானுல் மனிதன் தன்னைப் படைத்த தெய்வத்தோடு சண்டைபோடுவதே முறை ஆகும். இவ்விதம் சண்டைபோட்ட பெரியாரில் ஒருவரே, ரமண ரிஷி ஆவர். அவர் குடும்ப வாழ்க்கையையே வெறுத்தார். மாய வலையில் சிக்கி, ஆசாபாசங்களுக்கு அடிமையாக மறுத்தார். அவரே கடவுள் மயம் ஆனுர். மனிதவர்க்கம் இம் மனப்பான்மை கொள்ளும் வரை சண்டை நடந்தே திரும்.

ஆயினும், மனிதன் முன்னேற்றமடைந்து, கடவுளினுடைய பூராசக்தியையும் விவரித்துக் காட்டும் நிலையில்,

மனித வர்க்கமும், ஜீவப் பிராணிகளும் மறைந்துபோகும். தாவர வஸ்துக்களும் வளரா. எல்லா உற்பத்தியும் நின்றுவிடும். உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் ஆதாரமாக உள்ள சூர்யனிடமிருந்து வெளிவரும் ஜீவாத்ம - சக்தி வெளிவராது. அப்பொழுதே சிவபெருமான் யோக நிஷ்டையில் இருப்பதாகக் கருதப்படுகிறது. அதுவே, உறங்குவதற்கொப்பாகும். பல பல வருஷங்களுக்குப் பின் மறுபடியும் பிரியலாம். அப்பொழுதே ஜீவாத்ம - சக்தி வெளி வர ஆரம்பித்ததின் காரணமாக புல் பூண்டுகளும், ஜீவப் பிராணிகளும், உற்பத்தியாகி, பின்பு மனிதன் உருவெடுக்க வேறே ஒரு சகாப்தம் உதயம் ஆகும். இதுவே உறங்கிய தெய்வம் விழிப்பதற்கொப்பாகும்.

## 25. ஆலயங்களில் உள்ள சிற்பங்களும், அவைகளின் உபயோகமும்.

முன் அத்யாயங்களில் சொன்னபடி இந்துக்களுக் கான, ஏன் மனிதவர்க்கத்தில் உட்பட்ட எல்லோருக் குமே அவரவர் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக் கொள்ளாவிட்டாலும், சக்தி – சிவம் என்பதே தெய்வம் ஆகிறது. ஏனெனில், மனித வர்க்கத்தை உண்டாக்கு வதும், வளர்ப்பதும், பின்பு சிவமயமாக்குவதும், இது ஒரே தெய்வம்தான். இந்த சக்தி – சிவம் இல்லாவிடில் மனித வர்க்கத்திற்கே இப் பூலோகத்தில் இடமில்லை

என்பது எல்லோருக்கும், தெரிந்த - தெரியவேண்டிய விஷயம் ஆகும். இந்த சக்தி-சிவம் என்ற தெய்வத்தை சிருஷ்டித்த தெய்வம் வேறு ஒன்று இருக்கிறது என்று வாதாடும் பட்சத்தில் அந்த தெய்வத்தைப் படைத்தவர் ஒருவர் இருக்கவே வேண்டும். மறுபடியும், அவரைப் படைத்தவர் வேறொருவர் இருக்க வேண்டும். இவ் விதம் வாதாடிக்கொண்டே போனால் அதற்கு முடிவே கிடையாது எனலாம். **மேலும் ஆகாசம் என்பது எல்லா விடத்திலும் ஒரு எல்லை இல்லாமல் பரவி இருப்பதாலும், அதுவே மிகவும் சக்தி வாய்ந்ததாக இருப்பதாலும், அதைத் தவிர வேறு தெய்வம் இருக்க இடமில்லை என்றும், நாம் பார்ப் பதே தெய்வம் என்றும் நம் முன்னோர் கருதினர். அச்சக்தியை எடுத்துக்காட்டும் கருவியே சிவம் என்று முன்னமேயே கூறப் பட்டு இருக்கிறது.**

சிற்பமும் - சிவலிங்கமும்.

சக்தி - சிவம் என்பதை நேராகத் தொழுவதையே சூர்ய நமஸ்காரம் என்பர். இந்த சூர்ய நமஸ்காரத்தைப் பற்றி பல நூல்கள் உள. ஆயினும் எல்லோரும், எப் பொழுதும், இவ்விதமாகத் தொழுவது அசாத்தியம் ஆகையால், அத்தெய்வத்தை, பாவம், சித்திரம், சிற்பம் என்ற மூன்று விதங்களால், பாமர ஜனங்கள் இரவோ, பகலோ, எப்பொழுதும் தொழும்படியான சவுகர்யங்களை உண்டு பண்ணி இருக்கிறார்கள். இதனுள் சக்கர-ஸ்தா பனமே சிலாக்கியமெனக் கருதினபோதிலும், அந்தச் சக்கரமானது சிறியதாக சில அங்குலங்களே நீள அகலம்

உள்ள 'தகட்டினுள் ஆவாகனம் செய்து இருப்பதால் அது சாதாரணமாக ஆலயங்களில் ஒரே சமயத்தில் கூடி இருக்கும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு காட்சி அளிப்பது இயலாத காரியம். ஆதலால், ஆலயத்தி லுள்ள கர்பகுடியில் சக்கர ஸ்தாபனம் ஆகி இருக்கும் இடத்தில் ஒரு மூன்று அளவில் செய்யப்பட்ட சிலையோ சிற்பமோ, ஸ்தாபிக்கப்படுவது வழக்கம். இவ்விதம் ஸ்தாபிக்கப்பட்ட சிற்பங்களில் சிவலிங்கமே முதன்மை யானது. இதுவே பாரத பூமியில் சிற்பக்கலைக்கு ஆதாரம் ஆகிறது.


**சிவலிங்கமும் – ஆலயங்களும்.**

சிவலிங்கத்திற்கு இருப்பிடமாகக் கொண்டதே ஆலயங்கள் ஆவன. அவைகளின் உற்பத்தியைப் பற்றி நமது ஆலயங்கள் என்ற அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயங்களில் உள்ள முக்கியமான அம்சம், தெய்வ சாந்நித்யமே. ஆலயங் களிலுள்ள ஒவ்வொரு அங்கத்தையும் சோதித்துப் பார்த்தால் அதில் தெய்வத்தின் பிரதிபலிப்பு நன்கு விளங்கும். உதாரணமாக ஒரு ஒழுங்கானதும், நேரா னதுமான கோட்டை கீழிருந்து மேலாகப் போடுவோ மானல், அது தெய்வத்திற்கு வணங்காமலும், பூமியின் ஆகர்ஷண சக்திக்கு பணியாமலும் இருப்பதாக நமக்குத் தெரியவருகிறது. அதையே கொஞ்சம் வளைந்தாற் போல் போட்டோமாகில், அது தெய்வத்திற்கு தலை வணங்குகிறது என்பதான உணர்ச்சி நமக்கு ஏற்படு

ஆலயங்களிலுள்ள சிற்பங்களும், அவைகளின் உபயோகமும்.

சித்திரம் 12.

ஆலயங்களிலுள்ள
முக்கிய ஸ்தம்பங்களின் விபரம்



கிறது." இந்த வித்தியாசமே தற்காலத்து சிற்பக் கலைக்கும், முற்காலத்து சிற்பக் கலைக்கும் ஆதாரம் ஆகிறது. முன் காலத்தில் வளைவுகளுக்குத் தனி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் தற்காலத்து சிற்பக்கலைக்கு வளைவு கொடுப்பதே அனுகரீகம் எனக் கருதப்படுகிறது. இதுவே முன் நாளில் ஏற்பட்ட தெய்வ பக்திக்கும் தற்காலம் ஏற்பட்டுள்ள மனப் பான்மைக்கும் ஆதாரமாகிறது. இதன் முக்கிய காரணம் மேல் நாட்டு நாகரீகத்தின் ஆதிக்கமே ஆகும். மேல் நாட்டு நாகரீகத்தின் ஆதிக்கத்திற்கு சிமண்டு உற்பத்தியும், யந்திர சாதனங்களின் வளர்ச்சியும் ஆதாரமாகிறது.

ஆயினும், நம் நாட்டு ஆலயங்களுக்கு ஆதாரமாக ஏற்பட்ட ஸ்தம்பங்களின் அளவு (Standard) சித்திரிக்கப்பட்டதை படத்தில் காணலாம். அவைகளெல்லாம் காதுக்கு ராகங்கள் எவ்வித உணர்ச்சியைக் கொடுக்கிறதோ, அதேபோல் கண்ணுக்கு ஒரு உணர்ச்சியைக் கொடுப்பதாகும். மேலும், அவைகளுள் ஒவ்வொரு வளைவும் ஈசுவர சாந்நித்யம் உடையதாகவும், சூர்ய வெளிச்சத்தை அகற்றி நிழல் கொடுக்கக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளன என்பது தெரியவரும். இதுவே கீழ் நாடுகளின் கட்டடக் கலைக்கு ஆதாரமாகக் கொண்டது.

# 26. சிவலிங்க உற்பத்தி.


**சக்தியும் - உலோகங்களும்.**

ஆகாசத்தில் வாயு ரூபமாக இருந்த உலோகங்களே நித்யமான பிரும்ம சக்தியின் அருளால் பலவித தூல சரீரத்தைக் கொண்டதும், வாயு சரீரமும் தூல ரூபமும், தூல சரீரமும், வாயு ரூபமும் கொண்ட நட்சத்திரங்கள் ஆயின. சக்திவாய்ந்த ஆகாசமும், தூல சரீரத்தைக் கொண்ட நட்சத்திரங்களுமான "பராசக்தியே" சூர்ய மண்டலமான ஒரு அபார யந்திரத்தை உருவாக்கின. இதனாலேயே பராசக்தியை சூர்ய மண்டலத்தின் தாய் என்கிறோம். சூர்ய மண்டலத்தின் வயிற்றில் நாம் வசிக்கிறோம். நம்முடைய தூல சரீரம் திராவக ரூபமாக உள்ள அதே உலோகங்களால் ஆக்கப் பட்டவை. நாம் தூல சரீரத்தை கலப்பாகக் கொண்ட உலோகங்களை பூமியிலிருந்து தோண்டி எடுத்து, அதையே பலவிதமான யந்திரங்களாக மாற்றுகிறோம். அதனால் பூமியிலுள்ள உலோகங்களுக்கு நாமே கடவுள் ஆகிறோம். இவ்விதம் சக்தியும், உலோகங்களைக் கொண்ட சிவமும், சங்கிலி போலொத்த ஒரு முறையைக் கையாண்டு காரணமும், காரியமுமாக மாறி மாறியே வேலை செய்கிறது. அதன்படி நமது பூமியிலுள்ள உலோகங்களுக்கு நாமே கடவுள் ஆகிறோம். நமக்கு நம்மைப் படைத்த சூர்ய மண்டலமே தெய்வம் ஆகிறது. சூர்ய மண்டலத்திற்கு அதை உருவாக்கின சக்தி

## சிவலிங்க உற்பத்தி.

வாய்ந்த ஆகாசமும், நட்சத்திரங்களுமே, தெய்வத் தாயாகிறது. அதனுல், நமக்கு சூர்ய மண்டலமும், அதன் தாயாகிய பராசக்தியும் கடவுளாகிறது. சூர்ய மண்டல மான சிவத்தையும், அதன் தாயாகிய பராசக்தியையும் சிலை ரூபமாக சிற்பித்ததே "சிவலிங்கம்" ஆகிறது.

சித்திரம் 13.




ஹிமயமும் - சிவலிங்கமும்.

சிவலிங்கம் உற்பத்தி ஆன காலம் நம் நாட்டில் ஆர்யர்களும், திராவிடர்களும் விஜயம் செய்தபொழுதே எனக் கருதப்படுகிறது. அவர்கள் விஜயத்திற்கு முந்தி பாரத பூமியில் சிவலிங்கம் இருந்ததாகவே தெரிய வில்லை. அவர்கள் முதன்முதலில் விஜயம் செய்த பொழுது நம் நாட்டிலுள்ள ஹிமயபர்வதத்தின் பெருமை யையும், சக்தியையும், அதனுல் உண்டான கணக்கிட

**சிவலிங்க உற்பத்தி.**

முடியாத சவுகர்யங்களையும், கண்டு மகிழ்ந்து, நம் தேசத்தையே சக்தி – சிவத்திற்கு ஒப்பிட்டனர். கவிகள் அவரவர் வெளியிட்ட காவியங்களில் ஹிமயபர்வதத்தை சிவமாகவும், கங்கை நதியைச்சார்ந்த சமபூமிகளைச் சக்தியாகவும் பாவித்துப் பாடினர். இத்தகையான காவியங்கள் சிற்பிகளுக்கும், சித்திரக்காரர்களுக்கும் ஊக்கத்தையும், மனப்பான்மையையும் கொடுத்தது. பின்பு மூன்று அளவில் அமைந்துள்ள சிற்பம் செய்வதற்கு சமயம் வாய்த்தபொழுது **ஹிமயபர்வதத்தை சிவமாகவும், அதாவது சிவலிங்கத்தின் மேல்பாகமாகவும். அப் பர்வதத்தின் தெற்கு பாகத்தினுள் கிழக்கு முகமாக ஓடும் கங்கா நதியையும் அந்நதியைச் சார்ந்த நாடுகளையும், சக்தியாக பாவித்து சிவலிங்கத்தை மனதில் ஆவாகனம் செய்துகொண்டனர். பின்பே சிவலிங்கமாக சிற்பிக்கப்பட்டது. இதுவே நம் நாட்டு சிற்பங்களுக்கு ஆதாரம் ஆகிறது.**

சிவலிங்கத்தின் உயர்ந்த பாகம் ஹிமய பர்வதத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அதன் கீழேஉள்ள பாகம், அப்பர்வதத்திற்கு தெற்கேயுள்ள சமவெளிகளை காண்பிக்கிறது. அதனுள், மத்தியில் உள்ள பள்ளமான வாய்க்கால்போல் செதுக்கப்பட்ட இடம் கங்கா நதியைக் குறிக்கிறது. அச் சிவலிங்கத்தின் பாதமே தென் நாட்டைக் குறிக்கிறது. திராவிடர்கள் செய்துள்ள அநேக காவியங்களுள் சிவன் தன் சிரசில் கங்கையை வைத்துக் கொண்டிருக்கிறுர் என்றும், அப் பெண்மணி தன் நிலைமையைக்கண்டு வெட்கி, வணக்கத்துடன் சிவன் பாதம் வழிஓடி சக்தியோடு அதாவது ஸ்திரீ ரூப

மாக கிருதப்பட்ட கடலோடு ஐக்கியம் ஆகிறுள் என வர்ணித்திருக்கிறுர்கள். இந்தக் காவிய அலங்காரத்தின் உண்மை எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

ஆகாச கங்கையும் – பூஜா விதிகளும்.

ஹிமயத்தின் உச்சியில் சதாசர்வ காலம் பனியானது பூவால் அர்ச்சனை செய்வது போல் வர்ஷித்துக் கொண்டே இருக்கிறது. பூப்போல் மிருதுவான சரீரத்தை உடையவளாய் மலையின் உச்சியில் இறங்கியதையே ஆகாச கங்கை என்றனர். அவ்விதம் இறங்கி உறைந்த பனியானது வெயில் காலத்தில் உருகி நீர் ரூபம் எடுத்து கங்கா நதியாக ஓடுகிறது. இந்தக் காவிய அலங்காரத்தின்படியே வடதேசத்திலுள்ள ஆலயங்களில் சிவலிங்கத்திற்கு மேலாக ஒரு மண்பாண்டத்தைத் தொங்கவிட்டு, அதனுள் நீரை நிரப்பி, அந்த நீரை ஒவ்வொரு சொட்டாக லிங்கத்தின் சிரசில் விழும்படி ஏற்பாடு செய்து இருக்கின்றனர். இதையே விஸ்தரித்து, தெற்கே உள்ள ஆலயங்களில் அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை என்பதாகப் பல முறைகள் ஏற்படுத்திக் கொண்டனர்.

ஹிமயபர்வதத்தின் அடிப்பாகத்திலுள்ள சில ஆலயங்கள் அம்மலையிலுள்ள குகைகளே ஆகின்றன. அந்த ஆலயங்களில் குகைக்கு மேல்புறமுள்ள மலையின் சிறு துவாரங்களிலிருந்து நீர் சொட்ட, அந்நீர் கீழே வருவதற்குள் அதிக குளிர் ஆனதால், பனியாகவே மாறி லிங்கமாகிறது. அதுவே வெயில் காலங்களில்

## சிவலிங்க உற்பத்தி.

உருகி சிறிய லிங்கங்கள் ஆகின்றன. ஆனால் அவ்விடங்களில் ஜன நெருக்கடி கிடையாது. திராவிட நாட்டில் உள்ளபடி பூஜா விதிகளும் கிடையாது. ஆயினும் பூஜை நடக்கும் சிற்சில ஆலயங்களில் திராவிட நாட்டாரே அநேகமாக கைங்கர்யம் செய்து வருகின்றனர்.

இக் கைங்கர்யத்தில், நாகரீகமானது தமிழ், கேரள நாடுகளில் உற்பத்தியாகி, மத்திய பாகத்தில் வளர்ந்து, வடக்கு பாகத்தில் சிவமயமாகிறது எனப்படுகிறது. இதற்கு அத்தாட்சியாக பாரதத்தின் தெற்கு பாகத்திலுள்ள பெரும்பாலோர் பிரும்ம ஸ்வரூபியான ஸ்ரீ சுப்பிரம்மண்யத்தையும், மத்திய பாகத்திலுள்ளோர் விஷ்ணுவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானையும், வடக்கு பாகத்திலுள்ளவர்கள் சிவனையும் பூஜிக்கிறார்கள்.

## சிவலிங்க உற்பத்தி விபரம்

| | | | |
|---|---|---|---|
| சக்தி | ... | ... | சிவம் |
| ஆகாசம் | ... | ... | நட்சத்திரங்கள் |
| நட்சத்திரங்கள் | ... | ... | சூர்யமண்டலம் |
| சூர்யமண்டலம் | ... | ... | பூமி |
| பூமி | ... | ... | நாடுகள் |
| நாடுகள் | ... | ... | பாரதம் |
| பாரதம் | ... | ... | ஹிமயம் |

சிவலிங்கம்

**சிவலிங்கம் வைக்கப்படும் விதம்**

சிவலிங்கம் பாரதத்தையும், ஹிமயத்தையும் பாவமாகக் கொண்டது. அதன் மேல்பாகமே ஹிமயம் ஆகிறது. சக்தியைப் பாவமாகக் கொண்ட கீழ் பாகத்தில் வாய்க்கால் போல் உள்ள இடமே கங்கை நதியைச் சுட்டிக் காட்டுகிறது. கங்கா நதி கிழக்காகவும், தெற்காகவும் ஓடுகிறபடியால், சிவலிங்கம் எங்கே ஸ்தாபனமான போதிலும், அதன் சக்தியின் முகவாய் கிழக்கேயோ அல்லது தெற்கேயோ பார்க்கும்படி வைப்பது முறை ஆகும்.

**சிவலிங்கமும் – பாரத தேசமும்.**

சிவலிங்கம் என்பது சக்தி – சிவம் இரண்டையும் சேர்த்து ஒரு சிற்பம் ஆக்கியதே ஆகும். சிவலிங்கம் பாரத தேசத்தையே சுட்டிக் காட்டுகிறபடியால், அதன் அடிபாகம் பிரும்ம ஸ்வரூபம் என்றும், மத்திய பாகம் விஷ்ணு ஸ்வரூபம் என்றும், மேல் பாகம் சிவ ஸ்வரூபம் என்றும் சிலர் கருதுவர். இதையே சிற்பமாக்குங்கால் கீழ் பாகத்தை எட்டுப்பட்டை உடையதாகவும், மத்திம பாகத்தை பதினாறுபட்டை உடையதாகவும், மேல் பாகத்தை வட்ட வடிவமாகவும் சிற்பிப்பதுண்டு விசேஷமாக சிவலிங்கத்தை கற்பகுடியை விட்டு வெளியே வைப்பது வழக்கம் அல்ல. இச் சிற்பம், தெய்வத்தின் மகா சக்திகளான மனம், குணம், பகுத்தறிவு இம் மூன்றையும் சிற்பித்ததாகும். மனமும், குணமும்கொண்ட பராசக்தியும், பகுத்தறிவுச் சக்தியைக் கொண்ட ஆளும் சக்தியான சூர்ய

## சிவலிங்க உற்பத்தி.

மண்டலமும், தாயும் பிள்ளையும் போல் அவதரித்துள்ளன. இவ்வித சக்தியையும், சிவத்தையும் சிலையாக்கியதே சிவலிங்கமாகிறது. இதுவே பாரத தேசத்தையும் ஹிமயத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

### கற்பகுடியும் – சிவலிங்கமும்.

கற்பகுடி என்ற பதத்திற்கு தாயின் வயிறு என்பதே தாத்பர்யம். அதாவது, தெய்வக்குழந்தை வசிக்கும் இடம் என்பதே. இந்த அபிப்பிராயத்தைப் பாவமாகக் காட்டியதே கற்பகுடி ஆகிறது. அதாவது சிவலிங்கமும், சிலைகளும் வைக்கப்படும் இடமாகிறது. இந்த பாவத்தில் ஒரு சிறு இருட்டு அறையே தாயின் வயிருகிறது. அதனுள் நிர்மானிக்கப்பட்டுள்ள சிலையே சிவமாகிறது. இதுவே கற்பகுடிகள் சிறியதாக அமைக்கப்பட்டு அதனுள் சிவமாகிய சிலை நிர்மானிக்கப்பட்டதின் முக்கிய காரணம். மேலும் கற்பகுடி மேல் கோபுரம் கட்டுவதற்கும், கற்பகுடியைச் சுற்றி பிராகாரங்கள் ஏற்படுத்துவதற்கும். சிறிய கற்பகுடிகள் அவசியம் ஆகிறது.

இவ்விதம், சிவலிங்கமும் சிலைகளும் கற்பகுடியில் வைக்கப்பட்டும், பல உலோகங்களால் உண்டாக்கப்பட்ட விக்ரஹங்களே திறந்த வெளியில் கூடி இருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு தரிசனம் கொடுக்க வெளிவரும் தெய்வம் ஆகும்.

# 26. விக்ரஹங்களும் - கேளிக்கைகளும்.

இரண்டு அளவில் செய்யப்பட்ட சக்கரங்களும், மூன்று அளவில் சிற்பிக்கப்பட்ட சிவலிங்கமும், இப் பூலோகத்திலுள்ள எல்லா மனித வர்க்கத்திற்கும், ஒரே தெய்வம் ஆகிறது. சக்கரங்கள் எல்லா-மனித வர்க்கத் திற்கும் பொதுவான சக்தியையும், சிவமான சூர்ய மண் டலத்தையுமே சுட்டிக் காட்டுகிறது. சிவலிங்கமும் அதன் அமைப்பிற்குக் காரணமாயுள்ள ஹிமயபர்வதமும், இப்பூமியிலுள்ள எல்லா சிகரங்களுக்கும் உயரமானதும், சக்தி ரூபமான எல்லா நாடுகளுக்கும் சிவமாகவே கருதப்படுகிறது. இவை இரண்டையும் கற்பகுடியாகிய ஒரு சிறு அறையிலேயே வைப்பது வழக்கம். அவைகளுக்குப் பூஜாலங்காரங்கள் காலாகாலங்களில் நடைபெறும். ஆயினும் ஆயிரக்கணக்காகக் கூடியிருக் கும் பாமர ஜனங்களுக்கு ஈசுவரத் தன்மையை உண்டாக்கும் பொருட்டு அநேக விதமான கேளிக்கைகளை கையாண்டு வருகின்றனர்.

இக் கேளிக்கைகளில் மனிதன் எந்த எந்த வழி யில் மிருகத்தனமாக நடந்து கொள்ளுகிருனே அல்லது நடந்து கொள்ள ஏது இருக்கிறதோ, அவைகளை ஒரு நாடகமாக ஆடிக்காட்டி நல்ல புத்தியை புகட்டுகின்ற னர். இப்படி தினந்தோறும், மேலும் சில பெரிய நாட் களிலும், கடவுளை மனிதவர்க்கம் போல் சிங்காரித்து, அக் கேளிக்கைகளுக் குகந்தவாறு பெண் ரூபமோ

அல்லது புருட ரூபமோ ஏற்கச் செய்து, அதற்கு வேண்டிய பரிவாரங்களாகிய சில்லரைத் தெய்வங்களும் அதேபோல் அக்கேளிக்கைகளுக் குகந்தவாறு அலங் கரிக்கப்பட்டும், சங்கீதமும், நர்த்தனமும், இடை இடையே உண்டுபண்ணி ஜனங்களுக்கு பொழுது போக்கைச் செய்வதுமல்லாமல், கெட்ட மனப்பான் மையை அகற்றவும், முயற்சிக்கப்படுகிறது. கேளிக்கை களுக்காக அலங்கரிக்கப்பட்ட விக்ரஹங்களெல்லாம் மனித ரூபமாகவே ஐந்து உலோகங்கள் கலந்த சிலை களாக வார்க்கப்படுகின்றன. ஆயினும், சில ஆலயங் களிலுள்ள திரவ்யக் குறைவால் மரத்தால் செய்து வர் ணம் பூசுவதும் உண்டு. அவை சாதாரண மனிதனைப் போல் இருப்பதில்லை. அவைகளுக்கு ஈசுவரத் தன்மை யான ஒரு சிங்கார ரூபத்தை கொடுக்கின்றனர். இந்த ரூபங்களின் அஸ்திவாரமே பாரத நாட்டின் சித்திரத்திற்கும், சிற்பத்திற்கும் ஆதாரம் ஆகிறது. இந்த ரூபங்களை விவரிக் குங்கால் அவைகள் ஒரு மனிதனுக்குள்ள லட்சுமி கடாக்ஷம் அல்லது ஈசுவரத் தன்மையைச் சிறப்பித்ததாகும்.

இக்கேளிக்கைகளில் பாடுவதற்கும் நர்த்தனம் ஆடு வதற்கும் சிலைகள் உபயோகப்படாததால் தேவதாசிகள் என்று சொல்லப்பட்ட சங்கீதம், நர்த்தனம் இவைகளில் பயிற்சி பெற்ற பெண்மணிகளை உபயோகப்படுத்துவது வழக்கம். கவிஞர்களும், கலாபிமானிகளும், தாங்கள் சிங்காரித்த காவியங்களையும், சிற்பம், சித்திரம், நாடகம் முதலானவைகளையும், அவைகளின் ஆராய்ச்சிகளையும் ஆலயங்களிலேயே அரங்கேற்றுவதும் வழக்கமானது.

இவ்விதமாக ஆலயங்கள் கல்விக் கழகங்களாகவும், கலாநிதிகளாகவும் முற்காலத்தில் இருந்து வந்தன. ஆனல் இப்பொழுதோ எல்லா கலைகளும், தனித் தனியே முன்னேற்றமடைய ஆரம்பித்தபடியால், ஆலயங்களுக்குப் புத்துயிர் கொடுத்து அவைகளை சிறந்த முறையில் வழிபடச் செய்யவேண்டியது மக்களின் பொறுப் பாகும்.

**ஆலயங்களும் - ஆதாரக்கல்வியும்.**

ஆலயங்கள் முக்கியமாக சிறுவர்களுக்காகவே ஏற் பட்டவை. அச்சிறுவர்களுக்குப் பாரபட்சமன்னியில் எல்லா மதத்தாருக்கும், எல்லா இனத்தாருக்கும் தெய்வ பக்தியை உண்டாக்குவதும், கல்வியில் தேர்ச்சி அடையச் செய்வதும், ஆலயங்களுடைய முக்கிய பணி ஆகும். இவ்வாலயங்கள் ஆதாரக் கல்விக்கு மிகவும் சிறந்த இடங்களே ஆகும். சிறுவர்கள் மூன்று வயது முதற் கொண்டு பத்து வயது வரையில் கல்வி பயிலுவதற்குத் தகுதியான இடம் ஆலயங்களே. இவைகளில் சிறுவர் களுக்கு ஆதாரக் கல்வியும், சித்திரம், சிற்பம், நடனம், நாடகம், சங்கீதம் முதலானவைகளும், தேகப் பயிற்சியும் ஏற்படுத்தி, ஆலயங்களை காலை எட்டு மணி முதல் இரவு எட்டு மணிவரை கலகலப்பாயுள்ள கல்விக் கழகங்களாகச் செய்வது மிகவும் பொறுத்தமானது. இக்காலம் வேத பாராயணத்திலும், சாமகானத்திலும் சிறிதளவாவது பயிற்சி ஏற்படுத்தப்படுவதும் நலம். இந்தப் பணியில் அர்ச்சகர்களும் பக்தசிரோன்மணிகளான ஆண்மக்களும்

பெண்மக்களும் ஈடுபடலாம். இவ்விதம் தேர்ச்சி அடைந்த சிறுவர், சிறுமிகளை கேளிக்கைகளுக்காக, தேவதாசிகளுக்குப் பதிலாக உபயோகப்படுத்தி ஆலயங்களில் கேளிக்கைகளுக்குப் புத்துயிர் கொடுக்கலாம். மேலும், அறியாதவர்களுக்கும், முதிர்ந்தவர்களுக்கும், கல்வி ஏற்படுத்தியும், பிரும்ம ஞானத்தை உணருமாறு அப்போதைக்கப்போது பொதுக்கூட்டங்கள் கூட்டி, தற்கால விஷயங்களுக்குப் பொருத்தமாக உபன்யாசங்கள் ஏற்படுத்தி அவர்களுக்கு அறிவையும் வளர்க்கலாம்.

# 27. மனிதவர்க்கத்தின் பருவகால நிர்ணயம்.

இப் பருவகால நிர்ணயம், திராவிடச் சிற்பத்தை ஒட்டிய இந்து சமயத்திற்கே உரித்தானது. கடவுள் வேண்டியதெல்லாம் சக்தியே. மனிதவர்க்கம் அச் சக்தியை வளர்த்து கொடுக்கக்கூடிய ஒரு கருவியே ஆகிறான். கடவுளின் பிரதிபிம்பமான மனிதன் பல ஜன்மங்களுக்குப் பின் மனித ரூபமெடுத்து, கடவுளின் கருத்தை உணர்ந்து, அதாவது பிரும்ம ஞானம் பெற்று இறுதியில் உடலை விட்டு சக்தி ரூபமாக கடவுளை அடைவதே முறை ஆகிறது. இம் முறையை ஐந்து பருவங்களாகப் பிரித்து, அந்தந்தப் பருவங்களில் எவ்வெவ்விதம் கர்மத்தைச் செய்யவேண்டும், மேலும், எப்படிச் செய்தால்

## மனிதவர்க்கத்தின் பருவகால நிர்ணயம்.

ஒருவன் சித்தன் ஆவான், அதாவது சக்தி ரூபமாக கடவுளை அடைவான் என்பதை விவரித்து இருக்கிறார்கள்.

திராவிடச் சிற்பத்தின்படி தீவிரமான சத்கர்மங்களைச் செய்தவர் தீர்க்காயுள் உள்ளவராயும் சுகதுக்கங்களை அனுபவித்து புத்தியைப் பெருக்கி, சாந்த மூர்த்தியாய் முக்தி அடைகிறான் எனப்படுகிறது. மனிதன் மிருகத் தன்மையான எலும்பும், தோலும், சதையும் உடையவனாய், ஈசுவரத் தன்மையான மூளை. மனம் இவ்விரண்டையும் சுத்தப்படுத்தியும், அதிகரித்தும், சிவம் ஆகிறான். அவன் பிறந்தது முதல் சிவமயம் ஆகும் வரை எவ்வளவோ விதமான சுக துக்கங்களுக்கு ஆளாகிறான். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பொழுதும், அவன் நடத்திய கர்மங்களுக்குகந்தவாறு அவன் மனம் மாறுகிறது. அவன் மூளையும் பெருகுகிறது. மாறிய மனமும் பெருகி இருக்கும் மூளையுமே அவனுக்குகந்த குணமாகிறது.

### மனித வர்க்கமும் - ஐந்து பருவங்களும்.

குணம் மனித வர்க்கத்திற்கு எந்த எந்த வயதில் எப்படி எப்படி இருக்கவேண்டும், எப்படி இருந்தால் ஒருவன் அந்திய காலத்தில் சித்தனாக முடியும், என்பதற்கு ஒரு கணக்கு Standard ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த கணக்குப்படி அந்த அந்த குணாதிசயங்களையே ஒரு சித்திரமாகவோ, சிற்பமாகவோ, காவியமாகவோ உண்டு பண்ணுவதே இந்தியக் கலைகளின் மொத்த ஆதாரம்.

மனித வர்க்கத்தின் சராசரி மொத்த ஆயுள் முன் காலத்தில் சுமார் 120 என்று கருதினர். இப்பொழுதோ

### மனிதவர்க்கத்தின் பருவகால நிர்ணயம்.

40 வயதிற்கு மேற்படுவதில்லை. தற்காலம் சராசரி ஆயுள் மனிதவர்க்கத்திற்கு 80 என்று வைத்துக் கொண்டு அதன்படி வாழ்க்கை நடத்த முயற்சி செய்வோமாகில் 100 வயது உயர்ந்ததாகவும், 60 வயது தாழ்ந்ததாகவும் இருக்கக்கூடும். இந்த வாழ்நாளில், ஆதியில் ஏற்படுவது பிறப்பு, பின்பு முதலாவதாக குழந்தைப் பருவம், இரண்டாவதாக சிறுவன் என்ற முறையில் இளமைப் பருவம், மூன்றுவதாக பெரியவன் என்ற ஹோதாவில் கிரஹஸ்தாச்ரமம், பின்பு நான்காவது வானப்ரஸ்தாச்ரமம், அதற்குப் பின் ஐந்தாவது சிவமயம் அல்லது சன்யாசம். இவ்வித ஐந்து பருவ காலங்களில் புருடனுக்கும் பெண்மணிகளுக்கும் சில சிறு வித்தியாசங்களே இருக்கின்றன.

பருவங்களும் – சிலைகளின் விபரமும்.

பிறப்பு என்பது ஆண் பெண் இரண்டையுமே குறிக்கிறது ஆகையால் அச் சிற்பத்தை பிள்ளையார் என பெயரிட்டனர். பின்பு, பாலன், பாலை என்ற குழந்தைப் பருவத்தில், புருடனுக்கு சுமார் 15 வயது என்றும், பெண்மணிகளுக்கு சுமார் 12 வயதெனக் கூறப்படுகிறது. பின்பு 15 வயதிற்குமேல் 24 வயது வரையில், குமரன் அல்லது சுப்பிரம்மண்யன் எனப் புருடக் குழந்தைகளுக்குப் பெயரிட்டு இருக்கின்றனர். இதே போல் பெண்மணிகளுக்கு 12 வயது முதல் 20 வயது வரையில் சரஸ்வதி எனப் பெயரிடப்பட்டு இருக்கிறது. மூன்றுவதாக புருடனுக்கு 24 வயதிற்குமேல் மணமான காலம் முதற்கொண்டு கிரஹஸ்தன் அல்லது விஷ்ணு

என்றுபெயர். அதேபோல் பெண்மக்களுள் 20 வயதிற்கு மேல் மணம் ஆன காலம் முதற்கொண்டு லட்சுமி என பெயரிடப்பட்டு இருக்கிறது. வானப்ரஸ்த ஆச்ரமத்தில் புருடனுக்கு நடராஜன் என்றும், பெண்மணிகளுக்குச் சிவகாமி என்றும், காளி என்றும், அதற்குமேல் சன்யாச ஆச்ரமத்தில் புருடனுக்கு ஏற்பட்டுள்ள குணத்திற்கு சிவன் என்றும், பெண்மணிகளுக்கு பார்வதி அல்லது சக்தி என்றும் கூறப்படுகிறது. இப்படி பெயரிட்டதன் காரணம், அந்த அந்த ஆச்ரமத்தால் ஏற்படக்கூடிய சிலாக்கியமான குணங்களையே குறிப்பதாகும்.

அக்குணங்களையே பலவிதங்களில் உபயோகப் படுத்துவது வழக்கம். ஒரு குழந்தையை வர்ணிக்கும் பொழுது அதற்கு வயிறும், வாயும் தான் இருக்கிறது. அது ஒரு பரப்பிரும்மம் என்கிறோம். ஏனெனில், அக் குழந்தைக்கு வயிறு ஒன்றேதான் பிரதானமாகக் காணப் படுகிறது. மேலும் அது எல்லை அறியாதது ஆகையால் பள்ளம் மேடு அறியாமல் செல்லும். ஏதாவது ரகஸ்ய மான விஷயங்களை வீடுகளில் பேசிக் கொண்டால் அவைகளை நாலு பேர் முன்னிலையில் வெளிப்படுத்தி விடும். அப்பொழுதும் அதை நாம் அறியாதது, பரப் பிரும்மம் என்கிறோம். ஆனாலும் அவ்விதமான குழந்தையின் 'பிறப்பு' என்ற பதத்திற்குள்ள "பிள்ளையார்" என்ற சிலைக்கு, யானையினுடைய முகம் வரவேண்டிய காரணம் என்ன என்பது பல ஜனங்களுக்கு ஒரு மூடு மந்திரமாகவே இருக்கிறது. க,

1.

பிள்ளையார் - விக்னேசுவரர்

சித்திரம்-14



# 28. பிள்ளையார் - விக்னேசுவரர்.

பிள்ளையார் என்பது மறுபிறப்பு என்பதை சிற்பித்த ஒரு சிற்பாலங்காரமே ஆகும். இப்பிள்ளையாருக்குப் பலவித பெயர்கள் உண்டு. அவைகளைக் கொண்டே ஓம் என்ற சப்தத்தை முன்கூட்டி பூஜை செய்வது வழக்கம். அவைகளில் சுமுகர், ஏகதந்தர், கபிலர், கஜகர்ணிகர்,

லம்போதார், விகடர், விக்ன நாசர், கணுதிபர், தூமகேது, கணுத்யக்ஷகர், பாலசந்திரர், கஜானனர், வக்ரதுண்டர், கும்பகர்ணர், ஏகம்பர், ஸ்கந்தபுருஷர் என்ற நாமங்கள் முக்கியமானவையாகும். இந்த நாமங்களை உட்புகுந்து பார்க்குங்கால், அவை பெரும்பாலும், யானைக்குள்ள குணங்களே என்று நன்கு விளங்கும். நம் நாட்டில் காடுகளுக்கு ராஜாவாக விளங்கியது யானையே. அதுவே மனிதன் உதிக்குமுன் இப்பூலோகத்தை ஆண்டுவந்த சக்தி மிகுந்த, அறிவு மிகுந்த, நல்ல குணமுடையதான மிருக ராஜா ஆகும்.

அதனுலேயே, "கானக-பதி" என்ற வார்த்தையே கணபதி ஆயிற்று. கணபதி என்ற நாமம் யானைக் காயினும் அது ஏன் மறுபிறப்பு என்ற சிற்பத்திற்கு, ஏற்பட வேண்டும் என்று வினவுங்கால் குழந்தை என்பதையும், குழந்தைப் பிறப்பு என்பதையும் சிற்பிப் பதில் பல வித்தியாசங்கள் உண்டு. குழந்தையை சிற்பிக்கும்பொழுது, அக் குழந்தைக்கு மனித முகமே தான் இருக்கும். ஆனுல், "குழந்தைப் பிறப்பு" என் பதை சிற்பிங்குங்கால் அக் குழந்தையினுடைய கடந்த பருவத்தையும், வரப்போகும் பருவத்தையும் ஒத்து சிற்பிக்கப்படுகிறது. மனிதன் எவ்வளவோ தடவை களில் பல ஜீவராசிகளாக ஜன்மம் எடுத்து பின்பே மானிடக் குழந்தையாகப் பிறக்கிருன். அவன் மிருக ராசியின் உச்ச நிலையை அடைந்தே மனித உருவம் கடைப்பிடிக்கிருன். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு குழந்தையின்

பிள்ளையார் — விக்னேசுவரர்.

உடல் மனித ரூபமாகவும், சென்ற ஜன்மங்களில் சேகரிக்கப்பட்ட புத்தியும், குணமும், மிருக ராஜா வாகிய யானையை ஒத்து இருப்பதால், தலை யானை ரூபமாக, பிள்ளையார் என்ற சிலை சிற்பிக்கப்பட்டு இருக்கிறது. இச் சிலையே மறுப்பிறப்பு (reincarnation) என்பதை விவரித்துக் காட்டும் சிறந்த சிற்பமாகிறது. இதுவே ஒருவன் மிருகமாக இருந்து பகுத்தறிவு பெற்று மனித உருவெடுத்தான் என் பதைச் சுட்டிக் காட்டுகிறது.

முன்சொன்னபடி ஹிமயபர்வதமே சிவனாகி, செழிப் புள்ள கங்கை நதியைச் சார்ந்த சமவெளிகள், சக்தியும் பார்வதி அல்லது பர்வதகுமாரி ஆகும்பொழுது, அச்சம வெளியிலுள்ள மிருக ராஜாவே சிவனுக்கும், பார்வதிக் கும் பிள்ளை ஆகிறான். இது ஒரு சிற்பாலங்காரம் ஆன போதிலும், இதன் தாத்பர்யம் பல உள. குழந்தை கள் பிறப்பது, யானையைப்போல் சக்தி வாய்ந்ததாக வும், அறிவுள்ளதாகவும், மறதி இல்லாததாகவும், நுட்பமான கண்களை உடையதாகவும், மனிதவர்க்கத் திற்கு ஆதிமூலமாகவும் இருத்தல் வேண்டும். இதை விஸ்தரிக்குங்கால், மனிதன் சரிவர வளருவதற்கு வித் தாகிய குழந்தை நோவு நொடி இல்லாமலும், மூளையும், அவயவங்களும் பின்னமில்லாமலும், நல்ல சக்தி வாய்ந்ததாகப் பிறப்பிக்கப்படவேண்டும். இந்தக் குணங் களில், விக்னநாசர் என்ற பதத்திற்கு விக்னத்தைப் போக்குகிறவர் என்று தாத்பர்யம். மனித வர்க்கத்தின் நல் வளர்ச்சிக்கு மிகவும் ஆதாரமாகவுள்ளது குழந்தைப்

பருவம். அக்குழந்தை பலமுள்ளதாக இருந்தால்தான் மற்ற நான்கு பருவங்களும் சரிவர நடந்தேருமாகையால் அப்பருவங்களில் ஏற்படும் விக்னங்களை நாசம் செய்பவர், அதாவது விக்ன-நாசர் என பெயரிடப்பட்டது. இக்கணபதிக்கு பத்னி இல்லை. ஆகிலும், புத்தி-சித்தி இவ்விரண்டும் பத்தினிகள் எனப்படுகிறது. அதாவது மனிதன் பிறப்பதே சித்தி பெறுவதற்கு. அவன் சித்திபெற புத்தி-சித்தி இவ்விரண்டும் அவனவன் வாழ் நாட்களில் சேகரிக்க வேண்டியவை ஆகையால், அவைகளையே ஆதி மூலத்தின் பத்தினிகள் எனப்படுகிறது.

மூஞ்சுரு கானகங்களில் யானைக்குச் சிறந்த தோழன். ஆகையால் அதுவே பிள்ளையாருக்கு வாகனம் எனப்படுகிறது.

---

## 29. குழந்தைப் பருவம்.

இதுகாலம் மனிதப்பிறப்பு என்பதை சிற்பித்துக் காட்டும் பிள்ளையார் எனப்பட்ட சிலையைப்பற்றி சொல்லப்பட்டது. இப்பொழுது பிள்ளை பிறந்த பிறகு குழந்தைப் பருவம் ஆரம்பமாகிறது. குழந்தைப் பருவத்தை சிற்பித்ததே பாலன், பாலா, பாலகிருஷ்ணன் என்ற சிலைகளும், சித்திரங்களும் ஆகும். பாலன் என்ற பதத்திற்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானின் குழந்தைப் பருவத்தையே ஆதாரமாகக் கொண்டு சிற்பித்து இருக்கிருர்கள். ஏனெனில் அதுவே மனிதவர்க்கத்

## குழந்தைப் பருவம்.

### படம் 15.



தின் குழந்தைப் பருவத்தில் சிகரம் போன்றது எனக் கருதப்படுகிறது. இந்தச் சிலையையே பாலகிருஷ்ணன் என்றும், வெண்ணைதிருடி கிருஷ்ணன் என்றும் சிற்பிப்ப துண்டு. பாலை என்பது 12 வயதுக்குள்பட்ட பெண் குழந்தையின் குணதிசயங்களைச் சிற்பித்ததாகும்.

இந்தக் குழந்தைப் பருவமே மனிதவர்க்கத்திற்கு ஆதாரம் என்பதை நாம் அறிந்தோம். இக்குழந்தைப்

பருவம் செவ்வனே நடந்தேற வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து இருக்கிறோம். ஆலயங்கள் மொத்தமாக இந்தக் குழந்தைப் பருவத்திலுள்ள மனிதவர்க்கத்திற்கே ஏற்பட்டதெனலாம். ஏனெனில் மற்ற வரப்போகிற பருவங்களில் வேதாந்த ரீதியாக மனித வர்க்கத்தின் மனப்பான்மையை மாற்ற முடியும். இந்தக் குழந்தைப் பருவமே பரப்பிரும்ம சொரூபத்திற்கு ஒப்பானது. எல்லை அறியாதது. ஒரு கட்டுப்பாட்டிற்குட்பட்டே பழக்கப் படவேண்டியது.

குழந்தைப் பருவமும் ஆலயங்களும்

ஆலயங்கள் முதன் முதலாக குழந்தைப் பருவத்திலேயே நல்ல குணங்களைப் பெறுவதற்கு ஆதாரமாக இருக்கவேண்டியது அவசியம். முன் காலத்தில் ஆலயங்களிலேயே சிறு குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பது வழக்கம். சுமார் 60 வருடங்களுக்கு முன்கூட இவ்விதமான கல்விக்கூடங்கள் ஆலயங்களில் நடந்தேறியதைப் பலர் பார்த்து இருக்கின்றனர். ஆயினும் சென்ற பல வருடங்களாக ஆலயங்களின் மகிமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்துள்ளது. இவைகளைப் புனருத்தாரணம் செய்ய வேண்டியது அவசியம் ஆகிறது. ஆலயங்களில் சில மிகப்பெரியதாக, ஆயிரக் கணக்கான மக்களை ஒன்றுகூட்டி எவ்விதமான சத் கர்மமும் செய்யப் பழகுவதற்குகந்ததாக அமைந்துள்ளன. இவைகள் தென் இந்தியாவில் ஒரு பட்டணத்

தில் மூன்று அல்லது நான்குக்குக் குறையாமலும், கிராமங்களில் ஒன்றுக்குக் குறையாமலும் இருக்கின்றன. இவைகளுள் குழந்தைப் பருவம் முழுவதும் அதாவது பெண் குழந்தைகளுக்கு 10 வயதுவரைக்கும் பையன்களுக்கு 12 வயதுவரைக்கும் கல்வி கற்பிக்கலாம். சிறுவர்களுக்கு தேகப்பயிற்சி, நர்த்தனம், தெய்வ பக்தி, சுகாதாரம், நன்நடத்தைகள், ச ங் கீ த ம், சித்திரம், சிற்பம் மற்றும் சில கைத்தொழில்களில் பயிற்சியும், ஏற்படுத்தவேண்டியது மிகவும் அவசியமாகிறது. ஆண் குழந்தைகள் வேத பாராயணமும், சாமகானமும் சிறிதளவாவது பயிற்சிகொள்வது நலம்.


இக் குழந்தைப் பருவத்தின் முற்பாகத்தில் சிறுமிகளுக்குக் காது குத்து கல்யாணம் என்பதும், பிற்பாகத்தில் சிறுவர்கள் பிரும்மோபதேசம் பெறுவதும், சில முறைகளே ஆகும்.

## 30. குமரக்கடவுள் — சுப்பிரமணியம்.

குழந்தைப் பருவத்திற்கு அடுத்ததாக உள்ளது இளமைப் பருவம், அதாவது யெளவனம். இதையே ஆரியர்கள் பிரும்மசர்யம் என்பார்கள். இந்த பருவத்தைச் சார்ந்த சிறந்த குணாதிசயங்களை சிலையாக்கியதே

குமரக்கடவுள்—சுப்ரமணியம்.

படம் 16.



பிரும்ம அம்சத்தில் யௌவனப் பருவத்தில் குமரக் கடவுள்.

குமரன் அல்லது குமரக் கடவுள். குமரக் கடவுளை தென்நாட்டில் ஸ்ரீ சுப்பிரமணியம் என்றும், வட நாட்டில், ஸ்ரீ பாலாஜி என்றும் கூறுவர். இந்த குமரக் கடவுளின் ஆலயங்கள் தென் நாட்டிலேயே அதிகம்.

## குமரக்கடவுள்—சுப்ரமணியம்.

**இந்த சிலேயின் உருவத்தை விஸ்தரிக்குங்கால், ' அதற்கு ஆறுமுகங்கள் உண்டென்றும், பனிரெண்டு கைகளே உடைய வரென்றும், கையில் வேல் ஏந்தியவர் என்றும், இவ்வருக்கு வாகனம் மயிலென்றும், கொடி, கோழி என்றும் சொல்லப்படு கிறது.**

குமரருக்கு ஆறுமுகம் என்பர். இதில் ஒவ்வொன் றும் ஒவ்வொருவிதமான சிறந்த குணத்தையே சுட்டிக் காட்டுகிறது. அவைகளுள் ஒன்று முழு அறிவு; இரண்டு அளவில் இன்பம்; மூன்று வரம்பில் ஆற்ற லுடைமை; நான்கு தானே தெய்வம் என்ற அறிவு; ஐந்து பேரறிவு; ஆறு இயற்கை அறிவு; **குமரன் என்ற யெளவன புருடன் முழு அறிவு உடையவனுக இருக்க வேண்டும். அளவில் இன்பம்; அதாவது அவன் உண்பது முதல், உறங்குவதுவரையில் ஒரு அளவையே நாடி இருப் பான். வரம்பில் ஆற்றலுடைமை; அதாவது ஒரு கட்டுப் பாட்டிற்கு உட்பட்டு இருப்பான், தானே தெய்வம் என்ற அறிவு; அதாவது பிரும்மோபதேசம் பெற்றவன். பேரறிவு அதாவது எல்லாக் கலேகளிலும் நல்ல அறிவு, இயற்கை அறிவு; அதாவது தன்பூர்வ ஜன்மத்தின் கர்ம பலனுல் உண் டான நல்லறிவும் உடையவனுக இருப்பான்.**

குமரருக்கு வாகனம் மயில் என்பர். அதன் தாத் பர்யம் இந்த யெளவனப் பருவத்தில் கவலேயற்று, தன் நிலேயை மகிழ்ந்து, ஆனந்தத்தில் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், படிப்பிலேயே கண்ணும் கருத்து மாய் மேகத்தைக்கண்டு மயில் ஆடுவதுபோல் காணப்

படுவான். இக்குணத்தினலேயே மயில் வாகனன் எனப்படுகிறது. அவர் கையில் வேல் பிடிப்பவர். அதாவது இந்த யெளவனப் பிராயத்தில் வில்வித்தைகளிலும், அஸ்திர, சஸ்திரங்களிலும் மற்றும் பல விளையாட்டுகளிலும் முதன் முதலாக இருப்பான். வேல் என்று சொல்லப்பட்டதன் காரணம், அந்தக் காலம் இச்சிற்பங்கள் சிற்பிக்கப்பட்டபொழுது, வில்வித்தையே சண்டை போடுவதற்கும், மற்றபடி ஒருவன் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்வதற்கும் சிறந்த ஆயுதமாக விளங்கியது.

### குமரனும்—கோழியும்

இந்த யெளவன புருடனுக்கு கோழி, கொடி எனப் படுகிறது. ஏனெனில் கோழிக்குச் சில சிறந்த குணங்கள் உண்டு. அவைகள் மனித உருக்கொண்ட குமரருக்கு மிகவும் அவசியமானது. நாம் பொதுவாக ஒரு சிறுவனை கோழி கூவிவிட்டது; இனி படுக்காதே என்று சொல்லுகிறோம். அதன்படி கோழி கூவுமுன் அதாவது அதிகாலையிலேயே ஒவ்வொரு சிறுவனும் நித்திரையை விட்டு எழுந்திருப்பது ஒரு சிறந்த குணம். கோழியின் வேறொரு சிறந்த குணம் ஆர்வம். அதாவது எதிரிக்கு கீழ்படியாத குணம். இந்த குணமே குமரர்களுக்கு மிகவும் சிறந்ததெனக் கருதப்படுகிறது. இதை விவரிக்குங்கால் நம் கிராமங்களில் கோழிச் சண்டைவிடுவதுண்டு அப்பொழுது அதன் கால்களில் சிறிய கத்திகளை அமைத்து கட்டிவிடுவது வழக்கம். சண்டைக்கு விடப்

பட்ட கோழிகள் ஒன்ருெடொன்று குத்திக்கொண்டு கூன்பெருக, சில சமயங்களில் குடல்கூட வெளியே வந்துவிடும். ஆயினும் தைரியத்தை விடாது தனக்கு உண்டான விபத்தை நினையாது சண்டைபோடும். இவ்வித தைரியமும், விடா முயற்சியும். ஒரு சிறுவனுக்கு அவசியம் ஆனபடியால், கோழியைக் கொடியாக எடுக்கப்பட்டிருக்கிறது.

**தேவயானையும் – வள்ளியும்.**

குமரக் கடவுளுக்கு இரண்டு பத்தினிகள் எனப் படுகிறது. அவர்களே தேவயானையும், வள்ளியும் ஆவர். அதாவது ஒருவர் பழையவர், மற்ருெருவர் புது ரகத் தைச்சார்ந்தவர். தேவயானை என்பதின் தாத்பர்யம் ஒரு சிறுவன் இயற்கையாக முன் ஜன்மத்தில் கர்ம பலனுல் கொண்டுவந்த பொக்கிஷமாகிய ஞானம். இதுவே பூர்வ ஜன்மத்தில் மிருக ராஜாவாக வாழ்ந்த பொழுது கிட்டியதாகும். மற்ருென்று வள்ளி. இதுவே ஒரு சிறுவன் பள்ளியில் படித்து, அதனுல் அடையக்கூடிய ஞானம்.

**குமரனும் – ஆண்டியும்.**

இரு பத்தினிகள் என்று சொல்லப்பட்ட தேவ யானையையும், வள்ளியையும் சரஸ்வதிக்கே ஒப்பிடப் பட்டு இருக்கிறது. ஆயினும் சரஸ்வதி எனப்பட்ட மங்கையை மணந்ததாகத் தாத்பர்யம் அல்ல. எப்பொழு தும் அறிவில் லட்சியமாகவும், படிப்பில் லட்சியமாகவும் இருப்பதே அதன் தாத்பர்யம். ஆயினும் குமரனை ஆண்டி என்றும் சொல்வதுண்டு. ஒரு இடத்தில் யௌவன புருடன் என்றும், மற்ருெரு இடத்தில்

## குமரக்கடவுள் - சுப்ரமணியம்.

ஆண்டி என்றும் சொன்னால் அது ஒன்றுக்கு மற்றொன்று முரணாக இருக்கிறதல்லவா? ஆண்டி என்று சொல்லுவதின் தாத்பர்யம், ஒரு பிரும்மோபதேசம் பெற்ற இளம் யோகி என்பதுதான். யௌவனப் பருவம் என்பது ஒரு முதிர்ந்த புருடனுக்கும் பெரியது என தாத்பர்யமும் உண்டு. அதாவது ஒரு முதிர்ந்தவன் அடுத்துவரப்போகும் ஜன்மத்திலேயேதான் யௌவனப் பருவத்தை அடைய முடியும். ஆனால் குமரனோ முதிர்ந்தவனுக்கு முந்தியே யௌவனப் பருவத்தை அடைந்தவன் ஆகிறான். அதனால் குமரன் முதிர்ந்தவனுக்கு மேல்பட்ட புத்திமான் எனப்படுகிறது.

### பிரும்மோபதேசம் – உபநயனம்.

பிரும்மோபதேசம், உபநயனம் அல்லது பூணூல் போட்டுக்கொள்வது என்பது, இந்த யௌவனப் பிராயத்தின் முதல் பாகத்திலேயே நடைபெறுகிறது. பிரும்மோபதேசம் பெறக்கூடியவர்கள், தன் வாழ்நாட்களில் புத்தியைப் பெருக்க வேண்டியதாகையால் வேதம் ஓதும் பிராமணர்களும், யுத்த வித்தையில் பயிலும் க்ஷத்திரியர்களும், கைத் தொழில்களிலும், வியாபாரத்திலும் ஈடுபட்ட வைசியர்களுமே இப் பிரும்மோபதேசத்திற்கு உகந்தவரென கருதப்பட்டது. சூத்திரர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் முன் ஒரு காலத்தில் காட்டு மனிதர்களாய் மிருகங்களைப்போல் வசித்து வந்தவர்கள் ஆகையால், அவர்களுக்கு பிரும்மோபதேசம் செய்யப்படவில்லை. அந்த நிலை இப்பொழுது மாறிவிட்டதாகையால்

சூத்திரர் என்ற வர்க்கத்திற்கே இக் காலம் இடம் கிடையாது எனலாம். ஆகவே பிரும்மோபதேசம் மனித வர்க்கத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் நடத்தப்பட வேண்டியது அவசிய மாகிறது. பிரும்மோபதேசம் பெறுகிறவர்களுக்கு அதன் தத்துவத்தை ஒரு புத்தகமாகக் கொடுத்தும், அவைகளை சப தங்களாக ஏற்கச் செய்வதும் நலம்.

பூணூல் போட்டுக்கொள்வது என்பது பிரும்மோப தேசத்தை ஒட்டிய ஒரு தத்துவமே ஆகும். அதனுல் ஒருவன் பிரும்மோபதேசம் பெற்றவன் என அறிவிக்கப் படுகிறது. பூணூல் என்பது நல்ல சுத்தமான பஞ்சினுல் தானே தன் கையால் நூற்கப்பட்டவையாகும். இதுவே பிரும்மத்துவமான பரிசுத்தத்தைச் சுட்டிக் காட்டு கிறது. அதன் தாத்பர்யம் பரப்பிரும்ம சொரூபியான அதாவது பரிசுத்தமான மனப்பான்மையை, ஒரு ஆடையாக போற்றிக்கொள்ளுகிருன் எனப்படும்.

பிராணுயாமம் - சுவாசபந்தனம்.

இப் பிராயத்திலேயே பிராணுயாமம் கற்பிக்கப்படு வது வழக்கம். அதை விஸ்தரிக்குங்கால் இப் பூலோகத் தில் காற்றே பரந்த சக்தியாக விளங்குகிறது. அந்தக் காற்றை ஒரு கூட்டுக்குள் அடைப்பதனுல் அதன் சக்தி யானது ஜீவப்பிராணிகளின் மூலமாக வெளியே தெரிய வருகிறது. காற்று இல்லையேல் ஜீவப்பிராணிகள் இல்லை. அக் காற்றை தனக்குள் அடக்கியும், அதன் மேல் ஒரு பக்தியைக்காட்டி அதை மனதால் பூஜை செய்வதால், நீடித்த ஆயுளும், துன்பமில்லா வாழ்வும்,

தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியும் ஏற்படுகிறது. நம் முன்னோர், மனிதனுடைய ஆயுட் காலம் அவன் சுவாசம்விடும் எண்ணிக்கையை ஒத் திருக்கும் என்பர். ஒருவன் ஒரு நிமிடத்திற்கு 20 அல் லது 25 தடவை சுவாசம் விடுவானாகில் அவன் ஆயுள் குறைவுதான். அவனே அந்த ஒரு நிமிடத்திற்குள் 10 அல்லது 12 தடவை விடுவானாகில் அவன் ஆயுள் நீடிக்கிறது, சுவாச பந்தனம் செய்து பழகுகிற வர்கள் சகஜமாக ஒரு நிமிடத்திற்கு ஒரு தடவையும், மற்றும் சிலர், மூன்று நிமிடங்களுக்கு ஒரு தடவையும்கூட சுவாசம் விடுவதை நாம் பார்த்து இருக்கிறோம்.

சிறுவர்களும் சரி, பெரியவர்களும் சரி, சுவாசத்தை நுரை ஈரல் பூராவும் அடையும்படிச் செய்து, மாரை அகற்றி, காற்றை சிறிது காலம் அதனுள் தங்கும்படி செய்து, பின்பு மெதுவாக சுவாசத்தை கொஞ்சமேனும் ஈரலில் தங்காமல், எல்லாவற்றையும் வெளிப்படுத்த வேண்டும். இவ்விதம் பயிற்சி செய்யும்பொழுது தன் மனதானது உட்கொள்ளும் காற்றிலேயே லயித்து இருப்பது நலம். இவ்விதம் பயின்று வந்தால் ஆயுள் நீடிப்பதைத் தவிர, காச நோய்கள் வரா. நித்திரை வராத சமயங்களில் உட்கொள்ளும் சுவாசத்தை மன தால் பூஜித்தால், இரண்டு அல்லது மூன்று நிமிடங் களில் நித்திரை வந்துவிடும். மேலும் சுவாச பந்தனம் செய்வதால் மனோதிடமும், தன்னிடத்திலேயே ஒரு நம்பிக்கை யும் உண்டாகும்.

**மேல்நாட்டுச் சிற்பமும் - யௌவனமும்.**

யௌவனம் என்ற பதத்தை சிற்பிக்கும்படியோ, அல்லது சித்தரிக்கும்படியோ, ஏற்பட்டால் மேல்நாட்டு சிற்பிகள் ஒரு சிறு பையன் புருவை வைத்துக்கொண்டு கொஞ்சுவதாகவும், அல்லது ஒரு நாயோடு விளையாடு வதாகவும் சிற்பிப்பது வழக்கம். ஆனால் நம் முன்னோர் செய்து இருக்கும் விதம் ஈசுவரத் தன்மையாகவே இருக்கிறது எனலாம். இவ்விதமாக இச் சிற்பங்கள் ஆல மரத்து வித்துப்போல் ஒரு பெரிய பொக்கிஷக் களஞ்சியமாக இருந்தபோதிலும், மக்கள் அதன் உட்கருத்து அறியாது, அதனுள் அடங்கிய குணாதிசயங்களின் மகிமையை உணரா மல் இருப்பது விந்தையே.

---

# 31. ஹனுமார் - ஆஞ்சனேயர்.

ஹனுமார் என்ற சிலையை குரங்கின் முகத்தோடு சிற்பித்திருப்பதை நாம் பார்த்து இருக்கிறோம். அச் சிலைக்கு குரங்கின் முகம் வரவேண்டியதின் காரணம் என்னவென்று வினவுங்கால், ஹனுமார் என்பதின் தாத்பர்யம் கடும் பிரும்மசாரி என்பதே. ஹனுமார் குமரனுடைய யௌவனப் பருவத்தைச் சார்ந்தவர். குமரனுக்கு இரண்டு பத்தினிகள் உண்டென சொல்லப் படுகிறது. ஆனால் ஹனுமாருக்கோ பத்தினி என்னும் பேச்சே எடுக்கக் கூடாது. அதாவது அவ்வளவு உக்

கிரமான மனப்பான்மையுடைய பிரும்மசாரி என்பது தாத்பர்யம். குமரருக்கு, பின்பு கிரஹஸ்தாச்ரமம் உண்டு. ஆனால் ஹனுமாருக்கோ ஆயுள் முழுவதுமே கிரஹஸ்தாச்ரமம் கிடையாது. அதனாலேயே அவரை நித்திய பிரும்மசாரி என்பர். நித்திய பிரும்மசாரி யாகவும், கடும் பிரும்மசாரியாகவும் கிரஹஸ்தாச்ரமந் தையே உதறித் தள்ளிவிட்டு, "சத்தியமே" தெய்வம் என்ற மனப்பான்மையோடு வாழும் மனிதவர்க்கத்தின் குணத்தை சிற்பித்ததே ஹனுமார் எனப்படும்.

**கடும் பிரும்மசாரியும் - குரங்கும்.**

இதற்குக் காரணம் சாதாரணமாக மனிதவர்க்கத் தினுள் கடும் பிரும்மசாரிகளின் குணம், குரங்கின் குணத்தை ஒத்ததாகவே காணப்படுகிறது. ஹனுமா ருக்கு, குமரருக்கு ஏற்பட்ட பத்தினிகளைப்போல் வித்தை — ஞானம் என்ற பயிற்சிகள் கிடையா. அவ ருக்கு சத்தியம் எங்கே உள்ளதோ, அவ்விடத்தில் தீவிர மான பக்தி உண்டு. அவர் கடும் பிரும்மசாரி ஆகை யால் மிக சக்தி• வாய்ந்தவர் எனப்படுகிறது. இவரே பெரிய விஷ்ணு பக்தர். குமரர் சைவத்திற்கு எப் படியோ அதேபோல் வைஷ்ணவர்களுக்கும், மாத்வர் களுக்கும் ஹனுமார் ஆவர். இராமாயணத்தில் ஹனுமார் ஸ்ரீராமருக்கு உதவி செய்ததாக நாம் அறிந்திருக்கிறோம். அதேபோல் ராமர் பட்டாபிஷேகப் படங்களிலும், ஆல யங்களிலும், ஹனுமாருக்குக் குரங்கு முகமே கொடுத்து வரையப்பட்டும், சிற்பிக்கப்பட்டும் இருப்பதைக் காண

லாம். அதனுல் ஹநுமாருக்கும், அவர் வர்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கும், குரங்கு முகம் உண்டென்றும், மேலும் குரங்குகளே ஸ்ரீராமருக்கு உதவி செய்தது என்று எண்ணுவதும் தவருகும். அவர்கள் எல்லோரும் மனிதர்களே ஆவர். அவர்களுக்கு ஹநுமாருக்கு உள்ள நல்ல குணங்கள் இருந்தன என்பதே அதன் தாத்பர்யம், ஹநுமாருக்கு மாருதி என்றும், ஆஞ்சனேயர் என்றும், கேசரி புத்திரர் என்றும், வாயு புத்திரர் என்றும் நாமங்கள் உண்டு.

---

# 32. பிரும்மா.

இதுவரையில் பிறப்பு, குழந்தைப் பருவம், யௌவனம், என்ற பிறந்த மனிதவர்க்கத்தைச் சார்ந்த சிலேகளைப் பற்றி கூறினேம். இம்மூன்று அம்சங்களும், பிரும்ம அம்சம் என்று கூறப்படுகிறது. இப்பொழுது பிறப்பிற்குக் காரணபூதமாக இருக்கப்பட்ட சக்தி என்பதைப் பற்றி சற்று கவனிப்போம். பிறப்பு என்ற பதத்திற்கும், பிறப்பிக்கும் சக்தி என்பதற்கும் பல வித்தியாசங்கள் உள. பிறப்பு என்பது காரியம் ஆகிறது. பிறப்பிக்கும் சக்தியே காரணமாகிறது. இப் பிறப்பிக்கும் சக்தி, முதன்மையாக எல்லாம் வல்லவனுன சிவபெருமானின் முகத்தில் உதித்த "ஞான சக்தி" எனப்படுகிறது. ஆயினும் மனித வர்க்கத்தின் வளர்ச்சிப்படி கிரஹஸ்தாச்ரமத்தில் உண்டாகும் குணுதிசயமான

## பிரும்மா.

விஷ்ணு அம்சமே, எல்லா பிறப்பிற்கும் ஆதாரம் ஆகிறது. இவ்விதம் "பிரும்மா" என்ற பதத்திற்கே இடம் இல்லாமல், ஞானத்தில் சிவ ரூபமாகவும், அமைப்பில் விஷ்ணு ரூபமாகவும் இருப்பதால், பிரும்மாவிற்கு ஆலயங்கள் கிடையா. பிறப்பிக்கும் சக்தியானது கிரஹஸ்தாச்ரமத்திலேயே ஏற்படுகிறபடியால், விஷ்ணு அம்சத்திற்கும், சிவ அம்சத்திற்கும் மத்திம பாகத்தில் உதித்தவர் எனப்படுகிறது. இவரே ஒருவருடைய ஞானத்திற்கும், பகுத்தறிவுச் சக்தியின் வளர்ச்சிக்கும் காரணபூதமாக இருக்கப்பட்டவர். இவருடைய குமாரிகளான புத்தியும், சித்தியும் மறுபிறப்பு என்ற சிலையாகிய பிள்ளையாரின் பத்தினிகள் ஆவர்.

**பிரும்மாவின் – அங்க நிர்ணயம்.**

பிரும்மாவின் சிலைக்கு நான்கு தலைகள் உண்டு. அவைகள் நான்கு வேதங்களையும் சுட்டிக் காட்டுகிறது. அவர் நிறம் பொன் அல்லது சிவந்த மஞ்சள் நிறம். இவர் நான்கு முகத்தோடும், ஒரு கையில் ஜபமாலை, மற்றொரு கையில் தண்டாயுதம், வேறு ஒரு கையில் புத்தகங்கள், மற்றொரு கையில் கமண்டலம் ஏந்தியவராய் இருப்பர். நான்கு வேதங்களும் உற்பத்தியானது இவரிடமே எனப்படுகிறது. இவருடைய நான்கு கைகளில், இரண்டு கைகளில் சிவனைச் சார்ந்த ஜபமாலையும், கமண்டலமும், மற்ற இரண்டு கைகளில் தண்டாயுதமும், புத்தகமும் உடையவர். இவர் நிறம் விஷ்ணுவின் நீல நிறத்திற்கும் சிவனுடைய சிகப்பு நிறத்திற்கும்

நடுவாயுள்ள சிவந்த மஞ்சள் நிறம். இவர் உற்பத்தியை விஸ்தரிக்குங்கால் "பாற்கடலில் பள்ளி கொண்டார் பெருமாள், அவர் வயிற்றில் உதித்தார் பிரும்மா" எனப் படுகிறது. இதன் தாத்பர்யம் பெருமாளான விஷ்ணு அம்சத்தைச் சார்ந்த கிரஹஸ்தாச்ரமிக்கே பிறந்தவர் எனப்படும். பிரும்மா மத்திய நிலையை உடையவர் ஆகையால், விஷ்ணுவின் வயிற்றில் உதித்தார் என கருதப்படுகிறது. இதனாலேயே சகல உற்பத்திக்கும் ஆதாரமாக உள்ள நம் பூமியானது, அதாவது விஷ்ணு அம்சமான பாற்கடல், சூர்ய மண்டலத்தின் வயிற்றிற்கு சமானம் என்றும் சொல்லப்படுகிறது.

---

## 33. ஸரஸ்வதி.

சரஸ்வதி பிரும்மாவின் பத்தினி எனப்படும். குமரக் கடவுள் பிரும்ம அம்சம் ஆகையால் தேவயானையும், வள்ளியும், ஸரஸ்வதி ரூபம் எனப்படுகிறது. ஸரஸ்வதி என்றால் சிறுமி, குமரி, அல்லது யௌவன ஸ்திரீ என்றே தாத்பர்யம். ஆகையால் ஸரஸ்வதி மனித வர்க்கத்தில் யௌவனப் பிராயத்தில், பெண் உருவம் ஆவாள். இவள் வயது சாதாரணமாக 10 முதல் 20 வரையில் என கருதப்படுகிறது. இவள் பிரும்மனாலேயே உருவாகி, அவனாலேயே மணக்கப்பட்டவள் என்று சொல்வர். அதன் தாத்பர்யம், கல்விக்குக் காரண பூத

ஸரஸ்வதி.

சித்திரம்-17



பிரும்ம அம்சத்தில்
யௌவன பருவத்தில் ஸரஸ்வதி.

மாயுள்ள பிரும்மனல் உண்டாக்கப்பட்டவள். பின்பு அவளே பிரும்ம சொரூபியாயுள்ள குமரனை மணப்பவள். இவளை " வித்யா திஷ்டான தேவதை " என்பர். இவள் வெண்நிறமாய், வெள்ளை வஸ்திரம் தரித்து, கைகளில்

ஸரஸ்வதி.

ஜபமாலை, புத்தகம், வீணை, எழுத்தாணி, இவைகளைத் தரித்து இருப்பாள். இவள் முகம் பிரும்ம வித்தை எனப்படுகிறது. நான்கு வேதமும் கரங்கள் என்பர். எண்ணும், எழுத்தும் கண்களாகும். ஓங்கார சப்தமே யாழ் என கூறப்படுகிறது. **ஸரஸ்வதி என்பது இரு வகையாகப்பட்டது. ஒன்று கருவிகள் ரூபமாயும், புத்தக ரூபமாயுமுள்ளது, மற்றொன்று, சிறுமி, குமரி எனப்படுகிறது.**

**ஸரஸ்வதியும் — கல்வியும்.**

இதை விவரிக்குங்கால், ஒரு குமரனுக்கு சிறு வயதில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை இங்கு தெரிவிப்பதனால் சிறுவர், சிறுமிகளுக்கு நலன் உண்டாகலாம். 12 வயது சிறுவன் பள்ளியில் படிக்கும் காலம். ஆங்கிலத்தில் ஏற்பட்ட புத்தகம் மனதில் படவில்லை. உடனே ஒரு யோசனை உதயமாயிற்று. அதன்படி ஆங்கில அகராதியையே படித்துவிட்டால் நலம் என்று நினைத்து, அதன்படி நடக்கலானான். அதுவும் கஷ்டமாகத் தோன்றியபொழுது, வேறு குறுக்கு வழி இல்லையா என்று வினவினான். பின்பு ஒரு முடிவுக்கு வந்தவனாய் ஸரஸ்வதியை நாள்தோறும், இடைவிடாது பூஜித்தும், தியானித்தும், அவள் அருளைப்பெற்று விட்டால், பின்பு காளிதாசரைப்போல் கவியாகிவிடலாம் என்ற மனப்பான்மை கொண்டு தாயாரிடம் இவ்விஷயத்தைக் கூற எத்தனித்தான். தாயார் அப்பொழுது பால் கறந்து கொண்டிருந்தாள். மகனைக் கண்டவள் தாயகத்தின் குணத்திற்கொத்தவாறு "சமயத்துக்கு வந்தாய்"

ஸரஸ்வதி.

இத்தா என்று சொல்லி அன்போடு ஒரு பாத்திரத்தில் பாலை அப்பொழுதே கறந்து சுடச்சுட கொடுக்கலானாள். அப்பாலை குடித்த பின் சிறுவன் தான் வந்த விவரத்தைச் சொல்லி, ஸரஸ்வதியைத் தியானித்து, அவள் கடாக்ஷம் பெறுவதாக உள்ள தன் மனப்பான்மையை எடுத்துரைத்தான். அதற்கு அவன் தாய் சொன்னதாவது: ஸரஸ்வதி என்றால் என்ன, அது புத்தகங்களே தான். அப்புத்தகங்களை நல்ல தியானத்தோடும், பக்தியோடும், படிப்பாயாகில் உனக்கு அவள் அருள் கிடைக்கும் என்று சொல்லி, சோம்பல் படாதே, வாசி, போ என்று கூறினாள். இவ்வன்னையின் வேதாந்தத்தை பின்பு பல காலம் கழித்தே அச்சிறுவன் உணரலானான். இதை எழுதியதின் காரணம், நமது சிறுவர்களிடையே பல தப்பு அபிப்பிராயங்கள் உண்டு. அதன்படி அவர்கள், சில தேவி ஸ்தோத்திரங்களை தியானிப்பதால், தங்களுக்கு படிப்பு வந்துவிடும் என்பதாக நினைத்து படிக்காமலேயே பொழுது போக்குகின்றனர்.

ஸரஸ்வதியும் — வாழ்க்கையும்.

ஸரஸ்வதி என்ற யௌவனச்சிறுமிக்கு அவளுடைய சரீர அமைப்பையும், கற்பைக் காக்கவேண்டியதின் முக்கியத்தையும், வரும் கிரஹஸ்தாச்ரமத்தில் அவள் எடுத்துக் கொள்ளவேண்டிய விஷயங்களைப்பற்றியும், பதியோடு அவள் பழகவேண்டிய முறையைப்பற்றியும், பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்றவும், தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ளவும், பிரும்ம ஞானத்தைப்

பற்றியும், இப்பூலோகத்தில் அவள் செய்யவேண்டிய கர்மத்தைப்பற்றியும் அறிவித்து முக்கியமாக, பிராணுயாயம், நடனம், ஸங்கீதம், இவைகளில் நல்ல பயிற்சியும் ஏற்படுத்தப்படுவது நலம். குழந்தைப் பருவம் என்ற முறையில் குழந்தைகளுக்கு ஒருவிதமான ஈசுவர பக்தியும், அதன்படி ஆலயங்களிலுள்ள விக்ரஹங்களிடையே, பயமும், பக்தியும், பிரார்த்தனையும், பஜனையும் ஏற்படுத்த, அடுத்தபடியாக சிறுவன்-சிறுமி என்ற முறையில், பிராணுயாயமும், பிரும்ம உபதேசமும், சூர்ய பகவானை நேராகத் தொழவும், அவருடைய அளவில்லாத சக்தியில் நம்பிக்கையும், மனித வர்க்கத்திற்கு அச்சக்தி பெருக வேண்டிக்கொள்வதும், மனித வர்க்கத்தை தெய்வமாக்கும் முறையில் இரண்டாவது அம்சம் ஆகும். இனி வரப்போகிறதே கிரஹஸ்தாச்ரமம், அதைப் பற்றி கீழே விவரிப்போம்.

---

## 34 விஷ்ணு அம்சம் - கிரஹஸ்தாச்ரமம்.

கிரஹஸ்தாச்ரமமான விஷ்ணு அம்சமே மற்ற எல்லாப் பருவங்களுக்கும் பெரியதாகிறது. இது சுமார் 24 வயதிற்குமேல் 60 வயதிலும் நடக்கக் கூடிய பருவமாகும். இதுவே மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்தில் பிரும்ம அம்சத்திற்கும், சிவ அம்சத்திற்கும், நடுநிலைமை அடைந்திருக்கிறது. மனிதன் ஒவ்வொரு ஜன்மத்திலும், முறையே கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம்

அடைந்து இறுதியில் சிவமயமாகிருன். ஒவ்வொரு ஜன்மத்திலும் மனிதன் சில அம்சங்களில் முன்னேறி மறுபடியும் பிரும்ம அம்சமே பெற்று, பின்பு கடைசியாக சிவ அம்சத்தை அடைகிருன். இந்த விஷ்ணு அம்சத்தில் சுகம், துக்கம் இரண்டும், மாறி மாறியே வரக்கூடியது. இதுவே வரப்போகும் கர்ம பலனுக்கு

சித்திரம் 18.



போகாசன விஷ்ணு மூர்த்தி - லக்ஷ்மி.

ஆதாரம் ஆகிறது. இதுவே கர்மச் சட்டத்தை கடைப் பிடித்தது. பிரும்ம அம்சத்தில் நடந்தேறிய செயல்கள் எல்லா வற்றும் ஒருவனுடைய சென்ற ஜன்மத்தின் வினைப்பயனுகி லும், இந்த விஷ்ணு அம்சத்தில் நடந்தேறும் கர்மமே, அவனுக்கு வரும் ஜன்மத்தில் உண்டாகக்கூடிய பயன்களை நிர்ணயிக்கும்.

**விஷ்ணுவின் — அங்க நிர்ணயம்.**

விஷ்ணுவின் குணதிசயங்களை நிர்ணயிக்குங்கால், அகண்ட பூரணராய், ஆனந்த கல்யாண குணமுடைய வராய், கர்மத்திற்கு ஆதியாய், நீல வர்ணமுடையவராக, சங்கு, சக்கரம், கதை, கோதண்டதாரியாய், லக்ஷ்மி சமேதராய், காணப்படுவர். இந்த கிரஹஸ்தாச்ரமியான விஷ்ணு ரூபி, அகண்ட பூரணராய், அதாவது மிகுந்த அறிவு உடையவராய்; ஆனந்த கல்யாண குணமுடைய வராய், அதாவது எப்பொழுதும் சிரித்த முகத்தோடும், சாந்த குணத்தோடும் கூடியவராய்; ஆதியாய் அதாவது வரப்போகும் ஈசுவரத்தன்மைக்கு முதலாய், மேலும் மறு ஜன்மத்தில் அடையக்கூடும் குணதிசயங்களுக்கு ஆதிமூலமாய்; நீல வர்ணமுடையவராய், அதாவது சக்தியின் அல்லது பெண்மணிகளின் ஈசுவரத் தன்மை யான குணங்களை உடையவராய் இருப்பர். சங்கு-சக்கரம் என்பதின் தாத்பர்யம் ஒரு மனிதனுக்கு அவனவன் பிறப்பின்படி சந்திர லக்னமும், சூர்ய லக்னமும், நல்ல தாக குரு பார்வையோடு இருக்குமாயின், அவன் சந்திர-சூரியனுடைய அனுக்ரஹம் பெற்றவன் எனப்

படுகிறது. மேலும் சங்கானது குழந்தைகளுக்குப் பாலூட்டும் கருவி ஆனபடியால் கருணைக்கடல் என்றும், சக்கரம் யுத்த கருவியாகையால் வீரமூர்த்தி என்றும், தாத்பர்யம் உண்டு. சங்குக்குப் புகழ் பெற்றவர் என்றும், சக்கரத்திற்கு எல்லாவற்றையும் ஜெயிக்க வல்லவர் என்றும் வேறு தாத்பர்யம் உண்டு. கோதண்ட கதை தாரியாகவும், லக்ஷ்மி சமேதராய், அதாவது தன் தர்ம பத்னியோடு சுக வாழ்க்கை நடத்துபவர் என்று அறியவும். விஷ்ணுவின் அவதாரங்கள் பல உள.

விஷ்ணுவின் சிற்பத்தை மற்றவைகளைப்போல் அல்லாமல் சயனித்து இருப்பதாகவே பல ஆலயங்களில் சிற்பித்திருப்பதின் காரணம் அவர் கர்மயோகி, என்பதும், சுகி என்பதுமே. அதாவது காரணம், காரியம், இரண்டிற்கும் ஆதிமூலமாக இருக்கப்பட்டவர் எனப்படுகிறது. அவர் இப்பூமண்டலத்தின் கண் ஒரு கடவுளாகவே வழங்குவர். அவர் சத்கர்மங்களுக்கு ஒரு பெரிய பொக்கிஷமாகவே காணப்படுவர். அதாவது இப் பூலோகத்தில் சத்கர்மங்களை இடைவிடாது மனம் சலியாது திறமையுடனும், பொறுப்புடனும் செய்கிறவனே நெடுநாள் இப்பூலோகத்தில் ஜீவித்திருந்து புத்தியும், சித்தியும் முற்றி பின்பு ஈசுவரத்தன்மை அடைகிறுன்.

இதை விஸ்தரிக்குங்கால் பிறருக்கு தீங்கு விளைவிக்காமலும், சுய நலத்தைக் கோராமலும், பல கலைகளுக்கும் ஒற்றுமையாக கர்மம் செய்தலும், இப் பூமியிலுள்ள எல்லா வர்க்கங்களும் சமம் என்ற உணர்ச்சியோடும், அவைகள் ஒவ்வொன்றும் அதனதன் காலம் வரும் பொழுது ஈசுவரத்தன்மை அடைகிறது என்ற நம்பிக்கையுடனும், சூர்ய பகவானுடைய பூர்ண


சக்தியையும் உணர்ந்து, அறிந்து, பயின்று, தானும் சக்தி மயம் ஆகவேண்டும் என்ற அவாவுடனும் எல்லோரும் தெய்வம், எல்லாம் தெய்வ மயம் என்ற உணர்ச்சியோடும், வாழ்நாட்களை நடத்துவதையே சத்கர்மம் என்பர். முக்கியமாக, எல்லோரும் சமம், எல்லோரும் தெய்வ மயம் என்ற உணர்ச்சி ஏற்பட வேண்டும். இவ்வுணர்ச்சி ஏற்பட்டால் ஒரு மனிதன் வேறு எவனையோ, அல்லது எதையோ அடிமை ஆக்கி ஆளுவது இயலாத காரியம் ஆகும். மனிதன் மனிதனையோ அல்லது வேறு எந்த ஜீவராசியையோ அடக்கி ஆளுவதும் தவறு. தானேவேறே எவராலும் அடக்கி ஆளப்படுவதும் தவறே.

விஷ்ணுவும், யோகாசனமும்.

விஷ்ணு என்ற பதத்திற்கு வேறு ஒரு தாத்பர்யம் சுகி என்பதாக உண்டு. அதாவது இப்பூமியில் ஆளப் பிறந்தவன் எனப்படுகிறது. ஆளப்பிறந்த விஷ்ணு அம்சத்தைச்சார்ந்த கிரஹஸ்தன், மனிதனையோ அல்லது வேறு எந்த ஜீவராசியையோ ஆள உரிமை இல்லாத வரையில், எதை அல்லது வேறே யாரை ஆளுவது என்பது பிரச்சனை. மனித வர்க்கத்தையும் ஜீவராசிகளையும் இப்பூலோகத்தில் உண்டு பண்ணவும், அழிக்கவும் உரிமை வாய்ந்தது சூர்ய மண்டலம். அம்மண்டலமே மனித வர்க்கத்திற்குச் சிருஷ்டிகர்த்தா ஆகிறது. அத்தெய்வத்திற்குதான் ஒன்றை சிருஷ்டிக்கவும், அதை வேண்டாதபொழுது ஸம்ஹாரம் செய்யவும் அதிகாரம் உண்டு. சிருஷ்டிக்கவும், அதையே ஸம்

ஹாரம் செய்யவும் அல்லது அழிக்கவும், மனிதனுக்கு ஏற்படுமானல், அவன் அவ்விதம் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களுக்கோ அல்லது யந்திராதிகளுக்கோ தெய்வம் ஆகிருன். மனிதன் தெய்வ அம்சமே ஆயினும்,

சித்திரம் 19.



யோகாசன விஷ்ணு மூர்த்தி.

அவனேடு கூட பிறந்த மற்றவரும் தெய்வ மயமே ஆதலால், மனிதன் மற்ற மனிதனையோ, அல்லது வேறு ஜீவ ராசிகளையோ, ஹிம்சிக்கவோ, அல்லது அழிக்கவோ உரிமை இல்லாதவன் ஆகிருன்.

இவ்விதம் இப்பூலோகமே ஒரு நவினத் தோட்டம். இதையே நம் முன்னேர் பாற்கடல் எனப் பெயரிட்டனர். இத்

தோட்டத்தில் மனிதவர்க்கமே தோட்டக்காரர்கள். மற்ற ஜீவ ராசிகள் எல்லாம் அவரவர்களுக்குகந்த கர்மங்களை செய்யக் கடமைப் பட்டவர்கள் ஆவர்.

விஷ்ணுவும்—கடமைகளும்.

கிரஹஸ்தாச்ரமத்திலுள்ள விஷ்ணுவுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. அதை அவன் சிருஷ்டித்ததாக சொல்ல முடியாதாகையால் அதை ஸம்ஹரிக்கவோ அல்லது எந்த விதத்திலும் ஹிம்சிக்கவோ கூட அவனுக்கு உரிமை கிடையாது. ஆனாலும் அக் குழந்தைக்கு அவன் செய்யவேண்டிய சவுகர்யங்களை அதன் குழந்தைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும், செய்ய வேண்டியது அவன் கடமை ஆகிறது. தன் கடமைகளைச் செய்து முடித்த கிரஹஸ்தன் தன் குமாரன் கிரஹஸ்தனானபின் அவனிடமிருந்து தன் அந்திய காலத்தில் பிரதி உபகாரம் எதிர்பார்க்கலாம். ஆயினும் அச்சிறு கிரஹஸ்தனின் முதல் கடமை அவன் பத்தினியிடமும், குழந்தைகளிடமுமே செல்வது சுபாவம். தப்பி ஒருவன் தகப்பனிடமும், தாயிடமும், அளவில்லாத விசுவாசம் வைப்பானாகில் அது அந்த தகப்பனிடமோ அல்லது தாயினிடமோ, ஏற்பட்ட அளவில்லாத நல்ல குணத்தையும், ஞானத்தையும், அவர்களுக்கு உரிய மரியாதையையுமே சுட்டிக் காட்டும். தகப்பன், பிள்ளைகளினிடமும், பத்தினியிடமும் விசுவாசம் வைக்கிறான். ஆனால், பிள்ளையாகப் பிறந்த கிரஹஸ்தன் அம்மையிடமும், தகப்பனிடமும், பக்தியையும், மரியாதையையுமே காட்டுகிறான். ஆகையால், பிரியம்

என்பதும், விசுவாசம் என்பதும், கீழ் நோக்கியே செல்லும். பக்தி, மரியாதை இவ்விரண்டும் மேல் நோக்கியே செல்லுகின்றன.

நல்லறிவு படைத்த விஷ்ணு தனக்குக் கீழ்ப்பட்ட எல்லா ஜீவராசிகளிடையே விசுவாசமும், பிரியமும் காட்டுகிறுன். ஜீவராசிகளிடமிருந்து வரவேண்டிய கர்மங்களை மனிதன் பெற்றுக் கொள்ளலாம். ஆனல் அதை ஹிம்சிக்கவும், கொல்லவும் அவனுக்கு உரிமை கிடையாது. எல்லா ஜீவப்பிராணிகளும், தனக்குண்டான வாழ்நாள் முழுவதும் தன் கர்மத்தை சரிவர நடத்தி அதனுல் உண்டாகப்பட்ட முழு கர்ம விளைவையும் அது கிரஹிக்கத்தக்க சாவகாசம் கொடுபடவேண்டும். அவைகளை நடுநடுவே கொல்லலாகாது. அப்படி கொல்லப்படும்பொழுது ஒவ்வொரு ஜீவப்பிராணியும், சாந்தியோடு கடவுளை வேண்டிக் கொள்வதை கருணையுள்ள ஒவ்வொருவரும் காணலாம்.

**விஷ்ணுவும்—சிருஷ்டியும்.**

இது வரையில் எதை கொல்லக் கூடாது, ஹிம்சிக்கவும் கூடாது என்பதை அறிந்தோம். இப்பொழுது எதை சிருஷ்டிக்கலாம், எதை அழிக்கலாம் என்பதைப் பற்றி சிறிது யோசிப்போம். சூர்ய பகவானுல் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளுள் விஷம் கலந்ததும், மிக்க கொடுமையானதும், மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கும், புலி, கரடி, சிம்மம், நரி, இவைகளைப் போன்ற காட்டு மிருகங்களையும், தேள், பாம்பு, போன்ற விஷ ஜந்துக்களையும், மூட்டைப் பூச்சி, கொசு, எலி—ஈ, முதலானவைகளையும், மற்ற விஷக்கிருமி

களையும், மேலும் முக்கியமாகக் கொடிய மனப்பான்மை யுள்ள மனித வர்க்கத்தையும் கூட அழிப்பது பாப கர்மம் ஆகாது. விஷத்தை சிவன் உண்டார் என்பதின் தாத்பர்யம் இதுவே. ஏனெனில் இக் கொடுமையான ஜீவராசிகள் எல்லாம் விஷம் என்று சொல்லப்பட்ட நிழலின் சக்தியால் ஆக்கப் பட்டவையே ஆகும்.

மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட உபயோகப் படாத கெடுதலை உண்டாக்கும்படியான எல்லா வற்றையும் அழிப்பது பாபம் ஆகாது. மனிதன் சுகியாக இருக்க வேண்டுமானால் தன்னுடைய புத்தி–யுக்தி இவ்விரண்டையும் கொண்டு யந்திரங்களைப் பலவாறாகச் செய்து அவைகளை ஆளுவதே முறை ஆகும். இவ்வித மான நல்ல குணம் மேல் நாட்டாருக்கே தற்காலம் உரியதாகும். அவர்கள் பல யந்திரங்களையும் உண்டு பண்ணி, அவைகளுக்கெல்லாம் சிருஷ்டிகர்த்தாவாக இருந்து, அவைகளைச் செவ்வனே ஆண்டு வருகின்ற னர். சிருஷ்டி என்பது ஈசுவரனுடைய சக்திக்கு சமான மானது. ஆகையால், ஒவ்வொருவரும் ஒன்றை சிருஷ்டித்தே அதை ஆள வேண்டும். இதன் விவரத்தை நன்கு அறிந்து, நம் நாட்டு சவுகர்ய, அசவுகர்யங்களுக்கு கந்தவாறு எல்லாம் யந்திர மூலமாகவே நடைபெறுவது நலம்.

**சிருஷ்டியும்—உலோகங்களின் மறு பிறப்பும்.**

சிருஷ்டியின் மூலமாகவே ஒவ்வொருவரும் சுகியான விஷ்ணு ஆவர். ஆகாயத்திலுள்ள வாயு ரூபம் கொண்ட உலோகங்களே நம்மை ஆளுகின்றன.

பூமியிலுள்ள உலோகங்களையே மனிதன் ஆளுகிறன். இவ்வுலோகங்களுக்கு திராவிடச் சிற்பத்தின்படி மனம், குணம் இவ்விரண்டும் உண்டு. அவைகள் நம்மை ஆளுகின்றன. நம்மாலும் ஆளப்படுகின்றன. ஆகாயத்திலுள்ள உலோகங்களின் மனக் கிளர்ச்சியால் நட்சத்திரங்களும், சூர்ய மண்டலமும் உதயமாயின. அதோடு ஜீவப்பிராணிகளும், மனிதவர்க்கமும், பூமியில் உதித்தன. அதேபோல், நமது பூமியில் உள்ள உலோகங்கள், யோக நிலையிலிருந்து விலகி, தன் சக்தி எத்தகையது என்பதை அறிய வேண்டும் என்ற மனக் கிளர்ச்சி உண்டானதின் பேரிலும், நாம் நம்முடைய தேவைகளுக்காகவும், அவைகளை பூமியிலிருந்து தோண்டி எடுத்து, அவைகளுக்குப் புது உயிர் கொடுக்கிறோம். இதுவே ஒரு பெண்மணி மணம் செய்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட, அதே போல் ஒரு புருடனுக்கும் மனக்கிளர்ச்சி ஏற்பட, அவர்கள் இருவருக்கும் மணம் ஒரே தினத்தில் ஏற்படுவதற் கொப்பாகும்.

இவ்வுலோகங்கள் இல்லையேல், சூர்ய மண்டலமும் இல்லை. அதனுள் மனித வர்க்கமும் இல்லை. எல்லா தூல சரீரத்திற்கும் காரண பூதமாக உள்ளது உலோகங்களே. ஆகையால், அவைகள் மனிதனல் உண்டாக்கப்பட்டாலும் சரி, கடவுளால் உண்டாக்கப்பட்டாலும் சரி, அவைகளுக்கு உகந்த மரியாதையைச் செலுத்தி, அவைகளை சக்தி மயமாகப் பாவித்து இந்துக்கள் பூஜிக்கிறர்கள்.

ஆயினும் பூமியிலுள்ள உலோகங்களுக்கு நாமே கடவுள் ஆகிறோம். உலோகங்களால் தூல சரீரத்தைக் கொண்டவைகளுக்கெல்லாம் சக்தியைக் கொடுப்பது, ஆகாயத்தில் நிறைந்து நிற்கும் மூல சக்தியே ஆகும். யந்திரங்களை சிருஷ்டிப்பதால் உலோகங்களையே உபயோகப்படுத்த நேரிடுகிறது. அவைகளுக்கு உயிர் நாமே கொடுக்கிறோம். நாமே வேண்டாத பொழுது எடுக்கிறோம். அவ்விதம் யந்திரங்களுக்கு உயிர் எடுக்கப் பட்டு விட்டால் அவைகள் மறுபடியும் உயிர் கொடுக்கப் பட்டு வேறு ஜன்மம் எடுக்கிறது. இதற்குக் காரண பூதம் நாமே. நாமே யுக்தியும், புத்தியும் உடைய கடவுளா கிறோம். யந்திரங்கள் ஏற்பட்டால் மனிதனுக்கு அழிவு என்று சிலர் சொல்வதுண்டு. எது செய்தாலும், ஒரு மிதத்தோடும், கட்டுப்பாட்டோடும் செய்யும் பட்சத்தில் மனிதனுக்கு ஒரு தீங்கையும் விளைவிக்காது. அப்படியே **விளைவிக்குமானால் மனிதனுக்கு அதை அழிக்கும் சக்தி இருக் கிறபடியால் யுக்தி-புத்தியோடு செய்தல் வேண்டும். இந்த ஆச்ரமத்திலேயே மனிதன் ஆத்ம பூஜை செய்யவும், தாமே கடவுளை பூஜை செய்யவும் ஈடுபடுகிறான்.**

**கடவுளின் வழிபாடும்—புரோகிதமும்.**

கடவுளின் வழிபாடு செவ்வனே நடந்தேற பல விதமான தெய்வ சாந்நித்யம் கூடிய "**சடங்குகள்**" ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவைகளெல்லாம் சரிவர நடைபெற "**புரோகிதர்கள்**" என்ற வேதாந்தத்திலும், தெய்வ உணர்ச்சியிலும், தேர்ந்தவர்களை உபயோகிக்

கிறோம். ஆயினும் புரோகிதம், தற்காலம் தகாத தொழிலாக ஆகியபடியாலும், ஆதி சங்கராச்சாரியாரே இந்த கர்மத்தை குறை கூறியிருக்கிறபடியாலும், இத் தொழிலே தற்காலத்துக்குகந்தவாறு சீர்படுத்த வேண்டியது அவசியம் ஆகிறது. அவர்களுக்கு மதிப்பும், பெருமையும் கொடுக்கும்படியான முறையில், அவர்களை ஒரு சக்திவாய்ந்த தன்னலமற்ற உத்தியோக ஸ்தர்களாக மாற்றுவது நலம். வேதாந்தத்தில் M. A. பட்டம் கொண்டவரையும், வேதத்தில் தேர்ச்சிபெற்றவரையும் உத்தியோகத் தலைவராக ஒவ்வொரு நாட்டிலும், ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்குக் கீழே வேலை செய்யும் வேதவ் யாசர்களையும் உத்யோகஸ்தர்களாக மாற்றி, பேரும், புகழும் அடையும்படியான விதத்தில், அமைக்கப்படுவது நலம்.

---

# 35. கிரஹஸ்தாச்ரமத்தில்-லக்ஷ்மி.

லக்ஷ்மி எனப்பட்ட சிற்பமானது, ஒரு கிரஹஸ் தனின் அல்லது விஷ்ணுவின் மனைவி என்று தாத்பர்யம். மனைவிகள் எட்டுவகைப்பட்ட குணங்களை உடையவர்கள் எனக் கருதப்படுகிறது. அவைகளுள் :—

1. தனலக்ஷ்மி—தனத்தைக் கொடுப்பவள்.
2. தான்ய லக்ஷ்மி—தான்யத்தைக் கொடுப்பவள்.
3. பாக்ய லக்ஷ்மி—நீடித்த ஆயுளையும், சுகத்தையும் கொடுப்பவள்.

4. வீர லக்ஷ்மி—தைர்யத்தைக் கொடுப்பவள்
5. கிரஹ லக்ஷ்மி—வாசஸ்தலத்தைக் கொடுப்பவள்.
6. சந்தான லக்ஷ்மி — குழந்தைகளைக் கொடுப்பவள்.
7. காருண்ய லக்ஷ்மி—கருணையைக் கொடுப்பவள்.
8. வித்யா லக்ஷ்மி—படிப்பையும், அறிவையும் கொடுப்பவள்.

இவள் சர்வ ஐச்வர்யங்களுக்கும் மதி தேவதை எனப்படுகிறது. அதாவது இப்பூமியில் பிறந்து, விஷ்ணு அம்சத்தைச் சார்ந்த கிரஹஸ்தனை மணந்தவள் என தாத்பர்யம். சாதாரணமாக அஷ்ட லக்ஷ்மியின் கடாக்ஷம் ஒருவன் பெறுவது அசாத்தியம். அவ்விதம் பெற்றால் அவனே பாக்கியம் பெற்ற விஷ்ணு ஆவான். **ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்குக்கூட சப்த லக்ஷ்மி கடாக்ஷம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. சந்தான லக்ஷ்மி ஒன்றே அவருக்கு குறைபட்டது என்பார்கள்.**

**லக்ஷ்மியும், குடும்பமும்.**

லக்ஷ்மி என்ற பதத்திற்கு குடும்பத்தை வளர்த்து சுக வாழ்வுக்கு ஆதாரமாகக் கொண்ட சக்தியைக் கொடுக்கக்கூடியவள் என்றே தாத்பர்யம். ஒரு புருடனுக்கு மணம் ஆனால், அவன் இல்லத்திற்கு லக்ஷ்மி வருகிறாள் என்றே நாம் கூறுகிறோம். முற்காலத்தில் சிறு வயதிலேயே மணம் செய்விப்பது வழக்கம். அச் சிறுவர்கள் தானே குடும்பம் நடத்த தகுதியற்றவர்கள் ஆகையால், அச்சிறுமிகளுக்கு வேண்டிய பழக்க—

கிரஹஸ்தாச்ரமத்தில் - லக்ஷ்மி.

சித்திரம் 20.



லக்ஷ்மி.

வழக்கங்களைச் செய்துவைத்து, தான் நடந்துகொள்ள வேண்டிய விதத்தை எல்லாம் அறியச் செய்து, பதியோடு சுக வாழ்க்கை நடத்த பல அன்யோன்யத்தையும் ஏற்படுத்திப் பழக்கி வந்தனர். அக்காலம் சிறுமிகள் ஒரு பெரிய குடும்பத்திலேயே இருந்து, பழகி, அறிந்து,

பிறகு தனி வாழ்க்கை நடத்துவதும் உண்டு. பல இடங்களில் கூட்டுக் குடும்பம் நடத்துவதும், வழக்க மாகவே இருந்து இருக்கிறது.

இந்த கூட்டுக் குடித்தனம் வெகு நாளாக நம் நாட்டில் வளர்ந்து வந்து இருக்கிறது. முற்காலம் எவ்விதம் நடந்தேறியது என்பதை அறிய முடியவில்லை. அக்காலம் சிறு வயதிலேயே மணம் ஆவது வழக்கம். ஆகையால் அவ்வாழ்க்கையே வேறு விதமாக இருந்து இருக்கும். தற்காலம் வயது வந்த பெண்மணிகளே மணம் செய்துகொள்ளுகிருர்கள். ஆகையால், முற் காலத்து வழக்கங்கள் தற்காலத்துக்கு ஒவ்வாது என்றே தெரிய வருகிறது. சென்ற 30 ஆண்டுகளாகச் செய்த ஆராய்ச்சியின் பலஞக தற்காலத்திற்குக் கூட்டுக் குடும்பம் ஒரு விரும்பத்தகாத கொள்கை என்றே முடிவுக்குவரப் பல காரணங்கள் உள.

கூட்டுக் குடும்பமும் –'பிரிந்த குடும்பமும்.

தற்காலத்து மணம் ஆன பெண்மணி,"அறிந்தவளாய், தான் ஒரு குடும்பத்தை நிர்வகிக்கப்போகிருேம். அக் குடும்பம் சீரும், சிறப்புமாக வாழ எவ்வகையாய் நடந்து கொள்ளவேண்டும் என்ற ஒரு திட்டம் போட்டுக் கொண்டே வருகிருள். அவளுக்கு எல்லா சவுகர்யங் களையும் செய்து கொடுத்து, வாழையடி வாழையாக வாழ வேண்டுமென்று நாம் வாழ்த்துவதுண்டு. ஒரு வாழைக் கன்று பெயர்த்து வேறு இடத்தில் நடப்படுவ

தால், அது நன்ருகச்செழித்து, கன்றுகளை ஈன்று, பலன் அளிக்கிறது. மாருக வேறு கூட்டுக் குடும்பத்தோடு வளரும் பட்சத்தில் அது சரிவர பலன் அளிப்பதில்லை.

நம் நாட்டில் சில பாகங்களிலும், ஜாதியினர்களிடமும், ஒரு விதமான சிறந்த வழி தற்காலம் காணப்படுகிறது. அதுவே மணம் ஆன பெண்மணியையும், புருடனையும், தங்கள் குடும்பத்தைத் தானே நிர்வகிக்கும்படியான சந்தர்ப்பத்தை உண்டுபண்ணி, அவர்களைக் கூட்டுக் குடும்பங்களிலிருந்து விலக்கி, அவர்களுக்குத் தகுந்த வசதிகளையும் செய்து கொடுக்கிருர்கள். இம்முறையே லக்ஷ்மி என்ற பதத்திற்கு சிறந்ததாகும்.

**குணமும் – குடும்பமும்.**

குடும்ப வாழ்க்கை நடத்தும் பெண்மணிகளுக்கு மிகவும் முக்கியமானது நல்ல குணமே. அவர்களுக்கு அழகைப் பார்க்கிலும் நல்ல குணமே சிலாக்கியமெனக் கருதப்படுகிறது. நல்ல குணத்தோடு அழகும் பொருந்தி இருந்தால் மிகவும் சிலாக்கியமானது. நல்ல குணம் இல்லாதவர்களும், அழகை மட்டும் கொண்டவர்களும், அழகிற்கு அடிமையானவர்களும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதால் இகத்திற்கும், பரத்திற்கும் இரண்டிற்குமே உதவாதவராவர். அவர்கள் வாழ்க்கை பாழாகும். அதிகமாகப் படித்து, ஆனுல் நல்ல குணம் இல்லாதவர் இதே இலக்குவிற்குப் பொறுப்பாவர்.

## கிரஹஸ்தாச்ரமத்தில் - லக்ஷ்மி.

நல்ல குணமுள்ள பெண்மணிகளின் வாழ்க்கை, புருஷன் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும், யோக்யதை அற்றவனாக இருந்தாலும், எப்பொழுதும் எக்காலத்திலும் சிறப்பாகவே நடைபெறும். பெண்மணிகள் பராசக்தியின் பிரதிபிம்பமே ஆகையால், சாந்த சொரூபிகளாகவும், சகிப்புத் தன்மையோடும் நல்ல அறிவோடும் கூடிய விசேஷ குணங்களை உடையவர்களாய், பர்த்தாவுக்கு அவ்வப்பொழுது நற்போதனைகள் செய்தும், நடைமுறையில் நடத்திக் காட்டியும், உலகத்திற்கே ஒரு தாயைப்போல் வாழ்க்கையை நடத்துவது சிறந்ததாகும். புருடன் மாயையில் சிக்குண்ட ஒரு பிராணி. அவனைத் தெய்வ மாக மாற்றுவது பெண்சாதியின் பொறுப்பாகும். இதுவே திருமணத்தின் முக்கிய அம்சம் ஆகும்.

### லக்ஷ்மி சிலையின் விபரம்.

லக்ஷ்மி என்ற சிற்பத்தை, இடது கையில் வில்வப் பழமும், வலது கையில் பதுமமும் தாங்க, தங்க நிறம் கொண்டவளாய், இரண்டு யானை பொற்கலசங்களில் கங்கா ஜலம் கொண்டு இரண்டு புறங்களிலும் துதிக்கைகளால் அபிஷேகம் செய்யப்படுபவள் என்பதாக சிற்பிப்பதுண்டு. இந்த சிற்பத்தையே கஜலக்ஷ்மி எனப்படுகிறது. இவளே தாமரைப் புஷ்பத்தில் உதித்தவள் என்றும், அதாவது பூலோக வளர்ச்சிக்குக் காரண பூதமாக இருக்கப்பட்டவள் ஆவள் எனப்படுகிறது.

# 36. கிரஹஸ்தாச்ரமத்தில் ஈசுவரத் தன்மையின் முன்னேற்றம்.

விஷ்ணு அம்சமாகிய கிரஹஸ்தாச்ரமத்திலேயே மனிதன் தன் கர்ம பலனால் சித்தி அடையக்கூடிய ஈசுவரத் தன்மை அடைகிறான். சத்கர்மங்களைச் செய் வதற்கு நான்கு விதமான அறிவுகள் வேண்டும். ஒன்று, ஈசுவரத் தன்மையின் லட்சியம், அதாவது பிரும்ம ஞானம். இரண்டு, கர்மச் சட்டத்தில் நம்பிக்கை. மூன்று, உடல் சுத்தம். நான்கு, மனச்சுத்தம். முதலாவதான பிரும்ம ஞானத்தைப் பற்றி முன்னமேயே சொல்லியாகிவிட்டது.

## கிரஹஸ்தாச்ரமும் — கர்மச் சட்டமும்.

கர்மச் சட்டத்தை விவரிக்குங்கால், மனித வர்க்கத்தி னுடையவும், எல்லா ஜீவராசிகளின் வளர்ச்சிக்கும்கூட இரண்டு விதமான சக்திகள் வேலை செய்கின்றன. மனித வர்க்கத்தினுடையவும், ஜீவப்பிராணிகளினுடைய வும், உயிர் பெற்றவைகளை சந்திரன் நம் பூமியிலிருந்து பாலை மத்தால் கடைந்து வெண்ணை எடுப்பதுபோல் இழுத்து வெளியே விடுகிறான். அவ்விதம் இழுக்கப் பட்ட சதை, எலும்பும் கூடிய ஜீவராசிகளுக்கும், மனித வர்க்கத்திற்கும், சூர்யனே ஈசுவரத் தன்மையையும், பலவித சக்திகளையும் கொடுக்கிறார். இவ்விரண்டு சக்திகள் ஒன்று சந்திரனிடமிருந்தும், மற்றொன்று சூர்யனிடமிருந்தும் வரப்பெற்ற மனித வர்க்கமும்,

**கிரஹஸ்தாச்ரமத்தில் ஈசுவரத் தன்மையின் முன்னேற்றம்.**

மற்ற எல்லா ஜீவப்பிராணிகளும், அதனதன் சக்திக் குகந்தவாறு பெரியதோ அல்லது சிறியதோ ஆன ரேடியோ ரிஸீவரைப்போல் வேலைசெய்து வருகின்றன. இவ்விதம் வேலை செய்யும் மனிதவர்க்கமும், ஜீவராசிகளும், நல்ல முறையில் அதனதன் கர்மங்களைச் செய்வதற்கு, முதலாவதாக அவை ஊனமில்லாமல் இருக்க வேண்டும். இரண்டாவதாக அதிக கொழுப்பேறியதாக இல்லாமல் சூர்யனிடமிருந்து வரும் ஈசுவர சக்தியை, தவக்கமன்னியில் கிரஹித்து, அதை உபயோகிக்கும்படியான சக்தி வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். மூன்ருவதாக, தம்தம் கடமை எத்தகையவை என்பதை அவைகள் அறிந்திருக்க வேண்டும்.

மனித வர்க்கம் ஊனமில்லாமல் இருக்க வேண்டுமானல், கர்மச் சட்டத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். அதாவது ஒருவனுடைய நற்செயல்களும், துர்ச் செயல்களுமே அவனுடைய வாழ்விற்கும், மறு பிறப்பின் நன்மைக்கும், தீமைக்கும், அங்க ஹீனத்திற்கும், நல் வளர்ச்சிக்கும் ஏதுவாகிறது. ஒருவன் செய்த கர்மம் கெட்டதாக இருந்தாலும் சரி, நல்லதாக இருந்தாலும் சரி, அதற்கு உடனுக்குடனேயே ஒரு விதமான பலன் அந்த ஜன்மத்திலேயே கிடைக்கிறது. பின்பு மொத்தமாக அவன் வாழ்நாட்களில் நடைபெற்ற கர்மங்களுக்கு பலன் வேருக அவனுடைய அடுத்த ஜன்மத்தில் கிடைக்கிறது. இதில் அங்கஹீனத்திற்கும், மூளை விருத்தி இல்லாமல், பிறக்கும் மனிதவர்க்கத்திற்கும், அவரவர்கள் செய்த கெட்ட கர்மங்களே ஆதாரம் ஆகிறது.

**கிரஹஸ்தாச்ரமத்தில் ஈசுவரத் தன்மையின் முன்னேற்றம்.**

**கெட்ட கர்மமும்—மறு ஜன்மமும்.**

இக்கெட்ட கர்மங்களுக்கு ஆதாரமானது மூன்று.

1. சாராயம், இரைச்சி, இவைகளின் அதிக ஆசை.
2. ஸ்திரீ-புருடர்களின் அளவற்ற அன்யோன்யம்.
3. மண் ஆசையும், பொன் ஆசையும்.

இம்மூன்றும் மாயையின் அங்கங்கள் எனப்படுகிறது.

அவை அளவிற்கு மிஞ்சிப்போனால், மனிதனுடைய வீழ்ச்சிக்கும், நாசத்திற்கும் காரணமாகின்றன. ஒருவன் கள், சாராயம் அருந்தியும், ஸ்திரீ லோலனாயும் கொஞ்ச காலம் தன் வாழ்க்கையை நடத்துகிறான். அதன் பயனாக உடனேயே அவனுக்கு ஒரு கெட்ட பெயரும், அவமரியாதையும் ஏற்படுகிறது. அவன் சீக்கிரம் தன் கெட்ட செயல்களைத் திருத்திக் கொண்டு, தனக்கேற்பட்ட உபாதிகளை உணர்ந்து சொஸ்தப்படுத்திக் கொண்டு சத்கர்மம் செய்ய ஆரம்பித்து விட்டானாகில், அவனுக்கு பின்வரும் ஜன்மத்தில் பிறவியிலேயே ஊனம் ஏற்படாது. அப்படி இல்லாமல் அவன் தன் வாழ்நாள் முழுவதும் குடிகாரனாகவும், ஸ்திரீ லோலனாகவும் இருந்து தன் உடல் கெட்டு, அனேக உபாதிகளுக்கு உள்ளாகி, அதற்கு உண்டான கெட்ட பலன்களை கொஞ்சமே அனுபவித்து, இறந்துவிட்டானாகில் அவன் கட்டாயம் மறு ஜன்மத்தில் அங்கஹீனனாகவும், ஊமை, குருடு, ஆண்மைத்தனம் இன்மை இவ்விதமான கஷ்டங்களுக்குள்ளாகி பிறக்கிறான். ஆனால் இந்த மனிதனே

## கிரஹஸ்தாச்ரமத்தில் ஈசுவரத் தன்மையின் முன்னேற்றம்.

அவன் கெட்ட கர்மத்திற்குண்டான கெட்ட பலன்களை பல வாறுக அந்த ஜன்மத்திலேயே அனுபவித்துவிட்டானுகில் அவனுக்கு அங்கஹீனம் மறு ஜன்மத்தில் ஏற்படாது. ஆனுல் கொஞ்சம் கஷ்டமும், அவமரியாதையும் மறு ஜன்மத்தில் சுட்டாயம் உண்டு.

பொதுவாக ஜனங்கள் ஒரு குருடனையோ அல்லது குஷ்டரோகியையோ கண்டு கர்மபலன் என்று சொல்லி விடுகிருர்கள். அது எப்படி சம்பவிக்கிறது என்பதின் காரணம் மேலே சொன்னதே. கெட்ட கர்மங்களான பொய்சொல்வது, திருடுவது, பலர் பொருளை அபகரிப் பது இவைகளுக்கும் மறு ஜன்மத்தில் பல கெட்ட பலன்கள் உண்டு. இந்த கர்மச் சட்டம் ஆண், பெண் இருதரத்தாருக்குமே உரித்தானது. கற்பைக் கைவிட்ட பெண் மணிகள் பலவித கஷ்டங்களுக்கும், உபாதைகளுக்கும் உள்ளாகிருர்கள். இந்தக் கர்மச் சட்டத்தை நன்கு அறிந்து அதன்படி செயல்படுபவருக்கு துக்கமும் இல்லை, உபாதையும் இல்லை. அது ஆராய்ச்சியின் மூலம் தெரிந்த உண்மை. மனிதன் தன் அறியாமையினுலும், சுய நலத் தாலும், ஆசாபாசங்களுக்கு உள்ளாகி துக்கத்தையும், உபா தையையும் வரவழைத்துக் கொள்ளுகிருன். இல்லையேல், மனிதன் அப்பழுக்கில்லாத ஒரு சுகி ஆவான்.

### நல்ல கர்மமும் - மறு ஜன்மமும்.

மேலே சொன்னவைகளுக்கு மாருக சத் கர்மத்தில் உழைத்து அநேக விதமான கலைகளில் தேர்ச்சிபெற்று கல்பனு சக்தியும், சிருஷ்டி சக்தியும் அடைந்தவனே ஈசுவரத் தன்மை அடைந்தவன் ஆவான். ஒரு குழந்தை பிறந்து அதன் சிறுவயதிலேயே ஏதாவது ஒரு கலையில்

சங்கீதத்திலோ, சிற்பத்திலோ, நாட்டியத்திலோ அல்லது வேறு எந்த கைத்தொழிலிலோ, வெகு மேன்மையாகவும், திறமையுடனும், நடத்திவருகிறது. **இதற்குக் காரணம் அக் குழந்தை தன் சென்ற ஜன்மத்தில் கர்மத்தைச் செவ்வனே நடத்தி அதன் நற்பலனை அனுபவிப்ப தற்குள் தான் வேறு ஜன்மம் எடுத்ததே ஆகும்.**

அதே குழந்தை அக் கலையின்பால் செய்த கர்மத்தால், அதன் நல்ல பலனை கடந்த ஜன்மத்திலேயே அடைந்திருந்தால், இந்த ஜன்மத்தில் அக் குழந்தைக்கு அந்தக் கலையில் தேர்ச்சி இருக்குமேயொழிய அவ்வளவு சிரத்தையாவது, ஊக்கமாவது ஏற்படாது. ஏனெனில் ஒருவன் ஒரு கலையைத் தீவிரமாக நடத்தி அதன் பலனை அந்த ஜன்மத்திலேயே அடைந்திருந்தாகில் அவன் மனம் சாந்தி அடைகிறது. அதாவது நமக்கு இந்தக் கலையில் தீவிரமான அபிவிருத்தி இருக்கிறது. ஆனல் வேறு சில கலைகளில் மிகவும் பயிற்சி வேண்டும். அதை இனி நன்ருக கற்கவேண்டும் என மனதில் தோன்றி அவனுக்கு பயிற்சி இல்லாத கலையில் அவன் மனம் செல்ல ஆரம்பிக்கிறது. இதன் காரணமாக அவன் தன் மறு ஜன்மத்தில் தான் சென்ற ஜன்மத்தில் ஆரம்பித்த புதுக் கலையின் கல்வியைப் பயிலத் தொடங்குகிருன். அதில் தேர்ச்சியும் அடைகிருன். **ஆயினும் அவன் சென்ற ஜன்மத்தில் கரைகண்ட கலையின் பலன்கள் அவன் மூளையில், எவ்வளவு ஜன்மங்கள் எடுத்தபோதிலும் சக்தி வாய்ந்ததாகவே காணப்படுகிறது.**

## கிரஹஸ்தாச்ரமத்தில் ஈசுவரத் தன்மையின் முன்னேற்றம்.

**சத் கர்மமும் – கலைகளும்.**

மனிதன் தன் முன்னேற்றத்திற்காகப் பூலோகத்திலுள்ள நூற்றுக்கணக்கான கலைகளையும், ஒவ்வொன்ருகக் கரைகண்டு ஒவ்வொரு ஜன்மத்திலும் சில கலைகளின் திறமையை எடுத்துச் செல்லுகிருன். அவ்விதம் சேர்த்து அநேக ஜன்மங்களுக்குப்பின் பெரிய யோகியாகவும், சத் கர்மத்திலும், புத்தியிலும், சிருஷ்டியிலும் சக்தி அதிகரித்து இந்த உலகத்தில் கர்மயோகி ஆகவும், விஷ்ணுவாகவும் விளங்குகிருன். பொதுவாக, கர்ம விதிப்படி காரணம், காரியம் என்று இரண்டுண்டு. ஒரு காரணம் உண்டாஞல் அதற்கு காரியம் ஏற்படவே வேண்டும். அவ்விரண்டும் ஒரே ஜன்மத்தில் ஏற்படாவிட்டால் மனிதனுக்குச் சாந்தி ஏற்படுவதில்லை. ஆகையால் அவன் மறு ஜன்மத்தில் அதன் பலனை அடைய வேண்டியிருக்கிறது.

முன்காலத்தில் திராவிடச் சிற்பம் அல்லது கீழ் நாட்டு நாகரீகம் ஓங்கி வளர்ந்து இருந்தபொழுது பல முனிவர்களும், திறமை வாய்ந்தவர்களும், வசித்து வந்தனர். அவர்கள் கர்மத்தைக் கைவிட்டவர்களல்ல. அந்தக் காலத்தில் தான், நம் நாகரீகம் ஓங்கி வளர்ந்தது எனப்படுகிறது. எல்லா ரிஷிகளும், முனீச்வரர்களும் நாள்தோறும், நிமிடம் தவருது கர்மத்தில் மனதைச் செலுத்திவந்தனர். கணக்கில்லாத கலைகளில் தேர்ச்சி அடைந்தனர். பல புதிதான கலைகளை உண்டுபண்ணினர். அந்தக் கலைகளுக்காக வேண்டிய கருவிகளையும் கண்டெடுத்தனர். அவைகளை மனிதவர்க்கத்திற்கு அறிவிக்குமாறு பல நாடுகள் கரைகடந்து சென்று போதித்தும் வந்தனர்.

# 37. உடல் சுத்தம்.

முன் அத்தியாயத்தில் உடல் நம் பூமியிலிருந்து உண்டாக்கப்பட்டதென்றும், நமக்கு சக்தி சூர்யனிட மிருந்து கிடைக்கிறதென்றும் சொல்லப்பட்டது. இந்த இரண்டில் சதையும், எலும்புமாகப்பட்ட நம் பூமியைச் சார்ந்த உடல் எவ்வளவு பங்கு இருக்க வேண்டும். அதற்கு கொடுக்கப்படும் சூர்ய சக்தி எவ்வளவு பங்கு இருக்கவேண்டும். இரண்டும் சமமாக இருக்கலாமா அல்லது அவ்விரண்டில் ஏதாவது ஒன்று அதிகப் பட்டும், மற்றொன்று குறைவாகவும் இருக்கலாமா? அப்படி ஒன்று அதிகமாகவும், மற்றொன்று குறைவாகவும் இருக்கலாமென்றால் அவ்விதம் இருக்கவேண்டியது உடலா, சக்தியா என்பது இந்த உலகத்திலேயே பெரிய பிரச்சனையாக இருக்கிறது.

உடல் கொழுப்பும் – மூளை விருத்தியும்.

இவ்விஷயத்தில் மேல் நாட்டார் அபிப்பிராயத்தை வினவுங்கால் உடல் சரியாகக் கொழுத்து இராவிடில் மூளைக்கு பலம் ஏற்படாது என்பர். ஆனால் நம் முன் னோர்களின் முறைப்படி உடல் அதிகமாகக் கொழுத்துப் போனால் மந்தம் ஏற்பட்டு அதனால் மூளை சூர்யனிட மிருந்து வரும் சக்தியை சரிவர கிரஹிக்க முடியாது என்பது கருத்து. இவ்விரண்டிலும் உண்மை இருந்த போதிலும், மனிதன் சதையை கொழுக்க வைப்பதற்காக பிறந்தானா, அல்லது சூர்யனிடமிருந்து சக்தியை கிர

உடல் சுத்தம்.

கித்து ஈசுவரத் தன்மையைஅடையப் பிறந்தானு என்ற பிரச்சனேயே இந்த விவாதத்தைத் தீர்க்குமாகையாலும், மனிதனின் முக்கியமான கைங்கர்யம் அவன் ஈசுவரத் தன்மையை அடைவதே ஆகையாலும், ஒருவன் உடலைக் கொழுக்க வைப்பது அவன் மூளைக்கு மந்தம் ஏற்படா மல் சூர்யனிடமிருந்து வரும் சக்தியை அதிகமாகப் பெறுவதற்கு உகந்த அளவிற்கே இருக்கவேண்டும். அவன் உடல் அதிகமாகக் கொழுத்தாலும் கெடுதல்தான். கொழுப்பே இராமல் எலும்பும், தோலுமாக இருந்தாலும் கெடுதலே.

மனிதனுடைய உடல் சுமாராக கொழுத்தே இருக்க வேண்டும். அதனுல் மூளைக்கு மந்தமும், மனதிற்கு மிருகத் தன்மையும் ஏற்படலாகாது. இந்த அபிப்பி ராயத்தினுலேயேதான் இந்திய சித்திரங்களிலும், சிற்பங்களிலும், இந்துக்களின் வாழ்க்கையிலும் கூட சரீரம் அதிகம் கொழுத்ததாக காட்டப்படுவதில்லை. அதிகக் கொழுப்பை வெறுக்கவும் செய்கிருர்கள். இந்த மனப்பான்மையினுலேயே மேல்நாட்டுச் சித்திரங்களுக்கும், சிற்பங்களுக்கும், நம் நாட்டு சித்திர - சிற்பங்களுக்கும், பல வித்யாசங்கள் உண்டு.

மேல்நாட்டார், ஒருவனை சிற்பிப்பதானுல் அவ னுடைய கொழுப்பேறிய அங்கங்களையே முக்கியமாக விவரித்துக்காட்டுவது வழக்கம். ஆனுல் நம் நாட்டு சிற்பங்களிலெல்லாம் அம் மனிதனுடைய நல்ல குணங்களையே அதிகமாகக் காட்டி அங்கங்களின்

உடல் சூத்தம்.

கொழுப்பு குறைவாகவே சிற்பிக்கப்படுகின்றன. மனித உடலில் கொழுப்பு அதிகரிக்காமல் இருந்தால்தான் அவன் சாந்தியோடு வாழமுடியும். அவனுக்கு கொழுப்பு அதிகம்ஏறினுல் அவன் மிருகமும், மிருகத்தன்மையுடைய மனிதனும் ஆவான். இப்பூலோகத்தின் வளர்ச்சியை நோக்குங்கால் முன்னொருகாலத்தில் பல பெரிய பெரிய கொழுத்த மிருகங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது. அவைகளெல்லாம் முன்னேற்றம் அடைய தங்களுடைய கொழுப்பேறிய சரீரங்களை விட்டு விட்டு சிறு மிருகங்களாகவே உற்பத்தி ஆகி உள்ளன. அதே போல் மனிதன் அவனுடைய உடலையும், மாமிசத்தையும், சிறுகச் சிறுக குறைத்து மூளையைப் பெருக்கியே முன்னேற்றம் அடைகிறுன். இதுவே நம் நாகரீகத்தின் முயற்சியும் ஆகும். நம் நாகரீகத்தின்படி பார்க்கப் போனல் மனிதன் அதிகமாக சரீரம் கொழுக்காமலும், கொழுப்பே அற்று இராமலும், நடுநிலையாக திராசு முனையில் இருத்தல் வேண்டும்.

உடல் கொழுப்பும் – ஜீவப் பிராணிகளும்.

மனிதனைக் கொழுக்க வைக்கும் முறையில் பலவகை உள. இவைகளுள் முக்கியமானதும், மிக்க அறிவுடையதும், பெரியதும், மனிதவர்க்கத்திற்கே பாலூட்டும் தாயைப்போல் சேவை செய்யக்கூடியதும் மாடு. இதை நம் முன்னோர் சாந்தஸ்வரூபி என்றும், மனிதவர்க்கத்தின் வளர்ச்சிக்குப் பால் கொடுத்து தாயைப்போல் உதவி செய்வதால் மாட்டை தெய்வீகப் பிறவி என்றும்,

அது மனிதனுக்கு எவ்விதத்திலும் ஊழியன் ஆகை யால், அதற்கு ஒரு முக்கியமான ஸ்தானமும் கொடுத்து இருக்கிறார்கள். அதையே "நந்தி" என்பர். அதாவது சிவனுக்கு ஊழியன், அல்லது ஈஸ்வரத் தன்மை வாய்ந்த புருடனுக்கு, மாடு மிகவும் அவசியமானது என்று தாத்பர்யம்.

இந்த மாடுதான் உலகத்திற்குள்ளேயே ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது எனலாம். இதன் காரணமாகவே மாடு தின்னும் மக்கள் இப்பூலோ கத்திலேயே அதிகரித்து இருப்பதால் "நிர்வாண தேசத்தில் கோமணம் கட்டியவன் பைத்தியக்காரன்" என்ற பழமொழிபோல் மாடு தின்னுதை இந்துக்களின் பால் அவர்களுக்கு ஒருவிதமான கெட்ட மனப்பான்மை ஏற்பட்டு இருக்கிறது. ஆயினும் சென்ற இரண்டு மகா யுத்தத்திற்கும் மத்திய காலத்தில் ஐரோப்பா முழுவதும் முக்கியமாக பிரிட்டனிலும், மாடு தின்னலாமா, தின்னக் கூடாதா, என்பதைப்பற்றி வாக்குவாதங்கள் நடந்தன. அப்படி மாடு தின்பதால் மிருகத் தன்மை வந்துவிடு கிறதா, தின்னுதவருக்கு மிருகத் தன்மை இல்லையா, உண்பதை நிறுத்தினுல் உடல் சக்தி குறைந்துவிடுமா, தின்னுல் தெய்வீக சக்தி குறைந்துவிடுமா, என்பவை களைப்பற்றி வாதாடி கடைசியில் வெகு காலமாக உண்டு வந்ததின் பயனுகவும், உண்ணுமற் போனுல் தேக பலம் குறைந்துவிடுமோ என்ற அச்சத்தாலும், வேறு அதைப் போல் உண்ணக்கூடிய வஸ்துவைச் சேகரிக்க அதிக

பிரயாஸை எடுக்கவேண்டியதாலும், இந்தப்பிரச்சனை கைவிடப்பட்டது.

மனிதனும் — நாட்டு மிருகங்களும்.

மனிதன் தன் சுதந்திரத்துக்காக வாதாடுகிறான். நாட்டு மிருகங்கள் தங்கள் உயிருக்காகவே வாதாடுகின்றன. கத்துகின்றன, கதறுகின்றன, இறுதியில் கடவுளைத் தொழுது உயிரை மாய்த்துக் கொள்ளுகின்றன. அதன் மூலமாக மனிதன் பாப கர்மத்தைச் சுமக்கிறான். மிருகத் தன்மையை அடைகிறான். நாளடைவில் இப் பூலோகத்தில் சாந்தியையும் அகற்றுகிறான். சண்டையும், கூச்சலும் போட்டு தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளுகிறான். இதுவே சென்ற மகாயுத்தத்திற்கு ஆதிமூலமும் ஆகும். ஆகையால் இப் பூலோகத்தில் உள்ள மனிதவர்க்கம் சுதந்திரம் அடைந்தால்மட்டும்போதாது. எல்லா நாட்டுப் பிராணிகளும் தன் உயிருக்கு மனிதனால் பங்கம் இல்லை என்பதாக உணரும்வரை சாந்தி ஏற்படாது.

உடல் சுத்தமும் - சீத உஷ்ணமும்.

அடுத்ததாக உடல் சுத்தத்திற்குப் பங்கம் ஏற்படுத்துவது நம் நாட்டின் சீத உஷ்ண ஸ்திதியே ஆகும். நம் நாட்டின் தென்பாகத்தில் வருடம் முழுவதும் அதிக வித்தியாசமின்றி உஷ்ணமாகவே இருக்க, மத்திம பாகத்தில் அதிக உஷ்ணமும், அதிக குளிருமாயும், வடக்குப் பிராந்தியமான மலைப்பிரதேசங்களில் மிகவும் குளிர்ச்சியாகவே இருக்கின்றன. பொதுவாக ஒரு நாட்டில் உஷ்ணம் அதிகரித்தால் அரிப்பும், தொத்து

நோய்களும், கிருமிகளும், அதிகமான ஜீவப் பிராணி களின் உற்பத்தியும், அதன் அழிவும், அற்ப ஆயுளும் அதிகரிக்கிறது. ஆனால் சீதளம் அதிகமான வடநாடு களில் இதற்கு சிறிது மாருகவே நடைபெறுகின்றன. அந்த அந்த சீத உஷ்ண ஸ்திதிக்கு உகந்தவாறு அந்தந்த தேசங்களிலுள்ள ஜனங்களின் பழக்க வழக் கங்கள் மாறுபடுகின்றன. மனிதவர்க்கம் சுக ஜீவனம் செய்வதற்கு அதிகமான குளிரும் கூடாது, அதிகமான உஷ்ணமும் கூடாது. சுமாராக 60 டிகிரிக்குக் குறையா மலும் 85 டிகிரிக்கு மேல்படாமலும் இருந்தால் சிரமம் அன்னியில் வாழலாம். அப்படி பூலோகம் முழுவதும் ஒரே சீத-உஷ்ண ஸ்திதி உண்டுபண்ணுவது கடவு ளாலும் முடியாத காரியம். ஆகையால் இதை சமாளித்துக் கொள்ள மனிதனுக்குப் பலவித சவுகர்யங்களையும், எல்லாவற் றிற்கும் மேலாக மூளையையும்கொடுத்து இருக்கிறுர் கடவுள்.

**உடல் சுத்தமும் – நல்ல முறையும்.**

மூளையைக்கொண்டு மனிதன் தனக்கு வேண்டா ததை விலக்கி, வேண்டியதைச் சேர்த்துக்கொண்டு, புத்தி யோடும், யுக்தியோடும், தன் உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுகிருன். இம் முறையில் நம் முன்ஞேர் உடல் சுத்தம் என்ற விஷயத்தைப்பற்றி கூறி இருப்பதாவது:– முதலாவதாக, ஒரு நாளைக்கு மூன்று முறை நீராட வேண்டு மென்றும், ஒவ்வொரு தடவையும் நீராடுமுன்பு பல்லைத் தேய்த் தும், வாய், மூக்கு, கண், காது, மற்ற அவயவங்களையும், சுத்தி செய்து, நாளைக்கு இரு தடவை மலம் கழித்தும், அவ் விடத்தைச் சரியாக சுத்தம் செய்தும்; நீராடிய பிறகு ஒவ்வொரு

தடவையும் வேறு சுத்தமான வெளுத்த, வண்ணனுக்குப் போட்ட அல்லது எண்ணை அழுக்குப்போக சோப்புப்போட்டுத் தோய்ந்த வஸ்திரத்தைத் தரித்தும், மிதமாக அஜீரணம் ஆகாத படி முக்கால் வயிறு, மாமிசத்தைத்தள்ளி, மரக்கறி உணவு களை உண்டும், பெண்சாதி - புருடன் என்ற விஷயங்களில் ஒரு மிதத்தோடு வசித்தும்; கள், சாராயம், புகையிலை, சுருட்டு, பொடி இவைகளை நீக்கியும், வெற்றிலை மிதமாகவும்போட்டு வசித்துவருகிறவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந் தாலும்சரி அவர் உடல் ஒருவிதமான மணமும், வாசனையும் கொடுக்கும்.

இதுவே இந்திய மக்களின் உடல் சுத்தத்தின் லட்சியம் ஆகும். இவ்விதம் பழக்கப்பட்ட ஒவ்வொரு இந்தியரும், எவ்வளவு குளிரான நாட்டிற்குப் போன போதிலும் தங்கள் கடனைச் செய்துவருகின்றனர். இவ்விதம், உடலில் ஒரு வாசனை ஏற்படவேண்டுமானல் முக்கியமாக மாமிச உணவை அகற்ற வேண்டும். மாமிச உணவு உண்பதால் உடலில் உண்டாகும் வேர்வையும், கழிவுப் பண்டங்களும், துர்நாற்றம் உள்ள தாகவே இருக்கின்றன. பொதுவாக, மாமிச உணவு உண்ணுமல்போனல் உடலில் வலு இராது என்பதாக ஒரு அபிப்பிராயம் இருந்துவருகிறது. அதைப் பொய் ஆக்குவது நம் நாட்டு மிருகங்களே ஆவன. யானை, குதிரை, மாடு, ஆடு, மான், ஒட்டகம் முதலியவை மாமிச பட்சிணிகள் அல்ல. அவைகள் பலத்திலும், புத்தியிலும், குணத்திலும் குறைந்தவை அல்ல. மாமிச பட்சிணி களாகிய புலி, சிங்கம், சிறுத்தை இவைகள் மூட சக்தி

யைக்கொண்டவைகளாகவே இருக்கின்றன. பகுத்தறிவுச் சக்தி வளர வேண்டுமானால், மாமிசம் உண்ணாமல் இருப்பதே முறையாகும்.

திண்பண்டங்களின் உற்பத்தியும் - ருசியும்.

நம் நாட்டில் உணவு என்ற பதத்திற்கு தேக வளர்ச்சியைப் புறக்கணித்து, நாக்குக்கு வேண்டியதான ருசியை ஆதாரமாகக்கொண்டு பண்டங்களை உற்பத்தி செய்கின்றனர். ருசியில் ஒன்பது விதம் எனப்படுகிறது. அவைகளில் முக்கியமானது மூன்றே. புளிப்பு, உப்பு, உரைப்பு. மற்ற ஆறு ருசிகளும் இம் மூன்றின் கலப்பினால் உண்டானவையே. அதாவது:—

புளிப்பு — எதிரிடையானது — காரம்
உப்பு — ,, — துவர்ப்பு
உரைப்பு — ,, — தித்திப்பு
புளிப்பு & உப்பு — தித்திப்பு ,, — உரைப்பு
,, & உரைப்பு — துவர்ப்பு ,, — உப்பு
உப்பு & ,, — காரம் ,, — புளிப்பு
தித்திப்பு & துவர்ப்பு — கசப்பு ,, — காரல்
துவர்ப்பு & காரம் — காரல் ,, — தித்திப்பு
தித்திப்பு & காரம் — துவர்ப்பு ,, — கசப்பு

இந்த ஒன்பது ருசிகளுக்கு எதிர்படையானவை ஒன்பது ருசிகளே ஆகும். இவைகளில் புளிப்பு ஸ்திரீரூபம் என்றும், உரைப்பு புருடரூபம் என்றும் உப்பு குழந்தை ரூபம் என்றும் சிலர் கருதுவர். ஏனெனில்

உடல் சுத்தம்.

ஒரு பண்டத்தில் புளிப்பு மேலிட்டாலும், உரைப்பு மேலிட்டாலும், கொஞ்சம் உப்பைச் சேர்த்துக்கொண்டால் சாந்தி ஏற்படும். ஆகையால் உப்பு, உரைப்பையும், புளிப்பையும் சேர்த்துவைக்கும் கருவி ஆகிறது. ஒரு குடும்பத்தில் தகப்பனையும், தாயையும், அவர்கள் குழந்தை சேர்த்து வைப்பதுபோல், ருசிக்கு உப்பு உதவுகிறது.

ருசியும் – நாக்கின் அமைப்பும்.

ருசிக்கு ஒரு மகத்துவத்தைக் கொடுப்பது நாக்கு. நாக்கின் அமைப்பை நோக்குங்கால் அது ஒரு விசித்திரமான கருவியாகவே இருக்கிறது. நாம் ஒரு ருசியை உட்கொள்வோமானல் நாக்கில் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டு, அந்த ருசிக்குமாருன ருசியை நாடுகிறது. ஒரு தித்திப்புள்ள பண்டத்தை உண்போமானல் வெகு சீக்கிரமே நாக்கு அதற்கு மாருன உரைப்பைத் தேடுகிறது. அந்த உரைப்புள்ள பண்டத்தை உண்ட பிறகே சாந்தி ஏற்படுகிறது. இதேபோல் மேலே சொல்லியிருக்கிறபடி ஒவ்வொரு ருசிக்கும், அதற்கு எதிர்படையான வேறு ருசியை உண்பதாலேயே சாந்தி ஏற்படும். பொரிச்சகுழம்பு அன்னம் உண்டால், அதற்கு மாருன புளிப்புள்ள பச்சடி உண்ணவேண்டும். அப்பொழுது தான் சாந்தி ஏற்படும். இதன் காரணமாகவே நாம் உண்ணும் உணவில் அன்னத்தோடு கூடிய ஒரு ருசி ஏற்பட, அதற்கு மாருன ஒரு ருசியைக் கொண்ட கறிகாய்களையும், பச்சடிகளையும் உபயோகிக்கிறோம்.

## உடல் சுத்தம்.

### தின்பண்டங்கள் செய்யும் முறையும் – சக்தியும்.

மாயை உருக்கொண்ட நாக்குக்கு ஒரு முக்யத்வம் கொடுப்பது நல்லதல்ல. ஏனெனில் காய்களும், கனிகளும், சமைக்கப்படும்பொழுது அவைகளில் இயற்கையாக உள்ள சத்துக்களை இழப்பதால் நல்ல உடலுக்குச் சக்தியைக்கொடுக்கக் கூடியச் சத்துக்களை விலக்கியே நாம் உண்கிறோம். அவைகளை நன்றாக வேக வைத்தும், அவைகளைப் பொரித்தும், அதனால் அவைகளில் உள்ள இரும்பு சக்தி, கந்தக சக்தி, சுண்ணும்பு சக்தி எல்லாவற்றையும் ஆவியாகப் போக்கி, பின்பே நாம் உண்ணுவதினால் நமக்குச் சக்தி குறைவு ஏற்படுகிறது. காய்கனிகளை வேக வைக்க வேண்டுமானால் அவைகளுள் அடங்கிய சத்துக்கள் ஆவியாக மாறுதபடி உண்ணும் பதத்திற்கு எடுத்தும், அதிகமான உப்பு, உரைப்பு, புளிப்பு மற்ற தான்யங்களும் சேராமல், அந்தக் காய்கனிகளின் சொந்த ருசியைப் போக்காமலும் உணவு தயாரிப்பது நலம்.

நம்மில் சிலர் உண்பதற்காகவே பிறந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் லக்ஷ்மி தங்கமாட்டாள் என்பது மொத்தக்கருத்து. அவர்கள் வயிறுகொள்ளும் வரை உண்டபின் சோம்பேறியாக ஒரு கர்மமும் செய்ய இயலாதவர்களாய்க் காலத்தைக் கழிக்கின்றனர். சிலர், அதிகம் உண்டதால் ஏற்பட்ட உடல் கோளாறால் நோய்வாய்ப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர். எப்பொழுதும் முக்கால் வயிறு உண்பது நலம்.

### உடல் சுத்தமும் - குடும்ப வாழ்க்கையும்.

குடும்ப வாழ்க்கையில், சதி — பதிகள் மிகவும் குறை வாகவே மாதவிடாய்க்கு முந்தியும், பிந்தியும் சேர்க்கை வைத்துக்கொள்ளுவது நலம். சேர்க்கைக்குப் பிறகு சொல்ப நீர் அருந்துவது நல்ல வழக்கம். எப்பொழுதும் எந்தப் புத்தில் எந்தப்பாம்பு இருக்குமோ என்ற பயம் சிற்றின்பத்தில் சூ தா டு ம் நபர்களுக்கு இருத்தல் வேண்டும். சிற்றின்பத்தில் அதிகமாக ஈடுபடுவதால் உண்டாகும் கெடுதல்கள் பலவகை. உபாதைகள் பல உண்டு. சக்தி அற்ற, உபாதையோடு கூடிய குழந்தை கள் பிறக்கும். நரம்புத்தளர்ச்சி ஏற்படும். ஆயுள் குறை யும். சிற்றின்பத்தில் ஆர்வம் கொள்வோர் முக்கியமாகப் படிக்காதவர்களும், சோம்பேறிகளும், கெட்ட குணம் உடையவர்களும், திரவிய வசதி உள்ளவர்களுமே ஆவர். இந்த கெட்ட சூழ்நிலையிலிருந்து தப்ப, நல்ல படிப்பு வேண்டும். கர்மம் செய்யாமல் ஒரு நிமிடமும் இருக்க லாகாது. ஆராய்ச்சியில் மனதைச் செலுத்தவேண்டும். கண்ட ஆபாசமான புத்தகங்களைப் படிக்கலாகாது, கெட்ட சகவாச மும் கூடாது.

ஏகபத்னி விரதனாக ஆயுளைக் கடத்துவதே, இகத் திற்கும், பரத்திற்கும், தீர்க்க ஆயுளுக்கும் நன்மை யானது. குழந்தைகளை நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பெறுவது நலம். அவ்விதம் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பிறந்த பிறகு, கர்ப்பத்தடை செய்து கொள்ளலாம். அது அவுஷதங்களால் முடியாத வரை

யில் ஆண்மக்கள் ரணசிகிச்சை செய்துகொள்வது நலம். அதிகக் குழந்தைகளை பெறுவதால் துக்கமே அதிகம் விளைகிறது என்பதை சதியும்–பதியும் நன்கு உணரவேண்டும். பத்து குழந்தைகளை சக்தி இல்லாமலும், பல உபாதைகளோடு பெற்று அவைகளை சம்ரக்ஷிக்க முடியாமல் பல துக்கங்களுக்கு உள்ளாவதைக் காட்டிலும், இரண்டு குழந்தைகளைப்பெற்று, அவைகளை நன்கு வளர்த்து, இந்திரனையும், சந்திரனையும் வசிக்கச்செய்வதே நமது லட்சியமாக இருக்கவேண்டும். ஆண்மக்கள் ரண சிகிச்சை செய்துகொள்ள இஷ்டமில்லாத வரையில், ஆணும், பெண்ணும் தமையனைப் போலவும், தங்கையைப் போலவும் வசிப்பது மிகவும் சிலாக்கியமானது.

இருதரத்தாரும் ஆண்மக்களும், பெண்மக்களும் சிறுநீர் விலக்கியபிறகு, குளிர்ந்த ஜலம்விட்டு குறிகளை அலம்பி, துடைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்வதால் அக்குறிகள் நரம்பின் முனைகள் ஆதலால் குளிர்ந்த நீர் நரம்புத் தளர்ச்சியை விலக்குகிறது. அதாவது நரம்புகளுக்கு பலத்தைக் கொடுக்கிறது. மேலும் ஆண்மக்கள் குளிர்ந்த ஜலம்விட்டு அலம்பும்பொழுது, விரைகளிலும் படும்படியாகச் செய்வது நலம். அதனால் விரைகள் பெருக்காமல் சுருங்கியே இருக்கும். வயிற்றுக்கோளாறு உள்ளவர்கள், அஜீர்ணத்தை உண்டாக்கக் கூடிய பண்டங்களை உண்ணலாகாது. அப்படி உண்டால் அதற்குச் சாந்தியாக நல்ல சுடுநீர் அருந்தவேண்டும். வயதானவர்கள் நல்ல சுடுநீரும், சிறிது மோரும் கலந்து அருந்துவது நலம். அடிக்கடி வயிற்றுஸ்னானம், (Hip - Bath) எடுத்துக் கொள்வதும் நலமாகும்.

## உடல் சுத்தம்.

உடல் சுத்தமும் – பெண்மணிகளும்.

நம் நாட்டில் சில பெண்மணிகள் மாதவிடாயில் இருக்கும் பொழுது, அவர்களைப் பிரத்தியேகமான ஒரு அறையிலோ, வேறுஇடத்திலோ வேலையின்றி வசிக்கச் செய்வது வழக்கம். இக்காலம் வேலை இன்றி ஓய்வு எடுத்துக்கொள்ளும் வழக்கமானது உஷ்ணப் பிரதேசங் களில் வசிப்பவரின் தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது. அவ்வழக்கத்தை முடியுமானால் எல் லோரும் கையாளுவது மிகவும் சிறந்ததாகும். அம்மாத விடாய்க் காலத்தில் பல தொத்து வியாதிகளும், மற்றும் பல உபாதைகளும் ஏற்படக்கூடுமாதலாலும், புருஷ அன்யோன்யம் அக்காலத்தில் ஏற்படுவது கெடுதலான தாலும், இவ்விதம் செய்யப்படுகிறது. பெண்மணிகள் 40 — 50 பிராயங்களில், மாதவிடாய் நிற்கும்பொழுது பல உபாதைகளுக்கு உள்ளாவார்கள். சிலர் மரிக்கவும் செய்கிறார்கள். அக்காலம் பெண்மணிகள் வெகு ஜாக் கிரதையாக இருக்கவேண்டும் கிரஹஸ்தாச்ரமம் முடிந்த பிறகு, வானப்ரஸ்த ஆச்ரமத்தில் மக்களுக்கு கிரஹஸ்தாச்ரமத் தில் ஏற்பட்ட பாப கர்மங்களின் பயனாக பல உபாதைகள் ஏற்படுவதுண்டு. அவைகள், ஏற்படாமலிருக்க முன் சொல்லியிருக்கும் வழிகளைப் பின்பற்றினால், அப்பருவத்தில் சுக ஜீவனம் செய்ய ஏதுவாகும்.

# 38. மனச்சுத்தம்.

மனச் சுத்தம் ஏற்படுவதற்கு உடல் சுத்தம் வேண்டும். உடல் சுத்தத்திற்கு நல்ல கர்மம் வேண்டும். இம்மாதிரியாக ஒன்று மற்றொன்றைப் பொருத்தே இருக்கிறது. சத் கர்மத்தை விஷ்ணு அம்சம் என்றும், மனச் சுத்தத்தை சிவ அம்சம் என்றும் சொல்லுவதுண்டு. சத் கர்மத்தினுல் நல்ல மனது உண்டாகிறது. நல்ல மனதினுல் சத் கர்மம் மறுபடியும், மறுபடியும் முளைக்கிறது. இதேபோல் ஒருவனுடைய ஜன்மம் முழுவதும், ஒன்று காரணமாகவும், மற்றொன்று காரியமாகவும் மாறி – மாறி முன்னேற்றமடைகிறது.

இம் முன்னேற்றத்தில், நம் முன்னோர் எல்லாவற்றையும் செய்யலாம், ஆனுல் சிந்தையை அடக்கிச் சும்மா இருத்தல் அரிது என்பர். இதன் தாத்பர்யம், சிந்தையை அடக்குவதற்கு, காட்டுக்குப்போகவேண்டும் என்ற கொள்கை அல்ல. எங்கு சென்றுலும் கர்மம் விடாது. காட்டுக்குப் போனுலும், புழைய நினைவுகளும், புதிய நினைவுகளுமாக மனிதனை வாட்டும். அவன் மனம் பலவிதமான அசுத்த நோக்கங்களைக் கொள்ளும். ஒரு சமயம் அந்த மனப்பான்மையைக் கொண்டு சில கெட்ட கர்மங்களைச் செய்ய சவுகர்யங்கள் ஏற்படாமல் இருக்கலாம். ஆனுல் மூளை விருத்தியின்றி நாட்டு மிருகங்களைப் போலவே மறுபிறப்பு எடுக்க நேரிடுமே யொழிய ஈசுவரத் தன்மையை அடைவது

துர்லபம். இதன் மர்மம் அறியாது துஷ்கர்மங்களுக்கு உள்ளாகி பிரும்ம ஞானத்தை புறக்கணித்து ஜீவிக்கும் மக்கள் பலர் உள.

## மனச் சுத்தமும் — பிரும்ம ஞானமும்.

மனச் சுத்தத்திற்கு ஆதாரமாக நின்றது பிரும்ம ஞானமே. அதாவது தான் வசிக்கும் இடத்தையும், தன்னுடைய ஆதிக்கம் எவ்வகையானது என்பதையும், அந்த ஆதிக்கத்தை எவ்வளவு தூரம் செலுத்த முடியும் என்பதையும், அறிந்துகொள்வதே ஆகும். மனிதனுகப் பிறந்தவன் சூர்ய மண்டலத்தின் வயிருகிய நம் பூமியில் வசிக்கிருன். நம் வயிருனது, நம் உடலான ஒரு கூட்டுக்குள் எவ்விதம் அடைபட்டு இருக்கிறதோ, அது போலவே நம் பூமியானது "ஆஸ்டிரி லாய்டுஸ்" என்று சொல்லப்பட்ட சிறு சிறு நக்ஷத்திரங்கள் கூடிய சூர்ய மண்டலத்தைச் சார்ந்த ஒரு எல்லைக்குள் அடைபட்டு இருக்கிறது. ஆகவே நம் வயிற்றில் ஏற்படும் பலவிதமான சக்திகளும், மற்றும் பலவகை உணர்ச்சிகளும், மனிதனின் மூளையில் எவ்விதம் கணிக்கப்பட்டு பின்பு வெளி வருகிறதோ அதுபோலவே மனிதன் செய்யும் ஒவ்வொரு கர்மமும், அதன் பயனும், அவன் மனதில் உதிக்கும் பலவகையான உணர்ச்சிகளும், மனிதன் செய்யும் கர்மங்களின் விபரமும் முதலில் நாம் வசிக்கும் பூமியில் பதிவாகி, பின்பு அதன் மூளையாகிய சூர்யனுள் பதிவாகிறது.

## மனச் சுத்தமும் - சித்திரகுப்தனும்.

மூளையில் பதிவு செய்யும் குணத்தையே "சித்திர-குப்தன்" என்பதாக சிற்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்த

## மனச்சுத்தம்.

குணமே மனிதவர்க்கத்தினுள் ஏற்பட்ட போலீஸ் சேவகன் எனலாம். அவன் பாரபட்சமின்றி எல்லாச் செயல்களேயும், எல்லாவிதமான மனப்பான்மையையும், நாம் அறியாமலே நமக்குள் பதிவு செய்து, அதே விஷயங்களேப் பின்பு பல வருடங்கள் கழித்து நமக்கு ஞாபகமூட்டும்படி செய்கிருன். சித்திர குப்தன் மூளேயில் எழுதும் எழுத்தானது ஒருவிதமான தெய்வீக—குருக்கு பாஷை என்றே சொல்லலாம். இதுவரை மனிதவர்க்கம் இப்பாஷையின் மர்மத்தை அறிந்து கொண்டதாகவே தெரியவில்லே. இது நம் நாட்டு விஞ்ஞானிகள் வருங்காலத்தில் நடத்தவேண்டிய ஆராய்ச்சிகளில் ஒன்ருகும்.

## மனித வர்க்கமும் – சூர்ய சக்தியும்.

மனித வர்க்கத்தின் ஆதிக்கத்தை நோக்குங்கால், மனிதன் ரகஸ்யமாக எக்காரியமும், எவ்விதமும் செய்யலாம் என்ற மனப்பான்மை கொண்டு இருப்பது தற்காலம் சகஜமாக இருக்கிறது. இவ்விதம் ஒவ்வொரு மனிதனும் நினேக்கும் பட்சத்தில் நம் பூமியில் முன்னேற்றத்திற்கே இடமிராது எனலாம். சக்தி என்பது ஒன்றே. அதுவே ஜீவப்பிராணிகளுக்கும், புல் பூண்டுகளுக்கும், மனிதவர்க்கத்திற்கும் சூர்யனிடமிருந்தே கிடைக்கிறது. அவ்விதம் கிடைக்கும் சக்தியானது, அளவிடமுடியாதவை. ஒவ்வொரு ஜீவப் பிராணியும், மனித வர்க்கமும் அடையக்கூடிய சக்தி, அதனதன் அறிவையும், மனப்பான்மையையும் ஒத்தே இருக்கிறது.

மனச்சுத்தம்.

சூர்யமண்டலம் கணக்கிட முடியாத சக்தியைக்கொடுக்கத் தயாராக இருந்தும், "ஸ்வர்ணக் குன்றின்" மேல் நின்று கொண்டு அறியாமையால் ஸ்வர்ணம் வேண்டும் என்று கதறும் மனிதவர்க்கத்தைப்போல், சூர்யனிடமிருந்து வரும் அபார சக்தியை அடைய முறை அறியாமல் தற்காலம் மனிதவர்க்கம் ஜீவப் பிராணிகளையும், தன்னைப் போலொத்த மனிதவர்க்கத்தைத் துன்புறுத்தியும், மனம் நோகச்செய்தும், அடாத முறைகளைக்கையாண்டும் அவர்களிடமிருந்து சக்தியை அபகரித்து வருகிறது. மனிதனுக்கு சக்தி வேண்டுமானால் சூர்யனிடமிருந்தே அவன் அச்சக்தியைப் பெறவேண்டும். இவ்விஷயத்திலும் நம் நாட்டு விஞ்ஞானிகள் தீவிர ஆராய்ச்சி எடுக்கவேண்டியது அவசியம் ஆகிறது.

மனமும் – கன்னக்கோலும்.

மனதை ஒரு குரங்கிற்கு சமானமாகச் சொல்லி நம் முன்னோர் வெகு அழகாக பாடல்களாகவும், பல கதைகளாகவும், விவரித்து இருக்கின்றனர். குரங்குபோலொத்த மனதை அடக்கிஆள சக்தி இல்லாதவன் கஷ்டத்திற்கும், துஷ்கர்மத்திற்கும் உள்ளாகி பயந்தே நாட்டை விட்டு ஓடுகிறான். மனதை அடக்கி ஆளுவதற்கு சில சுலபமான விதிகள் உண்டு. ஒருவரும் கர்மமின்றி ஒரு நிமிடமும் காலத்தைக் கழிக்கலாகாது. ஒவ்வொரு கர்மம் செய்யும் போதும், தன் மனதை அந்த கர்மத்திலேயே லயிக்கவைக்க வேண்டும். அதாவது உண்ணும்பொழுது உணவிலேயே தன் மனம் இருக்க

மனச்சுத்தம்.

வேண்டும். படிக்கும்பொழுது புத்தகத்திலேயே தன் கவனம் செல்லவேண்டும். விளையாடும்பொழுது விளையாட்டிலேயே தன் மனம் லயிக்கவேண்டும். தவறி கொஞ்சகாலம் கர்மமின்றி ஒருவன் இருக்க நேரிடில் அவன் மனம் நாலாபக்கமும் ஓட ஆரம்பிக்கும். கெட்ட கர்மங்களைச் செய்ய இடம் கொடுக்கும். அப்பொழுது மனதானது ஒரு திருடனுடைய கன்னக்கோலைப்போல் காணப்படுகிறது.

மனமும் — ஆத்ம பூஜையும்.

கன்னக்கோலுக்கு உபயோகப்படாத சமயங்களில், ஒரு சாத்துமிடம் வேண்டும். இல்லையேல் திருடன் அகப்பட்டுவிடுவான். அல்லது கன்னக்கோல் திருட்டுப் போய்விடும். இதற்காக திருடர்கள் கன்னக்கோல் சாத்த ஒரு பிரத்தியேகமான இடம் தயாரித்து அதில் வைப்பதுண்டு. கன்னக்கோலுக்குச்சமானமான மனதை உபயோகப்படாத சமயங்களில் சாத்தி வைப்பதற்கு தம் முன்னோர் ஒரு பிரத்தியேகமான இடம் தயாரித்து இருக்கின்றனர். அதுவே நம் சரீரத்தினுள் அடக்கப்பட்ட தெய்வமாகும். கர்மம் ஏற்படாத பொழுது, மனதை அங்குமிங்கும் ஓடவிடாமல், நாம் உட்கொள்ளும் சுவாசத்திலேயே சாத்தி வைப்போமாகில், கெட்ட மனப்பான்மைக்கு இடமே ஏற்படாது. இதையே ஆத்ம பூஜை என்பர். இதையே, விஷ்ணு யோக நித்திரையில் இருப்பதாகச் சிற்பிக்கப்படுகிறது.

# 39. மனச்சுத்தமும் - நல்லகுணமும்.

முன்பே மனச் சுத்தத்தைப் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. மனச்சுத்தம் ஏற்பட்டால் மாத்திரம் நல்லகுணம் ஏற்படும் என்று சொல்லமுடியாது. நல்ல குணமே ஈசுவரத்தன்மையை அடைவதற்கு காரணம் ஆனபடியால், நல்லகுணம் என்பதை விஸ்தரிக்க இங்கு இடம் கொடுக்கிறது. உதாரணமாக ஒரு வெள்ளேயர் தன் மூக்கைச் சிந்துவதற்கு, தன் கைக்குட்டையை எடுத்து அதில் சிந்திக்கொண்டு, அதைப்பின்பு தன் சட்டைப் பையிலேயே வைத்துக்கொள்ளுகிருர். இக்குணம் பலருக்கு அருவருப்பாகக் காணப்படலாம். ஆனல் இதிலேயே ஒரு சிறந்த தத்துவம் காணப்படுகிறது. அதுவே அம்மனிதனின் நல்ல மனப்பான்மையைக் குறிக்கிறது. அவ்விதம் செய்வதனல் அவன் தனக்கே கெடுதல் வந்த போதிலும், தன்னேச் சூழ்ந்தவர்களுக்கு கெடுதல் செய்யலாகாது என்ற உணர்ச்சியே இந்த மனப்பான்மைக்கு காரணமாகிறது. அதனுல் அவன் தன் சுயநலத்தை நாடாது பலருக்கே நன்மை செய்ய உட்படுகிருன்.

இதற்குமாருக நாம், மூக்கைக் கண்ட இடங்களில் சிந்தியும், பல சுவர்களிலும், தூண்களிலும், துடைத்தும் இறுதியில் நாம் அணிந்திருக்கும் வஸ்திரத்திலேயே மூக்கைத் துடைத்துக் கொண்டும் நமக்கும், நம் சுற்றத்தாருக்குமே கெடுதலே உண்டுபண்ணுகிருேம். இவ்விதம் நாம் செய்யும் காரணம், அறியாமையும், சோம்

பேரித்தனமும், நம் சுற்றத்தாருக்கு கெடுதல் செய்கிறேம் என்ற உணர்ச்சியே இராததும் ஆகும்.

**நல்லகுணமும் – எச்சல் துப்புவதும்.**

எச்சல் துப்பும் வழக்கம் நம் நாட்டில் எங்கும் பரவி நிற்கிறது. நாமே நம்மை சுத்தம் செய்வதாக நினைத்து எச்சல் துப்பும்பொழுது, நம் வீட்டு வாசலிலோ, அல்லது வேறு பிரத்தியேகமான இடத்திலோ துப்பாமல், தள்ளி எதிர் வீட்டு வாசலில் துப்புகிறேம். எதிர் வீட்டுக்காரர் அதேவிதமான மனப்பான்மை கொண்டு, தன் வீட்டு வாசலில் துப்பாமல், தள்ளி எதிர் வீட்டு வாசலிலேயே துப்புகிருர். இவ்விதம் சுத்தமாக இருப்பதாக எண்ணி, நாம் எதிர் வீட்டு வாசலில் துப்ப, எதிர் வீட்டுக்காரர் அதேபோல் நம் வீட்டு வாசலில் துப்ப, ஒருவருக்கொருவர் எச்சலைத் துப்பிக்கொள்ளுகிறேம். இச் செய்கைகளுக்குக் காரணம் அறியாமையும், சுயநலம் பாராட்டுவதே ஆகும்.

**மதுபானமும் – புகையிலையும்.**

எச்சல் துப்பும் வழக்கம் நம் நாட்டில் தடைபட்டாலொழிய நாகரீகம் ஏற்படாது. எச்சல் துப்பும் வழக்கத்திற்கு மூலகாரணம் மிதமிஞ்சி வெற்றிலை போடுவதும், புகையிலை அருந்துவதுமே ஆகும். அதனுல் ரயில் வண்டிகளிலும், ரஸ்தாக்களிலும், மக்கள் கூடும் எல்லா இடங்களிலும் ஏற்படும் அசுத்தம் மிகவும் வருந்தத் தக்கதே.

**மனச்சுத்தமும் - நல்லகுணமும்.**

நமது சர்க்கார் காந்திஜியின் தூண்டுதலின் பேரில் மதுபானம் அருந்துவதை ஒருவகையில் தடைசெய்து இருக்கிருர்கள். ஆயினும், மதுபானம் அருந்துவதற்கு மேல், பத்துமடங்கு அதிகமான கெடுதலை விளைவிக்கக் கூடிய ஒரு பழக்கம், நம் நாட்டில் தலைவிரித்தாடுகிறது. மதுபானம் அருந்துவதால் உடலை அதிகம் பாதிக்காது. ஒரு கணக்கோடு அருந்திஞல் உடலுக்கு பலத்தையே கொடுக்கும். அதனுல் மனச் சுத்தத்திற்கோ, உடல் சுத்தத்திற்கோ, நாட்டின் சுத்தத்திற்கோ பங்கம் அதிகம் ஏற்படுவதில்லை. **ஆனுல் புகையிலை போடும் வழக்கம் மனிதவர்க்கத்திற்கும், சுற்றத்தாருக்கும், தேசத்துக்குமே. அசுத்தத்தையும், கெடுதலையும் உண்டுபண்ணுகிறது.**

புகையிலை போடுவதனுல் புற்றுநோய் உண்டா கிறது. அது புகையிலை போடுகிறவர்களை உடனே தாக்காமறபோனுலும், அவர்களின் பிள்ளை, பேரன்களைக் கட்டாயம் தாக்கும். புகையிலை போடுகிறவர்கள் பேசும் பொழுது மற்றவர்களுக்கு ஒரு அருவருப்பையே உண் டாக்குகிறது. அப்பொழுது எச்சல் தாமாகவே வெளி வந்து மற்றவர்களைத் தாக்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் துப்பும் எச்சல் நாட்டையே கெடுக் கிறது. இவ்விதம் புகையிலை போடும் வழக்கம், போடு கிறவர்களையும் கெடுக்கிறது. பிறக்கும் பிள்ளை, பேரன் களையும் கெடுக்கிறது. சுற்றத்தாரையும் கெடுக்கிறது. மேலும் நம் நாட்டையே அசுத்தம் செய்கிறது. இப் பழக்கம் நம் மக்களைவிட்டு விலகினுலொழிய நம் நாட்டில்

சுத்தம் ஏற்படாது. இந்த விஷயத்தை ஒவ்வொருவரும் தடை செய்ய வேண்டும். நமது சர்க்காரும், இவ்விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுப்பது நலம்.

இவ்விதம் ஒவ்வொருவரும் தம்முடைய சொந்த சுத்தத்தை ஏற்படுத்த பொதுமக்களுடையவும், நாட்டினுடையவும் சுத்தத்தை அகற்றியே வாழ்கிறோம். இந்த மனப்பான்மையில் நாம் மிருகங்களைப் போலவே ரஸ்தாக்களிலும், ஆலயங்களைச் சுற்றிலும், கண்ட இடங்களில் அசுத்தம் செய்தும், மற்றும் பல கழிவுப் பொருள்களை எறிந்தும், காகிதம் போலொத்தவைகளைக் கண்ட இடங்களில் ஓடவிட்டும், நாட்டுக்கு அசுத்தத்தை உண்டாக்குகிறோம். இந்த மனப்பான்மைக்குக் காரணம் அறியாமையும், சுயநலமும் ஆகும்.

**மனிதனும் — மிருகமும்.**

மொத்தத்தில் தற்காலம் உலகில் நடமாடும் மனித வர்க்கத்தை மிருகங்களோடு ஒப்பிடுங்கால், நாட்டு மிருகங்கள் மாமிச பட்சிணிகள் அல்ல. காட்டு மிருகங்களே மாமிசத்தை உண்ணுகின்றன. அவைகளைப் போலவே நாம் மாமிச பட்சிணிகளாகவே வாழ்கிறோம். மிருகங்கள் வருஷத்திற்கு ஒரு தடவையோ அல்லது சில தடவைகளோ சேர்க்கை வைத்துக்கொள்ளுகின்றன. ஆனால் நமக்கோ இரவும், பகலும் போதாது. மிருகங்கள் உண்டபின் சாந்தி அடைகின்றன. நமக்கோ சாந்தியே கிடையாது. எப்பொழுதும் பசிதான். அநேக

விதமான பசிகளும்கூட. இவ்விதப் பசிகளைப் போக்க நம் வாழ்க்கையில் பொய் சொல்லுவது, திருடுவது, பிறர் பொருளை அபகரிப்பது, பொய்ச் சாட்சி சொல்லுவது, லஞ்சம் வாங்குவது, போலிப் பண்டங்களை உண்டு பண்ணுவது, கலப்பது, நல்ல பண்டமென விற்பது, பிச்சை எடுப்பது, கற்பை விலைக்கு விற்பது, வாங்குவது இவைகளெல்லாம், நம்மிடம் தகர்க்க முடியாத கெட்ட குணங்களாக இருக்கின்றன. இவ்வித குணங்களே நாம் இன்னும் மனிதர்களாக ஆகவில்லை, மிருகங்களுக்கும், கேடான பிராணிகளாக இந்நாளும் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. நாம் எல்லோரும் தன்னால் இயன்றமட்டும் கெட்ட குணங்களிலிருந்து விலகி இருப்பதே நமது முன்னேற்றத்திற்கும், தேக ஆரோக்கியத்திற்கும், நாட்டின் நன்மைக்கும், இகத்திற்கும், பரத்திற்கும், மனிதன் ஆவதற்கும், கடவுளைக் காண்பதற்கும், அவர் அருளைப் பெறுவதற்கும் தகுந்த முறை ஆகும்.

---

# 40. குணமும் - ஸங்கீதமும்.

ஒரு நாட்டு மக்களின் குணத்தை வளர்ப்பதில் முதன்மையானது ஸங்கீதமே. ஸங்கீதத்தை நோக்குங்கால் அது ஒரு தெய்வீகமான, காதுக்கு இனிமையையும், மனதிற்குச் சாந்தியையும் கொடுக்கக்கூடிய பரந்த சக்தி ஆகிறது. இதுவே எல்லாவற்றிற்கும் மேலான, மனித வர்க்கத்திற்கு நல்ல குணத்தை கொடுக்கக்கூடிய

கருவி ஆகும். இதில் ஏழு சுரங்களும், ஏழு கிரஹங்களுடைய சக்திகளைப் பிரதிபலிக்கின்றன. ராகங்கள், நட்சத்திரக் கூட்டங்களின் குணங்களை விஸ்தரிக்கின்றன. இதில் மெலடி என்றும், ஹார்மனி என்றும் இரண்டு பிரிவுகள் உண்டு. மெலடியே மனதிற்குச் சாந்தியையும், தெய்வீக உணர்ச்சியையும் கொடுக்கிறது. ஒருவருடைய சொந்த முன்னேற்றத்திற்கும், பயன் படுகிறது. ஹார்மனியே, காதுக்கு இனிமையைக் கொடுத்து வீரச் செயல்களில் ஊக்கமும், ஏற்படுத்தி பலருடைய முன்னேற்றத்திற்கும் உபயோகமாகிறது.

ஹார்மனியும் — ஒற்றுமையும்.

மெலடியே பிரிவினை மனப்பான்மையைக் கொடுக்கிறது. ஹார்மனி சேர்க்கை மனப்பான்மையையும், நாட்டுப் பற்றுதலையும் கொடுக்கிறது. நமது ஸங்கீதத்தில் "மெலடியே" மேல்நோக்கி இருப்பதாலும், பல நூற்றுண்டுகளாக இதுவே நமது இரத்தத்தில் ஊறி இருப்பதாலும், நம் மக்களிடையே ஒற்றுமை குறைந்து பிரிவினை மனப்பான்மை குடிகொண்டிருக்கிறது. நாம் சுதந்திரம் பெற்றபிறகு நமது புண்ணிய பூமியைப் பாது காக்க, மக்களிடம் ஒற்றுமை மனப்பான்மை அதிகரிக்க வேண்டியது அவசியம். ஆகையால், நமது ஸங்கீதத்தில் "ஹார்மனியை" அதிகம் உண்டுபண்ணி பலபேர் பல சிறியதும், பெரியதுமான பல வாத்தியங்களைக்கொண்டு இனிமையாக வாசிக்கும்படியான ஒரு திறமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது.

குணமும் - ஸங்கீதமும்.

ஹார்மனியும் – நமது ஸங்கீதமும்.

நாம் நமது ஸங்கீதத்தில் சுத்த ஸ்வரங்களையே உபயோகிக்கிறோம். அரை ஸ்வரங்களும், கால் ஸ்வரங்களும்கூட அந்த அந்த ராகத்திற்குகந்தவாறு உபயோகிக்கப்படுகிறது. இவ்விதம் பாடுவதால் ஸ்வர சுத்தம் ஏற்படுமா என்பது உலகத்திலேயே ஒரு பிரச்சனை ஆக இருக்கிறது. ஒவ்வொரு அரை ஸ்வரத்திலும், கால் ஸ்வரத்திலும் ஒரு ஒளி-அலை குறைந்தாலோ,அதிகப்பட்டாலோ கூட ஸ்வரச் சுத்தம் ஏற்படாது. அவ்விதம் ஸ்வர சுத்தத்தோடு ஒருக்கால் நூற்றில் ஒருவர் பாடக்கூடும். லயத்தை எடுத்துக்கொண்டாலும் இதே தத்துவம் உருவாகிறது. தாளம் சுத்தமாகப் போடக்கூடிய ஒரு யந்திரத்தை உண்டு பண்ணி அதோடு பாடகர்களைப் பாடச்சொன்னால், நூற்றில் ஒருவர்கூட லய சுத்தத்தோடுபாட முடியாது. இந்த விஷயங்களை நன்கு அறிந்த மேல் நாட்டார், ஸ்வரச் சுத்தமும், லயச் சுத்தமும் ஒரு எல்லை (Standard) என்பதை உணர்ந்தும், அவைகளைச் சுத்தமாகக்கொண்டு பாடுவது நூற்றில் ஒருவருக்குத்தான் முடியும் என்பதை உணர்ந்தவர்களாய் அவைகளைக் கைவிட்டனர்.

உலகத்திலுள்ள எல்லா வர்ணமும் கலப்பாகவே இருக்கின்றன. அதேபோல் எல்லா உற்பத்தி ஆகும் சப்தங்களும் கலப்பானதே. நமது வாழ்க்கையை எடுத்துக்கொண்டாலும், நமது வேதாந்தத்தின்படி மனதாலும் ஒரு கெட்ட செயலை நினைக்காதவனே பரி

சுத்தமானவன் எனப்படுகிறது. இதை நடைமுறையில் பார்க்கப்போனால், கல்மிஷ மனப்பான்மை கொள்ளாத மனிதன் இப்பூமியில் ஒருவரும் இல்லை என்றே சொல்லலாம். முதலில் மனதில் கல்மிஷம் ஏற்பட்டு பின்பே சுத்தமாக மாறுகிறது. ஒருவர் சுத்தமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது போற்றத்தக்கதே. ஒருகால் அது மனதை சாந்தி செய்வதற்குரிய கருவியாகும். தியாகப் பிரும்மத்தை போலொத்த தெய்வத்தோடு, ஐக்கியம் ஆகும் நபர்களுக்கு சாந்தியை அளிக்கும்.

தெரிந்தோ, தெரியாமலோ நமது மனம் சுத்தத்தையே நாடுகிறது. இக்கொள்கையில் பல அரை ஸ்வரங்களையும், கால் ஸ்வரங்களையும் ஸ்வர சுத்தமாகப் பாட அரும்பாடுபடுகிறோம். அக்காலம் வேறு சப்தங்களையே விலக்கி மிகவும் சாந்தமாகவும், மெல்லிய குரலோடும் பாடவேண்டி வருகிறது. இம் முறையில் அந்த அந்த ஸ்வரங்களில் ஒரு ஒளி - அலை குறைந்தாலும், அதிகப்பட்டாலும் அபஸ்வரம் காணப்படுகிறது. இவ்விதம் ஸ்வர சுத்தம் வேண்டும் என்று அரும்பாடுபடும்பொழுது, அபஸ்வரம் தலைகாட்டுகிறது. ஆனால் மேல் நாட்டார் முறைப்படி இரண்டு அரை ஸ்வரங்களையோ, முழு ஸ்வரங்களையோ, இரண்டையும் சேர்ந்தோ வாசிக்கும்பொழுது, அபஸ்வரத்திற்கு இடமில்லாமலே இருக்கிறது. இதுவே நம் நாட்டு ஸங்கீதத்திற்கும், மேல் நாட்டு ஸங்கீதத்திற்கும் வித்தியாசம் ஆகும்.

கடவுளை மனதால் தியானிப்பதே நம் நாட்டு ஸங்கீதத்தின் முடிவாகும். ஆயிரம், பதினாயிரம் மக்கள் சேர்ந்து கூச்சலிடுவதே மேல் நாட்டு ஸங்கீதத்தின்

முடிவாகும். நம் நாட்டு ஸங்கீதம் கடவுளோடு தன்மயமாக உதவுகிறது. மேல் நாட்டு ஸங்கீதம் ஒற்றுமைக்கு ஒத்தாசை செய்து, போர்முனையில் கொண்டு செல்லுகிறது. உலகத்தில் சாந்தி நிலவ இவ்விரண்டிற்கும் நடுநிலை வேண்டும். நம் நாட்டு ஸங்கீதம் வளருவதற்கு ஆஸ்பதம் உண்டு. மேல் நாட்டு ஸங்கீதம் உச்சநிலையை அடைந்துவிட்டது. அதற்குமேலே போகவும் வழி இல்லை, கீழே இறங்கவும் இயலாது. நம் நாட்டு ஸங்கீதம் வளருவதற்கு "ஹார்மனியை" அதனுள் புகுத்துவதே சிறந்த முறை ஆகும்.

ஹார்மனியும் – சினிமாப் பாடல்களும்.

ஹார்மனி ஏற்படுவதற்கு மேல் நாட்டு வழக்கப்படி பல ஸ்வரங்களைச் சேர்த்துப் பாடுவதே முறை என்றும், வேறு வழி இல்லை என்றும் ஒரு தப்பு அபிப்பிராயம் நம் முன் பரவி நிற்கிறது. பல ஸ்வரங்களைச் சேர்த்துப் பாடுவது நம் ஸங்கீதத்திற்கு ஒவ்வாது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். ஆகையால் ஒரே ஸ்வரத்தில் பலவித சப்தங்களைச் சேர்த்துப் பாடுவதே ஹார்மனியை நமது ஸங்கீதத்தில் உண்டுபண்ணக்கூடிய சிறந்த முறை ஆகும். ஸங்கீதத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று வாய்ப்பாட்டு, இரண்டு பாட்டுக்கச்சேரி, மூன்று வாத்தியக் கச்சேரி.

இம் மூன்றில் எந்த எந்த விதத்திலும் ஹார்மனியை ஒவ்வொன்றிலும் உண்டு பண்ணலாம் என்

பதை சுருக்கமாக ஆராய்வோம். ஸங்கீதத்திற்கு முதன்மையானது வாய்ப்பாட்டே. மனிதனின் தொண்டையைப் போலொத்த வாத்தியம் உலகிலேயே கிடையாது எனலாம். உலகத்திலுள்ள எல்லா வாத்தியங்களால் ஏற்படக்கூடிய சப்தங்களை பிரதிபலிக்கக்கூடிய வாத்தியம் இதுவே. வாய்ப்பாட்டில் தொண்டையிலிருந்தே காற்று மூலமாக சப்தம் வெளிவருகிறது. சப்தங்களை மாற்ற வாயிலுள்ள நாக்கும், பற்களும், உதடுகளும் உதவுகின்றன. சுவாசம் விடும் மூக்கும் அதேபோல் உபயோகப்படுகிறது. இம் மூன்றுவிதமாக வெளிவரும் காற்றே, அவ்வவயங்களின் அமைப்புக்குகந்தவாறு மூன்றுவித சப்தங்களை உண்டாக்குகின்றன. ஹார்மனி ஏற்பட வேண்டுமானால் இம் மூன்றுவித சப்தங்களும் ஒவ்வொரு ஸ்வரத்திலும் காணப்பட வேண்டும். இதனால் சப்தம் மாறுமேயொழிய ஸ்வரம் மாருது. தொண்டையிலிருந்துவரும் சப்தமாக இருந்தால், அச்சப்தம் இரண்டு மடங்கும், மற்ற இரண்டு சப்தங்களும் ஒரு ஒரு மடங்கும் இருத்தல் வேண்டும். அதைப்போல், மற்ற அவயவங்கள் மூலமாக வெளிவரும் சப்தம், இரண்டு மடங்காகவும், மற்றவை ஒரு ஒரு மடங்காகவும் காணப்படவேண்டும். இவ்விதம் ஹார்மனி உண்டு பண்ணுவதற்குச் சிறந்த பயிற்சியும், சாதகமும் தேவை. மேல் நாட்டார் இவ்விஷயத்தில் பெரும் சாதகம் செய்கிருர்கள். அவர்கள் பாடும் ஒவ்வொரு ஸ்வரத்திலும், இம் மூன்று சப்தங்களும் பிரதிபலிப்பதை

நன்கு காணலாம். ஆனல் இம் முறையில் அதிக காலம் ராக ஆலாபனம் செய்வதும், சங்கதிகளைப் போடுவதும், இயலாத காரியம் வேண்டாததையும்கூட. நமது புராதன ஸங்கீதம் எல்லாம் பக்திப் பாடல்களே ஆகும். அவைகளெல்லாம் கடவுளின் அருளைப்பெற உண்டாக்கப்பட்டவையே ஆகின்றன. அப்பாடல்கள் பக்தர்களால் பாடப்பட்ட விதமே வேறு. அவைகளெல்லாம் மனதைச் சாந்தப்படுத்தவே உருவானது. நாம் தற்காலம் அதே பாடல்களை மனிதனுடைய திருப்திக்காக பாடுகிறோம். மனிதன் சாந்திகொள்ளுவதற்கு அவன் காதை திருப்தி செய்யவேண்டியது முறையாகிறது. காதோ நாக்கைப் போலவும், கண்ணைப் போலவும், மாயையில் கட்டுண்ட ஒரு விசித்திரமான கருவி. எக்காலமும் குறைகளை வெகு சீக்கிரம், எடுத்துக் காட்டவும், அதிருப்தி அடையவும் கூடிய, இலக்குவை உடையதாக உள்ளது. காதைத் திருப்தி செய்ய வேண்டுமானல் அப்பாட்டுகள் பாடப்படும் விதத்தை மனோதர்மத்துக்கு விட்டுவிடலாகாது. அப்பாட்டுக்களில் ஒவ்வொரு ஸ்வரமும், சப்தமும், காதுக்கு இனிமையைக் கொடுக்குமாறு நிர்ணயிக்கப்பட்டு, ஒரு எல்லையை ஏற்படுத்தி, ஒவ்வொரு பாட்டினுடைய அளவையும், அதனுள் ராக ஆலாபனம் செய்வதையும் சங்கதிகள் போடுவதையும் கட்டுப்படுத்தி அதில் சாச்வத நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்விதம் சுத்தமாக தற்காலம் நம் நாட்டில் நல்ல முறையில் கையாளப்படுவது

குணமும் - ஸங்கீதமும்.

சினிமா சங்கீதமே ஆகும். மக்களுக்கு சினிமாப் பாட்டுக்களில் அலாதி மோகம் இருப்பதற்கு, அப்பாட்டுக்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவதே காரணம் ஆகும். இதே சினிமாப் பாட்டுக்கள் தயாரிக்கும் முறையில் நமது புராதன சங்கீதமும் (Classical Music) தயாரிக்கப்பட்டு, அவரவர்கள் சாரீரத்தை மேலே சொன்ன முறையில் சாதகம் செய்து கையாளும்பட்சத்தில், ஹார்மனி தானுகவே உற்பத்தியாகி மக்களை மகிழச் செய்யும்.

ஹார்மனியும் - பாட்டுக் கச்சேரியும்.

இரண்டாவதாக, பாட்டுக் கச்சேரி என்ற முறையில், வாய்ப் பாட்டோடு பல வாத்தியங்களை உபயோகிப்பது வழக்கம் ஆகிறது. வாத்தியங்களில், வேறு வேறு சப்தங்களைக் கொடுக்கக்கூடிய மூன்று வகைகள் உண்டு. ஒன்று கமகம் கொடுக்கக்கூடிய வாத்தியம், அதுவே வீணை, சித்தார் வயலின்போலொத்த வாத்தியங்கள் ஆகும். இரண்டு, கமகம் கொடுக்காத, சுத்த ஸ்வரங்களையும், அனுஸ்வரங்களையும், கம்பீரமான சப்தங்களைக் கொடுக்கக்கூடிய அகண்ட வாத்தியம். அதுவே பியானேவைப்போலொத்த வாத்தியம் ஆகிறது. இவ்விதமான ஒரு வாத்தியம் நமது சங்கீதத்திற்கு தேவை என்பதை நாற்பது வருடங்களுக்கு முந்தியே உணர்ந்து, சுப்ரமண்டல வீணை (சுமனு) என்பதாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது "பியானே"வைப் போலொத்தது. ஆனல் கமகம் கொடுக்கக்கூடியது. இந்த வாத்தியத்தைச் செய்யும் முறையைத் தெரிந்து

கொண்டு, அதை விருத்தி செய்து, நல்ல முற்போக்கான பாடகர்கள் கையாளும் பட்சத்தில் நமது சங்கீதத்தில் ஒரு குறை நீங்கி, ஹார்மனி உண்டாக்குவதற்குக் காரணம் ஆகும் என்பது, அந்த வாத்தியத்தை உண்டு பண்ணின இந்த எழுத்தாளரின் நம்பிக்கை. மூன்றுவதாக, கட்டை ஸ்வரங்களை எழுப்பக்கூடிய, மிருதங்கம், தபேலா, கஞ்சிரா, கடம், மோர்சிங், இவைகளைப் போலொத்த வாத்தியங்கள் ஆகும். இம்மூன்றுவிதமான கமகங்களைக் கொடுப்பதும், கொடுக்காததுமானதும், பெரியதும், சிறியதுமான வாத்தியங்களினுல் ஏற்படும் கூட்டு சப்தமே ஹார்மனியை உண்டாக்கும். ஆயினும், கட்டை சப்தங்களை கொடுக்கக்கூடிய வாத்தியங்களை மிகவும் குறைவாக உபயோகிப்பதே ஹார்மனியை உண்டுபண்ண உதவும். அதேபோல், கமகம் கொடுக்கக்கூடிய வாத்தியங்களை அதிகமாக உபயோகிப்பது, மெலடியை உண்டுபண்ணுமேயொழிய ஹார்மனியை உண்டுபண்ணுது. ஹார்மனியை உண்டுபண்ண, நமது சங்கீதத்தில். பெரிய கம்பீரமான சப்தங்களைக் கொடுக்கக்கூடிய தந்தி வாத்தியமும், தோல் வாத்தியமும், வேறு வாத்தியங்களும் சேர்க்கப்படவேண்டும்.

நாலு வீணைக் கச்சேரி என்பதும், நான்கு வயலின் கச்சேரி என்பதும் ஹார்மனியைக் கொடுக்காது. அக்கச்சேரிகளில் ஹார்மனி உண்டுபண்ணுவதற்கு, ஜலத்திரங்கத்தையோ, சுமனுவையோ, கலந்து வாசிப்பதே முறை ஆகும். அதேபோல் தாள வாத்தியக் கச்சேரிக்கு

குணமும் - ஸங்கீதமும்.

ஒரு வீணையோ, வயலினோ, பின் வாத்தியமாகக் கொள்ளவேண்டும். பெரிய தோல் வாத்தியத்தையும், ஜாலராவையும் தாளம் போடுவதற்கு உபயோகிப்பது நலம். மொத்தத்தில், இரண்டு கமகம் கொடுக்கக் கூடிய வாத்தியங்களை உபயோகித்தால், ஒரு கமகம் கொடுக்காத வாத்தியமும், ஒரு கட்டை வாத்தியமும் சேரவேண்டும். அதேபோல் இரண்டு கமகம் கொடுக்காத வாத்தியங்களை உபயோகித்தால், ஒரு கமகம் கொடுக்கக்கூடிய வாத்தியமும், ஒரு பெரிய தோல் வாத்தியமும் சேர்க்கப்படவேண்டும்.

இரண்டு, கமகம் கொடுக்கக்கூடிய வாத்தியங்களை, அதாவது வாய்ப்பாட்டும், வயலினுமோ, அல்லது வீணையும், வயலினுமோ உபயோகித்தால் ஒரு கமகம் கொடுக்காத சுமனுவை உபயோகிப்பது முறை ஆகும். ஆயினும் வாசிப்பவர்கள் போட்டி போடாமலும், சேர்ந்து, சப்தத்தை எப்பொழுதும் உண்டாக்காமலும், ஹார்மனியை உண்டாக்கும் விதத்தில் மாறி மாறி ஒரு சப்தம் மேலிட்டும், மற்றவை குறைந்தும் கச்சேரிகள் நடைபெறுவது ஹார்மனியைக் கொடுக்கும்.

ஹார்மனியும் - வாத்தியக் கச்சேரியும்.

அடுத்ததாக உள்ளது வாத்தியக்கச்சேரி. (Orchestra Music) இந்த முறையில் மேல் நாடுகளில் சுமார் நூறு வாத்தியங்களைக் கையாண்டு வெகு இனிமையாக சங்கீதக் கச்சேரிகள் நடத்துகிறுர்கள். நம் நாட்டில் கூட பல வாத்தியங்கள் பெரியதும் சிறியதுமாய் ஐம்பதுக்குக் குறையாமல் உபயோகத்தில் இருக்கின்றன.

## குணமும் - ஸங்கீதமும்.

அவைகளை எல்லாம் அதாவது கஞ்சிரா, உடுக்கு, மிருதங்கம், தபேலா, குடுகுடு வாத்தியம், மோர்சிங், ஜாலரா, சப்பளாக்கட்டை, வயலின், பலவித வீணைகள், சித்தார்கள் முதலியவைகளையும் பல பெரியதும் சிறியதுமான தோல் வாத்தியங்களையும், சுமனைவைப்போலொத்த பெரிய வாத்தியத்தையும், வேறு பலவித வடநாட்டு வாத்தியங்களையும் ஒன்ருகச் சேர்த்து, மேலே சொல்லியிருக்கிறபடி ஒவ்வொரு ஸ்வரத்திற்கும், பதத்திற்கும் ஹார்மனியை உண்டுபண்ணும்படி வாசிக்கக் கற்றுக்கொண்டால் நமது சங்கீதம் முன்னேறுவதற்கு உதவியாக இருக்கும். அதேபோல், சில பெரிய வாத்தியங்களைப் பின்னணியாகக் கொண்டு, பலவித சாரீரங்களைக் கொண்ட பல ஆண் மக்களையும், பெண் மக்களையும் சேர்த்து, மேலே சொன்ன ஹார்மனி உண்டாக்கும் முறையில் பாட்டுக் கச்சேரிகளும் உருவாக்கலாம். இம் முறையில் ஒரு அகிலபாரத சங்கீத கார்போரேஷன் ஏற்படுத்தி, அதில் எல்லாவித வாத்தியங்களைச் சேகரித்தும், அவைகளைத் திறமையுடன் வாசிப்பவர்களையும், பலவித, சாரீரங்களைக்கொண்ட ஆண் மக்களையும், பெண் மக்களையும், உத்தியோகத்தில் அமர்த்தியும், ஹார்மனியை உண்டாக்கும்படி அவர்களுக்குப் பயிற்சியைக் கொடுத்தும், ஒவ்வொரு நகரமாகச் சென்று, கச்சேரிகள் செய்வதால் அடையக் கூடும் திரவ்யத்தைக் கொண்டு, அந்த கார்போரேஷனின் வரவு-செலவுகளை நிர்வகிக்கலாம். இவ்விதம் செய்வதால், நமது சங்கீதம்

முன்னேற்றமடையும். இதற்கு மக்களின் சேவையும், பாடகர்களின் உழைப்பும், சர்க்காரின் உதவியும் தேவை ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக மக்களிடமும் பாடகர்களிடமும், நமது சங்கீதத்தில் ஹார்மனியை உண்டாக்கவேண்டும் என்ற ஆர்வம் மேல்நோக்கி நிற்க வேண்டும். இம் முறையைக் கையாளுவதால் தென் நாட்டு சங்கீதத்திற்கும், வடநாட்டு சங்கீதத்திற்கும், ஒரு கோர்வையை ஏற்படுத்தி, நாட்டில் ஒற்றுமையையும் ஏற்படுத்த ஏதுவாகும்.

வட நாட்டு சங்கீதத்தையும், தென் நாட்டு சங்கீதத்தையும், ஒப்பிட்டால் வடநாட்டு சங்கீதத்தில் ஹார்மனி சிறிது அதிகமாகக்காணப்படுகிறது. அதற்குக் காரணம் அவர்கள் உபயோகப்படுத்தும் வாத்தியங்களான, சித்தார், சாரங்கி, சரோடு, தில்ரூபா இவைகள் எல்லாம் அனேக மெல்லிய தந்திக் கம்பிகளை உடையதாக இருக்கின்றன. அந்தக் கம்பிகளின் பிரதிபலிப்பினால் ஒரு நயமும் ஹார்மனியும் ஏற்படுகிறது. இதே வித்யாசம், வட நாட்டு மிருதங்கத்திலும், தென் நாட்டு மிருதங்கத்திலும் கூட காணப்படுகிறது. ஆயினும் ஹார்மனி உண்டாக்குவதற்குப் பலரக வாத்தியங்களை உபயோகிப்பதே சிறந்த முறை ஆகும்.

**கர்மமும்—கூட்டு முறையும்.**

நம் நாட்டைப் பொறுத்தமட்டில் ஒரு கர்மம் ஒருவராலே செய்யப்பட்டால் அக்கர்மம் நன்கு நடைபெறுகிறதென்றும், இருவரோ அல்லது பலரோ சேர்ந்து ஒரு கர்மத்தை நடத்தும்பட்சத்தில், சண்டை சச்சரவு

களுக்கும்; போட்டிக்கும் இடம் ஏற்பட்டு அக்கர்மம் சரிவர நடைபெறுகிறதில்லை எனப்படுகிறது. இதுவே ஒற்றுமைக் குறைவால் ஏற்படும் குணம் என்றும் கருதப்படுகிறது.

ஒரு தேசத்து மக்கள் யோக்யதை உடையவர்கள் என்று கருத வேண்டுமானால் அவர்கள் செய்யும் கர்மம் ஒருவராலே செய்யப்பட்டாலும் சரி, பலரால் சேர்ந்து நடத்தப்பட்டாலும் சரி, அக் கர்மம் செவ்வனே நடைபெற வேண்டும். ஆகையால், பலர் சேர்ந்து ஒரு கர்மத்தை செவ்வனே நடத்தும் பழக்கத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பழக்கம் சங்கீதத்தில் மாத்திரம் அல்ல, போர்க்களத்திலும் வேண்டும். ஒரு நாட்டை ஆளுவதிலும் வேண்டும். சிறிய சங்கத்தை நடத்துகிறவர்களிடமும், கைத்தொழிலில் ஈடுபடுகிறவர் களிடமும், மேலும் ஒவ்வொரு சிறு குடும்பத்திலும் கூட இப்பழக்கம் வேண்டும். இப்பழக்கம் ஏற்படுவதற்கு முக்கியமாக, நாம் எல்லோரும் சமம், நம் சுத்தம் எல்லோருடைய சுத்தத்தைப் பொறுத்தே இருக்கிறது. எல்லோருடைய நல் வாழ்க்கையுமே, நமக்கு நல் வாழ்க்கையைத் தரும் என்ற மனப்பான்மை நம்மிடம் அதிகரிக்க வேண்டும். இம்மனப்பான்மையின் மூலம் அன்பு உதயமாகிறது. ஒரு தகப்பனும், தாயும் தங்கள் குழந்தையின் பேரில் அன்பாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் ரத்த பாசமே. அதே ரத்தம் எல்லா மனிதரிடமும் இருக்கிறது என்பதையும், எல்லோரும் ஒரே தகப்பனான தெய்வத்தின் வயிற்றில் உதித்த குழந்தைகள் என்ற அறிவு ஏற்படுமாகில், நம் பூலோகம் அன்பு மயமாகவே காணப்படும்.


# 41. விஷ்ணு - லக்ஷ்மியின் அங்க நிர்ணயம்.

அங்கங்களும்—நட்சத்திரங்களும்.

விஷ்ணுவான கிரஹஸ்தன் எவ்விதமான அங்கங்களை உடைத்தாயிருக்க வேண்டும் என்பதைப்பற்றி பல நூல்கள் கூறுகின்றன. அவைகளைச் சவிஸ்தாரமாகச் சொல்லுவது இவ்விடம் இயலாதாகையால் சில முக்கிய மான அங்கங்களின் அளவைப் பற்றி இச்சமயம் சொல்வோம். சாதாரணமாக எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்று சொல்வதுண்டு. அதன்படி ஒரு விஷ்ணுவினுடைய உயரத்தை எட்டு பாகமாகப் பிரிப்போமாகுல் அதில் நாலு பாகம் குறிக்கு மேல் பட்டதாகவும், பாக்கி நாலு பாகம் கால்களின் உயர மாகவும் இருத்தல் வேண்டும். இது மிகவும் முக்கிய மானது. இவ்விஷயத்தை நோக்குங்கால் நூற்றுக்கு தொண்ணூறு மக்களுக்கு குறிக்கு மேல் பாகம் அதிக மாகவும், கால் பாகம் உயரம் குறைந்ததாகவே காணப் படுகிறது. குரங்கிற்கும் மற்ற ஜீவராசிகளுக்குமே அவ்விதம் இருக்கக்கூடுமாகையால் கால்கள் நீண்டு பாதி உயரத்திற்குக் குறையாமல் இருப்பவரே யோக்ய தாம்சம் உள்ள விஷ்ணு அல்லது சத்புருஷர் எனப் படும். இதுவே லக்ஷ்மிகளான பெண்மணிகளுக்கும் பொருந்தும். இவ்விதமான அங்கங்களை உடையவர்களே நட்சத்திரங்கள் என கருதப்படுகிறார்கள்.

விஷ்ணு-லக்ஷ்மியின் அங்க நிர்ணயம்.

சித்திரம் - 21.




விஷ்ணு புருடன் { அங்க நிர்ணயம் } லக்ஷ்மி பெண்மணி

மார்பும் - முக்கோணமும்.

விஷ்ணுவிற்கு மார்பு அகண்டு இருத்தல் வேண்டும். அவ்வளவை வினவுங்கால் மார்பில் உள்ள இரண்டு காம்பிற்கும் மத்திய பாகம் ஒரு சாண் அல்லது, உயரத்தில் எட்டில் ஒரு பங்கு இருக்கவேண்டும்.

## விஷ்ணு-லக்ஷ்மியின் அங்க நிர்ணயம்.

மேலும் வயிறு உயரத்தில் குறுகி இருக்கவேண்டும். அதாவது, தொப்புளிலிருந்து இடது மார்க் காம்பிற்கும், தொப்புளிலிருந்து வலது மார்க் காம்பிற்கும் உள்ள அளவுகள், இரண்டு மார்க் காம்புகளுக்கும் மத்தியில் உள்ள அளவைப் போலவே, ஒரு சாண் அல்லது உயரத்தில் எட்டில் ஒரு பாகம் இருக்கவேண்டும். இவ்விதம் பார்க்கப்போனால் மார்க் காம்புகளுக்கிடையே உள்ள அளவும், காம்புகளிலிருந்து தொப்புளுக்கு இருக்கும் அளவுகளும், ஒன்றே ஆகிறபடியால், அம்மூன்று இடங்களுக்கும் கோடுகள் வரையப்பட்டால் அவை ஒரு சரியான முக்கோணமாகும்.

ஒரு சுந்தர புருடனுக்கு அல்லது விஷ்ணுவிற்கும், பெண்மணிகளான லக்ஷ்மிக்கும், காது தழைந்து தோள் பட்டையை ஒட்டினாற்போல் இருத்தல் நலம். புருடர்களுக்கு மார்பு அகண்டு இருப்பதற்கு கந்தவாறு, பிரிஷ்ட பாகம் குறுகி, இருபுறமும் இரண்டு வடிவங்களாகக் காணப்படுவது நலம். இதற்கு மாறாக, பெண் மணிகளுக்கு அதாவது லக்ஷ்மிக்கு மார் அகலம் குறைந்தும், பிரிஷ்டபாகம் கொஞ்சம் அகண்டும் இருக்க வேண்டும். ஆயினும், மார்பு அகலம் குறைந்த அளவிற்கு ஒத்தபடி வயிற்றின் உயரம் குறுகி, மார்க் காம்புகளிடையே உள்ள அளவும், காம்புகளிலிருந்து தொப்புளுக்கு உள்ள அளவும் ஒன்றே ஆகி, ஒரு சிறிய முக்கோணமாகக் காணப் படும்.

## விஷ்ணு-லக்ஷ்மியின் அங்க நிர்ணயம்.

**அங்கங்களும் — அழகும்.**

விஷ்ணுவிற்கு அல்லது புருடருக்கு கைகள் முழங்கால் வரை நீளமிருக்க, பெண்மணிகளுக்கு முழங் காலுக்கு சற்று நீளமாகவே கைகள் இருப்பது மிகவும் அழகெனக் கருதப்படுகிறது. விஷ்ணுவின் நெற்றி அகண்டும், பின் சாயாமலும், அதிகமாக முன்வராமலும் இருப்பதே மிக்க பகுத்தறிவுச் சக்தி வாய்ந்தவர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் லக்ஷ்மிக்கும், பெண்மணிகளுக்கும், அதிகமாக நெற்றி அகண்டிருப்பது அழகைக் கொடுக்காது. நெற்றி நீளத்திலும், உயரத் திலும், சற்று குறைந்து, அரச இலை போல் காணப்படுவது நலம். விஷ்ணுவிற்கும் சரி, லக்ஷ்மிக்கும் சரி, அவர்களுடைய அவயவங்களுக்கு உகந்தாற்போல், கை விரல்கள் நீண்டு கூர்மையாக இருத்தல் வேண்டும். இருதரத்தாருக்குமே கால் விரல்கள் ஒன்றோடொன்று பிரியாமல் சேர்ந்தும், கூர்மையாக முடிந்திருத்தல் அழகாகும். உடல் பாகம் உயரத்தில் சிறியதாகவும், கால் பாகம் நீண்டும், மேலும் கைகளும், கால்களும், அவைகளின் மேல் பாகம் உயரத்தில் குறைந்தும், கீழ்பாகம் நீண்டு இருப் பதும் பொருத்தமானது. புருவம் வளைந்து இருப்பது அழகைக் கொடுக்கும். கண்கள் நீண்டும், மூக்கு அதிக மாக சப்பையாக இராமலும், கூர்மையாக இராமலும், நடுத்தரமாகவும், வாய் குறுகியும், முகவாய்க் கட்டை உள்நோக்காமல் சற்று பெரியதாகவும் இருப்பது

விரும்பத்தக்கது. பெண்மணிகளுக்கு அல்லது லக்ஷ்மிக்கு கண்கள் பெரியதாகவும், நீண்டும், சிவந்த வாயுடனும், காணப்படுவது சிறந்தவை ஆகும். மேலே சொன்ன அங்கங்களின் அழகை ஆதாரமாகக் கொண்டு சோதித்து, ஒவ்வொருவரும் தன் குறைகளை அறிந்து, அக்குறைகள் தீரவேண்டுமென்ற மனப்பான்மை கொண்டால், வெகுசீக்கிரத்திலேயே அங்கங்கள் மாறி அழகு கொடுக்கும். அப்படித் தவறினாலும் பிறக்கும் குழந்தைகள் அக்குறைகள் நீங்கி பிறக்க ஏதுவாகும். **இதுவே, மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு இப்பூமியில் செய்யவேண்டிய கர்மங்களில் ஒன்றாகும். ஆயினும், அழகுக்கு "அடிமை" ஆகலாகாது.**

**அங்கங்களும் — உடல் மேனியும்.**

ஆண் பெண் இருதாரருக்குமே உடல் மேனி அதிகமாக மேல்நாட்டார்போல் வெளுக்காமலும், நம்மவர்களில் பலர் போல் அதிகமாகக் கருக்காமலும், நடு நிறம் உள்ளவர்களாக இருத்தல் நலம். நம் பாரத பூமியில் சூரியனின் வெப்பம் அதிகம் ஏற்படுவதன் காரணமாகவும், நம் மக்களின் சக்திக் குறைவாலும், பிறக்கிற குழந்தைகள் கருப்பு நிறமுடையவர்களாகவே பிறக்கின்றனர். **இதைத் தடுக்க நம் நாட்டு விஞ்ஞானிகள் தீவிரமாக உழைத்து, அதிக சூர்ய வெப்பத்தினால் உடலில் உண்டாகும் மேனிக் குறையை நிவர்த்திக்க, பெரும் முயற்சியும், ஆராய்ச்சியும் செய்து, நம் நாட்டில், ஏன், இப்பூமியிலேயே கருப்பு மனிதரே பிறக்காதபடி செய்யவேண்டும்,**

# 42. வானப்ரஸ்த ஆச்ரமத்தில் நடராஜர் - காளி

இதுகாலம் தம்பதிகள் பலவிதமான கர்மங்களை கிரஹஸ்தாச்ரமத்தில் நடத்தியும், மக்களைப் பெற்றும், பின்பு குடும்ப வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டவர்களாய் உண்மையான தெய்வம் எது? அது எவ்விதமாக இருக்கும்? என்ற கடவுளின் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். இதையே வானப்ரஸ்த ஆச்ரமம் எனப்படுகிறது. இக்காலம் மிகவும் ஜாக்கிரதையாக நடத்தப்படவேண்டிய காலமாகும். கடந்த குடும்ப வாழ்க்கையில் உண்டான சவுகர்ய அசௌகர்யங்களை ஒத்தே இக்காலம் நடைபெறுகிறது. கடந்த குடும்ப வாழ்க்கையே, தம்பதிகள் தங்களுக்கு பிந்திவரும் ஆச்ரமங்களுக்கும், ஜன்மங்களுக்கும், விதைகள் விதைத்தவர் ஆவர். அந்த விதைகள் இந்த வானப்ரஸ்த ஆச்ரமத்தில் வளரும் விதத்தை ஒட்டியே பின்வரும் ஜன்மங்களின் வாழ்க்கை நிர்ணயிக்கப்படும். குடும்ப வாழ்க்கை மேன்மையாக கிரஹஸ்தாச்ரமத்தில் நடத்தாதவர்கள் வானப்ரஸ்த ஆச்ரமத்தை எட்டாமலே குடும்ப வாழ்க்கையின் மத்திம பாகத்திலும், கடை பாகத்திலுமே மரிக்கின்றனர். மற்றும் சிலருக்கு சென்ற குடும்ப வாழ்க்கையில் நடத்திய துஷ்கர்மங்களின் மூலமாக இந்த வானப்ரஸ்த ஆச்ரமத்தில் உடலிற்கும், மனதிற்கும், நரம்பிற்

கும் கூட குறைபாடுகள் ஏற்படுகின்றன. ஆயினும், குறைபாடுகளினுல் குன்ருது சமாளித்துக்கொண்டு, ஒரே முகமாகத் தம் கடமைகளை செய்து முடிப்பவனே ஞானி ஆவான்.

வானப்ரஸ்தமும் — சபலமும்.

இக்காலத்தில் மனதிற்கும், உடலிற்கும், நரம்பிற்கும் உண்டாகும் குறைபாடுகளினுலும், மேலும் சென்ற குடும்ப வாழ்க்கையில் சம்பாதித்த மண்ணினுலும், பொன்னினுலும், பல கோரமான விகாரங்கள் ஏற்படுகின்றன. அதில் முக்கியமானது ஆண்மக்களுள் பலருக்கு "சபலம்". இந்தச் சபலமானது அவர்களது நரம்புத்தளர்ச்சியால் உண்டான ஒரு உபாதியே ஆகிறது. இதேபோல் பெண்மணிகளிடமும் உண்டு. அவர்களிலும் சிலர் இதுகாலம் கிரஹஸ்தாச்ரமத்தில் கற்பை வெகுவாகக் காப்பாற்றிவந்தபோதிலும், இந்த ஆச்ரமத்தில் கைவிடுகின்றனர். இதுவும் ஒரு உபாதியே. இவ்விதமாக உபாதியால் வழி தப்பிப் போனவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு மக்கள் உண்டு எனலாம். இம்மக்களுக்கு, புத்திக்கும், சித்திக்கும், வெகுதூரம். ஏனெனில், அவர்களின் மனம், உடல், நரம்பு, முதலியவைகள் உபாதியால் சீர்குலைந்தவை. அவர்களுக்கு இந்த ஜன்மத்தில் அறிவும், ஞானமும், கிட்டாது. அவர்கள் அடுத்துவரப்போகும் ஜன்மங்களுக்கே காத்திருக்க வேண்டும். இந்த உபாதியின்

ஒரு அம்சம் அதாவது "சபலம்" நல்ல குடும்ப வாழ்க்கை நடத்திய சில சத்புருடனுக்கும் கூட ஏற்படு வதுண்டு. அதனுல் பெண்மணிகளைக் கண்டால் தொடவேண்டும் போல் ஒரு உணர்ச்சி. இது நிஜமான தல்ல. இந்த உணர்ச்சி உபாதியின் விகாரமேயானபோதி லும், அதை உணராது பல மக்கள் படுகுழியில் விழுந்திருப் பதை நாம் காண்கிருேம்.

சபலமும் — மறுமணமும்.

இத்தகையான சந்தர்ப்பத்திற்கு ஒத்தாசையாக கிரஹஸ்தாச்ரமத்தின் முடிவிலேயே பத்தினிமார்கள் பர லோகப்பிராப்தி அடைகின்றனர். இதனுல், தனக்கு நரம்புத் தளர்ச்சியால் உண்டான உபாதி ஒருபக்கம். சிறியதான பெண், பிள்ளைகளை, இதுகாலம் பாதுகாத்து வந்த வயது வாய்ந்த பெண்மணி குடும்பத்தில் இராதது மற்ருெரு பக்கம், இந்தக் கடுமையான நிலைமையில் ஒரு சிறு பெண்மணியை மறுமணம் செய்துகொண்டு, தன் வாழ்க்கையையே பாழாக்கி, தற்கொலை செய்து கொண்டவர் பலர். குடும்பத்தை விட்டு ஓடி, காட்டில் சந்யாசம் பூண்டவர் பலர். முதல் பத்தினிக்கும், இரண் டாவது பத்தினிக்குமாகப் பிறந்த பல குழந்தைகளையும் தம் இளம் பத்தினியையும், பரிதவிக்கவிட்டு திடீரென மாண்டவர்கள் பலர். எல்லாக்கஷ்டங்களையும் அனுபவித் துக்கொண்டும், ஊரார் சிரிக்க, வீட்டில் பத்தினி ஒரு பக்கம், குழந்தைகள் வேருெருபக்கம் தாக்க அவர்களுக்கு

சாந்தி செய்ய முடியாது, உடலும் இல்லாமல், மனமும் இல்லாமல், பணமும் இல்லாமல், பரிதவிக்கும் மதி இழந்தவர்களில் பலரை நாம் காண்கிறோம். எனவே குடும்ப வாழ்க்கையில் பல வருடங்கள் ஈடுபட்டு, மக்களைப் பெற்றெடுத்தவர்கள், புருடனாக இருந்தாலும் சரி, பெண்மணியாக இருந்தாலும் சரி, மறுமணம் செய்து கொள்ளாமல் இருப்பதே நலம். மறுமணம் செய்து கொள்ளாததினால் தான் பெற்ற குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்கவும் முடியும். இதுகாலம் புருடன்-பெண்சாதி தம்மிடையே பரஸ்பரம் வைத்து இருந்த பிரியத்தையும், அபிமானத்தையும், கடவுளின்பால் செலுத்தவும் ஏதுவாகிறது. இதற்கு மாறாக, புருடனோ, பெண் மணியோ, மக்கள் பொறுப்பின்றி இருக்கில் எக்காலத்திலும், எந்த ஆச்ரமத்தில் இருந்தபோதிலும், மணப்பதினால் ஒருவித கெடுதலும் ஏற்படாது. ஆனால் ஒரு நிபந்தனை உண்டு. **அவ்விதம் மணம் செய்து கொள்ளும் தம்பதிகளின் வயது சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேல் வித்யாசம் இருக்கலாகாது.**

**வானப்ரஸ்தமும்—பெண்மணிகளும்.**

பெண்மணிகளைப்பற்றி வினவுங்கால், அவர்களின் கிரஹஸ்தாச்ரமத்தின் கடைசி பாகமானது அவர்களுக்கு ஒரு கண்டம் என்றே சொல்லலாம். அக்காலமே அவர்களுக்கு மாதவிடாய் நின்றுபோகும் காலமாகும். அந்தக் காலத்தில் அவர்கள் பலவிதமான உதிரக்

கோளாறுகளுக்கு உள்ளாகிறார்கள். பலர் நோய்வாய்ப் பட்டு பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். மற்றும் சிலரே திடகாத்திரராய் இருக்கப்பட்டவராயினும், அவர்களுள் சிலர், புத்துயிர் பெற்று, தங்களுக்கு இனி மக்கள் பிறவாது என்ற நம்பிக்கையின்பேரில் பலவித மான அட்டூழியங்களுக்கும், சிற்றின்பங்களுக்கும் ஆளாகி, பல சிறு ஆண்மக்களையும், சிறு தம்பதிகளின் நல் வாழ்க்கையையும்கூட கெடுத்து விடுகின்றனர். **இவ்விதமான நிலையில், ஒரு சத்புருடனும், ஒரு சிறந்த பெண்மணியும், எப்படி வாழ்வார்கள்; எப்படி வாழ வேண்டும்; என்ற திட்டத்தை (Standard) நிர்ணயித்ததே நடராஜர் விக்ரஹமும், காளிச் சிலையும் ஆகும்.**

---

## 43. வானப்ரஸ்தமும்-சிற்றின்பமும்.

இந்தக் காலத்திலேதான், ஒரு பதிவ்ரதா சிரோன் மணியாக, சத்கர்மம் நடாத்திய ஒரு குடும்பப் பெண் மணித் தன் குடும்ப வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்ட வளாய், தன் உண்மையான நிலைமையை உணர ஆரம் பித்ததின் பயனாக, புருடனைக்கண்டே வெறுக்க ஆரம் பிக்கிறாள். அதாவது, சிற்றின்பத்திற்கு இடம் கொடுக்க மறுக்கிறாள். அப்பொழுதே, தான் லோக மாதா என்றும், தான் இதுகாலம் புருடனுடைய ஆசா பாசங்களினால் மதிஇழந்து போனதாகவும் கருதுகிறாள்.

## வானப்ரஸ்தமும் - சிற்றின்பமும்.

சித்திரம் - 22.



சாந்த காளி - சிவகாமி.

### வானப்ரஸ்தமும் - சிற்றின்பமும்.

இக்காலத்தில் அவள் மனதில் நெருப்புப் பொறி பறக்கும். ஆண் மக்கள் எவரையும் நம்பார். தன் புருடன்பால் இருக்கும் நட்பானது, தான் பெற்ற குழந்தைகளின்பேரில் உள்ளதுபோலவே காணப்படும். அப்பொழுது அக்குடும்பமாகிய தன் புருடன், பிள்ளைகள், பெண்கள், எல்லோருக்கும், தாயார் என்ற ஸ்தானம் வகிக்கிருள். இந்த குணத்தைச் சிற்பித்ததே காளிச் சிலை ஆகும்.

### காளி சிலையும் - அசுரர்களும்.

காளி எனப்படும் சக்தி, தாரகாசுரனையும், மகிடா சுரனையும், மேலும், சண்டன், முண்டன், சும்பன், நிசும்பன் என்ற அசுரர்களால் ஏற்படக்கூடிய கெட்ட குணங்களையும், தன் சக்தியால் எறித்தாள் எனப்படு கிறது. இவ்விதம் எறித்தாள் என்றும், அதனுல் தன் கற்பை வெகு ஜாக்கிரதையாய்க்காப்பாற்றிக்கொண்டாள் என்று அறிந்தும், நம் மக்களில் சிலர் தற்காலம் கற்பை விலைக்கு விற்கின்றனர். தாரகாசுரன் என்பதற்கு, தாரகாசுரன் என்று ஒரு ராட்சஸன் இருந்ததாகவும், அவன் பக்தர்களைத்துன்புறுத்தியதன் பயனுக சக்தியால் கொல்லப்பட்டான் என்பது கதை. ஆனுல் சிற்பா லங்காரத்தின்படி தாரகாசுரன் என்பது ஒரு ராட்சஸன் அல்ல. அது ஒரு கெட்ட குணத்தை அலங்கரித்ததே ஆகும். அந்தக் கெட்ட குணத்தை சிலை செய்ததே தாரகாசுரன் எனப்படுகிறது. தாரகாசுரன் என்ருல் அளவற்ற சிற்றின்ப வாழ்க்கையாலும், நரம்புத் தளர்ச்சி

யாலும், மனித வர்க்கத்திற்கு ஏற்படக்கூடிய ஒரு கெட்ட குணமே ஆகும். அதேபோல், மகிடாசுரன் என்ருல், மகிடம் சூட்டிக்கொண்டிருக்கும் கெட்ட மனப் பான்மையுள்ள அரசர்களுடையவும், மற்றும், மண்ணும், பொன்னும் பெருக்குள்ளவர்களினுல், பெண்மணிகளின் கற்புக்கு ஏற்படும் அபாயங்களைக் குறித்ததாகும். சண்டன் என்ருல், தன் அறிவின் பேறிலே பெண் மணிகளின் கற்பிற்குத் தீங்குவிளைவிக்கும் குணத்தையே சுட்டிக் காட்டுகிறது. முண்டன் என்ருல், அறியாமை யாலும், தன் சரீரம் கொழுப்பேறியதாலும் மதி இழந்து, பெண்மணிகளின் கற்பிற்குத் தீங்கு விளைவிக்கும் குணத் தையே குறிக்கிறது. சும்பன் — நிசும்பன் என்ற இரண்டு அரக்கர்களும், சண்டன், முண்டன் எனப்பட்ட ராட்சசர்களுக்குச் சகோதரர்கள் எனப்படுகிறது. **அதாவது, சும்பன், நிசும்பன், இருவரும் திருமணம் ஆகாத வாலிபர்களுக்கும், கன்னிகளுக்கும், இளம் பிராயத்திலேயே தீங்கு விளைவிக்கும் குணங்களைக் குறிக்கின்றன.**

காளியும் — கற்பும்.

ஒரு கற்பு வாய்ந்த பெண்மணி, அதாவது காளி, தனக்கு தாரகாசுரனுல் உண்டான சீண்டல்களைச் சமாளித்துக்கொள்ளுவதுமன்னியில், தன் புருடனுக்குத் தாரகாசுரன் குணம் வராமலிருக்கும்படி கட்டிக் காக்கி ருள். அதேபோல் மகிடாசுரனுல் உண்டாகப்பட்ட கெடுதல்களையும் தகர்த்தெறிகிருள். தன் கணவன் தனவந்தனுக இருந்தால், அவனையும் நற்போதனையால்

மடக்குகிருள். சண்டன், முண்டன், எனப்பட்ட குணங்களுள்ளவர்களால் தனக்கு ஏற்படும் தாக்குதல் களேயும் சமாளிக்கிருள். மேலும் சும்பன், நிசும்பன் என்று சொல்லப்பட்ட கெட்ட குணங்கள், அப்பெண் மணியின் புதல்வர், புதல்விகளேத் தாக்குகிறதாகையால், சிறு பையன்களேயும், சிறுமிகளேயும் கவனித்து வருகிருள். இவ்விதமான பல கஷ்டங்களேக் கண்ணும் கருத்து மாகக் கவனித்து தன் குடும்பத்தை செம்மையாக, புயல் காற்றில் அகப்பட்ட கப்பலே ஒட்டுவதுபோல் நடாத்தி, குறை இன்றி கரை சேர்க்கிற பெண்மணியையே காளி என்றும், ஈசுவரி என்றும் பூஜிக்கிருேம்.

மொத்தத்தில், பெண்மணிகளுக்குக் கற்பு என்பதே ஒரு பெரிய பொக்கிடம் என்றும், அத்தகைய கற்பைக் காப்பதே அவர்களுடைய தெய்வீக குணமென்றும், பல விதமாக நம் முன்னேர் நமக்குச்சுட்டிக்காட்டி இருக்கின் றனர். அக்குணமுடையவளேயே காளி என்றும், சாமுண்டீச்வரி என்றும், மஹிஷாசுரமர்தனி என்றும், இன்னும் பலவிதமான பெயர்களால் அழைக்கிருேம். இவ்விதம் கற்பு என்பதற்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக் கப்பட்டு இருக்கிறது. கற்பைக் கட்டிக் காக்காவிடில் உலகமே பாழாய்விடும். ஆகையால், பெண்மணிகளே உலகத்தை சிருஷ்டிக்கிறவர்களும் ஆகிருர்கள். அவர்களே அழிக்கவும் திறமை வாய்ந்தவர் ஆவர்.

**கற்பும் — அர்தநாரீச்வரரும்.**

கற்பு என்பது இருதரத்தாருக்கும், ஆணுக்கும், பெண்ணுக்குமே உரியதாகும். ஆயினும், பெண்மணி

களுக்கே அதிக முக்கியத்வம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஏனெனில், புருடனே பொறுப்பில்லாதவன் ஆகிருன். பெண்மணிகளோ பொறுப்புள்ளவர்கள் ஆவர். கடவுள் ஏன் இப்படி பாரபட்சமாக படைக்க வேண்டும்? இருதரத்தாருமே பொறுப்புள்ளவராக "அர்தநாரீச்வரர்" என்ற சிலையைப்போல் சிருஷ்டித்திருக்கக் கூடாதா என்று ஒருவர் ஒரு காலம் வாதாடியதுண்டு. அப்படியானுல், ஆண்மக்கள் ஆண் குழந்தைகளைப் பெறுவதென்றும், பெண்மணிகள், பெண் குழந்தைகளைப் பெறுவதென்றும் ஏற்படலாம். அப்பொழுது இருதரத்தாருக்குள் சமத்துவம் ஏற்படுகிறதல்லவா? இவ்விதம் சமத்துவம் ஏற்படுமானுல் பெண்மணிகளுடைய ஈசுவரத் தன்மையும் போய், புருடனுடைய ஆண்மைத் தன்மையும் போய் உலகத்தில் கற்புக்கு இடம் இல்லாமலே போய்விடும். ஏன், புருடன்-பெண்மணி என்ற வித்யாசமே ஏற்படாது. புருடர்களின் ராட்சச் குணம் குறைவதில் கெடுதல் இல்லை. ஆனுல் பெண்மணிகளின் ஈச்வரத் தன்மை குறைவுபட்டால், ராட்சச குணம் மேலிட்டு, உலகத்தில் சாந்தியே ஏற்படாது. **அதனுலேதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பெண்மணிகளின் குணத்தை உடையவரென்றும், அறிந்தவரென்றும், பெண்மணிகளுக்கு ஆபத்பாந்தவரென்றும் சொல்லப்படுகிறது. அர்த்தநாரீசுவரர் என்ற சிலை, சிவலிங்கத்தில் ஒரு பாவம் ஆனபோதிலும், மேலே சொல்லி இருக்கிற காரணங்களால் அச்சிலையைப் பூஜிப்பதில்லை.**

**காளிச் சிலேயின் விபரம்.**

கற்பைக் கண்ணும், கருத்துமாகக் காத்து, தாமே இந்த உலகத்திற்குத் தாயென்றும், தன் பிள்ளைகளேயும், பர்தாவையும்கூட குழந்தைகளில் ஒருவராக பாவித்து, காமவிகாரங்களுக்கு ராக்ஷசனுன சண்டன் என்பவன் மேல் நின்றுகொண்டும், முண்டன் என்ற ராக்ஷச குணத்தை வெட்டித் தள்ளியும், கோபாக்னியான முகத்தோடும், திறந்த கண்களோடும், சிற்பிக்கப்பட்ட சிலேயே காளி எனப்படுகிறது. காளி சிலேக்கு வாகனம் சிம்மம். அதுவே பெண்மணிகளின் திடகாத்ரமான மனதையும், ஆத்மஞ்ஞான சக்தியையும் குறிக்கிறது. நற்குணமுள்ள பெண்மணிகள் தானே லோகமாதா என்றும், தனக்கும், புருடனுக்கும், எவ்விதமான காமவிகாரத்திற்கு இடமில்லே என்றும், உணர்ந்து, அதன்படி நடைமுறையில் தன் வாழ்க்கையைக் கடத்த, சத் புருடர்களின் நிலேமை என்னவாகிறது என்பதை சற்று கவனிப்போம்.

## 44. காளியும் — புருடனும்.

காளியின் மனதை அறிந்த சத் புருடனுக்கு ஞானம் பிறக்கிறது. ஆகா? ஏமாந்தேனல்லவா. இப்பெண் மணிகளேக் கண்டு இதுகாலம் மயங்கி, நான் யார், எதற்காக இப்பூமியில் பிறந்தேன், என் கடமை எவை, என்பதான விஷயங்களே ஒரு கணமும் நினேயாது பல நாட்களேக் கழித்துவிட்டேனல்லவா? மேலும் ஒரு

காளியும் - புருடனும்.

பெண்மணி தனக்கு புத்தி கற்பிக்கும்படியான பரிதாப கரமான நிலையில் இருக்கிறேன் என்பதாகத் தன்னையே நிந்தித்துக்கொள்ளுகிருன். உடனே ஆவேசம் பிறந்து விடுகிறது. இனி, பெண்மணிகளின் முகத்தில் விழிப்ப

சித்திரம் - 23.



நடராஜர்.

தில்லை என்று பிரதிக்ஞை செய்து கொள்ளுகிறான். கடவுளின் திருவிளையாட்டின் காரணங்களை ஆராய முயல்கிறான். இந்த ஆராய்ச்சியின் பயனாக ஞானம் பிறக்கிறது. அதனால் காண்கிறதென்ன ? எங்கும் சக்தி மயமாகவே காண்கிறான். தாய் என்ற சப்தமும், அதன் உருவமுமே எங்கும் பரவி நிற்கிறது. தாயைக் காண் கிறான். வேறுவிதமாகப் புருடன் – பெண்சாதி என்ப தற்கு இடம் இருப்பதாகவே தெரியவில்லை. எல்லாம் தாயுருவம், எல்லாம் குழந்தை உருவம், வேறொன்றும் அவனுக்குப் புலப்படவில்லை.

இதுகாலம் கண்ணிருந்தும், தினம் பார்த்துக் கொண்டிருந்தும், தன் கண்களுக்குப் புலப்படாததின் காரணம் இந்த ராக்ஷச குணமாகிய இப்பூமியைச்சார்ந்த காமவிகாரமேயல்லவா என்பதாக அறிந்துகொள்ளு கிறான். தனக்குண்டான ஞான உதயத்தை நினைத்து ஆடுகிறான், பாடுகிறான், தானே தன்னை அறியாது ஆனந்த நடனம் ஆடுகிறான் இந்தக் குணங்களைச் சிற்பிப்பதே "நடராஜர்" எனப்படுகிறது. அதாவது, கடவுள் தனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பகுத்தறிவுச் சக்தி களைக் கண்டு மகிழ்கிறார், ஆனால் கடவுள் உருக்கொண்ட மனித வர்க்கமோ கடவுளின் மகிமையைக் கண்டு ஆனந்திக் கிறது. இவ்விரண்டினால் உண்டான ஆனந்தம் எனப்பட்ட குணத்தைச் சிற்பிப்பதே "நடராஜர் சிலை" ஆகும்.

தாயும் — குழந்தையும்.

எல்லாம் தாயுருவம், எல்லாம் குழந்தை உருவம் என்றால் என்னது என்பதை அறியவேண்டுமானால்

முதலாவதாக புருடன்-பெண்சாதி என்ற காம விகாரத்தை ஒட்டிய குணத்தை, அறவே மறந்துவிட்டாலொழிய அதன் தாத்பர்யத்தை அறிய முடியாது. அதனுலேதான் நம் முன்னேர்களும், யோகிகளும், மேலும், ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் கூட பெண்ணுசை என்பதை நீக்கினுலொழிய தெய்வத்தைக் காண முடியாது என்று உபதேசம் செய்துள்ளனர். இக்காரணத்தாலேதான், பக்த சிரோன்மணிகளும் அவதார புருஷர்களும், உலக வாழ்க்கையைத்துறந்து, மாயையை விட்டு விலகி, தாயுருவத்தையும், குழந்தை உருவத்தையும் நேராகக் கண்டுக் களித்தனர்.

---

# 45. திருமணமும்-வாழ்க்கையும்.

திருமணம் என்பது சிற்றின்பத்திற்காகவும், குழந்தைகளைப் பெறுவதற்காகவுமே ஏற்பட்டதல்ல. திருமணம் என்பது, கடவுளின் சக்தியைக் கிரஹித்துக் கொள்வதற்கு ஒரு வழியே ஆகிறது. கடவுளின் சக்தியானது குணத்தின் மூலமாகவே எங்கும் பரவி நிற்கிறது. அந்த நல்ல குணம் பரஸ்பரம் புருடர்களிடமும், பெண்களிடமும் இருந்தபோதிலும், பெண்மணிகளிடமே அதிகரித்திருக்கிறது எனப்படுகிறது. அதனுலேயே அவர்களை சக்திமயம் என்பதாகக் கருதுகிறேம். பராசக்தியின் அவதாரம் என்கிறேம். ஆயினும் ஒருவருக்கு நல்ல சக்தியும், குணமும் இருக்குமாயின்,

அந்தச் சக்தியையும், குணத்தையும் அறிந்து, மகிழ்ந்து, எடுத்துக்காட்ட வேண்டியது மற்றவர் கடமையாகிறது. ஒருவர் புத்திமானுக இருக்கலாம். ஆயினும் தானே புத்திமான் என்று சொல்லிக்கொள்ளுவது தகாததும், நடைபெருததும் ஆகும். வேரெருருவரே அவரை புத்திமான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. அவ் விதம் சொல்லுவதற்கு அப்புத்திமானேடு கூடிப்பழகியே அவர் புத்தியையும், குணத்தையும் அறியவேண்டி வருகிறது. அதேபோல், ஈசுவரத்தன்மையான நல்ல குணம் வாய்ந்த பெண்மணிகளோடு கூடிப்பழகி, அவர்கள் குணத்தையும், ஞானத்தையும், சகிப்புத் தன்மையையும் தெரிந்துகொண்டாலொழிய அக்குணங் களின் மகிமையை அறியமுடியாது. அவ்விதம் பரஸ் பரம் முக்கியமாக பெண்மணிகளிடமிருந்து ஈசுவரத் தன்மையான நல்ல குணங்களைப்பெற்று, பகுத்தறிவை அடைவதே புருடனும், பெண்மணியும் மணம் செய்து கொள்வதின் தாத்பர்யம். "ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கற, பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கற," என்று ஒரு பழமொழி உண்டு. அதுவே புருடனும் பெண்சாதி யும் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைக் குறிக் கிறது. **சிற்றின்பத்தில் ஈடுபட்டுப் பல குழந்தைகளைப் பெறு வது, மாயையின் ஆதிக்கத்தில் கட்டுண்ட ஒரு உபாதியே ஆகும். தம்பதிகள் ஒரே முகமாகவும், கட்டுப்பாட்டோடும் குலம் வளர, ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளைப்பெறு வதே முறை ஆகும். அவதார புருஷர்களான மகான்களுக்கு பூர்வ ஜன்ம பலனுக மணம் விதிவிலக்காகிறது.**

## திருமணமும் - வாழ்க்கையும்.

### திருமணமும்—ஞானமும்.

திருமணம் என்பது, பாமர மக்களுக்கு எக்காலத்திலும் நடைபெறலாம். ஆயினும், அறுபதுக்கு—அறுபது சாந்தி, என்று சொல்லப்படுவதின் மூல காரணம் அறுபது வயதாகிய ஒரு புருடன் மனைவி இருந்தாலும், இல்லாமல் இருந்தால் மறுமணம் செய்து கொண்டும், இருவரும் காம விகாரங்களில் ஈடுபடாமல் விடுதலைக்காக ஞான உதயம் ஆவதற்குக் கடவுளின் ஆராய்ச்சியில் குருவையும்-சீடனையும் போல் ஈடுபடுவார்கள் என தாத்பர்யம். இவ்விதம் அறுபது வயதில்தான் விடுதலை கோரவேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. எவ்வளவுக்கெவ்வளவு சொற்ப காலம் குடும்ப வாழ்க்கை நடத்தியவுடனேயே, ஈசுவர ஆராய்ச்சியில் ஆர்வம் ஏற்பட்டு, விடுதலைக்காகப் பாடுபடுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மிகவும் சிலாக்கியமானது. இந்த உன்னத ஸ்திதி அடைவதற்கு மாயையின் அங்கங்களான மூன்றுவித ஆசைகளையும் துறக்க வேண்டும். இம்மூன்று ஆசைகளினால், போட்டி போடாமலும், சூதாடாமலும், ஒரு கட்டுப்பாட்டோடும் மிதத்தோடும், மனிதவர்க்கம் ஜீவிக்க உட்படுமாகில் அன்றைக்கே இப்பூலோகத்தில் சாந்தி நிலவும். இவ்விதமான மோஹங்களையும், சூதாட்டத்தையும் விட்டவருக்கே ஞானம் பிறக்கிறது. அவர் காண்கிறதெல்லாம் கடவுள் மயமே. **அக்கடவுள் மயமான அகண்ட சக்தி, ஒரு எல்லை இல்லாதது என்று கருதினோம். அதுவே மாயவலை**

யில் சிக்கிய பாமர மக்களின் மனதில் ஏற்படும் உணர்ச்சி ஆகும். ஆனால் ?

சக்தியும்—எல்லையும்.

மோகங்களை விட்டு அகன்றவன் எல்லை இல்லாத ஆகாசத்திலும்கூட ஒரு எல்லையைக் காண்கிறான். எப்படி எனில், ஒரு கூட்டத்தின் மத்தியில் நாம் இருக்கும்பொழுது கூட்டத்தின் நாலு பக்கங்களிலுமுள்ள எல்லைகள் நமக்குத் தெரிவதில்லை. ஆனால் நாம் அந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறி, ஒரு வீட்டின் மாடியிலிருந்து பார்ப்போமானால் அக்கூட்டத்தின் நாலு பக்கங்களிலுமுள்ள எல்லைகள் நமக்கு நன்கு விளங்குகிறதல்லவா? அதேபோல் நாம் அறியாமையால் பூமியிலுள்ள மோகங்களில் சூழ்ந்திருக்கும்பொழுது நம் மனம் உணராது ஒரு பலூனுக்குள் இருக்கும் காட்சியையே நாம் காண்கிறோம். நாம் அந்த பலூனுக்குள்ளிருக்கும்பொழுது நாம் பார்க்கும் பக்கமெல்லாம் ஒரே மாதிரியாகக் காணப்படுகிறது. அதனால் எல்லை எது என்பதையே நாம் உணரமுடிவதில்லை. நாம் அந்த பலூனை விட்டு வெளியே வந்து பார்க்கும்பட்சத்தில் அது ஒரு எல்லையைக்கொண்ட உருண்டை உருவமாக காணப்படுகிறதல்லவா ?

அதேபோல் மனிதன் பூலோகத்திலுள்ள ஆசாபாசங்கள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, தான் பூமியைவிட்டு வெளிக்கிளம்பினவனாய், மனக்கண் மூலம் நோக்கும் பட்சத்தில், இந்த ஆகாசம் என்று

சொல்லப்பட்ட பராசக்திக்கு ஒருவிதமான உருவம் காணப்படுகிறது. இதுவே ஒரு ஞானி நோக்கக்கூடிய தாயின் உருவமாகும். இந்தத் தாயின் வயிற்றில் ஒரு குழந்தையையும் காண்கிறன். அதுவே சூர்ய மண்டலமாம். ஒரு சக்தி பிறக்கவேண்டுமானல் மூன்று அம்சங்கள் தேவை என்பதாக சொல்லப்பட்டது. அதன்படி இந்த தெய்வீக சிவ-சக்தியின் பிறப்பிற்கு தாயும், பராசக்தியுமான ஆகாசமே பரந்த சக்தி ஆகிறது. அச்சக்தியை எடுத்துக்காட்டும் கருவியே சூர்ய மண்டலமாம். அதையே சிவம் என்கிறேம். அச்சக்தி வசிக்க வேண்டிய இடமே 27 நட்சத்திரக் கூட்டங்களால் ஏற்பட்ட ஒரு எல்லேயே, தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தை விளேயாடும் குடமும், இடமும் ஆகும். அதாவது, தாயார் வயிற்றில் இருக்கும் கர்ப்பப்பையினுள் ஆடும் குழந்தை போல், கடவுள் ஆனந்த நடனம் ஆடுகிருர் என தாத்பர்யம்.

நடராஜரும்—சிற்பமும்.

நடராஜர் நடனத்தையே பரம ரக்ஸ்யம் என்று சிதம்பரத்தில் காண்பிக்கப்படுகிறது. இந்த உண்மையை பாவமாக, இருட்டறையை சக்தியாகக் கொண்டு அதன் வயிற்றில் ஆடும் குழந்தையை மாலைகள் மூலமாக பாவனேயாகக் காண்பிக்கப்படுகிறது. நடராஜர் சிற்பம், காம விகாரங்களுக்கு உரிமையான அசுரன்மேல் நின்று கொண்டும், ஒரு கையில் ஓங்கார சப்தத்திற்கு உரியதான உடுக்கை ஏந்தியும், மற்ருெரு கையில் ஒளிக்கு உரியதான

நெருப்பை ஏந்தியும், நடனம் ஆடுவதாக ஐதிகம். இதன் பிற்பாகத்தில் கர்ப்பப் பையின் பாவனையாக 27 நட்சத்திரக் கூட்டங்களையும் வளையமாக திருவாசி என காண்பிக்கப்படுகிறது. திருவாசி என்றால் தெய்வம் வசிக்குமிடம் எனத் தாத்பர்யம்.

## 46. நரகாசுரனும்-தீபாவளியும்.

சக்தி என்ற காளியின் சிலையும், நடராஜர் சிலையுமே நம் நாட்டு நாட்டியக் கலைக்கும், சிற்பக்கலைக்கும், ஆதாரம் ஆகிறது. இவ்விதமான நாட்டியாலங்காரங்களும், சிற்பாலங்காரங்களும், கிருஷ்ண பகவானின் ஆட்சிக்குப் பின்பே உச்சநிலையை அடைந்தது எனத் தெரியவருகிறது. கிருஷ்ணபகவானின் ஆட்சிக்கு முன்பு எல்லாம் கால்ய ரூபமாகவே இருந்ததெனலாம். உதாரணமாக "தீபாவளி" என்று நாம் கொண்டாடும் நாளை எடுத்துக்கொள்வோம். தீபாவளி என்பது நரகாசூரனின் 'அழிவு என்பதைக் கொண்டாடும் ஒரு தினமே ஆகும். "தீபாவளி" என்பது சிறுவர்களுக்கு ஒரு குதூகலமான தினமாக விளங்குகிறதே யொழிய, அதன் முக்கியத்வம் வெகுசிலருக்கே தெரியவருகிறது.

தீபாவளி என்னும் பண்டிகையை விவரிக்குங்கால் நரகாசூரன் என்ற ஒரு கொடிய அசுரன் இருந்ததாகவும், அவன் மனிதவர்க்கத்திற்குப் பலவிதத்திலும் தீங்கு

## நரகாசுரனும் - தீபாவளியும்.

விளைவித்ததாகவும், அவன் கொல்லப்படுவதற்கு முன், எல்லோரும் அப்யங்க ஸ்னனம் செய்து, புது வஸ்திரம் தரித்து, அப்பண்டிகையைக் கொண்டாட வேண்டுமென்று அவன் கேட்டுக்கொண்டதாகவும் சொல்லப் படுகிறது. ஆனல் திராவிடச் சிற்பத்தின்படி அது தாத்பர்யம் அல்ல. நரகாசூரன் எனப்பட்டது, ஒரு குணத்தை சுட்டிக்காட்டியதேயொழிய ஒருஅசுரனையோ அல்லது ஒரு மனிதனையோ குறித்ததல்ல. நரகாசுரன் என்ற பதத்திற்கு சாஸ்திரீகமாக, "வராக உருக்கொண்ட விஷ்ணுவிற்கு, பூமாதேவியின் வயிற்றில் பிறந்த அசுரன்" எனப்படுகிறது. அதாவது, பண்டைய காலத்தில் மனிதவர்க்கம் மிருகரூபம் கொண்டு, பூமியில் பிறந்து, மனிதவர்க்கத்திற்கே பயங்கரமான கெட்ட செயல்களைச் செய்து, அவர்களையே உண்டுகளிக்கும் குணம் என்பதாகும். **அதன்படி நரகாசுரன் என்பதற்கு தாத்பர்யம் நரமாமிசம் உண்ணும் கெட்ட குணத்தையே குறித்ததாகும்.**

## நரகாசுரனும்—தீண்டாமையும்.

முன் காலத்தில் திராவிடர்கள் நம்நாட்டில் உதித்ததற்கு முன்பு, ஜீவித்துவந்த காட்டு மனிதர்களில் பலர் கொடிய மிருகங்களைப்போல் நர மாமிசம் உண்ணும் குணத்தைக் கையாண்டு வந்தனர். அவர்கள், வில் வித்தையிலும், வேட்டை ஆடுவதிலும் திறமை வாய்ந்தவர்களாக இருந்தமையால், திராவிடர்கள் அவர்களைக்

கண்டு அஞ்சி அவர்கள் இருக்குமிடம் போவதற்கே மறுத்தனர். ஆயினும், வேறு சந்தர்ப்பங்களில் நேருக்கு நேரே அவர்களைக் காணநேரிட்டால் விலகிக் கொள்ளுவதுவழக்கம். இந்தவிலகிக்கொள்ளும்வழக்கம் பின்பு தீண்டாமையாக மாறியது. இதன் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாக நர மாமிசம் உண்ணும் காட்டு மனிதர்கள் கொல்லப்பட்டனர். கடைசியாக ஜீவித்திருந்த ஒரு கூட்டத்தினரைக் கொன்று நர மாமிசம் உண்ணும் குணத்தை அழித்ததின் காரணமாக "தீபாவளி" கொண்டாடப்படுகிறது. எனவே, நர மாமிசம் உண்ணும் குணத்தையே சிற்பாலங்காரத்தின்படி நரகாசுரன் எனப்படுகிறது. அக்கெட்ட குணத்தை கடைசியாக அழித்தது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆண்டுவந்த காலமே ஆகும்.

---

# 47. சக்தியும்-மஹிஷாசுரவதமும்.

நரமாமிசம் உண்ணும் குணத்தை அழித்ததற்கு ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தம்பமாகவோ, அல்லது சிலையாகவோ செய்யலாம். ஆனால் அச்சமயம், திராவிடச் சிற்பம் அதிக முன்னேற்றம் அடையாததின் காரணமாகவே சிற்பிக்கப்படவில்லை என்று நினைக்க இடம் இருக்கிறது. திராவிடச் சிற்பம் நன்று செழித்தோங்கிய காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களெல்லாம் தீவிரமாக

சக்தியும்-மஹிஷாசுரவதமும்.

சித்திரம் - 24.



மஹிஷாசுர ஜயவர்தனி.

சிற்பிக்கப்பட்டே இருக்கின்றன. உதாரணமாக, மஹிஷாசுரவதத்திற்குக் காரணமாக இருந்த 'மஹிஷா சுரமர்தனி' என்ற சிலையை, மகிஷாசுரன் என்பதாக ஒரு அசுரன் இருந்ததாகவும், அவன் மக்களுக்கு ஹிம்சை செய்து வந்ததாகவும், அவனோடு தேவி சண்டை போட்டு இறுதியில் ஒன்பதாம் நாள் கொன்ருள் என்றும், வர்ணிக்கப்படுகிறது. **ஆயினும் இதன் தாத்பர்யம் முற்றிலும் வேருனதே. இந்த மகிஷாசுரவதம் நடைபெற்றது மைசூர் பிராந்தியத்திலேயே ஆகும்.**

மைசூர் என்று அந்நாட்டுக்குப் பெயர் வந்ததின் காரணம் மஹிஷம் என்ற ஒருவிதமான எருமை அந் நாட்டின் காடுகளில் பிரத்யேகமாக உற்பத்தி ஆனதே. அந்நாட்டிலுள்ள காட்டு மஹிஷங்கள் அதிக சக்தி வாய்ந்தவையே. அவைகள் எப்பொழுதும் காட்டிலேயே வசிக்கும். அவைகள் நாட்டுக்கு வருவது வழக்கம் அல்ல. ஆயினும் ஒருகாலம் மைசூர் பிராந்தியத்தில் பஞ்சம் ஏற்பட்டபொழுது, காட்டுமஹிஷங்கள் தங்களுக் குக்காட்டில் இரைஅகப்படாமையால் நாட்டிற்கு கூட்டம் கூட்டமாக வந்து, ராகி, சோளம், நெல், முதலான பயிர்களை அழிக்க ஆரம்பித்துவிட்டன. இதைக் கண்டு பயந்து, ஜனங்கள் அரசனிடம் முறையிட்டதின் பயனுக அரசன் தன் பரிவாரங்களோடு வேட்டைக்குச் சென்று, ஒன்பது நாள் இடைவிடாது போரிட்டதின் பேரில், அந்த மஹிஷக்கூட்டங்களில் சில இறந்தும்,

சக்தியும் - மஹிஷாசுரவதமும்.

மற்றவைகள் காட்டுக்குத் துரத்தி அடிக்கப்பட்டும், நாட்டுக்கு சுபீட்சம் உண்டாக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தை சிற்பித்ததே ''மஹிஷாசுரவதம்'' எனப்படுகிறது. இவ்வெற்றியை உண்டாக்கிய சக்திக்கு 'மஹிஷாசுரமர்தனி' என பெயரிடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை இந்நாளும் சிறப்பாக மைசூர் அரண்மனையில் பாவ ரூபமாகக் காட்டப்படுகிறது.

சக்தியும்—சரஸ்வதியும்.

மஹிஷாசுரவதத்தில் உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்களையே ஸ்திரீ ரூபமுள்ள சரஸ்வதி எனப்படுகிறது. அதனாலேயே நவராத்திரி என்று சொல்லப்பட்ட ஒன்பதுநாளும், போரில் உபயோகப்படும் அஸ்திர சஸ்திரங்களையும், வாகனங்களையும் மற்றும் எல்லாவிதமான சுபீட்சம் உண்டாக்குவதற்கு உதவியவைகளை, ஒரு காட்சியாக காண்பிக்கப்பட்டு, கடைசி தினம் ஸரஸ்வதி பூஜை அன்று அவைகளுக்கெல்லாம் பூஜை நடைபெறுகிறது. இந்தப் போரில் தோற்று ஓடியவை மஹிஷங்களேயாயினும், சிற்பாலங்காரத்தின்படி அவைகளுடைய கோரமான குணாதிசயங்களை ஒரு அசுரன் என்றும், அவனுக்கு மஹிஷத்தலை உண்டென்றும், கற்பனை செய்ததே ஆகும். வெற்றிபெற்ற குணமாகிய சக்திக்கு சிம்மமே வாகனமாக கருதப்படுவதால், தேவியை சிம்மத்தின் பேரிலே வீற்றிருப்பதாகக் காட்டப்படுகிறது.

மதமும்—சிற்பமும்.

சிற்பம் என்பது ஒரு தனிப்பட்ட கலையே. இந்தச் சிற்பத்தை இதுகாலம் மதவிஷயங்களோடு மிதமிஞ்சி உபயோகித்ததால் சிற்பக்கலையும், ஹிந்து மதமும், இரண்டுமே தங்கள் தங்கள் அழிவிற்கு வழிகோலின. சிற்பிக்கப்பட்ட சிலைகளெல்லாம் தெய்வம் என்று நினைப்பதால் உண்மையான தெய்வம் நம்மை விட்டு விலகியது. இதே காரணத்தாலே சிற்பக்கலை தற்காலம் க்ஷீணதிசையை அடைந்திருக்கிறது. அதனுல் இந்திய சிற்பிகளின் வாழ்வு குறைவுபட்டும், மற்றும் பலர் அறியாமையால் ரவி வர்மா படங்களைப்போலவும், சினிமா நடிகைகளைப் போலவும், ஆபாசமான சிலைகளை, ஆலயங்களில் உள்ள கோபுரங்களில் சிற்பிப்பதைக் காணலாம்.

---

## 48. நாட்டியமும் - சிற்பமும்.

நாட்டியமும், சிற்பமும் ஒன்றுக்கொன்று இணைவுபட்ட கலைகளே ஆகும். நம் நாட்டுச் சிற்பங்கள் சிவபெருமானின் சக்தியில் ஏற்பட்ட பலவிதமான குணங்களையே சிற்பித்ததாகும். நாட்டியமோ அவ்விதமான குணங்களை, பாவரூபமாக எடுத்துக்காட்டுவதே ஆகும். ஆகையால் நாட்டியக்கலை சிற்பக்கலைக்கு மிகவும் முக்கியமானது. நம் நாட்டியக்கலை நாளுக்கு நாள் முன்னேறுவதை நாம் பார்க்கிறோம். ஆயினும் சிற்பக்கலை அதற்கு

மாருக க்ஷீணித்துக்கொண்டே போகிறது. திராவிடச் சிற்பத்தின் அடிப்படையான கொள்கை ஈசுவரத்தன்மையான நல்ல குணங்களை அச்சிலைகளுள் பொருத்திவைக்கவேண்டி யிருக்க, தற்காலம் ஆபாசமான காதல் உணர்ச்சியை உண்டு பண்ணும்படியான சிலைகளே நம் ஆலயங்களில் சிற்பிக்கப் படுகின்றன. இதனால் நம் மக்களுக்கு எவ்வளவு போற்றத் தகாத, நமது சிற்பத்தின் தத்துவத்தை உணராத மனப் பான்மை ஏற்பட்டு இருக்கிறது என்பதை இவை சுட்டிக் காட்டுகின்றன.

சிற்பமும்—சுதந்திரமும்.

நாட்டியக் கலைக்கு ஏற்பட்ட கௌரவம் சிற்பக் கலைக்கும் சிறிதுகாலத்தில் ஏற்பட்டு மேன்மைஅடையும் என்ற நம்பிக்கையின்பேரிலே இவ்வியாசம் எழுதப் பட்டுள்ளது. இந்த முன்னேற்றத்தில் பெண்மணிகள் முக்கியஸ்தானம் வகிப்பார்கள் என்று நினைக்க இடம் இருக்கிறது. தற்காலம் நம் நாட்டில் நாட்டியக்கலையில் தேர்ச்சி பெற்றுள்ளவர்களில் பெரும்பாலோர் பெண் மணிகளே ஆவர். அவர்கள் வருங்காலத்தில் சிற்பக் கலையிலும், சித்திரக்கலையிலும் சிரத்தை எடுத்துக் கொண்டார்களாகில், அவர்கள் பொழுதுபோக்காக சிலைகள் நிர்மாணிப்பதையும் தவிர, தக்க அளவிற்கு வரும்படியும் தேடிக்கொண்டு சுகவாழ்வு நடத்த ஏது வாகும். நம் நாட்டில் சித்திர கலாசாலைகள் பல உள. அவைகள் சென்ற ஆங்கில சர்க்காரால் ஏற்பட்டவை ஆன படியால் ஆங்கில சிற்ப-சித்திர அலங்காரங்களையே அக் கலாசாலைகளில் முதன்மையாகக் கற்பிக்கப்படுகின்றன.

இதன் காரணமாகவே தற்காலத்து ஆபாசமான நவநாகரீகம் என்று சொல்லப்பட்ட வெளிநாட்டு சிற்ப சித்திரங்களையும், காப்பி அடிப்பதே நம் நாட்டில் ஒரு பெருமையாகக் கோரப்படுகிறது. இச்செயல் நாம் சுதந்திரம் பெற்றும், அடிமைத்தளத்திலிருந்து சற்றும் விலகவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. நம்நாட்டு சிற்பங்களும், அதை நிர்மாணம் செய்யும் முறையும், உலகத்திற்கே வழிகாட்டியாக, ஒருவரும் மனதில்கூட நினைக்க முடியாத, "குணத்தை" ஆதாரமாகக் கொண்டுள்ள இந்த மகத்தான கலையின் பெருமையை அறிந்து, பயின்று, உணர்ந்து, நம் மக்களும், சர்க்காரும், உலகத்திற்கே வழி காட்டும் நாளே, நாம் முழு சுதந்திரம் பெற்ற நந்நாளாகும்.

---

## 49. திராவிடச் சிற்பாலங்கார - நிர்ணயம்.

சிற்பம் என்ற பதத்திற்கு சிலை நிர்மாணம் செய்வது என்றே தாத்பர்யம். சிலை நிர்மாணம் செய்யும் விதம் பலவிடங்களில் பலவிதமாகக் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் சிலை நிர்மாணம் செய்ய கற்றுக்கொள்ளும் சிறுவர், சிறுமிகள் ஒரு காயைப்போலவோ, ஒரு மிருகத்தைப் போலவோ, அல்லது மனிதனைப் போலவோ, தத்ரூபமாக கண்ணால் பார்க்கப்பட்டவையையே சிற்பிக்கக்கற்றுக்கொள்கின்றனர். இவ்விதம் சிற்பிக்கப்படும் சிலைகளையே சிலாக்கியம் என்று கருதினர் மேல்

நாட்டார். இவ்விதமான சிலைகளை தற்காலம் யந்திரங்கள் மூலமாகவும், புகைப்படங்களின் மூலமாகவும், மனிதனின் மூளையே தேவை இன்றி, தயாரிக்கக்கூடும் ஆகையால், அவைகளை சிறந்ததெனு ஏற்றுக்கொள்ள இடந்தரவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் சில நாட்டார் வேறு வழி அறியாது, ஆபாசமான மனோதர்மச் சிற்பங்கள் என்று உண்டுபண்ணி தங்களையே ஏமாற்றிக்கொள்வதுமன்றி உலகத்தையே அறியாமையில் ஆழ்த்துகின்றனர்.

சிற்பம் என்றால், எந்த ஒரு நிர்மாணிக்கப்பட்ட சிலையும், அதனுள் ஆலமரத்து வித்துப்போல், அதனுள் அடங்கிய ஒரு ரகஸ்யத்தை ஒரு சிறு புத்தகம்போல் வெளிப்படுத்திக் காட்டவேண்டும். அவ்விதமான சிலைகளே சிறந்ததெனக் கருதலாம். இவ்விதமான சிறந்த சிலைகளை உண்டாக்கிய நாடு நம் பாரததேசமே. மேல் நாட்டார் மேலாக பார்க்கக்கூடிய எலும்பையும், சதையையும் கூடிய ஜீவராசிகளையும், மரம் செடிகளையும், பார்த்தபடியே சிற்பித்து முன்னேற்றமின்றித் தவிக்கின்றனர். அவர்களுள் சிலர், நம்நாட்டுச் சிற்பங்களின் உணர்ச்சியை, அதன் தத்துவம் அறியாது, சிறிதளவு அச்சிற்பங்களில் உண்டுபண்ணி அதன்மூலம் மகிழ்ச்சி அடைகின்றனர்.

குணமும்—சிற்பக்கலையும்.

மேல்நாட்டு சிற்பத்திற்கும், நம்நாட்டு சிற்பத்திற்கும் உண்டான வேற்றுமை மிகப் பெரியது. மேல் நாட்டு சிற்பங்கள் எல்லாம் அடிப்படையாக மேற்பார்வைக்குகந்தவாறு சிற்பிக்கப்பட, நம் நாட்டு சிற்பங்

கள் அப்பொருளில் அடங்கிய குணத்தை விவரித்துக் காட்டும் முறையில் ஈடுபட்டிருக்கின்றன. ஒரு பொருளின் அடிப்படையான மேல் தோற்றத்தை சிற்பிப்பது வெகு சுலபம். ஆனால் அப்பொருளில் அடங்கியுள்ள நல்ல குணங்களை எப்படி சிற்பிக்க முடியும்? குணமே நம் பூலோகத்தில் மனிதவர்க்கத்தின் வளர்ச்சிக்கும், அறிவிற்கும், ஞானத்திற்கும், ஆதாரமாகிறது. இக்குணமே மனிதவர்க்கத்திடமும், ஜீவராசிகளிடமும் குடிகொண்டு இருக்கிறது. இவ்விதமான குணங்களைச் சிற்பிக்கவேண்டுமானால் ஒரு பொருளில் அடங்கிய நல்ல-கெட்ட குணாதிசயங்களைத் தெரிந்துகொள்வதற்கு வேதாந்த விசாரமும், நல்ல அறிவும் வேண்டும். அக்குணங்களைச் சிற்பிப்பதற்கு பலவிதமான முத்திரைகள் தேவை. இம்முத்திரைகளின் விபரம் பல நம் நாட்டு சிற்பாலங்கார புத்தகங்களில் காணலாம். மூன்றுவதாக சிலைகள் நிற்கும் பாணியும், அவைகளை அலங்கரிக்கும் விதமும், நம் நாட்டியக்கலையில் அடங்கியுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக சிற்பிக்கப்படும் ஒவ்வொரு சிலைக்கும் ஒரு தெய்வீக குணம் உள்ள தோற்றம் கொடுபட வேண்டும். இதைக் கொடுப்பதே சிற்பிகளின் மனச்சுத்தத்தையும், ஞானேதயத்தையும், கைத்திறமையையும், மனேதர்மத்தையும் பொருத்து இருக்கிறது.

## சிற்பங்களும்—ஈசுவரத்தன்மையும்.

மேல்நாட்டு சிற்பிகள் கைத்திறமையையும், கண்ணால் பார்ப்பதை சித்தரிக்கும் திறமையையும்

மாத்திரம் கற்று இருந்தால் போதுமானது. நம்நாட்டுச் சிற்பிகள் பெயர் எடுக்கவேண்டுமானுல், மேலே கூறப் பட்ட நான்கு அறிவும் கூடினுல்தான் பெயர் எடுக்க முடியும். இந்நான்குவிதப் பயிற்சியில் முதல் மூன்றும் நாளடைவில் கற்றுக்கொள்ளமுடியும். ஆனுல் நான்காவதே இவைகளுள் முக்கியமானது. இந்தியச் சிற்பங்களின் அடிப்படையான கொள்கை மேல்நாட்டு சிற்பங்களைப்போல் அல்லாமல் எல்லாவற்றையும், ஈசுவரத்தன்மையான குணம் உள்ளதாக மாற்றுவதே ஆகும். உதாரணமாக பல இடங்களில், நிர்மாணித் திருக்கும் சிற்பங்களில் சிவன், பார்வதியை தன் மடியில் வைத்துக்கொண்டு இருப்பதாக சிற்பிக்கப்பட்டிருப் பதைக் காணலாம். இந்தச் சிலையை மேல்நாட்டு சிற்பாலங்காரத்தை ஒட்டி சிற்பிப்போமானுல் அது எவ்வளவு ஆபாசமாகவும், சிற்றின்ப உணர்ச்சியை எழுப்பக்கூடுமானதாகவும் இருக்கும்? அதற்கு மாருக அந்தச் சிலை சர்வ சாதாரணமாகவும், மனதிற்கு ஒரு அலாதி தெய்வீகமான உயர்ந்த குணத்தைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை அறியலாம். இந்த தெய்வீகமான குணத்தின் உணர்ச்சியைக் கொண்டு எவ்விதம் அச்சிலையை நிர்மாணிக்க வேண்டும் என்று அறிந்துகொள்ள, சிறு சிற்பிகள் பிரயாசைப்பட்டு அச்சிலைகளைப் போலவே நிர்மாணித்து, பழக்கிக் கொள்வதால் பல உண்மைகள் அதிலிருந்து தெரியவரும்.

## திராவிடச் சிற்பாலங்கார - நிர்ணயம்.

### சிற்பங்களும்—அதன் நிர்மாணமும்

இச்சிலைகள் நிர்மாணிப்பதில் முதல் முதலாக அச்சிலைகளுள் அடங்கியுள்ள குணாதிசயங்களை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். இரண்டாவதாக அதற்கு வேண்டிய அவயவங்களின் முத்திரைகளும், நிற்கும் பாணியும், கூட்டுச் சிற்பமாக இருந்தால், அதன் திராசு முனை போன்ற அளவும், நிர்ணயிககப்படவேண்டும். கடைசியாக செய்யவேண்டியது, அதற்கு ஈசுவரத் தன்மையான குணத்தைக் கொடுப்பதே. இவ்விதம் ஈசுவரத்தன்மையான குணத்தைக் கொடுக்கும்பொழுது அச்சிலைகளுள் உபயோகப்படும் ஆடைகள், ஆபரணங்கள், அலங்கரிக்கப்படும் இடம், மரம், செடிகள் இவைகளை ஒருவித நூதனமான நம் நாட்டில் பார்க்கமுடியாத மனோதர்மத்தைக்கொண்ட சித்திரங்களாக நிர்மாணிக்கப் படவேண்டும். உதாரணமாக, ஒரு ஆடையின் மேல் தோற்றத்தை சிற்பிப்போமானால் அது நம் நாட்டில் உள்ள ஆசாபாசங்களையே எடுத்துக்காட்டும். அப்பொழுது அதற்கு ஈசுவரத்தன்மையான குணம் குறைவுபடுகிறது. லக்ஷ்மி கடாக்ஷம் பெற்ற மனித உருவத்தை ஆதாரமாகக்கொண்டு, சிலைகள் சேர்க்கப்படும் விதமும், அவைகள் நிற்கும்பாணியும், அவைகளுடைய அவயவங்களும், பின்னால் முன்னால் ஏற்படுத்தப்படும், இலைகளும், மரங்களும், செடிகளும் நம் நாட்டில் காண்பது போல் சிற்பிக்கப்படாமல், நூதனமான முறையில் அவரவர் மூளைக்கெட்டியவாறு சித்திரங்களாக வரைந்து, சிற்பிக்கப்பட்டு இருக்கவேண்டும். இதுவே சிறந்த சிற்பிகளின்

மனோதர்மத்தையும், தத்துவத்தையும், அறிவையும் சுட்டிக் காட்டுகிறது.

சிற்பமும்—நடராஜர் சிலையும்.

சிற்பங்களுக்கெல்லாம் சிறந்தது "நடராஜர்" சிலையே அதில் எல்லா தத்துவமும் அடங்கி உள்ளது. கடவுளின் மனோநிலையும், சிற்பியின் மனோதர்மமும், ரகஸ்யம் என்ற மகத்தான உண்மையைத் தெரிவித்தும், கற்பனை செய்யப்பட்ட உலகத்திலேயே மேலான சிற்பம் இது ஒன்றே. இச்சிலையில் 'செஞ்சடை ஆட' என்ற பதத்தை எப்படி சிற்பித்து இருக்கிறார்கள் என்பதை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். சாதாரணமாக, செஞ்சடையை மேல்நாட்டு சிற்பாலங்காரத்தின் படி சிற்பிப்போமானால், அது மிகவும் ஆபாசமாக இருக்கும். தலையில் மயிரும் சிற்சில இடங்களில் சிவந்த சடையும், பார்ப்பதற்கு அழகைக்கொடுக்காது. மிகவும் காணத்தகாததாகவும் இருக்கும்.. ஆனால் அச் செஞ்சடையை தெய்வீக ரூபமாக சிற்பித்து இருப்பதை ஒவ்வொரு சிற்பியும் நன்கு கற்றுக்கொள்ளவேண்டும். நடராஜரின் செஞ்சடை ஒரு தெய்வீகமான கொடிபோலவே தயாரிக்கப்பட்டு, அதனுள் சடையை ஒரு புஷ்பம் போல் எடுத்துக்காட்டி, அவைகள் ஒடிந்துபோகாதபடி பின்னால் இருக்கும் திருவாசியுடன் சேர்க்கப்பட்டு இருப்பதைக் காணலாம். நடனமாடும் பாணியும், திராசுமுனைபோன்று நிற்கும் அளவும், கற்கவேண்டியவை ஆகும்.

சிற்பிப்போமானல் அச்சிலேக்கு நவநாகரீக ஆடைகள் கொடுக்கப்படலாம். ஆயினும், இரண்டிலும் தெய்வீக உணர்ச்சி, பார்வதி என்ற சிலேயில் அதிகமாகவும், சினிமா நடிகர் என்ற சிலேக்குக் கொஞ்சம் குறைவாகவும் சிற்பித்தல் வேண்டும். அதாவது பார்வதி என்ற சிலேக்கு ஆடை என்பதையே ஒரு ஆடையாகக் காண்பிக்காமல், அவ்வாடைகளில் ஏற்படும் மடிப்புகளே பலவித மான ஆபரணங்களேப் போல் நவீன முறையில் சிற்பிக்கப்படவேண்டும். ஆனல், சினிமா நடிகர் என்ற சிலேக்குஆடையைஆடையாகவே காண்பித்து மடிப்புகள் ஏற்படும் இடங்களில் மாத்திரம், அவைகளே சில சில ஆபரணங்கள்போல் சிற்பித்துக் காட்டவேண்டும். இவ்வித்யாசங்களோடு சிற்பிப்போமாகில் பலவிதமான குணங்களேக்கொண்ட சிலேகளுக்கு அதனதன் ஈசுவரத் தன்மைக்குகந்தவாறு, தெய்வத்தை தெய்வமாகவும், மனிதனே தெய்வ உருக்கொண்ட மனிதனுகவும் சிற்பித்துக்காட்ட இடம் கொடுக்கும். இதை ஒவ்வொரு சிறு சிற்பியும் கவனத்தோடு எந்தெந்த சிலேகளுக்கு எப்படி எப்படி அலங்கரித்து இருக்கிருர்கள் என்பதை நுட்பமாகப் பார்த்து, பழகிக்கொள்ள வேண்டும்.

**சிலேகளும்—அவைகளின் இருப்பிடமும்.**

சிலேகளே நிர்மாணிக்கும்பொழுது அச்சிலேகளின் உயரமும், அதனுள் ஏற்படும் சித்திர துணுக்குகளும், அச்சிலேகள் வைக்கப்படும் இடத்தை ஒத்தே இருக்க வேண்டும். அதாவது ஒரு சிலே, வசிக்கும் அறைக்

குள்ளேயே வைக்கப்படுமாயின் அது சிறியதாகவும், வேலைப்பாடுகள் வெகு நுட்பமாகவும் இருத்தல் வேண்டும். அதே சிலை ஒரு பெரிய கட்டிடத்தின்மேல் வைக்கப்படுமாயின் அவை பெரியதாகவும், வேலைப்பாடு கள் சிறிதளவு தீர்க்கமாகவும் சிற்பிக்கப்படவேண்டும். அதே சிலைகள் ஒரு கோபுரத்தின் உச்சியிலோ, அல் லது மலையின் உச்சியிலோ நிர்மாணிக்கப்பட்டால் அவை மிகப் பெரியதாகவும், அவைகளின் வேலைப்பாடு கள் வெகு தீர்க்கமாகவும், கூட்டாகவும் சிற்பிக்கப்பட வேண்டும். இம்முறைகளைக் கையாண்டு சிறுவர்-சிறுமிகள் நன்கு பயிலும்பட்சத்தில் நல்ல பெயர் எடுக்கலாம். அவர்கள் தெய்வம் என்றே போற்றப்படுவர். இவ்வகைப் பயிற்சி ஏற்படும் பட்சத்தில், சிற்பிகள் தற்காலத்திற்கு உகந்தவாறு சிற்பக்கலைக்கு ஒரு திருப்பம் கொடுக்கவும் ஏதுவாகும்.


---

## 50. சந்யாச ஆச்ரமத்தில் சிவன் - பார்வதி.

சிவ—மூர்த்தி எனப்பட்ட சிலையானது சூர்ய மண்டலத்தினுள் அதன் சிரசான சூர்யனுக்கு மேல் பாகத்தில் சஞ்சரிக்கும் பலகோடிவிதமான மகா சக்தி களையே சிற்பித்ததாகும். இந்த அபாரமான சக்தியை விவரிக்குங்கால், இவர் சாந்தரும், தனக்குமேல்

சந்யாச ஆச்ரமத்தில் சிவன் - பார்வதி.

சித்திரம் - 25.



சந்யாச ஆச்ரமத்தில்
சிவன் — பார்வதி.

சந்யாச ஆச்ரமத்தில் சிவன் - பார்வதி.

நாயகம் - இல்லாதவராதலால் ஸர்வகர்த்தாவாயும், மகா பிரளயத்தில் சக்தி ரூபமாய் லயித்து இருக்கும் நாச மிலியாயும், ஞான சக்தியால் சகலத்தையும் அறியும் சர்வஞ்ஞராயும்; சுயம்பிரகாசராயும்; அசலராயும்; அமேத ராயும்; சுபாவ சித்திரராயும்; ஒப்பிலியாயும்; ஞான, க்ரியா, சக்தி சரீரராயும்; நிஷ்கலராயும் இருப்பர். இவரே பிருதிவியில் சர்வராயும்; அப்புவியில் பவராயும்; தீயில் உருத்திரர் ஆயும்; காற்றில் உக்கிரராயும்; ஆகாசத்தில் வீமராயும்; சூர்ய மண்டலத்து மஹா தேவராயும்; சந்திர மண்டலத்தில் ஈசானராயும்; ஆன்மா வில் பசுபதியாயும் அமர்பவர். இவர் கருணாமூர்த்தி ஆகையால் இடபாரூடர் என திருநாமம் படைத்தவர். இவர் அமிர்த மதனகாலத்தில் பிறந்த விஷத்தை உண்டதால் நீலகண்டர் என திருநாமம் பெற்றவர். இவரே இப்பூலோகத் தில் கங்கா ரூபமான பார்வதியின் அம்சத்தை ஜடையில் அணிந்து கங்காதரர் எனப் பெயர் பெற்றவர். இந்தச் சிலைக்கு கங்கா விசர்ஜனமூர்த்தி என்றும், சந்திரசேகரர் என்றும் பல நாமங்கள் உண்டு.

மனிதனும்—ஆச்ரமங்களும்.

மனிதன் தன் கிரஹஸ்தாச்ரமத்தில் நாட்டுக்காக வும், உலகத்திற்காகவும், மக்களுக்காகவும், சுற்றத்தாருக் காகவும், கடவுளுக்காகவும், தன்குடும்பத்திற்காகவும், தன் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுகிறுன். வானப் பிரஸ்த ஆச்ரமத்தில், தனக்காகவும், மக்களுக்காகவும், கடவுளுக்காகவுமே உழைக்க, சன்யாச ஆச்ரமத்தில்

எல்லாவற்றையும் துறந்து, தனக்காகவும், தான் கடவுள் தன்மை அடையவேண்டும் என்ற உணர்ச்சியோடும், தனக்கும், கடவுளுக்குமே ஒரு பாந்தவ்யத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறான். இதுகாலம் அரும்பாடுபட்டு வளர்த்த குணமும், மனமுமே அவனுக்கு பெரும் துணையாக நின்றது. மனிதன் இறப்பது நிச்சயம் என்பதை உணருகிறான். மறுபடியும், பிறக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை மனமே நிச்சயிக்கக் கூடியதாகையால், பரிபக்குவமானவன் மனதை ஒருமுகமாக அடக்கி, அந்திய காலத்தில் விடுதலைக்காக யோகநிஷ்டையில் ஈடுபட்டும், கடவுளினிடையே சிவமயம் ஆகி, நம்மை ஆளும் சக்தியான ராஜப்பதவியை அடைகிறான்.

குருவும் – சீடையும்.

வானப்ரஸ்த ஆச்ரமத்தில் காளி உருக்கொண்ட இல்லாளே சன்யாசஆச்ரமத்தில் குருவாகிய சிவனுக்குச் சீடையாகிறாள். வானப்ரஸ்த ஆச்ரமத்தில் தானே லோகமாதா என்ற மனப்பான்மை கொண்ட கிரஹலக்ஷ்மி சிவன் பெரியதா, சக்தி பெரியதா என்று வாதாடி இறுதியில் நடராஜ உருக்கொண்ட கிரஹஸ்தனின் அபார சக்திகளைக்கண்டு அஞ்சி, தன் சக்திகளெல்லாம் மறைமுகமானதே என்றும், அச்சக்தியை எடுத்துக் காட்ட சிவம் இல்லையேல் நடைபெறாது என்பதை உணர்ந்தும், சரணமடைகிறாள். இந்த சர்ச்சையை ஒட்டிய நாட்டிய அலங்காரங்கள் நம் நாட்டில் பல உள. அவளே சன்யாச ஆச்ரமத்தில் பர்த்தா விடுதலைக்காக யோக

நிஷ்டையில் இருக்கும் பொழுது. சிடையாக இருந்து, அப் புண்ணிய புருடன் விடுதலை அடைவதற்கு உகந்த சூழ் நிலையை ஏற்படுத்தியும், தன் பர்த்தாவே தெய்வம் என்ற உணர்ச்சியோடும், விடுதலைஅடையும் முறைகளைச் செவ்வனே பயின்றும், தானும் விடுதலை அடைகிருள். பர்வதகுமாரி-என்ற பார்வதியின் சிலையானது, சிவனுள் அடங்கிய மகாசக்திகளில், ஈசுவரத்தன்மையை உடையதான, மனிதனுல் உருவாக்கப் பட்ட சக்தியையே குறிக்கிறது.

---

# 51 மாயையும் - மனிதனும்.

நாம் வசிக்கும் உலகமே ஒரு மாயை என்றும், அம் மாயையை விட்டு விலகினுல்தான், விடுதலை அடைய முடியுமென்றும் சொல்வதுண்டு. மாயை என்ன என்பது பலருக்கு ஒரு புதிராகவே இருக்கிறது. பலர் நாம் வசிக்கும் உலகமே மாயஉலகம் என்றும், அதில் காணப்படும் ஒவ்வொரு பொருளும், அனித்ய மானது என்றும் கருதுகின்றனர். மற்றும் சிலர், நம் பூமியில் காணப்படுவதெல்லாம் மாயை என்றும், அவை வேறு வேறு தகாத பொருள்களாகக் காணப்படுகின்றன என்றும் கருதுகின்றனர். இந்த அபிப்பிராயங்களெல் லாம் பலருடைய சொந்த வேதாந்தத்தை ஒட்டிய கருத்துக்களே ஆகும். இதன் உண்மையை அறிய வேண்டுமானுல், அது விஞ்ஞான ரீதியாகவே நடை பெறவேண்டும். விஞ்ஞானரீதியாகப் பார்ப்போமானுல்,

இவ்வாதத்தில் இல்லை என்று சாதிப்பது மாயை என்று சொல்வதற்கில்லை. ஆனால், உண்டு என்பதற்கு ஒரு விசித்திர, விநோதமான, ஆசையையும், பாசத்தையும், அழகையும் கொடுத்து, மயக்கும் குணத்தைக் கொடுப்பதே மாயை எனலாம்.

மாயையும் – சிற்றின்ப உணர்ச்சியும்.

நாம் சூர்யனிடமிருந்து அடைவது சக்தியே. அந்தச் சக்தி, சக்தியாகவே கிடைத்துவிட்டால் அதில் மாயைக்கு இடம் இல்லை. அந்த அபாரசக்தி நேராகப் பூமியில் விழுந்தால் எல்லாம் பொசுங்கிப் போய்விடும். அச் சக்தியை சாந்தப்படுத்தி மாற்றிய வெளிச்சத்தை மனிதனும், ஜீவப்பிராணிகளும், மரமும், செடியும், கண்டு ஆச்சர்யப்பட்டு, அதன்பால் பக்தியும்கொள்ளுகின்றன. அச்சக்தியைக்கொண்டு ஆசாபாசங்களை உண்டு பண்ணி அமைத்ததே மாயை ஆகிறது. இவ்விதமாக மாற்றுவது நம் பூமியில் ஏற்பட்ட பஞ்ச பூதங்களில் மூன்ருன நீர், நெருப்பு, காற்று என்பவையே ஆகும். இம் மூன்றில் முக்கியமானது காற்றே. அதற்கு மாய சுரூபி என்ற நாமமும் உண்டு. கடவுளின் பிரதிபிம்பமாக இப்பூமியில் உதித்த மனிதன், மாய சுரூபியான காற்றின் ஆதிக்கத்தில் வளருவதால், அவன் தாய் வயிற்றில் சிசுவாக இருக்கும்பொழுதே ஆசாபாசங்களுக்கு அடிமை ஆகிருன். அக்குழந்தை தாய் வயிற்றில் ஒரு பிண்டமாக இருந்து, அக்குழந்தைக்கு ஜீவாத்மா

வாக உயிர் உண்டான பொழுதே புருடன் பெண்சாதி என்ற உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. இந்த உணர்ச்சி அக்குழந்தையின் ஆயுள் முழுவதும் நடைபெறுகிறது. இந்நிலையை உணராதவன் பூமியைவிட்டு அகலாமல் மறுபடியும், மறுபடியும் பிறக்கிருன். ஆனல் எவனெருவன் தாம் மாயையில் சிக்கிக்கொண்டோம் என்பதை உணர்ந்து மெதுவாக அவ்வலையை நீக்கிக்கொண்டு வெளிவருகிருனே அவனுக்கு மறு ஜன்மம் கிடையாது.

மாயையும் – சங்கிலி வளர்ச்சியும்.

இப்பூமியில் மாயசுரூபியான காற்றினல் ஏற்படும் குணம் புருடன் பெண்சாதி என்ற ஒரு அன்யோன்யத்தை உண்டாக்கி, ஒரு சங்கிலி போலொத்த வளர்ச்சியை (Chain reaction) உண்டாக்குகிறது. இம் மாறுதலில் ஈடுபட்ட தெய்வத்தின் பிரதிபிம்பமான மனித வர்க்கம் ஒரு நாடகத்தில் நடிப்பவர்கள் பெண்மணி புருடன் என்று வேஷம் போட்டுக்கொள்வதுபோல் அமைக்கப்பட்டவர்களே ஆகையால் அவர்களுள் பெண்சாதி புருடனுகவும், புருடன் பெண் மணியாகவும் மாற இடம் இருக்கிறது. ஆயினும், பெண்மணி வேஷம் போட்டுக்கொண்டவர்கள் பராசக்தியின் குணங்களையே பிரதிபலிக்கிருர்கள். புருட ரூபம் கொண்டவர்கள் சிவனின் குணங்களையே கொண்டவராவர்.

இதன்படி, சிவனுக்கு-பார்வதி, அதாவது புருடனுக்கு-பெண்மணி, இப்பூமியில் மாய சுரூபியான

இல்லாமலேபோய்விடும். மனிதவர்க்கமும்,ஜீவப்பிராணிகளும் பூமியில் பிறக்கவேண்டுமானல், அந்த அந்த இனத்திற்குகந்தவாறு அழகையும், பலவித விகாரங்களேயும், தூண்டுதலேயும் கொடுத்தாலொழிய பிறவிக்கு இடம் இராது. ஆதலால், மாயை இந்த உலகத்தில் ஆதிக்கம் செய்யவேண்டியது அவசியம்ஆகிறது. ஆயினும் மாயையை ஒரு கருவியாகக்கொண்டு அதற்கு அடிமை ஆகலாகாது. மாயையைவிட்டு விலகுகிறவனே ஞானியாகவும், தெய்வமாகவும் மாறுகிருன். நமது பூமியைச் சார்ந்த தூல சரீரத்தைக் கொண்ட, மாயையை வென்ற தெய்வமான "ஜீவாத்மா" பரமாத்மாவாகமாறி சூர்யனே அடைகிறது. இக்காலமே கடவுள் திருவிளேயாடும் நேரம் எனப்படுகிறது.

நமது பூமியில் மாயை இல்லேயேல் பிறப்பதற்கு இடம் இல்லே. பிறப்பில்லேயேல் ஜீவாத்மா வசிக்க இடம் இல்லே. ஜீவாத்மா நம் பூமியில் வசிக்காத வரையில், தாவர வஸ்துக்களுக்கும், ஜீவப்பிராணிகளுக்கும், மனிதவர்க்கத்திற்கும், மாறும்படியான ஒரு குணத்தையோ, அறிவையோ, அல்லது பகுத்தறிவுச் சக்தியையோ, மறுபிறப்பையோ கொடுக்கும்படியான ஒரு சக்தி கொடுபடுவதில்லே. ஜீவாத்மா நம் பூமியில் வசிக்க இடம் இல்லாதவரையில் "ஜீவாத்ம-சக்தி" சூர்யனிடமிருந்து வெளிவரவேண்டிய அவசியமும் இல்லே. இவ்விதம், ஒரு கடியாரத்திலுள்ள பல பல் சக்கரங்கள்போல் இவைகள் வேலேசெய்கின்றன. இவைகளின் மூல சக்கரமான ஜீவாத்ம சக்தி வெளி

வராதபொழுது, நமது பூமியில் எல்லா உற்பத்தியும் நின்றுவிடுகிறது. இந்த நிலேயே கடவுள் உறங்கு வதற்கு ஒப்பான காலம் ஆகிறது. மனிதன் உறங்கும் காலம் மூளே வேலேசெய்யாமல் அங்கங்களான, ஹ்ருதயம், நுரையீரல், வயிறு இம்மூன்றும் வேலேசெய்து எப்படி ஜீவனேக் காப்பாற்றுகிறதோ, அதேபோல் சூர்யனுள் பகுத்தறிவு சக்தி வேலே செய்யாதபொழுது, பூமி மற்ற கிரஹங்களேப்போல் புத்தி சக்தியை மாத்திரம் கொடுத்துக்கொண்டே சூர்யனுக்குத் தொண்டு செய்கிறது.

மனிதனும்—விக்ரகங்களும்.

மாயையைவிட்டு அகன்ற மனிதனே தெய்வம் ஆகிறன். மாயையைவிட்டு அகன்ற மனிதனுடைய குணுதிசயங்களே சிலேயாக்கியதே தெய்வங்கள் ஆகின்றன. மனிதனின் வாழ்க்கையில் எந்த எந்த பருவத்தில் மாயையைவிட்டு அகன்றவன் எவ்விதமான குணங்களே உடைத்தானவனுய் இருக்கவேண்டும், இருந்தால் சித்தன் ஆகமுடியும் என்ற கணக்கு (Standard) ஏற்படுத்தியதே திராவிடச் சிற்பத்தின் தத்துவம் ஆகும். இவ்விதம் ஒரு கணக்கு ஏற்படுத்தியதால் மனிதன் தன் வாழ்நாட்களில் தன்னுடைய குறைகளே அறிந்து, தெரிந்து, அவைகளே நீக்கிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. மேலும், அந்த அந்த குணுதிசயங்களேக்கொண்ட தெய்வங்களே விக்ரஹங்கள் மூலமாக உணரவும், மகிழவும், மனதில் தியானித்து அக்குணங்கள் தனக்கு ஏற்படவேண்டும்

என்ற ஆவலின்பேரில் வழிபடவும் ஏதுவாகிறது. அதனால் விக்ரஹங்கள் பல குணங்களை விஸ்தரித்துக் காட்டும் நவீன புத்தகங்களாகவும், அவைகளே அக்குணங் களை கொடுக்கக்கூடிய தெய்வங்களாகவும் இருக்கின்றன. இவ்விக்ரஹங்களே அறியாத மாயையில் சிக்கிய மனிதனுக்கு அறிவூட்டும் கருவியாக விளங்குகின்றன.

---

# 52. ஜீவாத்மாவும் - மறுபிறப்பும்.

ஜீவாத்மாவே சூக்ஷ்ம சக்தியைக் கொண்ட பூமியில் நடமாடும் பரந்த சூர்யசக்தி ஆகிறது. அதன் இருப் பிடமே பூமியில் தூல சரீரங்களைக்கொண்ட ஜீவப் பிராணிகளும், மனிதவர்க்கமும் ஆகும். ஸ்டோரேஜ் பாட்டரிபோல் கொடுக்கப்பட்ட ஜீவாத்மசக்தி குறைந்து போகும் பொழுது இறப்பு உண்டாகிறது. அக்காலம் ஜீவாத்மா நாதரூபமாக வெளிவருவதாக சொல்லப் படுகிறது. அதுவே காற்ருேடு கலந்து ஒளி அலை போல் தென்படுகிறது. சிலர் அபிப்பிராயப்படி ஜீவாத்மாவின் இருப்பிடமான சரீரம் அழியுமுன்பே வேறு ஒரு சரீரத்தை பிடித்துக்கொண்டு, பின்பு வெளி வருகிறது எனப்படுகிறது. இதற்கு ஆதாரம் இருப்ப தாகவே தெரியவில்லை. ஏனெனில், ஜீவாத்மா தன் இருப்பிடம் அழியும் வரையில் அதிலேயே இருக்க வேண்டியது அதன் கடமை ஆகிறது. அந்த சரீரத்தின்

முன்னேற்றத்தின் மூலமாகவேதான் பரமாத்மாவாக மாறவேண்டியது முறை ஆகும். வேறு ஒரு அபிப் பிராயத்தின்படி, ஜீவாத்மா ஒரு உடலைவிட்டவுடன் வேறு ஒருஉடலில் புகுந்துகொள்ளுகிறது என்பதாகும். இதற்கும் ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், ஒரு பூகம்பத்தின்போது ஆயிரம் ஜனங்கள் மடிகிறார்கள். அவ்விதம் மரித்த ஆயிரம் உடல்களி லிருந்து வெளிவரும் ஜீவாத்மாக்கள் குறைந்தது 24 மணி நேரத்திற்குள், பிறக்கும் ஆயிரம் குழந்தை களின் உடல்களில் சேரவேண்டும். இவ்விதம் நடை பெறுவது சாத்தியமும் இல்லை, நடக்கிறதும் இல்லை. அவர்கள் மிருகங்களாகவும், பலவித ஜந்துக்களாகப் பிறக்கவும் ஏதுவில்லை. ஏனெனில் அது முன்னேற் றத்திற்கு (evolution) முரணானது. எல்லா ஜீவன் களும் கீழ்நோக்கிச் செல்லுவதில்லை. மேல்நோக்கியே செல்லுகின்றன.

மரித்தவர்கள் பாப கர்மா செய்தவர்கள் என்று வைத்துக்கொண்டாலும், அவர்கள் மறுஜன்மத்தில், பாபிகளாகவே பிறப்பதில்லை. அவ்விதம் ஏற்படுமாயின் அழிவு என்பதற்கு அர்த்தம் இல்லாமலே போய்விடும். கெட்டவர்கள் அழிந்து, அவர்கள் கெட்டவர்களாகவே பிறப்பதால் முன்னேற்றத்திற்கே (evolution) இடம் இராது. பாபிகளும், கெட்டவர்களும், கெட்ட மனப் பான்மை உள்ளவர்களும், கெட்டவர்களாகவே பிறப்ப தில்லை. அவர்கள் பிறந்து பல கஷ்டங்களுக்கு உள்

ளாகிருர்கள். அதன்மூலம் நல்ல குணமும், மனமும் ஏற்பட்டு முன்னேற்றமடைகிருர்கள். அதனுலே பூமியில் அதிகமாக கஷ்டப்படுகிறவர்களே நல்ல குணமுடைய வர்களாக இருக்கிருர்கள். சுகப்படுகிறவர்களும், திரவிய வசதி உள்ளவர்களும், பெரும்பாலோர் கெட்ட மனப் பான்மை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். மரித்த ஒவ்வொருவரும் தம் தம் கர்மபலனுக்கு உகந்த வாறு சிலர் சீக்கிரமாகவும், சிலர் காலம் கழித்தும், மறு ஜன்மம் எடுக்க ஏதுவாகிறது. அக்காலம்வரை ஜீவாத்மா காற்றேடு கலந்து வாழவேண்டியிருக்கிறது. அது, தூல உடலோடு வாழ்ந்தே வழக்கமானபடியால், உடலைவிட்டு காற்றேடு இருக்கும்வரை சிற்சில அவஸ்தைகள் அவைகளுக்கு உருவாகின்றன. இதைச் சாந்தி செய்யவே இந்துக்கள் ஒரு குறிப்பிட்டகாலம் வரை சில சடங்குகள் செய்து ஜீவாத்மாவுக்கு தூல உருக்கொண்ட மனிதர்கள் மூலமாகக் கடமையைச் செலுத்துகின்றனர்.

**மனிதனும்—ஜீவாத்மாவும்.**

மனிதன் கடவுளால் உண்டாக்கப்பட்ட ஒரு யந்திரமே ஆகிருன். அவனுக்கு பூர்வ ஜன்மத்தில் ஏற்பட்ட கர்மங்களை ஒத்தே அவன் மனமும், குணமும் உருவாகிறது. நாம் ஒரு டைப்ரைட்டரைச் செய்கிறோம். அது டைப் மட்டும்தான் செய்ய உதவுகிறது. மற்ற வேலைகளுக்கு உபயோகப்படாது. அதுவே அதன்

குணம் ஆகிறது. அதேபோல் மனிதனுகப் பிறந்த யந்திரம், தான் சென்ற ஜன்மங்களில் சேகரித்த குணங்களைக்கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும், யந்திரத்தில் உள்ள பாகங்கள் எல்லாம் நம் பூமியிலிருந்தே உண்டாக்கப்பட்டதால் அதன் மனமும், குணமும் நமது பூமியிலுள்ள ஆசா பாசங்களையே நாடுகின்றன. மனிதனுக்கு உயிரைக்கொடுப்பது ஜீவாத்ம-சக்தியே. இது சூர்யனிடமிருந்து ஒரு மோட்டார் பாட்டரிபோல் சக்தி கொடுக்கிறது. நாம், மனித யந்திரத்தை சீராக உபயோகப்படுத்தினேமானுல் ஆயுள் காலம் நீடிக்கிறது. கெட்டமுறையில் யந்திரத்தை உபயோகப்படுத்தினல், சீக்கிரம் பாட்டரி சக்தி குறைந்துபோய் மரணம் ஏற்படுகிறது.

ஜீவாத்மா, மனித யந்திரத்தை ஓட்டும் கருவி ஆகிறது. இதற்கும், மனித யந்திரத்திற்கு ஒத்த மனம், குணம் இரண்டும் உண்டு. ஆயினும், ஜீவாத்மா சூர்யனுடைய சொந்த சக்தியே ஆகையால் எப்பொழுதும் சூர்யனுடைய கடமைகளைக் காத்து நிற்கிறது. மனித யந்திரத்தின் மனம் பூமியை நாடுகிறது. இந்த வேறுபாடில் எப்பொழுதும் ஜீவாத்மாவுக்கும், மனிதனுக்கும் போராட்டம் நடைபெறுகிறது. இப்போரில் ஜெயித்து, பகுத்தறிவு மிகுந்து உருவாகும் மனமும், குணமுமே மறுபடியும் பிறக்கவோ, அல்லது பிறப்பைத் துறந்து, தெய்வமாகவோ காரணபூதமாக இருக்கின்றன.

## ஜீவாத்மாவும் - மறுபிறப்பும்.

### கர்மமும் — மனமும்.

நல்ல கர்மமே நல்ல குணத்தை உண்டாக்குகிறது. நல்ல குணமே, நல்ல மனதை உண்டாக்குகிறது. கர்மமும், மனமும் மனிதனின் மறுபிறப்பிற்கு காரண பூதங்களாக இருக்கின்றன. கர்மம் அவனவன் வாழ்க்கை நடத்திய விதத்தையே பொறுத்து இருக்கிறது. மனமோ ஒருவன் அந்தியகாலத்தில் கொள்ளும் விருப்பத்திற்குக் காரணமாக இருக்கிறது. ஒருவன், தன் வாழ்க்கையில் சத்கர்மங்களைச் செய்து, தெய்வீக குணங்களைக்கொண்டு, அந்திய காலத்தில் விடுதலை அடைய மனம் கொண்டால், அவனுக்கு மறுபிறப்பு கிடையாது. அவன் சிவமயமே ஆகிறான். எவன் சத் கர்மங்களைச் செய்து அந்தியில் மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற மனப்பான்மையோடு உடலைத் துறக்கிறானோ, அவன் ஸ்வாமி விவேகானந்தரைப் போலவும், புத்த பகவானைப் போலவும், அவதார புருஷர்களாகப் பிறந்து, பின்பு வீடுதலை அடைகிறான். அதேபோல், விஞ்ஞானத்தில் மனம் கொண்டவர்கள், நல்ல விஞ்ஞானிகளாகவும், ஞானிகளாகவும் பிறந்து அந்தியில் சிவமயம் ஆகிறார்கள். எவனொருவன், சத் கர்மங்களைச்செய்தும், ஆசாபாசங்களுக்கு உள்ளாகியும், வாழ்க்கையை நடத்தி, அந்தியகாலத்தில் விடுதலை மனப்பான்மை கொள்கிறானோ, அவன் சுகியாகப் பிறந்து நோய்வாய்ப்பட்டு, மனம்மாறி வெகுசீக்கிரமே கடவுளை அடைகிறான்.

## ஜீவாத்மாவும் - மறுபிறப்பும்.


எவன், துஷ்கர்மங்களை வாழ்க்கையில் நடத்தி, அந்தியில் விடுதலை அடையவேண்டி மனதை மாற்றிக் கொள்ளுகிருனே அவன் நல்ல குணம் படைத்தவனுய்ப் பிறந்து, பல கஷ்டங்களுக்கு உள்ளாகி, நல்ல தபோ நிலை ஏற்பட்டு அந்தியில் விடுதலை அடைகிருன். எவ னெருவன், கெட்ட வாழ்க்கையையே நடத்தி, அந்திய காலத்தில் ஆசாபாசங்களுக்கு உள்ளாகி, மரிக்கிருனே, அவன் குருபியாகவும், அங்கஹீனனுயும் பிறந்து, பல பல ஜன்மங்களை எடுத்தும், பலவித கஷ்டங்களுக்கு உள்ளாகியும், மனமும், குணமும் மாறி, விடுதலை அடை வது அவன் கர்ம பலனுகிறது. மொத்தத்தில், ஒவ் வொருவரும், சில ஜன்மங்களோ பல பல ஜன்மங் களோ எடுத்து, சிவமயம் ஆவது அவனவன் பொறுப் பாகிறது.

**கர்மபலனுல் ஏற்படும் நல்ல குணமும், நல்ல மனமுமே ஒருவனை சிவமயமாக்க உதவுகிறது. "ஜீவாத்மா" ஒவ்வொரு வருடைய வாழ்க்கை விதத்திற்கு உகந்தவாறு அவ்வவ் வுடலோடு கூடி, உழன்று, அந்தியில் பரமாத்மாவாக மாறவேண்டியது அதன் கடமை ஆகிறது. கடவுள் யோக நிஷ்டையில் இருக்கும் காலம், ஜீவாத்மா-தன் இருப்பிடமான சூர்யனை அடைந்துவிடுகிறது.**

# 53. கடவுளும் - சக்கரமும்.

முன்பு நமது கடவுள் என்ற அத்யாயத்தில் சிறிதளவு சக்கர ஸ்தாபனத்தைப்பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. பரந்த சக்தி ஒன்று இருக்கிறதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே. அந்தப் பரந்த சக்தியானது சஞ்சலமின்றி இருக்குமாயின் அது இருந்துதான் யாருக்கு என்ன பிரயோசனம். இந்த சக்தியையே சாம்பல் நிறமான பிரம்ம சக்தி எனப்படு கிறது. ஒரு சக்தி உண்டாகில் அதில் சஞ்சலம் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்த சக்தி உணரப் படுகிறது.

சித்திரம் - 26.



உமாமஹேச்வர சக்கரம்.

இதையே விஷ்ணு சக்தி என்பர். மூன்றாவதாக, எந்த சக்தி உண்டானாலும், அது ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு சாந்தியோடும், பல நல்ல குணங்களோடும் காணப்படவேண்டும். அதையே சிவசக்தி என்றும், அச்சக்தியைத் தெரிந்து, அறிந்து, அதனுள் ஏற்பட்ட கோடிக்கணக்கான நல்ல குணங்களை மகிழ்ந்து, புகழும், மனிதவர்க்கத்தை உண்டாக்கிய தெய்வம் என்றும், நாம் கருதுகிறோம். இம்மூன்று சக்திகளுமே கடவுளின் வாழ்க்கைச் சித்திரம் எனப்படுகிறது. இவைகளே, பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆன திருமூர்த்திகள் எனப் படுகிறது. நம் பூலோகத்திலுள்ளவை எல்லாம், அச் சக்தியின் பிரதிபிம்பமே ஆகையால், அவைகளுக்கும் இந்த அம்சங்களான பிரும்மா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று பருவங்களும், நிறைவேறுகின்றன. அவைகளே பிறப்பு, வளர்ப்பு, ஜோதி அல்லது சிவமயம் எனப்படுகிறது.

**சக்தியும்—மதமும்.**

இந்த அபார சக்தியானது, பிரும்ம சக்தியாய் இருந்தபொழுது அதை அறிவதற்கும், உணருவதற்கும் யாவருமே கிடையாது. இந்த பிரும்ம சக்தியானது, விஷ்ணுசக்தியாக மாறுவதற்கு அநேக வருஷங்கள் பிடித்தது எனலாம். இந்த விஷ்ணு சக்தியானது, சிறிதளவு உணரப்பட ஏது ஏற்பட்டபோதிலும், அது சிவசக்தியாக மாறுவதற்குப் பல பல வருஷங்கள் கழிந்

தன. பின்பே சிவ-சக்தி உண்டாகி அதில் சாந்தியும், ஒளியும், ஓங்கார சப்தத்தோடு கூடிய நாதமும், அந்த சக்தியை சிறிதளவாவது அறிய, உணர, மகிழ ஏற்பட்டுள்ள மனிதவர்க்கம் உதித்த பிறகே, அந்தச் சக்தியின் பெருமையையும், அதனுள் அடங்கிய அரிய, பெரிய உண்மைகளையும், பலகோடி குணங்களையும் கண்டு, மகிழ சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ஆயினும், மனிதவர்க்கம் தற்போது இருக்கும் நிலைமையில் இச்சக்தியைப்பற்றி அறியவோ, தெரிந்துகொள்ளவோ, சக்தியற்றதாகவே இருந்துவருகிறது. ஏனெனில் மதம் மதம் என்று சொல்லி பிரும்மஞ்ஞானத்தைப் புறக்கணித்து, அறியாமையால் மனிதவர்க்கம் ஒருவர் மற்றவரை ஏமாற்றியே வயிறு வளர்க்க, விஞ்ஞானிகள் என்று சிலர் அரை குறை ஞானத்தினுல் தெய்வம் இல்லை என்றும் வாதாட, உண்மையான தெய்வம் மனிதனுல் அறியப்படவே இல்லை எனலாம்.

மானிட வர்க்கத்திற்கு தெய்வம் ஒன்றே. அதே சிவ-சக்தி. அந்த சக்தியே, ஒரு தாயின் வயிற்றில் உள்ள கர்ப்ப குடத்தில் விளையாடும் குழந்தைபோல் நடனமாட, அந்தத் தாய் தன் சக்தியை அக்குழந்தைக்குக்கொடுத்து வளர்ப்பதுபோல், அகண்ட ஆகாசத்திலுள்ள எல்லா நட்சத்திரங்களும் தம் தம் சக்தியை 27 நட்சத்திரக் கூட்டங்களின் மூலமாக அக்குழந்தைக்குப் பாலூட்ட, அக்குழந்தையின் சக்தி பெருகியதன் காரணமாக, அக்குழந்தையின் வயிருகப்பட்ட நம் பூமியில் ஜனித்த மனிதவர்க்கம் அச்சக்தியைக் கண்டு அதிசயிக்கிறது.

### தெய்வக்குழந்தையும்—அதன் உருவமும்.

அக்குழந்தை மனித ரூபமாகவே எல்லா அவயவங்களோடும் உளதே. இப்படிச் சொல்லுங்கால் மனித வர்க்கம் கேலியாகச் சிரிக்கலாம். ஆயினும் உண்மை அதுவே. மனிதனுக எண்சாண் உயரத்திற்கு வளர்ந்தவனின் அங்கங்கள் எலும்பினுலும், சதையினுலும் பிணைக்கப்பட்டுள்ளன. அதேபோல் பல கோடி மைல்கள் தூரம் விஸ்தீரணம் உள்ள அங்கங்கள், எலும்பினுலும், சதையினுலும், பிணைக்கப்படுவது சாத்யமும் அல்ல, முறையும் அல்ல. ஆகையால் ஒவ்வொரு கிரஹம் என்று சொல்லப்பட்ட, ஒவ்வொரு அங்கமும் தனித்தனி சக்திவாய்ந்தவையாகச் செய்யப்பட்டு, அவைகளெல்லாம் அத்தெய்வத்தின் சிரசான சூர்யனைச் சுற்றிக்கொண்டே வளைய வருகிறது. உதாரணமாக, நாம் ஒரு பாலத்தை, பத்தடி நீளத்திற்குக் கட்டலாம். 100 அடிக்கும் கட்டலாம். 1000 அடிக்கும் கட்டலாம். ஆனல் 1000 மைல்களுக்குக் கட்டுவது சாத்தியம் அல்ல. 10,000 மைல்கள் தாண்ட வேண்டுமானல், ஏரோப்ளேன் மூலமாகவே நடைபெறவேண்டும். அதுபோலவே, அங்கங்களான பல ஆயிரம் மைல்கள் விஸ்தீர்ணமுள்ள கிரஹங்களைப் பிணைப்பதற்கு ஒருவிதமான தெய்வீக சக்தி வேண்டுமேயொழிய, வேறு எந்தவிதத்திலும் நடைபெருது. இந்த உண்மை பாமர ஜனங்களுக்குப்புரியாமல் இருக்கலாம். ஆனல் யந்திர சாஸ்திர நிபுணர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

**கடவுளும் - சக்கரமும்.**

**இப்படிப் பிணைக்கும் சக்தியையே "ஆதிசேஷன்" என சிற்பித்து இருக்கிறார்கள். சிவமூர்த்தி சிலையின்மேல் நாகங்கள் சிற்பிப்பதன் காரணமும் இதுவே.**

தெய்வக்குழந்தையும்—சூர்ய மண்டலமும்.

இந்த மனித உருக்கொண்ட பல அங்கங்களை யுடைய ஆடும் குழந்தையையே நாம் சூர்ய மண்டலம் என்கிறோம். இந்த தெய்வீகக் குழந்தையின் சிரசாகிய சூர்யனுள் அடங்கியிருக்கும் சக்திகள் இருவகைப் பட்டவை. அவைகளில், சூர்யனை மற்ற கிரஹங்கள் சுற்றிவருவதால் ஏற்படும் சக்தி ஒன்று. நட்சத்திரங்கள் எல்லாம் கூடி அவைகளின் பிரதிநிதிகளான 27 நட்சத் திரக்கூட்டங்களின் காந்த சக்தியால் சூர்ய மண்டலம் இழுக்கப்பட்டு, சுற்று ஏற்படுவதினால் உண்டாகும் சக்தி மற்றொன்று. இவ்விருவகைப்பட்ட கலந்த சக்தியே சூர்யனைச்சுற்றி தாக்கி நிற்கிறது. இவைகளே ஆதாரச் சக்திகளாகின்றன. அவ்விரண்டு சக்திகளில், நட்சத் திரங்களால் கொடுக்கப்பட்ட சக்தியை பெண் ரூபம் என்றும். சக்தி என்றும், கிரஹங்களால் கொடுக்கப்படும் சக்தியை புருடரூபம் என்றும், சிவம் என்றும் கூறு கிறோம்.

**இவ்விரண்டு சக்திகளும் சேர்ந்த கூட்டு சக்தியை, ஒரு மூன்று அளவுள்ள (Three Dimension) சிற்பமாக உருவாக் கியதே "சிவலிங்கம்" ஆகிறது.**

சிவலிங்கமும்—சக்கரமும்.

இதுவே பாரதபூமியில் உதித்த ஹிமய பர்வதத்தை சிவமாக ஆவாகனம் செய்து உண்டாக்கிய சிற்பாலங்

காரம் ஆகும். அதேபோல் அம்மகா சக்தியிலுள்ள பலகோடி குணங்களேச் சிலேகளாக சிற்பித்ததே விக்ர ஹங்கள் ஆகின்றன. ஆயினும் சிவலிங்கமும், 'விக்கிரஹங் களும் ஒரு சிற்பாலங்காரமே ஆனபடியால் அவைகளுக்கு ஒரு சக்தியைக் கொடுக்க சக்கர ஸ்தாபனங்கள் செய்யப்படு கின்றன. இந்த சக்கர ஸ்தாபனங்களே தெய்வீக உணர்ச்சியை மனிதவர்க்கத்திற்குக் கொடுத்து மனதை நல்வழியில் மாறச் செய்கிறது. சக்கரங்களின் உற்பத்தியைப்பற்றி முன்பே நமது கடவுள் என்ற அத்யாயத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.

சக்கரங்களில் முக்கியமானது "உமாமஹேச்வர"ச் சக்கரம். இதுவே சக்தியையும், சிவத்தையும் கொண்ட சக்திகளே ஒன்ருகக்கூட்டி சிற்பித்த யந்திரமாகும். இதில் தாய் ரூபமுள்ள சக்தியை தாமரைப்பூவிற்கு ஒப்பிட்டு, அப்பூவின் இதழ்களே 27 நட்சத்திரக் கூட்டங்களாக சிற்பிக்கப்பட்டு இருக்கிறது. அப்பூவின் மத்தியில் அதா வது சக்தியின் வயிற்றில் விளையாடும் குழந்தையாகிய சூர்ய மண்டலத்தை ஏழு கோணங்களாக வரையப்பட்டுள்ளன.

**சக்கரங்களும்—சக்தியும்.**

வரையப்படும் சக்கரம் செம்பிலேயும், ஸ்வர்ணத் திலேயும் ஏழு உலோகங்களால் செய்யப்பட்ட தகட்டி லேயும், வரையப்படுவது வழக்கம். இந்தச் சக்கரத் திற்கு 24 மணி நேரம் ஒளியைக் கொடுத்தும், அதாவது திருவிளக்கு ஏற்றிவைத்தும், ஓங்கார சப்தத்தோடு கூடிய வாக்கியங்களால் அம்மகா சக்தியின் குணங்களே மெச்சி வர்ணிப்போமாகில், அந்தச் சக்கரத்திற்கு ஒரு

**கடவுளும் - சக்கரமும்.**

விதமான சக்தி உண்டாகிறது. அதுவே கடவுளை நாம் பூலோகத்தில் நிர்மாணித்ததாகும். அந்த சக்தி மிகுந்த சக்கரத்தின் முன் மனிதவர்க்கம் தன்குறைகளைத் தெரிவித்து, தனக்கு அறிவூட்டும்படி மன்றாடினால், அவர்கள் மனம் திருந்தி நல்ல மனப்பான்மை உதயமாகிறது.

அதைக்கொண்டு நல்வாழ்க்கை நடத்தவும், கடவுளின் மகிமையை அறியவும், பிரும்ம ஞானத்தைப் பெறவும் ஏதுவாகிறது.

**-சக்கரங்களும்—யந்திரங்களும்.**

ஆலயங்களில் சக்தி ரூபமாகச் சிற்பிக்கப்பட்டிருக்கும் விக்ரஹங்களுக்கு 27 நட்சத்திரங்களால் உண்டாகும் சக்தியை ஒரு சக்கரமாகச் சித்தரித்து, அதற்கு பூஜாலங்காரங்கள் செய்வதுண்டு. இந்த சக்கரத்தை ஸ்ரீசக்கரம் என்பர். இதில் பல நட்சத்திரங்களை ஆதாரமாகக் கொண்ட 27, 54, 81, 108 கோணங்களால் ஏற்பட்ட சக்கரம் வரையப்படுகிறது. இதேபோல் சூர்ய மண்டலத்தைச்சார்ந்த அங்கங்களான ஒவ்வொரு கிரஹத்திற்கும் ஒரு விதமான சித்திர வடிவம் ஏற்படுத்தி, அவைகளைத் தனித் தனியாக பூஜிப்பதும் உண்டு. இவைகளுக்கெல்லாம் யந்திரங்கள் என்று பெயர்.

எல்லாவற்றிற்கும் மேலானதும், கடவுளின் அபார சக்தியைக் கொடுக்கக்கூடியதுமான சக்கரம் ஒன்றே. அதுவே உமாமஹேச்வர சக்கரம் ஆகும். "உமா" சக்தியின் பெயராகிறது. "மஹேச்வரன்" சிவத்தின் பெயராகிறது. சக்தியையும்—சிவத்தையும் சேர்த்ததே

உமாமகேச்வரனுகிறது. இந்தச் சக்கரத்தை இவ்விடம் சித்தரித்துக்காட்டி இருக்கிறபடி, ஏழு கோணங்களாகச் சித்தரித்தும், வசதி உள்ளவர்கள் அக்கோணங்களின் மத்தியில், சனிக்கு நீலவர்ணத்தைக் கொடுத்தும், பிரதட்சணமாக, (clockwise) மற்ற கிரஹங்களுக்கு மஞ்சள், அல்லது வெளுப்பு, சிகப்பு, ஆரஞ்சு, இண்டிகோ, பச்சை வர்ணங்களை வர்ணரூபமாக வரைந்தும், அல்லது கற்கள் மூலமாகப் பதித்தும், மத்திய பாகத்தில் வயலெட் வர்ணம் கொடுத்தும், அதன்மேல் பாகத்தில் 27 நட்சத்திரக் கூட்டங்களை மலர்களாக வரைந்தும், ஓம் என்ற நாமத்தை மத்திய பாகத்தில் எழுதியும், ஒரு தாழ்த்தாகவோ, அல்லது மோதிர மாகவோ ஒவ்வொருவரும் அணிந்து கொள்ளலாம். அவ்விதம் அணிந்த சக்கரத்தை பக்தியோடும், நம்பிக்கையோடும், தன் மனதைச் செலுத்தி ஜபித்தாலும், உருக்கமாக வேண்டிக்கொண்டாலும், எல்லா சவுகரியங்களும், சம்பத்துக்களும் உண்டாகி, கடவுளின் அபார சக்தியை அடைய வரன் பெறுகிருன். மேலும், தனக்குண்டான குறைகளைச் சொல்லி பக்தியோடு தியானிக்கும் பட்சத்தில், அக்குறைகள் நீங்கி மனச்சாந்தி அடைகிருன்.

தெய்வம் ஒன்றே.

அறிந்தவர்களுக்கும், தானே தெய்வம் என்றும், எல்லாம், எல்லோரும் தெய்வ மயம் என்றும், உணர்ந்து, அதன்படி வாழ்க்கை நடத்துபவருக்கும்

சரி, அறியாதவருக்கும், அறிய விரும்புவருக்கும், வாழ்க்கையின் லட்சியத்தை உணராதவருக்கும் சரி, மனிதனைப் படைத்த மகா சக்தியான தெய்வம் ஒன்றே. அத்தெய்வம் எல்லோருக்கும், பொதுவாகையால், இம் மகாசக்தியை ஆவாகனம் செய்த சக்கரத்தைக் கொண்டு அவரவர் சக்திக்குகந்தவாறு அணிந்து சுகம் பெறலாம். ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணன், புத்தபகவான், ஏசுநாதர், மகமது, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், பக்தர்கள், வேதாந்த சிரோன்மணிகள் எல்லோரும் கடவுளை அடைய ஒரு வழியைக் காட்டியவர்களே ஆவர். அவர்களின் அனுக்ரஹத்தைப் பெற்ற ஒவ்வொருவரும், தத் தம் சக்திக்குகந்தவாறு, ஒரே தெய்வம் ஆகிய சக்தி-சிவம் ஒன்றையே நேராக தியானித்தும், சத்கர்மங்களைச் செய்தும், கடவுளின் சக்தியை ஆராய்ச்சியின் மூலமும், தொழில்களின் மூலமும் அறிந்தும், தெரிந்தும், தனக்கு மேல்பட்டு ஒரு சக்தி தாண்டவம் ஆடுகிறது என்பதை உணர்ந்தும், பெரியோர்கள் போதித்த குணதிசயங்களைக் கொண்டும், வாழ்நாட்களைக் கடத்தி, விடுதலை அடைவதே அவரவர் பொறுப்பாகும்.

---

# 54. தெய்வமும் - மனிதனும்.

சூர்யன் இல்லையேல் மனிதன் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மனிதன் இராமல் சூர்யன் இருக்கமுடியுமா என்பது ஒரு பிரச்சனை. பூமியில் மனிதவர்க்கம் பிறந்ததெல்லாம் சூர்யன் உதித்த பற்

பல வருஷங்களுக்குப் பின்பேதான். சூர்யன் உதித்து, திருப்பாற்கடல் கடையப்பட்ட பின்பு, செடியும், மரமும். பலவித பூச்சிகளும், மிருகங்களும் உண்டானபிறகே மனிதன் உருவெடுத்தான் என்பது ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்த உண்மையே ஆகும். இவ்விதம் ஒவ்வொரு வர்க்கமும், அதற்கு முன் உதித்த வர்க்கத்திற்கு ஒரு காவல்காரனைப் போலவே வேலை செய்து வந்து இருக்கிறது. **இவைகளுக்கெல்லாம் தலைமை காவல்காரன் மனிதவர்க்கமே ஆகிறான். மனிதவர்க்கத்திற்கு காவல்காரன் ஞானிகளே ஆவர். அவர்களுக்குக் காவல்காரன் அவதாரப் புருஷர்களே ஆவர்.**

இந்த தெய்வீக தோட்டத்தில் நாடகமாடும் ஒவ்வொரு காவல்காரனும், தனக்கு முன் உதித்த காவல்காரனின் தேர்ச்சியைக்கொண்டே மேல் உத்தியோகம் வகிக்க உருவெடுத்தவன் ஆகிறான். இவ்விதம் தனக்குத்தானே காவல்காரர்களை ஏற்படுத்திக்கொண்டு, ஒரு சங்கிலிபோலொத்த பாந்தவ்யத்தை உண்டாக்கி, வாழ்ந்துவரும் நவீனத் தோட்டமே நாம் வசிக்கும் "திருப்பாற்கடல்" என்று சிலாகிக்கப்பட்ட பூமி. இந்த பூமி யாருக்குச் சொந்தம் என்பதை வினவ, தோட்டத்தில் வேலை செய்யும் மனிதவர்க்கத்திற்கு அதிகாரம் உண்டா என்பதே ஒரு பெரும்பிரச்சனை. யாருடையதாக இருந்தால் என்ன? **சூர்யனுடைய சொந்த நிலமாகவும் இருக்கலாம். அல்லது குத்தகைக்கு வாங்கிய நிலமாகவும் இருக்கலாம். இதன் உண்மையை அறிந்தவர்கள் ஞானிகள் ஆவர்.**

பாமர மக்களுக்கு இவ்விஷயம் தெரியாமல் இருந்த போதிலும், தோட்டத்திற்கு சொந்தக்காரர் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தோட்டத்திற்கு சொந்தக்காரனுன சூர்ய மண்டலம் வாழும் விதமே வேறு. தோட்டத்தில் வேலைசெய்யும் மனிதவர்க்கம் வசிக்கும் விதமே வேறு. ஒருவர் மாளிகையில் வசிப்பவர், மற்றவர் குடிசையில் வசிப்பவர். இவ்விதம் இருக்க, தோட்டத்தில் வேலைசெய்பவன் தன் எஜமான் எப்படி வாழ்கிறுர் என்பதை அறிய ஆசைப்பட்டால் முடியுமா? தோட்டத்தில் வேலை செய்யும் நாம், மாய சுரூபியான காற்றின் ஆதிக்கத்தில் வசிக்கிறோம். நாம் உபயோகப்படுத்தும் அளவுகோல் எல்லாம் காற்றின் ஆதிக்கத்தில் வளரும் பொருட்களை அளப்பதற்காகவே உண்டாக்கப்பட்டவை. இந்த அளவுகோலைக்கொண்டு காற்றே இராத மேல் உலகத்தில் உள்ள கிரஹங்களிலும், நட்சத்திரங்களிலும் ஏற்பட்ட அம்சங்களைக் கணக்கிடுவது சரியா, முறையா என்பது ஒரு பிரச்சனை. ஒருக்கால் காற்றே இராத கிரஹங்களிலும், நட்சத்திரங்களிலும் ஏற்பட்ட ஒரு டிகிரி உஷ்ணத்தை, நாம் உபயோகிக்கும் அளவுகோல் நூறு டிகிரியாக உயர்த்திக்காண்பிக்கக்கூடும். ஆயினும் மேலாக உள்ள எஜமானருடைய சில குணங்களைப்பற்றி தெரிந்து கொள்ளக்கூடும். தோட்ட சொந்தக்காரரின் வாழ்க்கையைப்பற்றி தெரிந்துகொள்ளவேண்டுமானுல்,அவரோடு நெருங்கிப்பழகியே அதை அறிய முடியும். அவ்விதம்

சிறிதளவாவது அறியக்கூடியவர்கள் மாயையை வென்ற சிறந்த பக்தர்களே ஆவர்.

ஒரு தோட்ட வேலைக்காரன் எப்போதும் வேலைக் காரனாகவே தான் இருக்கவேண்டுமா? ஏன் அவன் தோட்டத்திற்கு சொந்தக்காரன் ஆகக்கூடாது என்று மனிதவர்க்கம் வாதிக்கக்கூடும். இதுவே அறிவுள்ளவன் நினைக்கக்கூடிய ஒரு சிறந்த மனப்பான்மை ஆகும். அவ்வித மனப்பான்மை கொண்டால் மட்டும் தோட்டத் திற்கு சொந்தக்காரர் ஆகமுடியாதாகையால், அவ்விதம் ஆவதற்கு ஏற்படுத்திய தகுந்த முறையே ஹிந்து சமயத்தை ஒட்டிய திராவிடச்சிற்பத்தின் பிரத்யேகமான தத்துவம் ஆகும். இம்முறை, மனிதன் அவன் வாழ்நாட் களில் படிப்படியாக முன்னேறி எவ்விதம் தோட்ட சொந்தக் காரர் ஆக முடியும் என்பதை விஸ்தரித்தது ஆகும். இதுவே ஹிந்து சமயத்தைச் சார்ந்த வேதாந்த விசாரத்தையும் ஒத்ததாகும்.

இந்த வேதாந்த விசாரம் எல்லா சமயங்களிலும் காணப்பட்டபோதிலும், ஒரு மனிதனின் வாழ் நாட்களை பல பருவங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பருவத்திலும், எவ்விதம் வாழ்ந்தால் ஒருவன் தோட்டத் திற்கு சொந்தக்காரன் ஆக முடியும் என்பதை நிர்ண யித்து, அதன்படி நடைமுறையில் நடத்தப்படுவது ஹிந்து சமயத்தைச் சார்ந்தஅலாதிக் கொள்கையாகிறது. இதன்படி வாயால் பேசாமல், அப்படிப் பேசினாலும், வாழ்க்

கையில் நடத்திக் காட்டுவதே தகுந்தமுறை எனக் கருதி, மனிதனின் வாழ்க்கைச் சித்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வாழ்க்கையின் தத்துவத்தை அறிந்து, உணர்ந்து, வாழ்க்கையில் எவ்வளவு அசௌகர்யங்களும், கஷ்டங்களும் இருந்தபோதிலும், அவைகளைக் கையாண்டு, சாந்தியோடும், அன்யோன் யத்தோடும், வாழ்நாட்களைக் கடத்துவதே வேறு எந்த மதத்தவரிடமும் காணமுடியாத மிகச் சிறந்த குணமும், நடைமுறையும், எல்லாவற்றிற்கும் மேலான வாழ்க்கையின் லக்ஷியமும், பொக்கிஷமும் ஆகும்.

இவ்வாழ்க்கை முறையில் ஒருவன் ஐந்து பருவங்களிலும் படிப்படியாக புத்தி-சித்தி இவ்விரண்டையும் பெருக்கி, அறிவுள்ளவனுய் தன் நிலைமையை உணர்ந்து, மாயவலையிலிருந்து விலகி, சக்தி ரூபமாக சூர்யனை அடைகிருன். அப்பொழுதே தோட்டச் சொந்தக்காரரின் வாழ்க்கையைப்பற்றி அறியவும், அவரோடு கூட ஒத்துழைத்து, தானே தோட்டச் சொந்தக்காரருடன் பாகஸ்தன் ஆகி, தோட்டத்தைச்சரி வர நிர்வகிக்கவும், ஏற்பட்ட சக்தியைப் பெறுகிருன். அப்பொழுதே அவன் சிவமயம் ஆகிருன்.

# 55. குறிக்கோளும் - பகுத்தறிவும்.

குறிக்கோளும், பகுத்தறிவுச் சக்தியும், ஒன்று இகத்திற்கும், மற்றொன்று பரத்திற்கும் சேரவேண்டிய அம்சங்களாகும். மனிதன் பகுத்தறிவுச் சக்தியை வளர்ப்பதற்காகவே இப்பூலோகத்தில் பிறந்தான் என்பதை அறிந்தோம். அவன் செய்யவேண்டிய கர்மங்கள் எவை என்பதையும் தெரிந்துகொண்டோம். ஜீவராசிகளுக்கும், மனித வர்க்கத்திற்கும், ஏற்பட்ட பாந்தவ்யத்தையும், அவரவர் நடந்துகொள்ளவேண்டிய விதத்தையும் உணர்ந்தோம். ஆயினும், ஒவ்வொருவரும் இப்பூமியில் உதித்ததன் சின்னமாக நிரந்தரமான ஒரு அடையாளத்தை இப்பூமியிலேயே விட்டுவிட்டுப் போவது அவரவர் பொறுப்பாகிறது. ஜீவராசிகள் மனித உருவெடுக்க அரும்பாடுபடுகிறது. அதுவே அவைகளின் குறிக்கோளாகிறது.

மனிதனாகப் பிறந்தவன் இந்த மாயையான உலகத்திலிருந்து விடுதலை அடைவது, அவன் அந்திய கர்மாவாக இருந்தபோதிலும், அவன் இப்பூமியில் நாடகம் ஆடிச் சென்றதின் சின்னம் ஒரு நிரந்தரமான அடையாளமாக இருக்கவேண்டும். இந்த அடையாளமே, அவன் செய்த கர்மங்களில் மிகுந்த நற்செயலாகக் காணப்படுகிறது. அச்செயல் பின்பு உருவாகும் மனித வர்க்கத்திற்கு ஒரு வழிகாட்டியாகவும், நல்ல குணத்தை

உடையதாகவும் இருத்தல் வேண்டும். இதுவே மனிதனுக உருவெடுத்த ஒவ்வொருவருடைய குறிக்கோளாகும். ஒருவரும் ஒரு குறிக்கோளின்றி வாழலாகாது. நாம் இப்பூலோகத்தில் பிறந்ததின் காரணமாக, ஒரு நல்ல காரியத்தைச் செய்து, அக்காரியம் பின்வரும் சந்ததிகளுக்கு உபயோகப்படக் கூடும் என்ற மனப்பான்மையைக் கொண்டே, அக்குறிக்கோள் விக்னமின்றி நடைபெற அரும்பாடுபட வேண்டும்.

சிற்றின்பத்தில் ஈடுபடுவதும், குழந்தைகளைப் பெறுவதும், திரவ்யத்தைச் சேகரிப்பதும் குறிக்கோளாகாது. அவ்விதம் எண்ணுவது விரும்பத்தகாத மாயையின் குறிக்கோளாகுமே ஒழிய மனிதனின் குறிக்கோளல்ல. மனிதனின் குறிக்கோள், சிறந்த கடவுளின் குணத்தை ஒத்ததாகவும், சுற்றத்தாருக்கு ஒரு நல்ல அறிவைப் புகட்டக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இதுவே ஒருவர் கிரஹஸ்தாச்ரமத்திலும், வானப்ரஸ்தாச்ரமத்திலும் செய்யவேண்டிய முக்கிய கடமை ஆகும். குறிக்கோளின்றி வாழ்பவனுக்குச் சாந்தியோ, சௌகர்யங்களோ ஏற்படாது. அவன் வாழ்வு போற்றத் தகாதாகவே இருக்கும்.

ஒவ்வொரு மனிதனும் தான் செய்ய வேண்டிய கடமை இகத்திற்கும், பரத்திற்கும், இரண்டிற்குமே உண்டு. அவன் தன் குறிக்கோளான நற்செயலை

பூமியில் விட்டுவிட்டுச் செல்லுகிறுன். அவன் அரும் பாடுபட்டுச் சேகரித்த பகுத்தறிவுச் சக்தியை சூர்யனுக்கு எடுத்துச் செல்லுகிறுன். இவ்விரண்டுமே, இகத்திற்கும், பரத்திற்கும் சேரவேண்டிய அம்சங்களாகின்றன. இவைகளைச் சேகரித்துக் கொடுப்பதே மனிதன் இப்பூலோகத்தில் உதித்ததின் லட்சியம் ஆகும்.

---

# 56. மனதிடமும் - வீர ஸ்வர்க்கமும்.

திருப்பாற்கடல் கடையப்பட்டபொழுது, மந்திர பர்வதம் பெயர்க்கப்பட்டு சந்திரன் உதயமானதின் விளைவாக முதலில் விஷம் உண்டாயிற்று என்றும், பின்பே அமிர்தம் கிட்டியது எனப்பட்டது. இவ்விரு சக்திகளும் கலந்தே நம் பூமியில் பிரதிபலிக்கிறது என்றும், தனித்தனியே மாறி மாறியும் காணப்படுகிறது என்றும் சொல்லப்பட்டது. இம்மாறுதலில் அமிருத மதன ஆதிக்கம் பல வருஷங்களுக்கு நீடிக்க, சில காலங்கள் விஷ ஆதிக்கமாகக் காணப்படுகிறது. அமிருத மதனகாலத்தில் மனிதவர்க்கம் எல்லா சௌகர்யங்களோடும் வாழ்க்கை நடத்த, விஷ ஆதிக்கத்தில் விஷ மனப்பான்மை சிலரிடம் ஏற்பட்டுச் சண்டை சச்சரவுகளுக்கும், பெரிய போருக்கும் கூட ஏதுவாகிறது. இவ்விஷ மனப்பான்மை ஒரு சில மனிதரிடம் ஏற்படுவதுண்டு. சிறு குடும்பங்களிலேயும்,

மனதிடமும் - வீர ஸ்வர்க்கமும்.

நாடுகளிலேயும், தேசங்களிலேயும் கூட ஏற்படுவது உண்டு. பூமி முழுவதுமே ஒரு போர்க்களமாக மாறுவதும் உண்டு. இவை சிறிய சண்டையாக ஏற்பட்டாலும், பெரிய போராக மூண்டாலும், அவைகளுக்கு, மேலாக எவ்வித காரணம் காணப்பட்டாலும், அதன் மூலகாரணம் திருப்பாற்கடலாகிய நம் பூமியில் ஏற்பட்ட விஷத்தை அகற்றி, அதை அமிர்தமயமாக்குவதே ஆகும். இதுவே விஷத்தை சிவன் உண்டார் என்பதின் தாத்பர்யம் ஆகும்.

இவ்விதம் அமிர்தமயமாக்கும் பணியில் போரில் ஈடுபடும் மனிதவர்க்கம் பெரிய ஞானிகளுக்கு ஒப்பாவர். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும் துறந்தே இக்கைங்கர்யத்தைச் செய்து முடிக்க முன்வருகிறார்கள். அவர்களின் குறிக்கோள் ஒன்றே. போரில் ஜெயிப்பது அல்லது மடிவது. இம்மனப்பான்மையில் எதிரிக்கு முதுகுகாட்டி ஓடுவதும், எதிரி கையில் அகப்படுவதும் தகாத காரியம். ஒரு சிறந்த போர் வீரனின் குணம், தனக்கு உயிருள்ள வரையில் எதிரியைத் தாக்குவதே ஆகும். இவ்வித மன திடத்தோடு போரிட்டு, ஜெயித்தவருக்கும் சரி, மரித்தவருக்கும் சரி, இகத்தில், அதாவது பூமியில் கீர்த்தியும், பரத்தில், அதாவது சூர்யனில் வீர சுவர்க்கமும் உண்டு. புறங்காட்டி ஓடினவரும், எதிரி கையில் அகப்பட்டவரும், அறிவில்லாத, அரிசியில்லாத நெற்பயிருக்கு ஒப்பாவர். அவர்களுக்கு விடுதலையே கிடையாது எனலாம். அவர்களுக்கு இகத்தில் மரியாதை குறைவு

**பட்டு, பல அசௌகர்யங்களுக்கு உள்ளாகி, மறுபடியும் மறுபடியும் இப்பூமியில் பிறந்து பல கஷ்டங்களை ஏற்க நேரிடும்.**

மனிதன் ஒரு தினம் இறப்பதே முறை ஆகும். அவ்விதம் இறப்பதில் பல வித்தியாசங்கள் உண்டு. ஒருவன் தன்னுடைய ஒரு குறிக்கோளுக்காக உயிரை விடுவது போற்றத்தக்கதே ஆகும். மாயையில் ஈடு பட்டு, விஷ மனப்பான்மை கொண்டு சண்டையிட்டு மரிப்பவர்களே பாபிகள் ஆவர். மகாத்மா காந்தி ஒரு சமயம் பூகம்பம் ஏற்பட்டதின் காரணமாக இறந்தவர்களை பாபிகள் என்ருர். ஆனுல் அவரே ஒருவரால் கொல்லப் பட்டார். அதனுல் மகாத்மாவும் ஒரு பாபியா? அது தான் இல்லை. எவன் ஒருவன் ஒரு நாட்டு நலத்துக் காக நம் பூமியில் அமிர்தத்தை உண்டுபண்ணக்கூடிய ஒரு கைங்கர்யத்துக்காக, மனிதவர்க்கத்தின் நன்மைக் காக, உழைத்து, உயிர் துறக்கிருனே, அவனுக்கு வீர சுவர்க்கம் உண்டு. மகாத்மாவைப்போல் நம் நாட்டு சுதந்திரத்திற்காகப் போரிட்டு உயிர்துறந்தவர்கள் பலர் உண்டு. அவர்கள் எல்லோரும் கீர்த்தியோடு வீர சுவர்க்கம் அடைந்தவர்களே. இவ்விதம் அமிர்தத்தை நிலைநாட்ட போரில் ஈடுபட்டவர்களில் பலர் நம் நாட்டி லும், வேறு நாடுகளிலேயும், பல சமயங்களில் உதித்து, கீர்த்தியோடு விடுதலை அடைந்தவர்கள் ஆவர். பெண் மணிகளுள் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும், கற்பைக் காப்பாற்றவும், உயிர்துறந்தவர்கள் பலர் உண்டு. அவர்கள் எல்லோரும் தெய்வங்களாகவே பாவிக்கப்

பட்டு பூஜிக்கப்படுகின்றனர். மனிதனுடைய உடல் அழியக்கூடியது. அவனுடைய மனதிடமே அவனை தெய்வமாக்கக்கூடியது. இகத்தில் கீர்த்தியைக் கொடுக்கக்கூடியது, பரத்தில் தகுந்த ஸ்தானம் வகிக்கக்கூடியது. இம்மனதிடமே மனித வாழ்க்கையில் போற்றத்தக்கது.

---

## 57. கடவுளும் - நவநாகரீகமும்.

மனிதன் இப்பூமியில் பிறந்ததின் காரணத்தை அறிந்தோம். அவனுடைய முக்கியமான பொறுப்பு பகுத்தறிவுச் சக்தியை வளர்த்து கடவுளுக்குக் கொடுப்பதே ஆகும். அவன் தன் கர்மத்தைச் சரிவர செய்து விட்டான் ஆகில், அவனுக்கு இப்பூமியில் வேலை இல்லை. தன் கடமையைப் பூராவாகச் செய்து தெய்வம் வேண்டியதை தவக்கமின்றி கொடுப்பவர்கள் போற்றப் பட்ட ஞானிகள் ஆவர். கடவுள் தன் ஸ்வரூபத்திலேயே மனிதனை உண்டுபண்ணி இருக்கிறார். அம்மனிதன் தன் கடமையை அறிந்து செயல்படுவான் என்பது கடவுளின் நம்பிக்கை. அக்கடமையை நன்கு செய்வதற்கான எல்லா சவுகர்யங்களையும் செய்து கொடுத்து இருக்கிறார். கடவுள் தன் காரியம் நிறைவேறுவதற்காக மனிதனை உண்டாக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் தற்காலம் மனிதன் இக்கடவுளின் நிர்ப்பந்தத்தை ஒரு கருவியாகக் கொண்டு, அவரையே

ஏமாற்றலாம் என்ற மனப்பான்மையை ஏற்று, தெய்வத்தைப் புறக்கணித்து, தானே தெய்வம் என்றும், தெய்வத்தின் பேச்சை எடுப்பதே அநாகரீகம் என்ற ஹிட்லருக்கு ஏற்பட்டிருந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு, தெய்வத்தையும்,தெய்வமயமான நல்ல குணங்களையும் அகற்றியே வாழவிரும்புகிறுன். இல்வாழ்க்கையில் தெய்வத்தின் பெயரை எடுப்பதே அநாகரீகம்; கற்பு வேண்டும் என்று சொல்லுவது பண்டைய காலம்; சண்டை கூடாது, சாந்திவேண்டும் என்று சொல்லுவது கோழைத்தனம்; பொய் சொல்லக்கூடாது, திருடக்கூடாது, பிறரை ஏமாற்றக் கூடாது என்று சொல்லுவது பொருமை; மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை கூடாது என்பது பேடித்தனம்.

இம்மனப்பான்மையில், மக்களைப் பிறப்பிக்கும் சக்தி தனக்கு உண்டென்றும், அதனுல் அம்மக்களை அழிக்க தனக்கு உரிமை உண்டென்ற தப்பான அபிப்பிராயம் எங்கும் பரவிநிற்கிறது. அதன் காரணமாக மனித உயிருக்குக் கொடுபடவேண்டிய மதிப்பும், மரியாதையும், நமது உலகத்தைவிட்டு அகன்றுவிட்டது. மனிதன் எதையும், எவ்விதமும் செய்யலாம் என்ற கெட்ட குணமே மேல்நோக்கி நிற்கிறது. இத்தகாத குணத்தின் வளர்ச்சிக்கு காரணபூதமாக உள்ளது, தற்காலம் தாண்டவமாடும் சினிமாப் படங்களும், கட்டுக் கதைகளானுலும், அவைகளுக்குத் தலைமை வகிப்பது நவநாகரீக சிற்ப-சித்திரங்களே ஆகும். இந்நவ நாகரீக சிற்ப-சித்திரங்களில் உருத்தெரியாதவையே சிலாக்கியம்

எனக் கருதப்படுகிறது மனோதர்ம தத்துவம் என்றும், முக்கியதீதை எடுத்துக்காட்டும் தத்துவம் (Impressionism) என்றும், பலமுறைகளில் தற்காலம், சிற்ப-சித்திரங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்விதப் பல தத்துவங்களும், ஒன்று மற்றொன்றுக்கு ஒத்தாசையாக உலகத்தில் ஒரு குழப்ப நிலையை (chaos) உண்டுபண்ணி இருக்கிறது. கெட்ட மனப் பான்மையையே கொடுக்கிறது.

முன்காலத்தில், சென்ற மகா யுத்தத்திற்கு முன் உழைப்பிற்கும், திறமைக்கும் கௌரவம் உண்டு. மகா யுத்தத்திற்குப்பின் எல்லாம் மாறிவிட்டன. இம்மாறுதலில் நிழலின் ஆதிக்கம் (Shadow reaction) நடைபெறுகிறது. பற்பல நூற்றுண்டுகளுக்கு முன் வசித்த மனித வர்க்கத்தின் மனப்பான்மையே தாண்டவமாடுகிறது. நாகரீகம் பின்நோக்கி விஷ மனப்பான்மை கொண்டுள்ளது. இம்மனப்பான்மையை அதிகம் ஓடவிட்டால் உலகத்திற்கே அபாயம் ஏற்படும்.

கடவுள் மனதில், தான் வளர்த்த மானிடவர்க்கமே தனக்கு முரண்டு செய்கிறது என்று ஒரு எண்ணம் பளிச்சிட்டால் போதும். நம் பூமியிலுள்ள கெட்ட மனப்பான்மை கொண்ட மனிதவர்க்கம் தற்கொலை செய்துகொள்ளும். கடவுளின் சக்தி அத்தகையது; அபாரமானது; அதை மனிதனுல் உணரவோ, நினைக்கவோ கூட முடியாது. அவர் கருணைக்கடல். அவருக்கு எவ்வளவு அழிக்கும் சக்தி இருந்தபோதிலும்

அக்காரியத்தை அவர் செய்யார். அவ்விதம் செய்யும்படி நிர்ப்பந்தம் ஏற்படுமானுல், தனக்கு உரிமையான அவதாரப் புருஷர்களுக்கும், பக்தர்களுக்கும், ஞானிகளுக்கும், பல சோதனைகளைச்செய்து, அவர்களை மாயையிலிருந்து விலக்கி, தன்மயம் ஆக்கிக்கொள்ளுவார். மனிதவர்க்கத்திற்கு அழிவு ஏற்படுமானுல், அது அதன் துற்செயல்களாலேயே ஏற்படுகிறது. தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளுகிறது. இந்நிலையிலிருந்து மனிதவர்க்கத்தை அகற்ற ஒரே ஒரு வழிதான் உண்டு.

அதுவே மனிதவர்க்கத்தின் மனதையும், குணத்தையும் நல்வழியில் நாடச்செய்வது ஆகும். மனதையும், குணத்தையும், நல்வழியில் கொண்டுசெல்ல முக்கியமாக சிற்பக்கலையும், சித்திரக்கலையுமே உதவுகிறது.

தற்காலம் சித்திரக்கலையும், சிற்பக்கலையும், தேக்க நிலை அடைந்து இருக்கிறது. முன்னேற்றம் அடைய வழி தெரியாமல் அவஸ்தைதப்படுகிறது. அதனுல், அதர்மமும், அசத்தியமும், கோரச் சித்திர-சிற்ப செயல்களும் தாண்டவமாடுகின்றன. இதுவே நிழலின் ஆதிக்கம் நடைபெறுகிறது என்பதை நிர்ணயிக்கிறது. உலகில் சத்தியம், தர்மம், சௌந்தர்யம் இவைகள் தலைதூக்கி, அமிர்தமயமாக வேண்டுமானுல், சிற்பத்திற்கும், சித்திரத்திற்கும் தெய்வீகமான "குணத்தை" ஆதாரமாகக் கொண்ட ஒரு எல்லையைத் தேடிக்கொண்டு, தீர்க்கமான உருவங்களைத் தற்காலத்திற்குகந்தவாறு அதனுள் வளரச்செய்ய

வேண்டும். உலகத்தில் குணமே ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய சக்தி ஆகிறது. அதுவே மனிதனை வாழச்செய்கிறது. நல்ல குணங்களைக் கொண்டு ஆவாகனம் செய்த சித்திரமும், சிற்பமும், மனிதனை வாழச்செய்யும், வளரவும் செய்யும். இந்த நெருக்கடியில், திராவிடச் சிற்பத்தின் மகிமையை உணர்ந்து, பயின்று, அதை பரவச்செய்வதே, நல்ல குணங்களை உலகில் உண்டுபண்ணவும், மனதை மாற்றி, மனித வாழ்க்கையை மலரச்செய்யவும், ஏற்பட்ட சிறந்த கருவியாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

## 58. சிவசக்தியும் - யுகங்களும்.

சிவசக்தி ஏற்பட்ட பின்னரே யுகங்கள் கணக்கிடப்பட்டன. அவைகள் நான்காகும். கிரேதாயுகம்; திரேதாயுகம்; துவாபரயுகம்; கலியுகம். அவைகளுள் கிரேதாயுகமே மிகப்பெரியது. 17,28000 வருஷங்கள் எனப்படுகிறது. திரேதாயுகம் 12,96000 வருஷங்கள் கொண்டது. துவாபரயுகம் 8,64000 வருஷங்கள் கொண்டது. இப்பொழுது நடைபெறும் கலியுகமே எல்லாவற்றிற்கும் சிறியது. 4,32000 வருஷங்கள் கொண்டது. இதில் 5065 வருஷங்கள் நடைபெற்றுவிட்டன. கிரேதாயுக காலத்தில் சுபிட்சம் நன்கு பரவி இருந்தது. அக்காலத்தில் மனிதவர்க்கத்தின் நெருக்கடி

அதிகம் கிடையாது. மனிதன் அக்காலத்தில் 8 அல்லது 10அடி உயரமும், ஆஜானுபாகுவான சரீரமும் கொண்டவர் ஆவர். அவர்களின் ஆயுட்காலம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடித்து இருந்து இருக்கக்கூடும். தசரதர் 60,000 வருடங்கள் ஆண்டார் என்பதும், ஸ்ரீராமர் 11,000 வருடங்கள் ஆண்டார் என்பதும், பலர் கவியின் கற்பனை என்று எண்ணியபோதிலும், சிறிதளவாவது அதில் உண்மை இருக்கிறது. பின்பு ஜன நெருக்கடி அதிகம் ஆக ஆக பல அசௌகர்யங்கள் ஏற்பட்டு, தற்காலம் கலியுகத்தில் மனித வர்க்கம் அளவில்லாத துயரங்களுக்குள்ளாகிப் பல விதங்களில் கஷ்டப்படுகின்றனர்.

இவ்வித கஷ்டங்களினால் ஏற்படக்கூடிய மனித வர்க்கத்தின் துற்செயல்களாலும், நெருக்கடியாலும், சில சமயங்களில் பிரளயங்கள் ஏற்படுகிறதென்று கூறப்படுகிறது. தற்காலம் கலியுகம் ஆரம்பத்திலேயே இருக்கிறது. அதன் ஆயுள்காலம் பல லக்ஷ வருடங்கள் நீடிக்கவேண்டியிருக்கிறது. ஆயினும்,இப்பொழுதே ஏற்பட்டுள்ள மனிதவர்க்கத்தின் நெருக்கடியும், உணவில்லாத் திண்டாட்டமும், ஒரு பயங்கர மனப்பான்மையையே கொடுக்கிறது. இதேபோல் மனிதவர்க்கம் வளர்ந்துகொண்டே போனால் ஒரு ஆயிரம் வருடங்களில் மனிதனுடைய நிலை என்னவாக இருக்கும் என்று நினைக்கவே அவ்வித மனப்பான்மை ஏற்படுகிறது. இந்தக் கஷ்டங்களை எல்லாம் நிவர்த்திசெய்து,

## சிவசக்தியும் - யுகங்களும்.

இந்தக் கலியுக காலத்தை நன்கு பயன்படுத்த, மனித வர்க்கத்திற்கு மூளையைக் கொடுத்து இருக்கிறார். கடவுள் மனிதனைப்படைத்த கடவுள் அவனுக்கு வால் வைக்கவில்லை. ஏனெனில் அவன் தன் மூளையைக்கொண்டே எங்கும் செல்லக் கூடும். அவனுக்கு இறக்கையும் கொடுக்கவில்லை. அவன் பறக்கவும் கூடும். அதேபோல் தான் கொடுத்திருக்கும் மூளையைக்கொண்டே கீழே கண்டுள்ள சௌகர்யங்களைத் தானே செய்துகொண்டு நல்வாழ்க்கை நடத்துவான் மனிதன் என்பது கடவுளின் நம்பிக்கை.

### கருத்தடை.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், சராசரி 6 அல்லது 8 குழந்தைகள் பிறக்குமானால் வருங்காலத்தில் மனிதன் இப்பூமியில் நிற்பதற்கே இடம் கிடைக்காது. உண்பதற்கும், சுவாசிப்பதற்கும்கூட சவுகர்யங்கள் ஏற்படாது. பெண்மணிகளுக்கு மாதவிடாய் ஏற்படுத்தியதின் மூல காரணம், பிறப்பைக் கட்டுப்படுத்துவதே ஆகும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்து மூன்று குழந்தைகளுக்கு மேற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். திராவிடச் சிற்பத் தின்படி ஒவ்வொரு குடும்பத்திற்கு ஒரே ஒரு மகன் வேண்டு மென்று கூறப்பட்டிருக்கிறது.

### நிறத்தடை.

மனிதவர்க்கத்தின் உடல் மேனி ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொன்றாக இருக்கிறது. குளிர்ந்த பூமியில் வசிப்பவர்கள் வெளுத்தே இருக்கிறார்கள். அவர்களுள் சிலருக்கு புருவத்து ரோமம் கூட வெளுத்து ஒருவிகார

மான தோற்றத்தைக் கொடுக்கிறது. அவர்களுடைய மேனியைச் சிவக்கச் செய்ய சுளுவான வழியில் கடற் கரைகளிலோ, அல்லது வேறு எங்காவது படுத்து, சூர்ய வெப்பத்தினுல் உண்டாகும் நன்மையை அடை கிருர்கள். உஷ்ண தேசங்களில் வசிப்பவர்களின் மேனியை வெளுக்க வைக்க சுளுவான முறை ஏற்பட வில்லை. அவர்களின் மேனி கறுத்தே காணப்படுகிறது. இந்த மேனி வித்யாசத்தால் உலகத்தில் பல இடங் களிலும், குடும்பங்களிலும், சச்சரவுகள் ஏற்படு கின்றன. வாழ்க்கைகள் கெடுகின்றன. குழந்தைகள் கறுத்தே பிறக்கின்றன. அவர்களின் மேனி, வாழ்நாட் களில் சூர்ய வெப்பத்தினுல் மேலும் கறுக்க, அவை அவர்களின் இரத்தத்தில் ஊறி அதிகக் கறுப்பான குழந்தைகளைப்பெற ஏதுவாகிறது. இப்படிக் கறுத்துக் கொண்டே போனுல் அதற்கு ஒரு எல்லை உண்டா என்பது ஒரு பிரச்சனையாக இருக்கிறது. இதில் இரு வகை உண்டு. ஒன்று பிறப்பிலேயே இரத்தத்தில் ஊறின கறுப்பு. மற்ருென்று சூர்ய வெப்பத்தினுல் அவரவர் வாழ்க்கையில் ஏற்படும் கறுப்பு. இரண்டாவ தான வாழ்க்கையில் ஏற்படும் கறுப்பை ஒருவிதமாக மேல் பூச்சினுல் தடுக்கலாம். தற்காலம் பலவிதமான மேல்பூச்சுகள் உள்ளன. அவைகள் உண்மையில் நலம் தருமா என்பது சந்தேகம். இரத்தத்தில் ஊறின கறுப்பைப் போக்க ஔஷதங்கள் மூலமே மாற்றம் நடைபெற வேண்டும். இவ்விஷயத்தில், தகுந்த ஆராய்ச்சியும், மிகுந்த முயற்சியும் தேவை.

## சிவசக்தியும் - யுகங்களும்.

**சக்திப் பெருக்கு.**

நமக்கு தற்காலம் கிடைக்கும் சக்தியெல்லாம் நீர் வீழ்ச்சியிலிருந்தும், நிலக்கரியிலிருந்தும், மண்ணெண்ணை, மரம், முதலிய பொருள்களிலிருந்துமே கிடைக்கின்றன. இவைகளெல்லாம் சில காலத்தில் படிப்படியாக குறையக்கூடியதாகையால், இவைகளை எக்காலமும் நம்பியிருப்பது தகாது. அணுசக்தி குறையக் கூடியதும், அபாயமானதும், மனிதவர்க்கத்திற்குத்தீங்கு விளைவிக்கக்கூடியதும் ஆகும். இவைகளுக்கெல்லாம் மேலானது சூர்ய பகவான் நேராகக் கொடுக்கும் சக்தி. அந்தச் சக்தி கணக்கிடமுடியாதது, குறையாததும்கூட. அச்சக்தியை எல்லா கைங்கர்யங்களுக்கும் உபயோகப் படுத்தலாம். **இந்தச் சக்தியைக் கையாள தீவிர ஆராய்ச்சி தேவை.**

**தெய்வீக உணர்ச்சி.**

தற்காலம் மனிதவர்க்கம் உண்மையைப் புறக் கணித்து, மிருகங்கள்போல் வசிக்கவும், ஆளவும் பிரியப் படுகிறது. மனிதன் சொல்பம் படித்துவிட்டாலும், விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் சிறிது முன்னேறி விட்டாலும், கடவுள் இல்லை என்ற சொற்களே முன் வருகின்றன. தான் யார்? தனக்கு உண்டான சக்தி எப்படிப்பட்டவை, எங்கிருந்து வந்தவை என்ற விஷயங்களை நன்கு அறிந்திருந்தால் இந்த மனப் பான்மை ஏற்படாது. மனிதனுகப் பிறந்த ஒவ்வொரு

வரும் தெய்வத்தின் வயிற்றில் பிறந்தவரே. ஆகையால் எல்லோரும் தெய்வ மயமே ஆவர். இந்த உண்மையை நம் பூமியில் வசிக்கும் எல்லோருக்கும் பரவச்செய்து, தெய்வம் ஒன்றே, அது சிவ-சக்தி ரூபமாக உள்ளது என்ற உண்மை மனப்பான்மை எல்லோருக்கும் ஏற்படும்படிச் செய்வது, நாட்டின் சுபிட்சத்திற்கும், கலியுகத்தின் ஆயுள் காலம் நீடிப்பதற்கும் ஏதுவாகும்.

சிவசக்தியும்—திருவிளையாடலும்.

ஆகாசத்தையே ஒரு எல்லையாக ஏற்று, அதனுள் வசிக்கும் பல கோடி நட்சத்திரங்களுமான கூண்டில் அடைபட்ட உலகங்களை உடையதும், அளவில்லாத குணங்களையும், மனதையும் கொண்ட ஒரு உருவத்தையே தெய்வத்தாய் என்கிறோம். அப்பராசக்தியின் வயிற்றில் விளையாடும் குழந்தையே சூர்ய மண்டலமாம். அக்குழந்தை விளையாடும் பொருள்களும், பொம்மைகளுமே, நாம் வசிக்கும் பூமியில் உற்பத்தியாகும் செடியும், மரமும், ஜீவப்பிராணிகளும், மனித வர்க்கமும் ஆகும். அத்தெய்வீகக் குழந்தையான சிவ சக்தி விளையாடும் காலமே, நமது பூமியில் பரபரப்பு ஏற்பட்டு உற்பத்திக்கு ஏதுவாகிறது. அக்குழந்தை உறங்க ஆரம்பித்தால், அதாவது கடவுள் யோக நிஷ்டையில் இருக்கும் காலம், நமது பூமியில் எல்லா உற்பத்தியும் நின்றுவிடுகிறது. இதே மாறி மாறி ஏற்படுகிறது. அக்குழந்தை விளையாடும் காலம் நமது பூமியில், பல லக்ஷ வருஷங்கள் ஒரு யுகம் ஆகிறது. நான்கு

யுகங்கள் ஒரு விளையாடும் பகலாகிறது. அளவில் அடங்காத பகலும், இரவும், அக்குழந்தையின் ஆயுள் காலம் எனப்படு கிறது.

திராவிடச் சிற்பத்தின்படி உலகத்தில் மாறுதல் ஒன்று, ஏற்படுகிறதேயொழிய, இறப்பு ஏதாவது ஒன்றுக்கும் கிடை யாது என்பதே கருத்தாகும். அப்படி ஒரு அந்திகாலம் வருமாயின், தூலசரீரத்தைக் கொண்ட எல்லா கிரஹங்களும், நட்சத்திரங்களும், சூர்யனும், அதனதன் பொருள்களின் அமுக்கத்தால் வாயு ரூபமாக மாறி, ஆகாசத்தோடு கலந்து, ஆதியில் ஏற்பட்ட நிலையோடு சாம்பல் நிறமாகக் காணப் படும்.

---

# 59. பிரும்மோபதேசமும் - சபதங்களும்.

இப்பூலோகத்திலேயே மிகவும் பிற்போக்கான சமயம் ஹிந்துமதமே ஆகும். இம்மதத்தில் எவ்வளவோ அளவில்லாத உண்மைகள் புதைந்து கிடந்த போதிலும், அவைகளை வெளியிடாமலும், ரகஸ்யமாக வைத்து பிறருக்கு எடுத்துக்காட்டாமலும், அவ்வுண்மை களை அறிந்து பயன்படவேண்டும் என்ற மனப்பான்மை கொண்ட நபர்களை விலக்கியும், இதுகாலம் ஹிந்து சமயத்தின் வளர்ச்சிக்கு தீங்கு செய்துகொண்டும், அதனல் உலகத்திலேயே ஒரு அருவருப்பு உண்டாகும்

படி நடந்துகொண்டிருக்கிறோம். இம்மனப்பான்மை மாறுபட்டு, மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவரும், நலன்படும்விதம், இம்மதத்தில் புதைந்துகிடக்கும் உண்மைகளைத் தெரிவித்தும், எல்லோரையும் ஒன்று சேர்த்தும், சிவமயமாக்குவதே நமது லட்சியமாக இருக்கவேண்டும். அதுவே உலகில் சாந்தி அளிக்கும். இவ்விதம் சிவமயமாக விரும்புவோருக்கு, பிரும்மோபதேசம் நடைபெற வேண்டியது அவசியம் ஆகிறது.

பிரும்மோபதேசம் பெறும் நபர்களுக்கு நாம் யார்? எதற்காக இப்பூமியில் பிறந்தோம். நாம் செய்ய வேண்டிய கடமைகள் எவை என்பதை ஒரு புத்தக ரூபமாகக் கொடுத்து, கீழே கண்டுள்ள சபதங்களை அவரவர்களுக்குத் தெரிந்த பாஷையில் ஏற்கும்படிச் செய்வது நலம்.

**1. தெய்வம் ஒன்றே. அதுவே சிவ-சக்தி. தெய்வத் தாயாகிய பலகோடி நட்சத்திரங்களைக்கொண்ட பராசக்தியின் வயிற்றில் விளையாடும் குழந்தை, சூர்ய மண்டலமாகும்.**

**2. மனித உருக்கொண்ட நாம், சூர்ய மண்டலத்தின் வயிருகிய நமது பூமியில் பிறந்த குட்டித் தெய்வங்களே ஆவோம்.**

**3. நாம் பூமியில் பிறந்ததின் காரணம் கடவுளின் ஏஜண்டுகளாக வேலைசெய்து, நம் பூமியிலிருந்து விஷத்தை அகற்றி, நாட்டைக்காத்து, தாய் தந்தையையும் காப்பாற்றி, பத்தினிக் குழந்தைகளை வளர்த்து, சுற்றத்தாருக்குத்தொண்டு**

செய்து, பலவித்தைகளிலும் தேர்ச்சி அடைந்து, அதனுல் உண்டாகும் பகுத்தறிவுச் சக்தியான "அமிர்தத்தை" சேகரித்து, தெய்வத்திற்குக் கொடுப்பது ஆகும்.

4. நாம் இவ்விதம் அமிருதத்தை சேகரித்துக் கொடுப்பதால் நமது சந்ததிகளுக்குத் தெய்வம் கொடுக்கும் சக்தி அதிகமாகி, நமது குழந்தைகள் சுக வாழ்க்கை நடத்தவும், கடவுள் தன் சக்தியை அறிந்து, ஆனந்தப்படவும் ஏதுவாகும்.

5. நல்ல குணமே, பகுத்தறிவுச் சக்தியான அமிருதத்தை அடைவதற்கு ஏற்பட்ட பொருள் ஆகையால், அக்குணங்களை அடைய நாம் பாடுபடுவோமாக.

6. திருமணம் செய்து கொள்வதின் தாத்பர்யம், புருஷன் பெண்மணிகளிடம் ஏற்பட்ட பலவிதமான குணங்களை பரஸ்பரம் தெரிந்துகொண்டு, நல்ல குணங்களை வளர்த்து, அமிருதத்தை அடைவது ஒருவழியே. ஆகையால், மாயையின் கருவியாகிய சிற்றின்பத்தில் அதிகம் ஈடுபடாமல் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளைப் பெறுவதே நமது லட்சியமாகக் கொள்வோம்.

7. நாம் குட்டித் தெய்வங்களே ஆகிறபடியால் நமது வாழ்க்கையில் மிகுந்த ஆராய்ச்சியின்மூலம், புதுரக யந்திரங்களை உண்டுபண்ணி, அவைகளையே ஆள உள்படுவோம்.

8. எல்லோரும் குட்டித் தெய்வங்களே ஆகிறபடியால் ஒருவர் மற்றவருக்குத் தீங்கு செய்யாமலும், ஜீவப்பிராணிகளை ஹிம்சிக்காமலும், அவதார புருஷர்களான, பல பக்தர்களும், வேதாந்த சிரோன்மணிகளும் போதித்த முறைகளைக் கொண்டும், "தாமரை" குளத்தில் வசிப்பது போல் நாம் வாழ்க்கையை நடத்துவோம்.

பிரும்மோபதேசமும் - சபதங்களும்.

9. பகுத்தறிவு சக்தியை வளர்ப்பதற்கு ஆராய்ச்சி சக்தி. கல்பனு சக்தி. சிருஷ்டி சக்தி, இம்மூன்றும் தேவைப்படுவ தாகையால், அவைகளை வளர்க்க அதிகப்படிப்பிலும், சிறந்த தொழில்களிலும் ஈடுபடுவோம்.

10. பகுத்தறிவுச் சக்தியை அடைய அதிக புத்தி-சக்தி வேண்டுமாகையால், அப்புத்தி-சக்தி பெருக, கடவுளை வணங் கியும், அர்ச்சனைகள் செய்தும், அக்கடவுளைச் சுற்றி, பல தடவைகள் பிரதட்சணம் வந்து, அப்புத்தி-சக்தி வளர, அரும் பாடுபடுவோம்.

11. நாம் அடையும் சக்திகள் எல்லாம், நமது என்று கொள்ளாமல், எல்லாம் வல்லவனுன, நடனமாடும் சிவ-சக்தி யினுடையதே என்ற உண்மையை அறிந்து வாழ்க்கையை நடத்துவோம்.

12. மனித உருக்கொண்ட நாம் ஒரு நாள் இறப்பது நிச்சயம் என்பதை உணர்ந்து, விடுதலை அடைந்து அந்திய காலத்தில் கடவுள் மயமாவதே நம் வாழ்க்கைச் சித்திரம் என்று அறிந்து, ஏதாவது ஒரு நல்ல காரியத்திற்காக உயிரை விடுவது நலம்எனக்கருதி, நாட்டிற்காகப்போரிலோ, மக்களைக் காக்கும் எந்த நல்ல முறையிலோ, உலகத்தில் விஷத்தை அகற்றி-அமிர்தத்தை வளர்க்க, உயிர்த்தியாகம் செய்து, நித்தியமான, கடவுளை சக்தி ருபமாக அடைந்து, பூலோ கத்தை ஆண்டு, தெய்வத்திற்கும், மனித வர்க்கத்திற்கும், தொண்டு செய்வோமாக.

# 60. அவதார புருஷர்களும் - ஆச்ரமங்களும்.

அவதார புருஷர்களாகப் பிறந்த பெரும்பாலோர் குடும்ப வாழ்க்கையைத் துறந்தவர் ஆவர். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட மனிதவர்க்கத்திற்குக் குழந்தைப் பருவம், யௌவனம் அல்லது பிரும்மசரியம், கிரஹஸ் தாச்ரமம், சன்யாசம் என்பதாக ஐந்து பருவங்கள் கடவுளின் விருப்பத்தை அறிந்து, தன் கடமையை உணர்ந்து, விடுதலை அடைய பயன்படுகின்றன. அவதாரம் எடுத்த புண்ய புருஷர்களுக்குக் குழந்தைப் பருவம், பிரும்மசரியம், சந்யாசம் என்ற மூன்று பருவங் கள் ஏற்பட்டுள்ளன. இவ்விதம் அவதாரம் எடுத்த புண்ய புருடர்களின் குறிக்கோள், ஐந்து பருவங்களில் ஈடுபட்ட கிரஹஸ்தாச்ரமிகளுக்குத் தகுந்த போதனை களே செய்தும், ஈசுவரத்தன்மையைக்கொண்ட நல்ல குணங்களை உடைய வாழ்க்கையை நடத்திக்காட்டியும், மனிதவர்க்கத்திற்குத் தொண்டு செய்வதே ஆகும். இவர்களே ஒரு பாக்டரியில் வேலைபார்க்கும் உத்தியோகஸ் தருக்கு, யந்திர நுட்பங்களை அறிவூட்டி, ஞானத்தைப் பெருக்கும் சிறந்த விஞ்ஞானிகளுக்கு ஒப்பாவர்.

இப்பணியில் ஈடுபட்ட பெரியோர்களில், ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் மணம் செய்துகொண்ட போதி லும், பத்தினியைத் தாயாகவே பாவித்து வந்தார்.


## அவதார புருஷர்களும் - ஆச்ரமங்களும்.

ஸ்ரீராமரும், ஸ்ரீகிருஷ்ணபகவானும் மணம் ஆனவர்கள் ஆனபோதிலும், பிரும்மச்சரியத்தையே அனேகமாகத் தங்கள் வாழ்க்கையில் கையாண்டு வந்தனர். ஸ்ரீசங்கரா சாரியாரும், விவேகானந்தரும், பிரும்மசாரிகளாகவே இருந்து வந்தனர். ஸ்ரீ புத்த பகவான் மணம் ஆனவ ராயினும் சிறுபிராயத்திலேயே உலக வாழ்க்கையைத் துறந்தார். மகாத்மா காந்தியும், வெகு சீக்கிரமே குடும்ப வாழ்க்கையைக் கைவிட்டார். இதேபோல் சிறந்த பக்தர்களும், மடாதிபதிகளும், உலகைத் துறந்த ஸ்வாமிகளும்: குழந்தைப்பருவம், பிரும்மசரியம், சந்யாசம் என்ற இம்மூன்று பருவங்களையே உடையவராவர்.

உணவு விஷயத்தில், மாமிச உணவு உண்ணுமல் இருப்பது பகுத்தறிவுச் சக்தியை வளர்க்க ஏதுவாகிறது என்று சொல்லப்பட்டது. இவ்விதம் அவதார புருடர் களில் சிலரைத் தவிர மற்றவர்களெல்லாம் மாமிச உணவு உண்டவர்களாகவே இருந்து, பின்பு அந்திய காலத்தில் சந்யாச ஆச்ரமத்தில் மாமிச உணவை அகற்றினுர்கள் என்றே தெரியவருகிறது. ஆயினும், நாகரீகம் முற்றமுற்ற மாமிசஉணவுக்காக ஜீவப்பிராணிகளைக் கொல்லும் வழக்கம் படிப்படியாக குறைவுபடும் என்று எண்ண இடம் இருக்கிறது. அவதார புருஷர்களான ஞானி கள், திருப்பாற்கடலில் விஷம் கொண்டபோதெல்லாம், நற் போதனைகள் செய்தும், வாழ்க்கையை நடத்திக்காட்டியும், விஷத்தைப்போக்கி அமிருதத்தை நிலைநாட்ட அவதரித்துள் ளார்கள். வருங்காலத்தில் பலர் அவதரிப்பதையும் நாம் எதிர் பார்க்கலாம். எதிர்பார்ப்போமாக.

பொருள் சக்தியும் - அருள் சக்தியும்.

சித்திரம் - 27.




பொருள் சக்தி-அருள் சக்தியாக மாறும் சித்திரம்.

# 61. பொருள் சக்தியும் - அருள் சக்தியும்.

இவ்வியாசத்தில் ஈடுபட்ட முக்கியமான பாத்திரங்கள் சூர்யனும், பூமியும் அவைகளுள் ஏற்பட்ட

பாந்தவ்யமும் ஆகும். நம் பூமியே சூர்ய மண்டலத்திலுள்ள ஒரு நவீனத் தோட்டம். அதில் உற்பத்தியாகும் எல்லாப் பொருள்களுடைய சக்தியும், அருள்சக்தியாக மாறி சூர்யனை அடைகிறது. (Material energy is being converted into spiritual energy through the process of evolution and rein carnation) இக்கைங்கர்யத்தில் மனிதன் ஒரு முக்கியமான கடமையை வகிக்கிறான். அவனுக்குப் பக்கபலமாக நின்றது குணம், பகுத்தறிவு, மனம், இம்மூன்றும் ஆகும். இம்மூன்றும், நம் பூமியிலுள்ள எல்லா வளரும் வஸ்துக்களிலேயும், மரம், செடி, புல்-பூண்டுகள், பூச்சிகள், பறவைகள், மிருகங்கள், மனித வர்க்கம் எல்லாவற்றிலும் அதனதன் அமைப்புக்குகந்தவாறு குறைந்தோ, அதிகப்பட்டோ, காணப்படுகின்றன. இம்மூன்றும் இல்லையேல் நம் பூமியில் முன்னேற்றத்திற்கே இடம் இராது. மனதையே இச்சா சக்தி என்றும், குணத்தையே கிரியா சக்தி என்றும் சொல்லப்படுகிறது. இவ்விரண்டுமே ஒன்று காரணமாகவும், மற்றொன்று காரியமாகவும் வேலைசெய்கிறது. இக்காரண காரியங்களால் உண்டாக்கப்பட்ட பகுத்தறிவே, எல்லாப் பிராணிகளுடைய முன்னேற்றத்திற்கும், மறுபிறப்பிற்கும் ஆ தா ர ம் ஆகிறது. இவ்விதம் அதிகரிக்கப்பட்ட பகுத்தறிவுச் சக்தியே மனதிற்கு ஒரு கிளர்ச்சியையும் உண்டாக்குகிறது.

உதாரணமாக ஒரு நாய் இருக்கிறது. அந்த நாயை நாம் வளர்க்கிறோம். அப்படி வளர்ப்பதால் அந்த நாய்

## பொருள் சக்தியும் - அருள் சக்தியும்.

மனிதனோடு சேர்ந்து, பழகி, பல புதுமுறைகளைக் கையாண்டு வருவதால், அதன் பகுத்தறிவுச் சக்தி அதிகரிக்கிறது. பகுத்தறிவுச் சக்தி அதிகரித்ததின் காரணமாக அதன் மனதில் ஒரு கிளர்ச்சி உண்டாகி, தானும் மனிதனைப் போல் வாழ வேண்டும் என்ற மனப்பான்மை அதனுள் உதயமாகிறது. இவ்வித மனப்பான்மை அதனுள் உதித்ததின் காரணமாக அந்த நாய் உயிர் இழந்த பின்பு மனிதரூபம் எடுக்க ஏது வாகிறது. ஏனெனில் அதன் மனதில் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள குணாதிசயங்களே குடிகொண்டிருக்கையில், இந்நாயினுடைய குணம், (திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்த) மனிதனின் குணமும் ஒன்றே. ஆகையால் பகுத்தறிவு மிகுந்த நாய், மனிதரூபம் எடுக்க இடம் கொடுக்கிறது. இதேபோல் மரங்களும், செடிகளும், மிருகங்களும், தம் வாழ்நாட்களில் பலவிதமான பகுத் தறிவு மிகுந்த தனக்கு மேற்பட்ட ஜீவப்பிராணிகளோடு சம்சர்க்கம் ஏற்படுவதால், அவைகளுக்குப் பகுத்தறிவுச் சக்தி அதிகரித்து, அவைகளின் மனதில் ஒருவித கிளர்ச்சி உண்டாகி, மறுபிறப்பு எடுத்து முன்னேற்றமடைகிறது.

இப்பூலோகத்தில் பல கோடி நாய்கள் உயிருடன் வாழ்கின்றன. அவைகளுள் சிலவையே பகுத்தறிவு மிகுந்த மனிதனோடு வாழ உரிமைப்பட்டுள்ளவை ஆகின்றன. இவ்விதம் மனிதனோடு வாழ சந்தர்ப்பம் அந்நாய்க்கு ஏற்பட்டதே அதன் பூர்வஜன்மபலனாகிறது. மற்றவைகள் அவைகளின் கர்ம பலனால் வேறு மிருகங்

களோடு வாழ சந்தர்ப்பம் ஏற்பட்டதால், அவைகள் நாயாகவே மறுபடியும், மறுபடியும் பிறக்க ஏதுவாகிறது. இந்த உதாரணம் மனிதவர்க்கத்திற்கும் பொருந்தும்.

மனம் என்பது, பராசக்தியான பரப்பிரும்மத்தினுள் ஒரு அம்சத்தால் ஏற்பட்ட கிளர்ச்சியே ஆகும். இந்த மனக்கிளர்ச்சியின் மூலமாகவே, பலகோடி நட்சத்திரங் களும், சூர்ய மண்டலமும் உண்டாக்கப்பட்டவை. ஆகையால் மனம் என்பது, நம் பூமியிலுள்ள எல்லா வஸ்துக்களிடமும் பரவி நிற்கிறது. அதேபோல் குணம் என்பது எல்லா நட்சத்திரங்களினுடைய குணாதிசயங் களைப் பிரதிபலிக்கிறது. பகுத்தறிவுச் சக்தியானது மனம்-குணம் இவ்விரண்டையும் கொண்டு நம் பூமியில் வளர்க்கப் படும் ஒரு நவீன சக்தி ஆகிறது. மனம், பகுத்தறிவு, குணம், இம்மூன்றும் இராத ஒரு வளரும் பொருள் நம் பூமியில் கிடையாது.

குணம் பகுத்தறிவை வளர்க்கிறது. பகுத்தறிவு, மனதில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்குகிறது. இந்த மனமே மாறுதலை உண்டாக்கக் கூடிய பெரும் சக்தி ஆகிறது. ஒரு புருடன், தான் பெண்மணி ஆக வேண்டும் என்று எண்ணி, அதற்கு முயற்சி எடுத்துக் கொள்வானுகில் அவன் அதே ஜன்மத்திலோ அல்லது வரப்போகும் ஜன்மத்திலோ, கட்டாயம் பெண்மணியாக மாறுகிருன். ஒரு பெண்மணி அதேபோல் புருடனுக வேண்டும் என்று எண்ணி, அதன்படி நடைமுறையில்

ஈடுபடுவாளாகில் அவள் புருடனே ஆகிருள். ஒருவன் நல்ல ஞானி ஆகவேண்டும் என்று எண்ணி அதற்குப் பாடுபடுவாஞகில் அவன் ஞானியே ஆகிருன். ஒருவன் திருடியும், மற்றவர் பொருளை அபகரித்தும் வாழவேண்டு மென்று நினைப்பாஞகில் அவ்விதம் திருடஞகவே ஆகிருன். அதனுல் ஏற்பட்ட சுக துக்கங்களையும் அடைகிருன். இவ்விதம் மனமே மாறுதலுக்குக் காரணபூத மாக இருக்கிறது. இந்தவித மாறுதலில் நம் பூமியிலுள்ள எல்லா உற்பத்தியாகும் வஸ்துக்களும், மாறி மாறியே முன்னேற்றமடைந்து கடைசியாக மனிதஉருவெடுத்துள்ளது. ஆனுல், மனிதனுக்கு முன்னேற்றம் எது, எப்படிப்பட்டது என்பது ஒரு பிரச்சனை ஆகிறது.

மனிதன் இப்பூமியில் உதித்ததின் காரணம் பகுத் தறிவுச் சக்தியை வளர்த்து, முற்றவைத்து, அதையே சூர்யனுக்கு அர்ப்பணம் செய்வதற்காகும். இம்முறையில், பகுத்தறிவுச் சக்திக்கு அங்கங்களான, ஆராய்ச்சி சக்தி, கல்பனு சக்தி, சிருஷ்டி சக்தி இம்மூன்றையும் பெருக்கி யும், பல கைத்தொழில்களில் ஈடுபட்டும், முன்னேற்ற மடைகிருன். இவ்விதம் வளர்க்கப்பட்ட பகுத்தறிவுச் சக்தியானது தன் இருப்பிடமான, சேரவேண்டிய இடமாகிய சூர்யனை அடைந்துவிடுகிறது.

பகுத்தறிவால் மேலோங்கிய மனமும், சக்தி ரூபமான குணமுமே மனிதனுக்குப் பக்கபலமாக இருக் கிறது. குணத்தால் ஏற்பட்ட புத்தியும், மனதால்

ஏற்பட்ட சித்தியும், "மறுபிறப்பு" (reincarnation) என்று சிலையாக்கப்பட்ட பிள்ளையாரின் பத்தினிகள் எனப்படுகிறது. இப்புத்தியும், சித்தியுமே மனிதனின் கடைசி நிமிஷம் வரை துணையாக இருந்து, அவன் பிரச்சனையைத் தீர்த்து, விடுதலை அடையக் காரணபூதமாக இருக்கின்றன. இவ்விதம் பகுத்தறிவால் சேகரிக்கப்பட்ட நல்ல குணம் உடையவருக்கே, தான் யார்? தனக்கும் இந்த அழியக்கூடிய உடலுக்கும் என்ன சம்பந்தம்? இந்த அழியக்கூடிய உடல் இராமலே வாழ முடியாதா? என்ற சர்ச்சைகள் மனதில் உண்டாகின்றன. இவ்விதம் உண்டாகும் மனக்கிளர்ச்சியின் மூலமாகவே, தான் யார் என்பதையும், தான் விடுதலை அடைய வேண்டிய வழியையும் உணர்ந்து, தன் உடலில் பற்றுதல் வைக்காமல், சக்தி ரூபமாக அதன் இருப்பிடமான சூர்யனுள் ராஜப்பதவியை அடைந்து, சிவமயமாகிறான்.

# 62. முடிவுரை.

சக்தி என்பதே உலகத்தில் பெரும் பொருளாக விளங்குகிறது. சக்தி இருக்கும் பட்சத்தில் எதையும் செய்யலாம். எவ்விதமும் அப்பொருளை அடையலாம். சக்தி அடைந்தவர்களே எப்பொருளையும், எக்காலத்திலும் அடையக்கூடும் ஆகையால், அவர்களுக்கு எப்பொருள்மேலும் ஆசையோ, வெறுப்போ கிடையாது. இவ்விதம் பரப்பிரும்மசுரூபியான ஆகாசம் சக்தி வாய்ந்ததாகவே இருந்ததெனக் கருதுகின்றனர். அதுவே நித்தியமானது; அழிவில்லாதது; எங்கும் பரவியுள்ளது; இந்த சக்திமயமான சாம்பல் நிறத்தோடு கூடிய ஆகாசத்தில் வேறு ஒரு அம்சம் கலந்துஇருந்தது எனப்படுகிறது. அதுவே தூலீ சரீரத்தை அடையக் கூடிய உலோகங்களால் அமைக்கப்பட்ட ஒரு அம்சம் ஆகிறது. அது கூட்டம் கூட்டமாகச் சிற்சில இடங்களில் ஆகாசத்தில் காணப்பட்டன. இந்த உலோகங்களே எல்லா மாறக்கூடிய வஸ்துக்களுக்கும், மனதைக் கொடுக்கும் ஒரு சக்தியாக விளங்குகிறது. அதுவே மனிதனின் உடலிலும், ஜீவப்பிராணிகளின் உடலிலும், திராவகரூபமாக, காணப்படுகிறது. பல கிரஹங்களிடத்தும், நட்சத்திரங்களிடத்தும், நமது பூமியிலும், தூல

சரீரியாகக் கொண்டது. இதுவே ஆகாசத்தில் வாயுருப மாகஇருந்தது. இந்த அம்சம் பலகாலம் சக்தியோடுகூடி, ஆகாசத்தில் கூட்டுவாழ்க்கை நடத்திவர, அவ்வாழ்க்கை யில் கசப்புத்தட்டி, தன் சக்தி எத்தகையது என்பதை அறியவேண்டுமென்ற அவாக்கொண்டதின்பேரில் அது ஆகாசத்திலிருந்து பிரிய ஆரம்பித்தது. இந்த மனப் பான்மைக்கு ஒத்தாசையாக ஆகாசம் எல்லா சௌகர் யங்களையும் செய்து கொடுத்துத் தனிவாழ்க்கை நடத்த ஏற்பாடு செய்தது. இவ்விதம் ஒரு கூட்டம் பலவித நட்சத் திரங்களாக மாறின. இதேபோல் பல நட்சத்திரக் கூட்டங்கள் எல்லே இல்லாத ஆகாசத்தில் இருக்கலாம். அவைகளை மனித வர்க்கமாகிய நாம் எவ்வளவு பெரிய டெல்லஸ்கோப்பைக் கொண்டும் பார்க்க முடியாது. ஆகாசத்தோடு கூடிய இந்த நட்சத்திரக் கூட்டத்தையே நாம் விஷ்ணு சக்தி என்றும், பாற் கடல் என்றும் கூறுகிறோம். மேல்நாட்டார் 'கலக்ஸி' (Galaxy) என்றும், 'மில்கீ-வே' (Milky way) என்றும் பெயரிட்டிருக் கின்றனர்.

இவ்விதம் தனியாகப் பிரிந்த நட்சத்திரங்கள் பல கோடி உற்பத்தியாயின. இதன் பயனாக, ஒவ்வொரு நட்சத்திரமும் வெவ்வேறு வகைப்பட்ட உலோகங்களை, அளவிலும், பொருளிலும், வித்யாசத்தோடு அமைக்கப் பட்டதாகையால், அவைகளுக்கு வெவ்வேறுவிதமான குணங்கள் ஏற்பட்டன. இவ்விதம் வேறுபட்ட குணங் களால் அவைகளுள் சாந்தி ஏற்படாமல் பலவித சர்ச்சைகள் உருவாயின. இவ்விதம் சாந்தி ஏற்படாமல் பலகாலம் கழித்த பின்பே எல்லோருமாகக்கூடி தங்கள்

## முடிவுரை.

சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு ஒரு மத்தியஸ்தரை மகாசக்தியின் அருளால் அவதரித்துக்கொண்டனர். அதுவே சூர்ய மண்டலமாகிறது. (சூர்ய மண்டலத்தின் பிறப்பு முகச்சித்திரம் பார்க்க.) இதையே நாம் சிவ சக்தி என்கிறோம். இம்மத்தியஸ்தரின் அளவில்லாத சக்திகளைக்கண்டு எல்லா நட்சத்திரங்களும், அதையே ராஜாவாகக்கருதி, அதற்குப் பலவிதத்திலும் சேவை செய்ய ஆரம்பித்தன. இவ்விதம் சேவை செய்ய ஆரம்பித்ததின் பயனாகத் தங்கள் சச்சரவுகளை மறந்தன. சாந்தியைக் கொண்டன. இவ்விதம் பலகாலம்கழிய, ராஜாவான சூர்ய மண்டலத்திற்கு வேலையே இராமல் எப்பொழுதும் தியான நிலையில் இருப்பதே அதன் வாழ்க்கையாகக் காணப்பட்டது. அக்காலம் சந்திரன், பூமியை ஒட்டினாற் போல் அதோடு ஒன்றாகச் சூர்யனைச்சுற்றி வந்தது. இவ்விதம் தியான நிலையே தன் வாழ்க்கையாகப் பல காலம் கழிய, தன் வாழ்க்கையில் கசப்புத்தட்டி, தன் சக்தி தான் என்ன என்பதை உணரவேண்டும் என்ற அவா உருவானதின்பேரில், திருப்பாற்கடலாகிய நம் பூமி கடையப்பட்டது. அப்பொழுதே சந்திரன் பூமியிலிருந்து பிரிக்கப்பட்டான். பிரிக்கப்பட்ட சந்திரனின் ஓட்டத்தினாலே முதலில் விஷம், அதாவது நிழல் பூமியில் விழ ஆரம்பித்தது. அதன் காரணமாகத் திருப்பாற்கடலில் உற்பத்தி ஆகும் எல்லா நல்ல பொருள்களோடு கெட்டவைகள் சேர்ந்தே உருவாயின. கிரஹங்களின் ஓட்டத்தினால் ஏற்படும் நிழல் ஆகாசத்

தில் விழுவதால் எல்லாவற்றிலும் கெட்ட மனப்பான்மை உருவாயிற்று. இந்த விஷமானது, திருப்பாற்கடலாகிய வயிற்றில்உதிக்கும் எல்லாப்பொருள்களையும், சூர்யனை சிரசில் உதிக்கும் மனதையும் தாக்கக்கூடுமாகையால்; அவ்விஷத்தை கீழேயும் போகவிடாமல், மேலேயும் ஓட விடாமல் தன் கண்டத்திலேயே ஒரு சமாதி கட்டி, "திருநீலகண்டர்" என்ற நாமத்தை அடைந்தார் எனப் படுகிறது. இதன் தாத்பர்யம் செய்கையால் உண்டாகும் கெடுதலையும், மனதால் உண்டாகும் கெடுதலையும், அவ்வப் பொழுது அடக்குகிறுர் என்பதே ஆகும். இக்கெடுதல்களை அழிக்கும் சம்பவம் நமது பூமியில் முப்பது வருஷங்களுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. அக்காலம் கெட்ட மனப்பான்மை உடையவர்களுக்கும், கெட்ட செயல்களில் ஈடுபடுகிறவர் களுக்கும் அழிவு ஏற்படுகிறது. இதனுலேயே முப்பது வருஷம் வாழ்ந்தவரும் இல்லை; முப்பது வருஷம் கெட்ட வரும் இல்லை என்று ஒரு பழமொழி ஏற்பட்டது.

இவ்வாறு சந்திரனுக்குச் சுற்று ஏற்பட்டதால் திருப்பாற்கடலில் பலவித தாவர வஸ்துக்களும், ஜீவப் பிராணிகளும் உற்பத்தி ஆகி, அவைகளை வெளியே இழக்கும்படியான சக்தி அதில் உதயமாயிற்று. தாவர வஸ்துக்களும், ஜீவராசிகளும் வளருவதற்கு சூக்ஷ்ம சக்தியே ஜீவாத்மா ஆகிறது. இதுவே சூர்யனின் பிரதிநிதியாக, பூமியில் உதித்த எல்லா கிருமிகளுக்கும் ராஜாவாக, ஜீவராசிகளிடமும், மனிதவர்க்கத்தினிடமும், நடமாடும் சக்தி ஆகிறது. இதற்குப் "பசுபதி" என்ற

முடிவுரை.

திருநாமமும் உண்டு. தாவர வஸ்துக்களும், ஜீவராசிகளும், பூமியில் உதித்தபோதிலும், அவைகள் பலகாலம் உயிருடன் வாழ்ந்து வந்ததேயொழிய, அவைகளின் வம்சம் விருத்தி அடையாமலே இருந்தது. அவைகளின் வம்சம் சங்கிலி முறையில், தானே விருத்தி அடைவதற்கு ஒருவிதமான அழகையும், கவர்ச்சியையும், ஆனந்த மனப்பான்மையையும் கொடுத்துத் தூண்ட வேண்டியதாயிற்று. இதற்காகவே பூமியில் 'மாயையை' உண்டாக்கி, பிரஜா உற்பத்தி ஆவதற்கு ஒருவித மயக்க நிலையையும் உண்டுபண்ணப்பட்டது. இவ்விதம் தாவர வஸ்துக்களும், ஜீவப்பிராணிகளும், காற்றிலும், நீரிலும், பலவிதமாக நட்சத்திரங்களின் குணங்களைக் கொண்டுஉற்பத்திஆக, அவைகளின் க்ஷேமத்தைக் கவனிக்கவும், அவைகளின் குறைகளையும், அக்குறைகளை நீக்க வேண்டியதின் அவசியத்தையும், அவைகளால் கொடுக்கப்படும் சக்தியை அறியவும், கணக்கிடவும், அதைப் பெருக்கவும், அப்பொருள் சக்தியை, அருள் சக்தியாக மாற்றவும், தூல சரீரத்தைக்கொண்ட மனிதனை, ஜீவாத்மாவுக்கு இருப்பிடமாக தன் உருவத்திலேயே உண்டாக்கினர் சிவசக்தியான கடவுள்.'

இம்மனித வர்க்கமே, சூர்யனுக்கும், பூமிக்கும், ஒரு தொடர்பையும், பாந்தவ்யத்தையும் உண்டு பண்ணும்படியான சிறந்த கருவியாக விளங்குகிறது. இக்கருவியில் சூர்யனிடமிருந்து கிடைக்கும் சூக்ஷ்ம சக்தியும், பூமியிலிருந்து கிடைக்கும் தூல சரீரமும் அடங்கி இருக்கிறது. மொத்தத்தில் நம் பூமியில்

வசிக்கும் சூக்ஷ்ம சக்திகளுக்கெல்லாம் சூர்யனே இருப் பிடமாகிறது. தூல சரீரத்தைக்கொண்டதற்கெல்லாம், பூமியே இருப்பிடமாகிறது. சூக்ஷ்ம சக்தியான "ஜீவாத்மா" சூர்யனின் ஏஜண்டாகப் பூமியில் வேலை செய்யும் சக்தி ஆகிறது. மனிதனோ தூல சரீரத்தைக் கொண்ட பூமியில் நடமாடும் சூர்யனின் பிரதிபிம்பமாய், ஜீவாத்மாவால், ஓட்டப்படும் யந்திரமாக விளங்கு கிறான். மனித யந்திரத்திற்கு, 'ஸ்டோரேஜ்' பாட்டரி போல் கொடுக்கப்பட்ட ஜீவாத்ம சக்தியையே 'குண்டலி சக்தி' என்கிறோம். அச்சக்தி குறைந்து போனால் மனிதன் இறந்துவிடுகிறான். சூக்ஷ்ம சக்தி வேறாகவும், தூல சரீரம் வேறாகவும் பிரிந்துவிடுகிறான். அவன் தன் தூல சரீரத்தை, அதற்கு இருப்பிடமான பூமியிலேயே விட்டு விடுகிறான். அவன் சூக்ஷ்ம சக்தியால் உண்டான பகுத்தறிவுச் சக்தி அவ்வப்பொழுதே சூர்யனை அடைந்துவிடுகிறது.


பகுத்தறிவின் வளர்ச்சிக்குக் காரணபூதமான வாழ்க்கை நடத்தி அனுபவம் பெற்ற 'ஜீவாத்மா' தானும் தன் வேலை முடிந்தவுடன் சூர்யனை அடைய வேண்டியது முறை ஆகிறது. அதன் வேலை எப்பொழுது முடிகிறது என்பது ஒரு பெரும் பிரச்சனை ஆக இருக்கிறது. இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பது அவனவன் மனமும், குணமுமே ஆகும். மனிதன் மாயை உலகில் வசிப்பவன். மாயையால் கட்டுண்டவன். அவன் மாயையில் கட்டுண்டு இருக்கும் வரை, அவன் பூமியிலேயே வசிக்கவேண்டியது முறை

## முடிவுரை.

யாகிறது. பல பல ஜன்மங்களையும் எடுக்கவேண்டி யிருக்கிறது. அவன் பூமியில் வசிக்கும் வரையில் "ஜீவாத்மா" அவனோடு கூடி இருக்கவேண்டியது அதன் கடமை ஆகிறது. அதனால் ஜீவாத்மாவின் வேலை இப்பூமியில் முடியாமல் இருக்கிறது. ஜீவாத்மா வையும், உடலையும் இணைத்து வைப்பது மனமும், குணமுமே ஆகும். நல்ல மனமும், குணமும் கொண்ட மனிதன், தான் மறுபடியும் பிறக்காமல் இருக்க வழி தேடுகிறான் அப்பொழுதே ஜீவாத்மாவின் வேலை இப்பூமியில் முடிவடைகிறது. அதன் காரணமாக 'ஜீவாத்மா' தன் இருப்பிடமான சூர்யனை அடைகிறது. இவ்விதம், பொருள் சக்தியான மனித உருக்கொண்ட 'ஜீவாத்மா' தன் உடலைத்துறந்து, விடுதலை அடைந்து, அருள் சக்தியான பரமாத்மாவாக மாறுகிறது. இவ்வித மனப்பான்மையை மனிதனுக்கு உண்டாக்கி, மாயையை விட்டு விலக்கி, தன்னைத்தானே அறிந்து கொள்வதற்காக ஏற்பட்டுள்ள ஒருமுறையே திராவிடச்சிற்பத்தின் கருத்தாகும்.

உலகத்தில் ஏற்பட்ட சக்திகளை எல்லாம் கணக் கிட்டால், சூர்ய மண்டலம் வாழ்வதற்கே அவை உரு வாயின என்பது நன்கு புலனாகிறது. (சித்திரம் 28, கடவுளின் வாழ்க்கைச் சின்னம் பார்க்க) சக்தி வாய்ந்த ஆகாசம் கணக்கில் அடங்காத சூக்ஷ்ம சக்தியைக் கொடுக்கிறது. நட்சத்திரங்கள் மனம், குணம் என்ற மகா சக்திகளை வளர்த்துக் கொடுக்கின்றன. சூர்யனைச் சுற்றும் கிரஹங்கள், புத்தி-சக்தியை வளர்த்துக் கொடுக்

## சித்திரம் 28. கடவுளின் வாழ்க்கைச் சின்னம்.



கின்றன. நம் பூமியோ, ஜீவப்பிராணிகளின் மூலமாகவும், மனிதவர்க்கத்தின் மூலமாகவும், பகுத்தறிவுச் சக்தியை வளர்த்தும், அவைகளை ஆளும் சக்தியாக மாற்றியும், சூர்யனை அடையச் செய்கிறது. இவ்விதம் தாயும்-பிள்ளையும், ஒரு தகப்பனுக்குத் தொண்டு செய்வது போல், சூர்ய மண்டலத்தின் வாழ்க்கை நடைபெறுகிறது. இச்சிவ-சக்தியின் வாழ்க்கையில் மனிதன் கூண்டுக்கிளிபோல் காணப்படுகிறுன்.

மனிதனும்—கூண்டுக்கிளியும்.

அளவில்லா ஆசையும்; பிரிவினை மனப்பான்மையுமே, இவ்வுலகத்தில் ஏற்பட்ட பலவிதப் பிரச்சனைகளுக்குக் காரணமாக இருக்கின்றன. பிரிவினை மனப்பான்மையும், தன் சக்தி தான் என்ன என்பதை அறிய வேண்டும் என்ற அவாவும், இருந்து இராமல் போனுல் பிரும்ம ஸ்வரூபமான ஆகாசம், தன் சக்திகளை வெளியிடாமல் தனக்குள்ளேயே அடக்கி வைத்துக் கொண்டிருக்கும். அக்காலம், நட்சத்திரங்களும் இராது. சூர்ய மண்டலமும் இராது. பூமியும் இராது. அதனுள் வசிக்கும் மனிதவர்க்கமும் இராது. அதோடு கோடிக்கணக்கான பிரச்சனைகளும் மறைந்து போகும்.

ஆசையும், பிரிவினை மனப்பான்மையுமே நட்சத்திரங்களை உண்டாக்கின. அவைகளே ஆகாசத்தின் உதவியால் சூர்ய மண்டலத்தை உருவாக்கின. சூர்ய

முடிவுரை.

மண்டலமோ நாமாகிய மனிதவர்க்கத்தை உண்டாக்கியது. நாமோ கூண்டில் அடைபட்ட கிளிபோல் ஒரு பக்கமும் போக முடியாமல் பல கோடிப் பிரச்சனைகளுக்குள்ளாகி பலவித விகாரங்களுக்கும், அவஸ்தைகளுக்கும் உள்ளாகிறோம். எல்லாவற்றிற்கும் பெரிய பிரச்சனையாக இருப்பது, கூண்டில் அடைபட்ட நமக்கு விடுதலை உண்டா என்பதே ஆகும். நாம் கூண்டில் இருக்கும் வரை, எங்கே திரும்பினாலும் பிரச்சனைகள் தான் ஒரு பிரச்சனை தீர்ந்துவிட்டால் மற்றொன்று தானாகவே முளைக்கிறது. நாம் கூண்டில் இருந்து வெளிவர நமது பிரச்சனைகளைக் குறைத்துக்கொள்ளுவதே சிறந்தமுறை ஆகும். பிரச்சனைகளைக் குறைத்துக் கொள்ளுவதற்கு, நமது ஆசைகளும், பிரிவினை மனப்பான்மையும் நம்மை விட்டு அகலவேண்டும். நாம் மாயையைவிட்டு விலக வேண்டும். நாமாகிய மனிதவர்க்கம், ஒரு கவர்னர் எவ்விதம் யந்திரத்தை அதிகம் ஓடவிடாமல், அடக்கி வேலைசெய்ய உதவுகிறதோ, அதேபோல் சூர்ய மண்டலமான ஒரு அபார யந்திரத்திற்கு கவர்னரைப் போல் வேலை செய்கிறோம். நமக்குப் பக்கபலமாக நின்றது பகுத்தறிவுச் சக்தியே. இந்தப் பகுத்தறிவைக் கொண்டு, குணமும், மனமும் மாறி, மாயையைவிட்டு விலகி, கடவுளோடு ஒத்துழைப்பதே, நாம் கூண்டைவிட்டு வெளி வருவதற்குச் சிறந்த வழி ஆகும்.

கூண்டுக்கிளிபோல் அகப்பட்டுத் தவிக்கும் மனிதவர்க்கமாகிய நாம் கடவுளோடு ஒத்துழைக்க, நாம் பிறந்ததின் காரணத்தை அறிந்தும், இகத்திற்கும், பரத்திற்கும் உள்ள

## முடிவுரை.

நமது கடமைகளை உணர்ந்தும், மாயையை விட்டு விலகியும், நமது பிதாவாகிய சிவசக்திக்குத் தொண்டு செய்தும், நாம் ஒவ்வொருவரும் ராஜாவின் வயிற்றில் உதித்த குழந்தைகள் என்பதைத் தெரிந்தும், எல்லாவற்றிற்கும் தாயாகிய பராசக்தியையும், நம்மைஉருவாக்கி, வளர்க்கும் தெய்வமான சிவசக்தியையும் வணங்குவோமாக. அதன் மூலம் உலகில் சாந்தி நிலவட்டும். பராசக்தி நமக்குப் பகுத்தறிவைக் கொடுத்து அருளட்டும், மனிதவர்க்கம் சக்தி வாய்ந்த தெய்வங்களாக மாறட்டும்.

சாந்தி; சாந்தி; சாந்தி;

## பிழை திருத்தம்.

| பிழைகள் | | | | திருத்தங்கள் |
|---|---|---|---|---|
| அலச்யம் | ... | ... | ... | அவசியம் |
| விக்யானம் | ... | ... | ... | விஞ்ஞானம் |
| விக்ஞானம் | — | ... | ... | விஞ்ஞானம் |
| வெக்ஷ்மி | ... | ... | ... | லக்ஷ்மி |
| சுப்பிரம்மண்யம் | ... | ... | ... | சுப்பிரமணியம் |
| பிரும்மசர்யம் | ... | ... | ... | பிரும்மசரியம் |

# பிழை திருத்தங்கள்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| முகச்சித்திரம் | 14 | அன்னியில் | அந்தியில் |
| 3 | 16 | சாத்திரக்ஞர்களையும் | சாஸ்திரஞ்ஞர்களையும் |
| 5 | 12 | சாஸ்திரக்ஞர்களும் | சாஸ்திரஞ்ஞர்களும் |
| 40 | 5 | விஷயத்தை | விஷத்தை |
| 66 | 7 | பிரும்மக்ஞானம் | பிரும்மஞ்ஞானம் |
| 96 | 11 | மனிதவர்க்கம் | மனிதன் |
| 146 | 10 | கடுதப்படுகிறது | கருதப்படுகிறது |
| 148 | 19 | உபாதையால் | உபாதியால் |
| 233 | 14 | உபாதைகளுக்கும் | உபாதிகளுக்கும் |
| ,, | 17 | உபாதையும் | உபாதியும் |
| 248 | 11 | உபாதைகளும் | உபாதிகளும் |
| 154 | 24 | மனமும் | மணமும் |
| 263 | 5 | ஏற்படக்கூடிய | ஏற்படும் |
| 273 | 15 | கந்தவாறு | உகந்தவாறு |
| 302 | 5 | அடிமைத்தளத்திலிருந்து | அடிமைத்தனத்திலிருந்து |

மகாலிங்கம் அச்சகம்

:: தஞ்சை ::